# கண்மணி சுகமா?

## 1

சூரியன் பாதி இமைகளைத் திறந்து, படர்ந்திருந்த பனிப் போர்வையைத் துளைத்துக் கொண்டிருந்த நேரம்...

ரயில்வே பிளாட்பாரத்தில் முட்டை ஓடு நிறத்தில் வெளிச்சம் பரவி இருந்தது.

முந்தின ரயில்கள் கழித்து விட்டுப்போன பார்சல்கள், விளையாடப்பட்ட சோழிகள் போல அங்கங்கே உருண்டு கிடந்தன.

எலெக்ட்ரானிக்ஸ் மூட்டை மீது உட்கார்ந்து ஒரு பிச்சைக்காரன் எச்சில் சோற்றை இறைத்துக் கொண்டிருந்தான்.

புத்தகக் கட்டின் மீது ஒரு கரிதார் ஒய்யாரமாக உடலைச் சாய்த்திருந்தது.

இரும்புத் தூணுக்குப் பக்கத்தில் பெட்ஷீட் விரித்து ஒரு வடக்கத்திக் குடும்பம் அந்த நேரத்திலேயே வறட்டுச் சப்பாத்திகளைக் கைமாற்றிக் கொண்டிருந்தது.

மீராவுக்கு எதிலுமே கவனம் செல்லவில்லை.

தண்டவாளங்கள் பார்வையிலிருந்து வளைந்து மறையும் புள்ளியையே பார்த்துக் கொண்டிருந்தன.

'ஏய்... ஹைதராபாத் எக்ஸ்பிரஸே, சீக்கிரம் வந்து தொலையேன்.'

''இருபது நிமிடம் லேட்டாம்'' என்று வசந்தன் சுடச் சுட வந்திறங்கிய அன்றைய செய்தித் தாளுடன் வந்தான்.

மீராவின் கால்களுக்கு நடுவில் ஒரு பெருச்சாளி புகுந்து ஓடி தண்டவாளத்தில் குதித்தது.

மீரா துள்ளிப் பின்னால் நகர்ந்தாள்.

''ஏய்... டான்ஸெல்லாம் ஆடாதே. அப்புறம் உன் புருஷனுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது'' என்றான் வசந்தன் புன்னகைத்து.

''நீ ஒண்ணும் என் புருஷனுக்குப் பதில் சொல்ல வேண்டாம்'' என்றபடி குறும்பு கொப்பளித்த அவன் முகத்தைப் பிடித்துத் திருப்பினாள் மீரா.

தூரத்து வளைவில் இன்ஜினின் வெளிச்சப்பொட்டு தெரிந்தது.

மீராவுக்குள் பரபரப்பு ஓடியது. நரம்புகளில் தீப்பற்றிக் கொண்டது. நுரையீரல்கள் பொங்கின. இதயம் சலங்கை கட்டிக்கொண்டு குரங்காகக் குதியாட்டம் போட்டது.

இந்தத் தருணத்துக்காக எத்தனை யுகங்கள் காத்திருந்தாயிற்று!

''வசந்த்... வந்தாச்சு'' என்று புடவை நுனியைத் திரித்தாள். ''ஏய்... ஏன் சிரிக்கறே?''

வசந்தன் சிரித்துக்கொண்டே சிரிக்கவில்லை என்பது போல் தலையசைத்தான். அது சிரிப்பு இல்லை. ரசிப்பு!



மூன்று மாத பிரிவுக்குப் பின் கணவனைச் சந்திக்கக் காத்திருக்கும் இளம் மனைவியின் பரபரப்பைப் பக்கத்தில் இருந்து பார்க்கும் ரசிப்பு.

தினம் தினம் அவன் பார்த்துக்கொண்டிருக்கும் மீராவுக்கும் இந்த அதிகாலை மீராவுக்கும் இருக்கும் வித்தியாசத்தைப் பற்றிய வியப்பு.

சிவப்பு போர்ட்டர்கள் அங்கங்கே உற்பத்தியாகி. படையெடுப்பவர்கள் போல் பாய்ந்து, ரயிலோடு ஓடித் தொற்றி ஏறிக்கொண்டார்கள். உயரத்து ஸ்பீக்கர்கள் தெளிவற்ற ஒலியில் ஹைதராபாத் எக்ஸ்பிரஸின் வருகையை அறிவித்தன.

இரும்பைத் தேய்த்து இன்ஜின் கைக்கெட்டும் தூரத்தில் நிறுத்தத்துக்கு வந்தது.

''எஸ் செவன் எங்கே வரும்?'' மீரா பரபரத்தாள்.

வசந்தன் சிரித்து அவளை பிளாட்பாரத்தின் நடுப் பகுதிக்கு நகர்த்தினான். ரயிலிலிருந்து இறங்கி விரைபவர்களுக்கு மீராவைப் பற்றியோ, அவள் வயிற்று நூறு நாள் சிசு பற்றியோ கவலை இருக்காது. பரபரப்பு அடங்கட்டும்.

பாதி பயணிகளுக்குமேல் கலைந்த தலையும் கசங்கிய உடையுமாக இருந்தார்கள். கண்ணன் ஒரு நாளும் இப்படி இறங்கமாட்டான். ஒருமுறை காலை நான்கு மணிக்கு போபாலில் இறங்கியபோதுகூட, மூன்று மணிக்கே எழுந்து பல் தேய்த்து, ஷேவ் செய்து, பளிச் என்று மாறி பெல்ட், ஷூ என்று எதையும் விட்டுக் கொடுக்காமல் அவன் இறங்கிய தினத்தை வசந்தன் மறக்கவில்லை.

கடந்துபோன முகங்களில் கண்ணன் இல்லை.

''இங்கேயே நிக்காம காம்பார்ட்மெண்ட்டுக்குப் போகலாமே!''

மீரா கெஞ்சினாள். கண்ணனைத் தேடிய விழிகளில் கவலை இருந்தது.

''சரி, வா...''

எஸ் செவன் வருவதற்குள் கூட்டம் தேய்ந்துவிட்டது. எல்லாப் பெட்டிகளும் காலியாகிவிட்டன.

''வரலியா?'' மீராவின் கண்களில் பதட்டம்.

எஸ் செவன் ஜன்னல்கள் வழியே பார்த்தபடி வசந்தன் நடந்தான். கால் விளங்காத சிறுவன் ஒருவன் பயணிகள் விட்டுப்போன பிளாஸ்டிக் மிச்சங்களைத் தேடிச் சேகரித்துக் கொண்டிருந்தான். மற்றபடி ரயில் பெட்டியில் யாருமே இல்லை

ஒரே ஒரு மிடில் பர்த் இன்னும் மடக்கப்படாமல் இருந்தது. அதிலிருந்து ஒரு ஆண் கை வெளியே தொங்கியது கண்ணனின் ஒருக்களித்த முகம் தெரிந்தது!

''ராஸ்கல்... இன்னும் தூங்கறான்...'' என்று மீராவிடம் சொல்லத் திரும்பினால் மீரா இல்லை.

கம்பார்ட்மெண்டுக்குள் வளையல்கள் ஒலித்தன. ஜன்னல் வழியே பழிப்பு காட்டிவிட்டு மீரா கண்ணனை நெருங்கினாள்.

வசந்தன் புன்னகைத்தான். இப்போது பெட்டியில் ஏற மனமில்லை.

பிளாட்பாரத்திலேயே நின்று செய்தித்தாளைப் பிரித்தான்.

மீரா கண்ணனின் கையை மென்னத் தொட்டாள். சிலிர்த்தது.

கண்ணனின் தூக்கம் கலையவில்லை.



எப்படி எழுப்பினால் அவனுக்குப் பிடிக்கும் என்று அவளுக்குத் தெரியாதா?

ஃ ஃ ஃ

உதடுகளைக் குவித்து அவன் காதைச் சுற்றி வட்டமாக ஊதுவாள்.

'ம்ஹூம்' என்று கண்ணன் கருப்பைக் குழந்தை போல் கால்களை நெஞ்சு வரை மடக்கிக் கொள்வான்.

'படவா, இன்னிக்கு வாக் போகணும்...சீக்கிரம் எழுப்புன்னீங்களே' என்று அவன் காது மடலை உதடுகளால் உரசுவாள்.

அவன் கை நீளும். அவள் பின் கழுத்தில் பதியும். அவள் முகத்தைத் தன்னோடு அழுத்திக் கொள்ளும். அவன் முகம் தலையணையில் புரளும். மீராவின் வெப்பமான மூச்சு அவன் நெற்றியில், மூடிய கண் இமைகளில், கன்ன மேடுகளில், நாசிச் சரிவுகளில் நகர்ந்து அவன் உதடுகளைச் சுடும்.

அவன் விரல்கள் தேடும். அவள் அறுவடைக்கதிராக வளைந்து கொடுப்பாள். காலைத் தழுவல் ஒரு சுகம். அந்தச் சுகத்தில் அவன் மெய் மறந்து, உலகு துறந்து...

'ஏய் முரடு.. வலிக்குதுடி' என்று முனகுவாள்.

சரேலெனக் கண்களைத் திறந்து, அவள் கண்களுக்குள் பார்த்து, கிறக்கமாக 'குட்-மார்னிங்' என்பான்.

ஃ ஃ ஃ

மீரா தன்னைச் சுற்றிப் பார்த்தாள். பெட்டியில் யாருமில்லை. வசந்தன் பேப்பரில் மூழ்கியிருந்தான்.

கண்ணனின் காதைச் சுற்றி வட்டமாக ஊதினாள். காது மடலை ஈர உதடுகளால் உரசினாள். மென்னக் கவ்வினாள்.

"எழுந்துக்கடா படவா..." என்று பற்களினூடே சொன்னாள். "ஊர் வந்தாச்சு..."

கண்ணனின் இமைகள் பிட்டுக் கொண்ட மாதிரி திறந்தன.

"குட்-மார்னிங்" என்று மீரா தன் இதழ்களை அவன் உதடுகளில் ஒற்றி எடுத்தாள்.

அவன் கை நீண்டு, அவளை இழுக்கும் என்று தன் உடலைத் தளர்த்திக் கொண்டாள்.

கண்ணன் திடுக்கிடலோடு எழுந்து உட்கார்ந்தான். அந்த வேகத்தில் மேல் பர்த்தில் மண்டை 'ணங்' என்று மோதியது.

"அச்சச்சோ" என்று மீரா பதறினாள்.

சத்தம் கேட்டு வசந்தன் பேப்பரை மடித்துவிட்டுப் பெட்டிக்குள் ஏறினான்.

அடிபட்ட இடத்தில் தடவப் பார்த்த மீராவின் கையை மெள்ள விலக்கிவிட்டு கண்ணன் பர்த்திலிருந்து இறங்கினான்.

மீராவைப் பார்த்த பார்வையில் காதல் இல்லை. ஆச்சரியம் இருந்தது.

"ஹாய்" என்றான் வசந்தன்.

கண்ணன் திரும்பி வசந்தனைப் பார்த்தான். "ஹாய்" என்றான். "நான் வரேன்னு எப்படிடா தெரியும்?"

"உங்கூடப் பேசணும்னு நேத்து ஹைதராபாத்துக்கு போன் செஞ்சேன். கிளம்பிட்டதா சொன்னாங்க. மீராவை சர்ப்ரைஸ் பண்ணணும்னு நீ ப்ளான் போட்டிருப்பே. உன்னை சர்ப்ரைஸ் பண்ணலாம்னு நாங்க சதி பண்ணிட்



டோம்" என்றான் வசந்தன், தலையணையிலிருந்து காற்றை விடுதலை செய்தபடி.

"காலைல நாலு மணிக்கெல்லாம் உன் பொண்டாட்டி போன் பண்ணி என்னை எழுப்பிட்டா தெரியுமா? ஏதோ பல் தேய்ச்சிட்டு வருவாள்னு பார்த்தா, குளிச்சு, கம கமன்னு பவுடர் போட்டு. ஃப்ரிஜ்ஜிலேர்ந்து மல்லிப்பூ எடுத்து வெச்சுக்கிட்டு... அடேங்கப்பா...!"

"ஏய்!" என்றாள் மீரா, வசந்தனின் தோளைப் பிடித்துத் தள்ளி, "மேனர்ஸ் இல்லாம இங்க நிக்காத. லக்கேஜை எல்லாம் எடுத்திட்டு நீ எறங்கு" என்று அவன் சிரித்தபடி அதட்டியபோது—

கண்ணனிடம் குறைந்த பட்சம் ஒரு புன்னகையாவது எதிர்பார்த்தாள். ம்ஹூம்.

வசந்தன் இறங்கிப் போனபின்பும், மீராவின் பார்வை கண்ணன் மீதே ஊன்றியிருந்தது.

இவனுடைய கண்கள் ஏன் இப்படித் தணல் போல் சிவந்திருக்கின்றன? ஏன் ஒரு சிறு புன்சிரிப்பு கூட இல்லை?

கண்ணன் மீராவிடமிருந்து பார்வையைத் தழைத்தான். கூம்பிய முகத்துடன் ரயில் பெட்டியின் வாசலை அடைந்து, பிளாட்பாரத்தில் தாவி இறங்கினான். ஒரு முறை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

மீரா தனித்து நின்றாள்.

என்ன ஆயிற்று என் கண்ணனுக்கு?

ஃ ஃ ஃ

இரவு படுக்கை அறை. மீரா காத்திருந்தாள்.

கண்ணனுக்குப் பிடித்த பிங்க் நைட்டி. அவனுக்குப் பிடித்த ராயல் ஃப்ளேம் சென்ட். அவனுக்குப் பிடித்த ஜாதிமல்லி.

காலையில் சீக்கிரம் எழுந்ததாலோ என்னவோ, கையில் வைத்திருந்த புத்தகத்தின் வரிகளிலிருந்து பார்வை நழுவி நழுவி விழுந்தது.

எழுந்து ஜன்னல் அருகே போய் நின்றாள். சில்லென்ற காற்று அவள் தூக்கத்தை விரட்டியது. மேகங்களைத் தழுவியபடி நிலவு ஓடியது. மீராவின் கண்களில் நீர்ப் படலம் படிந்தது.

மனதின் ஓரத்தில் ஒரு வேதனை வலி.

காலையில் கண்ணன் ஏன் அப்படிச் செய்தான்?

வீட்டுக்கு வந்த பின்னும் நிற்காமல் பறந்தடித்துக் குளித்து அலுவலகத்துக்கு ஓடி விட்டான்.

அவள்தானே அவனது டை முடிச்சைப் போட வேண்டும்?

அவள் டை முடிச்சுப் போடும் நேரம் என்பது அவர் அந்தரங்கப் பரிமாறல்கள் நிகழும் தருணம்.

சில நாட்களில் அத்தை எதிர்ப்பட்டுவிட, அசடு வழிந்திருக்கிறார்கள்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர்களைப் பார்த்துவிட்டு சுந்தரி தலைகுனிந்து வெட்கமுகத்துடன் விலகியிருக்கிறாள் அவர்களுக்கு அவஸ்தை.

அதனாலேயே கண்ணன் அவளைக் கதவின் நிழலுக்குத் தள்ளிச்சென்று விடுவான். அவள் கூந்தலில் முகம் புதைத்து, பின் கழுத்தைக் குறுகுறுக்கச் செய்துவிட்டுப் போவதுதான் அவன் வழக்கம்.

இன்றைக்கு டையைக் கையில் எடுத்துக் கொண்டான். கதவு நிழலில் காத்திருந்தவளைக் கவனிக்காதவன் போலக் கடந்து போய் விட்டான்.



ஏமாற்றம். ஏமாற்றத்தைவிட 'ஏன்?' என்ற விடை தெரியாத கேள்விதான் மீராவை பாடாய்ப்படுத்தியது.

மாலை ஆபீஸிலிருந்து அவள் திரும்பியதும், சுந்தரி தான் இரட்டைப் பின்னலை ஆட்டிக்கொண்டே அறிவித்தாள்...

"கண்ணன் வர்றதுக்கு ரொம்ப நேரமாகுமாம், உங்களை வெயிட் பண்ணாம சாப்ட்டுட்டுப் படுத்துக்கச் சொன்னான்."

மீராவுக்கே நேரடியாகத் தெரிவிக்க வேண்டும் என்று ஏன் அவனுக்குத் தோன்றவில்லை?

முழுகாமல் இருப்பவள் நேரத்துக்குச் சாப்பிடா விட்டால் வயிற்றுக் குழந்தை தவித்துப் போகும் என்று கண்ணனின் அத்தை வற்புறுத்தியிராவிட்டால் அவள் கண்ணன் இல்லாமல் நிச்சயம் சாப்பிட்டிருக்க மாட்டாள். ஏன் இந்தப் பாராமுகம்? அதிகப்படியான வேலை பளு தானா? அப்படித்தான் இருக்கும். அவளுக்குத் தன் கண்ணனைத் தெரியாதா?

ராஸ்கல்... வேண்டுமென்றே அவளைத் தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்து நடுராத்திரியில் எழுப்பிச் சொல்லப் போகிறான்...

"நெஜமாவே பயந்து போயிட்டியா?"

ஃ ஃ ஃ

வாசல் கதவு 'க்ளக்' என்று திறக்கும் ஒலி கேட்டது.

"என்ன கண்ணா, இவ்வளவு லேட்டா வரே? சாப்ட்டாச்சா?" என்று சுந்தரியின் குரல் கேட்டது. பாவி, இவள் இன்னும் தூங்கவில்லையா?

"சாப்ட்டேன். மீரா, அத்தை எல்லாரும் தூங்கிட்டாங்களா?"

''ம்...''

கண்ணன் படுக்கை அறை நோக்கி வருவது புரிந்தது.

மீரா விளக்கை அணைத்துக் கட்டிலில் படுத்தாள். மூடிய இமைகளுக்குள் விழிகள் தவித்துப் புரண்டன. அலைந்தன.

கண்ணன் உள்ளே வந்தான். பாத்ரூமில் நுழைந்தான் ஷவரின் ஷொர். வெளிப்பட்டான். பவுடர் தூவிக் கொள்கிறான் என்பதை வாசனை தெரிவித்தது.

'வா, கண்ணா. என்னை நெருங்கு. என் விரல்களைக் கோத்துக்கொள். நெரித்து முறுக்கு. மேடிட்ட வயிற்றைத் தீண்டு. உன் சகலமும் அங்கே கருக்கொண்டு வளர்வதைத் தொட்டு உணர்.'

கட்டிலில் கண்ணன் படுப்பது புரிந்தது. பிங்க் நைட்டி. செண்ட் வாசம். ஜாதிமல்லி. நிலவொளிக் கீற்றுகள். அவன் கை நீளாமல் போகாது. புன்சிரிப்புடன் காத்திருந்தாள்.

கட்டிலில் அவன் பாரம் புரண்டது நெருங்கிவிட்டான்.

''இரு, இரு, உன்னை...''

அவள் புன்சிரிப்பு மங்கியது.

எங்கே அவன் ஸ்பரிசம்? ஏன் இன்னும் விலகியிருக்கிறான்? பொறுக்கமாட்டாமல் சட்டெனத் திரும்பி அவன் பக்கம் புரண்டாள்.

''ஏய்! என்ன விளையாட்டு இது? நான் தவிச்சுப் போயிருக்கிறது தெரியலையா?'' என்று அவன் மார்பில் உதடுகளை வைத்தபோது, தீ சுட்டது போல் அவன் விதிர்த்து எழுந்தான்.

கட்டிலிலிருந்து இறங்கி நின்றான்.

வெளிச்சமும் நிழலுமாகத் தெரிந்த கண்ணனின் முகம் இறுக்கமாக இருந்தது.



''கண்ணா...என்னடா ஆச்சு?'' என்று பதறி அவன் சட்டை நுனியைத் தொட்டாள்.

கண்ணன் உதறிக்கொண்டு ஓரடி பின் வாங்கினான்.

''என்னைத் தொடாதே. உன்னைப் பார்த்தாலே அருவருப்பாயிருக்கு'' என்று சொல்லிவிட்டு, படுக்கை அறைக் கதவைத் திறந்து சரேலென வெளியேறினான்.

மீராவைப் புயல் ஒன்று தூக்கியெறிந்தது!

# 2

மீராவின் கன்னத்திலும் ஒருக்களித்த கழுத்திலுமாகச் சற்று ஈரமான சில்லென்ற கை பதிந்ததும் சட்டென்று விழிப்பு வந்தது. மீரா நிமிர்ந்து பார்த்தாள். கண்ணனின் அத்தை புன்னகை முகத்துடன் நின்றிருந்தாள்.

படுக்கையறையை சூரிய வெளிச்சம் பிரகாசமாக்கியிருந்தது. மீராவை லேசான குற்ற உணர்வு பீடித்தது. இவ்வளவு நேரமா தூங்கிவிட்டேன்...?

''தூக்கம் போறலைன்னா, ஆபீஸுக்கு லீவு போட்டுடறியா...?'' என்று அத்தை பரிவுடன் விசாரித்தாள்.

''இல்லம்மா... ஆபீஸ் போறேன்...'' என்று மீரா சுறுசுறுப்புடன் எழுந்து உட்கார்ந்ததும் அத்தை பதறினாள். ''இப்படிப் படக்குன்னு எழுந்து உட்காரக் கூடாதுடி ராஜாத்தி. மெதுவா ஒருக்களிச்சுக்கிட்டு எழுந்திருக்கணும்.''

மீரா அறையைச் சுற்றிப் பார்த்தாள்.

''கண்ணனைத் தேடறியா...? ஊருக்கு முன்னால எழுந்து, யாரோ க்ளையண்ட்டைப் பார்க்கணும்னு

பரபரன்னு ஓடிட்டான். மூணு மாசம் கழிச்சு வந்திருக்கான். ரெண்டு பேருக்குமே இன்னிக்கு அசதியாத்தான் இருக்கும்..." அத்தை சொல்ல வந்ததை முடிக்காமல் சிறு குறும்புப் புன்னகையுடன், ஓரப்பார்வையாக மீராவின் முகத்தைப் பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு வெட்கச் சிரிப்பை எதிர்பார்த்த மாதிரி இருந்தது.

அத்தையை இழுத்து, அவளுடைய மடியில் முகம் புதைத்து, முந்தின இரவு நடந்ததையெல்லாம் கண்ணீராகக் கொட்டிவிட வேண்டும் போலிருந்தது மீராவுக்கு.

அவளை ஒதுக்கிவிட்டு, கண்ணன் ஹாலில் போய் டெலிவிஷனைப் பார்க்க ஆரம்பித்ததும், சுந்தரி அவனிடம் ஏதோ பேச்சுக் கொடுத்ததும் அவன் டெலிவிஷனை அணைத்துவிட்டு, மறுபடி படுக்கையறைக்குள் வந்து கதவைத் தாளிட்டதும் கட்டிலில் கேள்வி ததும்ப உட்கார்ந்திருந்த மீராவை அலட்சியம் செய்து, தரையில் அவளுக்கு முதுகு காட்டி ஒருக்களித்துப் படுத்ததும் தெரிந்தால் அத்தை என்ன சொல்வாள்...?

"என்ன மீரா... இவ்வளவு யோசிக்கறே...? போன் பண்ணி ஒரு மணி நேரம் பர்மிஷன் சொல்லிடவா...?" என்று கேட்டாள் அத்தை.

"வேணாம்மா. கிளம்பிடுவேன்..." என்று டவலை எடுத்தாள் மீரா.

ஃ ஃ ஃ

அத்தையை கல்யாணத்துக்கு முன்னால், முதன்முதலில் கண்ணனோடு வந்து பார்த்தபோது மீரா பயந்திருக்கிறாள்.

அத்தைக்குச் சற்றுக் கம்பீரமான உயரம். நரை கலந்த கூந்தலை முடிந்திருந்த விதத்திலும் நேர் நிமிர்ந்த



பார்வையிலும் ஓர் அலட்சியம் தென்பட்டது. குங்குமம் வைக்காதபோதும் அதன் வடு நடுநெற்றியில்.

"அப்பா, அம்மா இல்லாம நான் அத்தைகிட்டே வந்து சேர்ந்தபோது, அத்தை வயித்துல சுந்தரி இருந்தா. சுந்தரிக்கு மூணு வயசு நடக்கறப்ப, அவங்கப்பாவும் போயிட்டாரு... அப்புறம் இருபது வருஷமா எனக்கும் சுந்தரிக்கும் அத்தைதான் எல்லாம்..." என்று கண்ணன் சொல்லியிருந்தான்.

அந்த இருபது ஆண்டுகள் குடும்பத்தை ஆட்சிபுரிந்த அனுபவம் காரணமாகவோ என்னவோ, தரையில் சப்பணமிட்டுச் சாதாரணமாக உட்கார்ந்திருந்தபோதிலும், கால்மேல் கால் போட்டு வீற்றிருக்கும் ஒரு கம்பீரம் அத்தையிடம் புலப்பட்டது.

அருகில் கூப்பிட்டுத் தலை வருடி, "எங்க கண்ணனுக்குப் பிடிச்சாச்சு இல்ல... எனக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்று அத்தை சொன்னபோது ஒரு சிறுத்தையின் மீசையைத் தொட்டுப் பார்க்கும் சிறுமியின் பயப்பெருமிதம் மீராவுக்கு வந்தது.

அந்த முதல் சந்திப்பிலேயே இந்த அத்தை வித்தியாசமானவள் என்று மீராவை எண்ண வைத்து விட்டாள்.

ஒரு தட்டில் அதிரசமும் இன்னொரு தட்டில் பொங்கலும் கொத்ஸும் பரிமாறிச் சாப்பிட வைத்தாள். அதிரசம் கரைந்தது. பொங்கலில் பசுநெய்யின் மணம். முந்திரிப் பருப்பின் சுவாரஸ்யமான நெருடல்.

அவள் தலையில் மல்லிகைப் பூச்சரத்தைச் சூடி விட்டாள்.

"யாரு உனக்கு ரவிக்கை தைச்சுக் கொடுத்தது... இப்படி காரே, பூரேன்னு! என்கூட வா, சொல்றேன்" என்று உள்ளறைக்கு அவளை அழைத்துப் போய்க் கதவைச்

சாத்திவிட்டு, அவளது ரவிக்கையைக் கழற்றிக் கொடுக்கச் சொல்லி வாங்கி, தையல் பிரித்து மெஷினில் ஒரு ஓட்டு ஓட்டிக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னபோது, மீராவை வெட்கம் பிடுங்கித் தின்றது. ரவிக்கை அணிந்த பின்தான் அத்தை அதிரசம் செய்வதில் மட்டுமல்ல- ரவிக்கை தைப்பதிலும் ஸ்பெஷலிஸ்ட் என்று புரிந்தது!

எல்லாம் துறந்து இந்த வீட்டுக்குள் அவள் அடியெடுத்து வைத்தபோது, ''யார் சொன்னது...இனிமே உனக்குப் பொறந்த வீடு இல்லைனு...? நாங்கல்லாம் உன் பொறந்த வீட்டு மனுஷங்கதான்...'' என்று நெஞ்சோடு அணைத்துக் கொண்ட தினத்துக்கப்புறம் இன்றுவரை அத்தை வேறு மாதிரி நடந்து கொண்டதில்லை.

''நெனைவு தெரிஞ்ச நாள்லேர்ந்து எனக்கு அம்மா இல்ல...உங்களை அம்மானு கூப்பிடலாமா?'' என்று தயங்கித் தயங்கிக் கேட்டபோது, அத்தை தன் சுத்தமான பல்வரிசை தெரியச் சிரித்தாள்.

''எந்தக் கொழந்தையாவது தன் அம்மாகிட்ட 'உன்னை அம்மானு கூப்பிடலாமா...?'னு கேக்குமா? கண்ணனுக்குத்தான் நான் அத்தை...உனக்கும் சுந்தரிக்கும் அம்மாதான்'' என்று தோளில் சாய்ந்து நெற்றியில் முத்த மிட்டாள்.

ஆனால், பெற்றெடுத்த அம்மாவிடம் கூடச் சொல்லத் துணியாத சில விஷயங்கள் இருப்பதில்லையா? கண்ணைப் பற்றி அத்தையிடம் பேச இப்போது அவசரம் வந்துவிட வில்லை என்று மீராவுக்குத் தோன்றியது.

ஃ ஃ ஃ

மீரா டிபன் சாப்பிட உட்கார்ந்தாள். அத்தை அவளுக்கு மட்டும் பரிமாறினாள். எப்போதும் சுந்தரியும் அவளுடன் உட்காருவது வழக்கம்.



''சுந்தரி எங்கேம்மா...?'' என்று கேட்டாள் மீரா.

''சாப்பிடறச்சே தலையணை மாதிரி ஒரு புத்தகத்தைப் பக்கத்துல வெச்சுக்கலைன்னா, அவளுக்கு எப்படிச் சாப்பாடு இறங்கும்? இருந்ததைப் படிச்சிட்டாளாம். அதனால, இன்னொண்ணு எடுத்துட்டு வர லைப்ரரிக்குப் போயிருக்கா. அவளுக்காகக் காத்திட்டிருக்க வேண்டாம். நீ சாப்பிட்டுக் கிளம்பு. வேன் வர்ற நேரமாச்சு'' என்றாள் அத்தை.

சற்று அவசரமாகச் சாப்பிட்டதாலோ... இல்லை, இரவு சரியாகத் தூங்காததாலோ மீராவுக்கு வேனில் ஏறும்போதே, தொண்டையில் ஒரு அசௌகரியம் இருந்தது.

ஒரே பகுதியில் வேலை செய்யும் பெண்கள் சேர்ந்து, தங்களுக்கென ஏற்பாடு செய்துகொண்ட வேன்.

மீராவை ஏற்றிக்கொள்ள வரும்போது, மற்ற பதினொரு இருக்கைகளும் நிரம்பியிருக்கும்.

முப்பது நிமிடப் பயணத்துக்குள் முந்நூறு விஷயங்கள் அந்தச் சட்டசபையில் அலசப்பட்டுவிடும். மாமியார்களின் தலை உருளும். அண்ணன்களின் பொறுப்பற்ற பேச்சு விவாதிக்கப்படும். கணவன்களின் கையாலாகாத்தனம் கிழிக்கப்படும்.

ராஜி அவ்வப்போது புடவைகளைக் கொண்டுவந்து. தவணை முறையில் விற்பாள். மைதிலி, ஆந்திராவிலிருந்து மெல்லிய தோடுகள் வாங்கிவந்து ஐந்தோ, பத்தோ லாபம் சேட்டுவாள். மகேஸ்வரி வடகம், மோர்மிளகாய், சாம்பார் பொடி என்று ஞாயிறுகளில் தயார் செய்த பொட்டலங் களைக் கடை விரிப்பாள்.

கூட்டுமுறையில் வாங்கப்படும் லாட்டரிச் சீட்டுக்கான வசூல் நடந்தது. பணம் எடுக்கக் கைப்பையைத் திறந்த

போது, மீராவுக்கு முதல் முறை தலைசுற்றியது. சமாளித்துவிட்டாள்.

வேனுக்குள் ஏதோ ஒரு துளையிலிருந்து டீசல் வாசம் கசிந்தது. மீராவின் தொண்டை எரிந்தது. கையிலிருந்து ஒரு ஆல்பகோடா பழம் எடுத்துப் புளிப்பாய் வாயில் அடக்கிக் கொண்டாள். இருந்தும் வயிற்றைப் புரட்டியது. குமட்டல்.

சைகை செய்து டிரைவரை ஓரம் நிறுத்தச் சொல்லி, இறங்கி வாந்தி எடுத்தாள். ராஜி, தண்ணீர் பாட்டிலை நீட்டினாள். ஜெயமணி வியர்வையை ஒற்றி எடுத்தாள். ஒரு ஜோடிக் கைகள் தோள்களை ஆதரவாகப் பற்றிக் கொண்டன

வயிற்றுக்குள் ஏதோ அசம்பாவிதம் நடக்கப்போகிறது என்ற திடீர் அச்சம் மீராவைத் தாக்கியது.

''நான் வீட்டுக்குப் போறேன். நீங்க போங்க.'' என்றாள் ஓய்ந்த குரலில்.

''தனியா எப்படி டி அனுப்ப முடியும்?''

''ராஜி, பக்கத்துலதான் இவ புருஷன் ஆபீஸ் இருக்கு.''

ஃ ஃ ஃ

கண்ணனின் கம்ப்யூட்டர் சென்டர் வாசலில் வேன் பிரேக் அடித்தது.

இரண்டு பெண்கள் உள்ளே விரைந்தார்கள்.

கண்ணன் ஓட்டமும் நடையுமாக வெளியே வந்தான், மீராவின் கண்களில் பட்டதும் சட்டென்று அவன் வேகம் வடிந்துபோனது.

''நேரா வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடாதீங்க சார்... டாக்டர்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டுப் போங்க'' என்று கிரிஜா உரிமையோடு அதட்டினாள்.



கண்ணன் முகத்தில் தெரிந்த பதட்டம் நிஜமா, பொய்யா? மீராவுக்குப் புரியவில்லை.

வேன் புறப்பட்டுப் போனதும், ''ஒரு நிமிஷம்... பார்ட்னர்கிட்ட சொல்லிட்டு வந்துடறேன்'' என்று ஒரு சுவரிடம் பேசுவதுபோல் பேசிவிட்டுப் போனான்.

கார் பயணத்தின்போது, ''ரொம்ப வலிக்குதா?'' என்று கண்ணன் கொஞ்சம் தடுமாற்றத்தோடு கேட்டான்.

''ஆமா... ஆனா, உடம்பு இல்ல'' என்று மீரா சொன்னதும், ஒரே ஒரு கணம் திரும்பிப் பார்த்தான். அதன்பின் அந்த மூன்றாம் மனிதப் பேச்சும் இல்லை.

ஹைதராபாத் ப்ராஜெக்ட் கிடைத்த போது, ''ஏய்... இந்த கம்ப்யூட்டர் பிஸினஸே எனக்குப் பிடிக்கலை பேசாம விட்டுட்டு, நம்ம ரோட்டோரத்திலேயே ஒரு பெட்டிக்கடை வெச்சிடவா?''

''படுத்துக்கறப்பகூட கம்ப்யூட்டரைத் தலைக்கு வெச்சிக்கிட்டுத் தூங்கற ஆளு நீங்க... என்ன திடீர்னு இந்த விரக்தி?''

''பின்னே என்னப்பா'' மூணு மாசம் உன்னைப் பிரிஞ்சு, ஹைதராபாத்ல போய் உட்காரணும்னு நெனைச்சாலே ஹார்ட் வலிக்குது பேசாம நீயும் வந்துடறியா?''

''எதுக்கு? காலையில ஏழு மணிக்குப் போயிட்டு, கலைஞ்ச தலையோட ராத்திரி ஒரு மணிக்கு நீங்க திரும்பி வர்றவரைக்கும் வாசக் கதவைப் பார்த்துக்கிட்டு, பாஷை புரியாத ஊர்ல உட்காந்திருக்கவா? இந்த ப்ராஜெக்ட் கெடைக்கணும்னு திருப்பதிக்கெல்லாம் வேண்டிக் கிட்டீங்களே! இப்ப, திடீர்னு என்ன ஜகா?''

''மூணு மாசம் மீரா.''

''மூணே மாசம்.''

"தெனம் என்னை நெனைச்சுப்பியா?"

"எனக்கு வேறென்ன நெனப்பு இருக்க முடியும்...?"

"உன்கூட இல்லைன்னாலும் ஒவ்வொரு நாளும் நீ என்ன பண்ணினேன்னு எனக்குத் தெரிஞ்சுக்கணுமே."

"தெனம் போன் பேசலாம்."

"ம்ஹூம்... போன்ல பேசிக்கிட்டா, கிக்கு அதோட போயிடும்டி கண்ணம்மா... டைரி எழுது—தெனம் படுக்கறதுக்கு முன்னால, என்னைப் பத்தி நெனைச்சுக்கிட்டதை எல்லாம் எழுது. உன்னைப் பார்த்து எவன் எவன் வழிஞ்சான்னு எழுது. நான் வந்து படிச்சுப் பார்க்கிறேன்... இன்ட்ரஸ்டிங்கா இருக்கும். கிக்கா இருக்கும். தொண்ணூறு நாள்ல எழுதினதை, அப்புறம் லைஃப் லாங் படிச்சுக்கிட்டே இருக்கலாம் பாரு..."

"அய்! ஹைதராபாத்ல என்ன நடக்குதுனு எனக்குத் தெரிய வேண்டாமா...? நீங்க, எனக்காக ஒரு டைரி வாங்குங்க... நான் உங்களுக்காக ஒண்ணு வாங்கறேன்."

அந்தக் கண்ணனுக்கா இப்போது நெஞ்சு உலர்ந்து விட்டது...?

'என் டைரியை நீ படிக்கும்போது, உன் தோளில் தொற்றிக் கொண்டு, நானும் என் வரிகளை வெட்கத்தோடு படிக்கலாம் என்று நேற்று ராத்திரி கனவு வைத்திருந்தேனே அந்தச் சுகத்தைத் தொலைத்து விட்டாயே... மூட்டாள் கணவா!'

ஃ ஃ ஃ

"ரெண்டு நாள் ஆபீஸ் போக வேண்டாம். ரெஸ்ட் எடுங்க...இதெல்லாம் கர்ப்பக் காலத்துல சகஜம். மனசைப் போட்டு அலட்டிக்காம, காமிக்ஸ் படிங்க... கார்ட்டூன்



பாருங்க... சிம்ப்னி ரிலாக்ஸ்.." என்று டாக்டர், அவள் தோளில் தட்டி அனுப்பி விட்டாள்.

'காலைல மூஞ்சியைப் பார்த்தவுடனே புரிஞ்சு போச்சே... நான்தான் லீவு போட்டுரு, லீவ் போட்டுருன்னு சொன்னேனே...டாக்டர் பிரம்பெடுத்தாத்தான் கேப்பியா?' என்று அந்தை கவலையோடு அவளை அணைத்துக் கொண்டான்.

கண்ணன் பார்சலை டெலிவரி செய்தவன் போலத் திரும்பிப் போனான்.

ஃ ஃ ஃ

படுக்கையில் முள் குத்தியது. தணல் சுட்டது. மீராவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"இங்கியாடா வலிக்குது...?" என்று விரல் நுனியாலாவது அவள் வயிற்றைத் தொட்டுப் பார்க்க வேண்டியவன் "ரொம்ப வலிக்குதா...?" என்று டிரைவர் ஸீட்டிலிருந்து விறைப்பாகக் கேட்கிறான்.

ஊரிலிருந்து நீ பேசிய போன்கள் எல்லாம் நாடகமா, இல்லை நிஜமா...?

ஹைதராபாத்திலாவது என்னை நினைத்திருந்தாயா? ஒரு நாளாவது என்னைப் போல் டைரி எழுதினாயா...?

மீராவுக்கு விரல் நுனிகள் நடுங்கின. சந்தேகமும் எதிர்பார்ப்பும் ஆட்டிப்படைத்துக் காய்ச்சலாகச் சுட்டன. கண்ணனின் பெட்டியைத் திறந்தாள்.

இது அநாகரிகம் இல்லையா...? அத்துமீறல் இல்லையா...?

இல்லை... இது எனக்கான டைரி. நூறு சதவிகித உரிமை எனக்குத்தான் இருக்கிறது.

அவள் வாங்கிக் கொடுத்த டைரி. அவன் ரசித்த டைரி... மூலை கசங்காமல் கையாளப்பட்டிருந்தது.

முதல் பக்கத்தில் அவள் உதட்டு ரேகைகளோடு லிப்ஸ்டிக் கறை...

"எனக்கு மூடு வரும்போதெல்லாம் இது நீன்னு நெனைச்சுக்கிட்டு..."

அவ்வப்போது பட்ட ஈரத்தினால் முதல் தாளின் அந்த பகுதி மொடமொடத்துப் போயிருந்தது.

'ஜனவரி—15

என் மீராவிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஹைதராபாத் என்னும் நரக வாசலை மிதித்தேன்.

ஹை—டெக் நகரமாம்...பெருமை பேசுகிறார்கள். என்னைப் பொறுத்த வரை, மீரா இல்லாத இடம் பனிப் பாறைகள் நிறைந்த பொட்டல்வெளி. வெயில் எரிக்கும் மணற்பாலை, சுவாசக்காற்று அற்ற சந்திரவெளி. மீரா, ஐ மிஸ் யூ மீரா, ஐ லவ் யூ மீரா... மீரா உன் விரலின் நுனி உன் உதட்டின் ஓரம்... ஏதாவது ஒன்று வேண்டும் எனக்கு... மீரா...மீரா...மீரா... மீரா...மீரா...மீரா...!'

'ஜனவரி—16

மீராவை நினைத்து இன்று தூங்கவே இல்லை...

'ஜனவரி—17

மீராவின் குரலைச் சுமந்து வந்த என் தொலைபேசி டார்லிங்கே...'

மீரா படித்தாள். படிக்கப் படிக்க நரம்புகளில் நாட்டிய அரங்கேற்றம்... இதயத்தில் தில்லானா... கண் விளிம்புகளில் காதல் அருவி...



'ஜனவரி முப்பது, மீரா' என்று எழுதி, வார்த்தை அடிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து மார்ச் இருபத்தெட்டு வரை இங்க் புள்ளிகூட இல்லை!

மார்ச் இருபத்தொன்பது. அந்தப் பக்கத்தில் ஒரே ஒரு வாக்கியம். அவள் இதயத்தை அம்புபோல் துளைத்த வாக்கியம். அவள் உச்சந்தலையில் அணுகுண்டு வெடித்தது போன்றதொரு உணர்வை ஏற்படுத்திய வாக்கியம்...

"மீராவோடு இனி வாழமுடியாது! வாழப் போவ தில்லை..."

## 3

ஜன்னலில் சலசலப்பு...மீரா திரும்பினாள்.

அணில் ஜன்னல் விளிம்பில் கனத்த வாலை விறைத்து நிறுத்தி, பளபளக்கும் கண்களால் அவளைப் பார்த்தது. முன்னங்கால்களால் மூக்கைத் தேய்த்து 'ச்சில்...ச்சில்' என்று அனுமதி கேட்டது.

வேறெந்த நேரமாக இருந்தாலும் மீரா பதிலுக்குப் புன்னகைத்திருப்பாள். 'என்னடா ராஜா வேணும்?' என்று விசாரித்திருப்பாள். வேர்க்கடலையோ, கொய்யாபழமோ கொண்டு வந்து வைத்து அந்தப் பற்களின் வேகத்தை ரசித் திருப்பாள்.

வட்டக் கண்களைச் சுழற்றி அழைத்துப் பார்த்த அணில் ஏமாந்தது. ஜன்னல் கம்பிகளில் குதித்து ஏறி, தென்னங்கீற்றுக்குத் தாவியது.

மீராவின் மடியிலிருந்து கண்ணனின் டைரி நழுவியது.

என்ன அர்த்தம் இந்த வரிக்கு?

மீராவோடு வாழ முடியாது என்ற எண்ணம் ஏன் பிறந்தது? மீராவோடு வாழப் போவதில்லை என்ற தீர்மானம் எப்படி வந்தது?

எண்ணூறு கிலோ மீட்டர் தள்ளியிருந்தபடி நான் என்ன தவறு செய்திருக்க முடியும்?

டைரியில் அதற்கப்புறம் இருந்த அத்தனை பக்கங்களும் வெறுமை.

உடனே கேள்! ஏன் என்று உடனே கேள்!

ஃ ஃ ஃ

மீராவின் குரல் கேட்டதும் ஆபரேட்டர் தாமதமின்றி தொடர்பு கொடுத்து விட்டாள். எதிர்முனையில் மீரா இருப்பது தெரிந்தால் அழுத்தமான ஒரு முத்த சத்தத்துடன்தான் கண்ணனின் உரையாடல் எப்போதும் தொடங்கும்.

ஆனால் இன்றைக்கு...

''என்ன?'' என்றது கண்ணனின் சுவாரஸ்யமற்ற குரல்.

''மீரா பேசறேன்...கண்ணன்...''

''என்ன?''

''உங்க டைரியைப் பார்த்தேன்'' மீராவின் குரல் நடுங்கியது.

''அதுக்கென்ன?''

''எனக்கு உங்ககிட்ட பேசணும். உடனே பேசணும்.''

'நான் பிஸியா இருக்கேன். இப்ப தொந்தரவு பண்ணாதே.''



துண்டித்து விட்டான். உதாசீனம் செய்து விட்டான். அவளுடைய இதயம் துடித்தது. செத்த ரிஸீவரை இயந்திரம் போல் பொருத்தியபோது கதவு திறந்து சுந்தரி நுழைந்தாள்.

''இப்ப எப்படியிருக்கு?'' என்று நலம் விசாரித்தாள். அத்தை சொல்லியிருக்கக்கூடும்.

மீரா பொய்ப் புன்னகை அணிந்தாள். ''பரவால்லை...''

சுந்தரி மார்போடு ஒரு கனத்த புத்தகத்தையும் தோளோடு தன் கரடி பொம்மையையும் அணைத்திருந்தாள். இரட்டைப் பின்னல்களில் ஒன்று முன்னால் விழுந்திருந்தது. நாற்காலியைக் கட்டில் அருகே இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

''வெங்கி... இப்படி உக்காரு'' என்று இரண்டடி உயர கரடி பொம்மையை மடியில் அணைத்துக் கொண்டாள். இந்த வெங்கியைத் தவிர, இதே அளவில் பிங்கி என்று கவுன் போட்ட இன்னொரு பொம்மையும் சுந்தரியின் மடியில் அவ்வப்போது படுத்திருக்கும். சிவப்பு சிவப்பாக நூல் தொங்கும் அதன் கூந்தலை வலிக்காமல் வாரி ஒவ்வொரு நாளும் அதற்கு ஒவ்வொரு விதமாகக் கொண்டை போடுவாள் சுந்தரி. நெஞ்சில் அந்த பொம்மையைப் போட்டுக் கொண்டு அதனுடன் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பாள்.

''பதிமூணு வயசுல சுந்தரி வயித்துல ஒரு ஆபத்தான கட்டி. வேற வழியில்லாம ஆபரேஷன் பண்ணி கருப்பையையே எடுக்கும்படியா ஆய்டிச்சு. அதுக்கப்புறம் அவளுக்கு இந்த பொம்மைங்க பேர்ல ஆசை அதிகமாய்டிச்சு'' என்று ஒரு சந்தர்ப்பத்தில் கண்ணன் சொன்னபோது—

"இருபத்துமூன்று வயதில் இப்படி ஒரு பொண்ணா?" என்ற ஆச்சரியம் அகன்று சுந்தரியின் மேல் மீராவுக்கு ஒரு பரிதாபம் சுரந்தது.

சுந்தரி பொம்மைகளை நேசிப்பவள். குழந்தைகள் என்றால் வளர்ந்து விடக்கூடும். பிரிந்து விடக்கூடும். பொம்மைகள் அப்படி அல்லவே. மற்றபடி சுந்தரிக்கு கற்பூரபுத்தி. ஒரு கப்பல் நிறைய விதவிதமான புத்தகங்களை அடுக்கி, "ஏதாவது ஒரு தீவில் போய் இரு" என்று சொன்னால் உடனே சந்தோஷமாகப் புறப்பட்டு விடுவாள்

ஃ ஃ ஃ

"கண்ணன் என்ன சொல்றான்?" என்றாள் சுந்தரி, ஒரு நமுட்டுச் சிரிப்போடு.

மீரா திடுக்கிட்டாள். இவளுக்குத் தெரியுமா?

"இன்னிக்கு எட்டி உதைச்சானா?"

அவள் குறிப்பிட்டது வயிற்றுக் குழந்தையை என்று புரிந்ததும் மீரா பெருமூச்சுவிட்டாள். குழந்தை உதைக்கும் போது ஏற்படும் அதிர்வைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்று சுந்தரி வெகுநாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அதுக்கு இன்னும் கொஞ்ச நாளாகணும் சுந்தரி உதைச்சதும் உன்னைக் கூப்பிடறேன்" என்று மீரா புன்னகைத்தாள்.

"இப்ப எவ்வளவு வாரமாச்சு?"

"பதினஞ்சோ, பதினாறோ..."

சுந்தரி நூலகத்திலிருந்து எடுத்து வந்த புத்தகத்தைக் காட்டினாள்.

"மணப்பேறும் மகப்பேறும்."



"பதினெட்டு வாரம் ஆச்சுன்னா குழந்தையோட இதயத்துடிப்பைக் கேக்க முடியுமாம். நூத்து இருபதுலேர்ந்து, நூத்து நாப்பது தடவை பாப்பாவோட இதயம் துடிக்குமாம். புக்குல போட்டிருக்கு."

அரிசி விளைச்சலில் இருந்து அணு ஆயுதம் வரை எல்லா விவரங்களையும் விரல்நுனியில் வைத்திருப்பவள் அவள்.

"மீரா, உனக்கு இப்பப் பட்டுப்புடவையெல்லாம் நல்லதில்ல. கனமான டிரஸ் போடக்கூடாது. டைட்டா பிரா போடக்கூடாது. பாவாடை நாடாவை வயித்துல இறுக்கக்கூடாது. ஹை ஹீல்ஸ் போட்டா ஆபத்து..."

சுந்தரியின் அக்கறையையும் தவிப்பையும் பார்த்தால் மீராவுக்குச் சிரிப்பு வரும். இரவல் கொடுத்திருக்கும் பொருளை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பவளைப் போல சுந்தரி சுற்றிச் சுற்றி வருவது மீராவின் வயிற்றில் வளரும் கண்ணனுக்காகத்தான் என்று மீராவுக்குப் புரியாமல் இல்லை.

திருமணமாகி இங்கே வந்த புதிதில் கண்ணனுக்கு மீரா பரிமாறிய தட்டை சுந்தரி நகர்த்தியிருக்கிறாள்.

"எங்க கண்ணனுக்கு இவ்வளவு சாதம் வெச்சா பிடிக்காது. காய் அதிகம் வெச்சு, சாதத்தைக் குறைக்கணும்."

"அய்யே... இந்த பாண்ட்டுக்கு இந்த ஷர்ட் மேட்சே ஆகாது. கண்ணன் பாத்தா சிரிப்பான். அந்த நீலக்கோடு போட்ட சட்டையை எடு" என்பாள்.

"காபில இவ்வளவு சர்க்கரை போடாதே."

"இந்த டம்ளர்ல கொடுக்காதே!"

"இந்தச் சிப்பைத் தொடக்கூட மாட்டான்!"

''விடு மீரா'' என்றிருக்கிறான் கண்ணன். ''இத்தனை வருஷம் எனக்குத் தேவையானதெல்லாம் சுந்தரிதான் பாத்துப் பாத்து செஞ்சிருக்கா. அதான் அவ்வளவு சுலபத்துல அவளால விட்டுக் கொடுக்க முடியல...''

ஃ ஃ ஃ

அத்தை கதவருகில் வந்து நின்றாள்.

''என்ன க்ளாஸ் எடுக்க ஆரம்பிச்சுட்டாளா? மீரா கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கட்டும் சுந்தரி.''

சுந்தரி இரட்டைப் பின்னல் ஆடத் திரும்பினாள்.

''தப்பும்மா... சும்மா ஒய்ஞ்சி ஒய்ஞ்சி உட்காரக் கூடாது. நார்மலான அத்தனை வேலையையும் விடாம செய்யணும்...'' என்றாள் வெங்கிஷ்ய வருடியபடி.

''சரிடி நூத்துக் கெழவி. ரெண்டு பேரும் சாப்பிட வாங்க'' என்று அத்தை தன் ராஜ்யத்துக்குத் திரும்பி விட்டாள்.

என்னென்னவோ தெரிந்து வைத்திருக்கிறாயே சுந்தரி. என் காதல் கணவன் மனதில் புகுந்து ஆட்டிப் படைக்கும் பிசாசு பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

மீரா டைரியைத் தலையணைக்கு அடியில் வைத்து விட்டு எழுந்தாள்.

ஃ ஃ ஃ

சுருக்கங்கள் நிறைந்த முகமும் துவண்டுபோன மார்புகளுமாக கிழவி மரநிழலில் உட்கார்ந்திருந்தாள்.

வசந்தன் தான் பணிபுரியும் வங்கி அலுவலகத்தை விட்டு வெளிப்பட்டான். கேரியருடன் படிகளில் இறங்கினான். அப்பா செய்திருந்த நெய்க்கீரை இன்னும் தொண்டையில் கம கம!



கிழவியின் அருகில் இருந்த வட்டமான பிரம்புக்கூடையில் கேரியரை வைத்தான்.

''அம்மா வரலியா?'' என்று கிழவி புகையிலை வாசத்துடன் கேட்டது.

தினமும் அவனுடன் உணவு முடித்து மீராவும் வருவது வழக்கம். தெருக்கோடி வரை நடந்து வேர்க்கடலையோ, வாழைப்பழமோ வாங்கிக்கொண்டு சினிமா போஸ்டர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு அவர்கள் திரும்பி வரும் வரை கிழவி அங்கே இளைப்பாறிக்கொண்டு இருக்கும்.

இதைப் போன்றதொரு மதிய உணவு இடைவேளையில்தான், இதே நடைபாதையில், மீராவிடம் அவன் கண்ணனின் காதலைச் சொல்லியிருக்கிறான்.

'ஏன், உன் ஃப்ரெண்டுக்கு என்கிட்ட நேர்ல சொல்ல முடியாதாமா?' மீரா சிரிப்பை இதழோரம் ஒளித்துக் கொண்டு பதிலுக்குக் கேட்டிருக்கிறாள்.

''பயம் மீரா... உண்மையா லவ் பண்ற எந்த ஆம்பளைக்குமே இருக்கற பயம்! சொன்னதும் ச்சீ, ச்சீ, நீ இவ்வளவுதானான்னு அந்தப் பொண்ணு கேட்டு வாளோங்கற பயம்.''

''கம்ப்யூட்டர் கத்துக்கணும்னு நான் சொன்னபோது நீ என்ன சொல்லி சேத்துவிட்டே? 'கண்ணன்னு என் ஃப்ரெண்ட், ரொம்ப கண்ணியமானவன். அவன் இன்ஸ்டிட்யூட்ல சேர்ந்து படி'ன்னு தானே சேர்த்து விட்டே?''

''கண்ணியம் தவறி இப்ப என்ன பண்ணிட்டான்? ஈவ்டீஸிங்கா? இல்லியே! இல்ல, கையைப் பிடிச்சு இழுத்துட்டானா? இல்லியே! லவ் பண்றதைக்கூட மூஞ்சில அடிச்சமாதிரி சொல்லாம என்னை விட்டுத் தானே சொல்லச் சொல்லியிருக்கான்?''

''நீ அனுமார் மாதிரி தூதா?''

''சத்தியமா சொல்லு மீரா... உனக்கும் அவன் பேர்ல ஒரு இது இருக்கா, இல்லியா?''

''எது?''

''கொன்னுப்புடுவேன்... புரியாதது மாதிரி நடிச்சா! உனக்குக் கண்ணனைப் புடிச்சிருக்கா இல்லியா?''

''புடிச்சா? உன்கிட்ட சொல்லிடணுமா? எனக்கு நேர்ல சொல்ற தைரியம் இருக்கு...''

''ராட்சஸி...!''

''தூதுபோறேன்னு சொல்லிக்கிட்டு டிக்கெட் வாங்காமயே சினிமா பார்க்கலாம்னு பிளான் பண்ணிட்டிருக்கியா? எங்கே ஓடறே?''

''கண்ணன்கிட்ட உடனே சொல்லியாகணும் இதை.''

ஃ ஃ ஃ

நினைத்த மாத்திரத்தில் இப்போது வசந்தனின் உதடுகளில் புன்னகை அரும்பியது.

''நான் இன்னா கேட்டேனு இப்படி சிரிச்சினு நிக்கறே?'' என்றான் சாப்பாட்டுக் கூடைக் கிழவி ஆச்சரியமாகி.

''மீராம்மா இன்னிக்கு லீவு ஆயா'' என்று சொல்லி விட்டு வசந்தன் நடைபாதையில் ஏறினான்.

ஃ ஃ ஃ

''வாடா... வா... வா'' என்று கண்ணனின் அத்தை வாய்நிறைய வரவேற்று அவனுக்குக் கதவு திறந்தாள். ''எங்கே உன் ஃப்ரெண்டு? ஒட்டிக்கிட்டுத் தானே வருவே!''



வசந்தன் சிரித்தான். ''கண்ணன் யாரோ க்ளையண்ட் ஆபீஸுக்குப் போயிருக்கானாம். இன்ஸ்டிடியூட்ல ஆளைக் காணோம்'' என்றான் ஷூக்களை கழற்றியபடி.

''மீராவுக்கு எப்படி இருக்கு?'' என்று கேட்டான்.

''இப்பத்தான் முகம் கழுவி காபி குடிச்சா'' என்று அத்தை அவனிடம் ஒரு காபி டம்ளரை நீட்டினாள்

''இதென்ன ரெடிமேடா காபி வெச்சிருக்கீங்க?''

''எனக்காக இப்பத்தான் போட்டேன். சூடு போதுமா பாரு.''

''நீங்க குடிங்க...''

''அட குடிடா. நான் இன்னொரு காபி போட்டுக்கறேன்! மீரா...''

''வா, வசந்த்'' என்று மீரா படுக்கையறையிலிருந்து வெளிப்பட்டாள். அவனைப் பார்த்ததும் புத்துணர்ச்சியை ரத்தத்துக்குச் செலுத்திக் கொண்டது போலிருந்தது.

''வசந்த்... டயர்டா இருக்கா?'' என்று கேட்டாள்.

''ஏன் மீரா?''

''என்கூட ஒரு வாக் வர முடியுமா?''

''நடந்துதானே?''

மீரா சிரித்தாள். ''ம்'' என்று தலையாட்டினாள்.

''திரும்பி வரும்போது டாக்டர் ஏதோ இரும்பு மாத்திரை எழுதிக் கொடுத்தாங்கன்னு சொன்னியே... அதை வாங்கிட்டு வந்துடு'' என்றாள் அத்தை.

''ஐயோ... இரும்புமாத்திரை இல்ல அத்தை. அயர்ன் டாப்லெட்'' என்றான் வசந்தன்.

''அயர்ன் டாப்லெட்டா? அப்படின்னா மட்டும் என்னப்பா அர்த்தம்?'' என்று அத்தை குரலில் குறும்பு ததும்பக் கேட்டாள்.

''அப்படின்னா?... அப்படின்னா... இரும்பு மாத்திரை தான்'' என்று வழிந்தான் வசந்தன்.

''போடா... போ'' என்று செல்லமாக அவன் தலையில் ஒரு குட்டு குட்டி அத்தை வழியனுப்பி வைத்தாள்

ஃ ஃ ஃ

வசந்தனும் மீராவும் தெருமுனை திரும்பியபோது குறுக்குத் தெருவில் ஒரு கார் பிரேக் அடித்து நின்றது.

காரில் இருந்த கண்ணன் பார்த்தான்.

சற்று உயரமான நடைபாதையில் ஏறுவதற்குத் தடுமாறிய மீரா, வசந்தனின் கையைப் பற்றிக்கொள்வது தெரிந்தது.

கண்ணன் சில விநாடிகளுக்கு அந்தக் காட்சியையே மௌனமாகப் பார்த்து கொண்டிருந்தான்.

பின், சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாகத் தன் காரை ரிவர்ஸ் எடுத்து எதிர்சாலையில் செலுத்தினான்!

# 4

கண்ணனை அந்த நேரத்தில் பார்த்ததும் அத்தை ஆச்சரியப்பட்டாள். கோத்துக் கொண்டிருந்த ஊசியையும் நூலையும் தனியே வைத்தாள்.

''என்னடா இவ்வளவு சீக்கிரம்?''



''அர்ஜெண்டா ஊருக்குக் கௌம்பறேன்...'' என்று டையைக் கழற்றிய கண்ணன் ''மீரா'' என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான்.

''இப்பத்தானே மீராவும் வசந்தனும் வாக் போனாங்க...ஏ...சுந்தரி ஓடு...மீராவைக் கூட்டிட்டு வா'' என்று அத்தை பரபரத்தாள்.

''வேணாம்...'' என்றான் கண்ணன், அவசரமாக, ''ஏழு மணி மதுரை டிரெயினைப் பிடிச்சாகணும்: சுந்தரியை அனுப்பிட்டா அப்புறம் யார் எனக்கு பேக் பண்ணுவாங்க? கௌம்பறதுக்குள்ள வந்துடறாளா பார்ப்போம்... இல்லேன்னா, ரயிலுக்குப் போற வழியில பார்த்துக்கறேன்.''

சுந்தரி ஒரு ரகசிய சந்தோஷத்தோடு அவனுக்குத் தேவையானதை எடுத்து வைக்க உள்ளே விரைந்தாள்.

''என்ன திடீர்னு மதுரை?''

''ஆபீஸ் வேலை அத்தை''—டவலை உருவி எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்குள் கண்ணன் பாய்ந்தான்.

ஃ ஃ ஃ

வளைந்த ஆகாயம் தூரத்தில் தலை வணங்கிக் கிடந்தது. கடைசிப் பறவைகள் கூட்டமாக மறைந்து விட்டன.

''போலாமா?'' என்றான் வசந்தன். அவன் குரல் உலர்ந்திருந்தது.

''நான் சொன்னது எதையுமே நீ நம்பல இல்லியா?'' என்றாள் மீரா, சற்றே ஆதங்கம் தொனிக்க குரலில்.

''நம்பலன்னு நான் சொல்லலியே மீரா. அவசரப் பட்டுக் கண்ணனை அநாவசியமா சந்தேகப்பட்டி

யோன்னு தோணுது. இதப்பாரு மீரா...சாஃப்ட்வேர் வேலை மனுஷனை சமயத்துல உறிஞ்சி எடுத்துடும். சொன்ன நேரத்துக்குள்ள ப்ராஜெக்ட்டை முடிச்சுக் கொடுக்கலைன்னா க்ளையண்ட் அடுத்த தடவை வரமாட்டான். புரோகிராம்ல ஒரு பிரச்னையைத் தீர்த்தா புதுசா ஒண்ணு கெளம்பும்..."

"அதனால பொண்டாட்டியோட இனிமே வாழ முடியாதுன்னா எழுதத் தோணும்?"

வசந்தன் திகைத்துப்போய் நின்றான்.

"அப்படியா எழுதியிருக்கான்?"

பதில் சொல்லமுடியாமல் மீராவுக்குத் துக்கம் தொண்டையில் பந்தாடியது. வசந்தனிடம்கூட சொல்ல முடியாவிட்டால் வேறு யாரிடம்தான் சொல்லிக்கொள்வாள்?

கீழே சறுக்கி விழுந்த குழந்தை அம்மாவின் கை நீள்வதற்காக ஏக்கத்துடன் பார்ப்பதுபோல் வசந்தனைப் பார்த்தாள். தலையை மெள்ள அசைத்தாள்.

வசந்தன் சற்று தூரம் மௌனமாக வந்தான்.

"கண்ணன்கிட்ட நான்தான் எதுவும் பேச முடியும், பேசறேன்" என்றான். "உன்னைப் பார்க்கமாட்டோமா, உன்கூடப் பேசமாட்டோமான்னு கண்ணன் ஏங்கின ஏக்கத்தையெல்லாம் கூட இருந்து பார்த்தவன் நான். அப்படிச் சட்டுன்னு மாறிப் போயிட முடியும்ன்னு எனக்குத் தோணலை..."

"அதான எனக்கும் தவிப்பா இருக்..."—மீராவின் வாக்கியம் தடைப்பட்டது. குறுக்குத் தெருவிலிருந்து திரும்பும் ஆட்டோவில் உட்கார்ந்திருப்பது கண்ணன், தானே...?

"வசந்த்...கண்ணன்"



வசந்தன் நிமிர்வதற்குள் ஆட்டோ மறு தெருவில் மறைந்துவிட்டது.

"உளறாதே. உனக்கு இப்ப எதைப் பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் கண்ணனாத்தான் தெரியும். கண்ணன் எதுக்கு ஆட்டோல போகப்போறான்?"

❀ ❀ ❀

"ஏம்மா. ஒரு ரெண்டு நிமிஷம் முன்னால வரக் கூடாதா? கண்ணன் இப்பதான் ஊருக்குக் கிளம்பிப் போறான்..." என்று அத்தை எதிர்கொண்டதும் வசந்தனுக்குத் தலையில் தட்டப்பட்டமாதிரி இருந்தது. அவனது நம்பிக்கை பொய்த்துவிட்டதே!

"என்னம்மா... இங்க பக்கத்துலதானே போயிருந்தோம்?" என்றாள் மீரா, சோகத்துடன்.

"ரயிலுக்கு நேரமாச்சுன்னு அள்ளிப் போட்டுக்கிட்டு ஓடறான். முடிஞ்சா வழியில பார்க்கறேன்னு சொன்னானே மீரா... பார்க்கலியா?"

வசந்தனை நிமிர்ந்து பார்த்தாள் மீரா.

'கண்ணனா இப்படிச் செய்தான்' என்ற ஆச்சரியம் வசந்தனின் கண்களில் தெரிந்தது.

"எந்த ஊரு?" என்று கேட்டான்.

"மதுரை. ஒரு வார வேலையாம்..." என்றாள் சுந்தரி. "பாவம், கண்ணனுக்கு வீட்டுச் சாப்பாடு சாப்பிடற ராசியே இல்ல."

வசந்தனின் உற்சாகம் வடிந்துபோயிருந்தது. மீராவின் பார்வையைத் தவிர்த்தான். அங்கிருந்து புறப்பட்டான்.

❀ ❀ ❀

கிணற்றடியில் சத்தம் கேட்டது. வசந்தன் கொல்லைப் புறம் வந்து பார்த்தான். இளங்காலை வெயில் பித்தளைச் செம்பில் பளபளத்தது.

வசந்தனின் சட்டையை அலசிக்கொண்டிருந்த அவன் அப்பா குனிந்தவாக்கில் தலையை மட்டும் நிமிர்த்தினார்.

“என்ன வசந்தா?”

ஒரு நாளும் அவனை வசந்த் என்று பெயர் சுருக்கிக் கூப்பிட்டதில்லை. வாய் நிறைய வசந்தா!

“டிபன் ரெடி” என்றான் வசந்தன். வெங்காயச் சருகு களைத் தொட்டியில் போட்டபடி.

“இதோ வந்துடறேன்.”

அலசி, வலிக்காமல் பிழிந்து சட்டையின் தோள் பகுதி களைப் பிடித்து உதறி ஹாங்கரில் அணிவித்து, உலர்த்தும் கொடியில் மாட்டினார்.

ஏழு வருடங்களுக்கு முன்புவரை வசந்தனின் அம்மா தான் வீட்டில் அத்தனை காரியங்களையும் கவனித்துக் கொண்டிருந்தாள். இதே கிணற்றடியில்தான் அவன் பாண்ட்டுக்கு பிரஸ் போட்டுக்கொண்டிருந்தபோது நெஞ்சைப் பிடித்துக்கொண்டாள். ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்வதற்குள் எல்லாம் முடிந்துபோயிருந்தது.

ரொம்பக் கொடுத்து வைத்தவர்களுக்குத்தான் அப்படி ஒரு ஸ்தம்பிக்கும் முடிவு கிட்டும் என்று விசாரிக்க வந்தவர் கள் எல்லாம் சொன்னார்கள்.

அதுவரை அந்த வீட்டு ஆண்களுக்கு தீப்பெட்டி எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியாது. எல்லாவற்றையும் தானே இழுத்துப் போட்டுச் செய்து கொண்டிருந்த அம்மா அப்படிச் சட்டென்று முடிந்து போனதும் இனி வாழ்க்கை நரகம்தான் என்று வசந்தன் பயந்தான்.



அப்பா தோளோடு அவனை அணைத்தார். “நீ ஃபைனல் பரீட்சை முடிக்கிற வரைக்கும் படிப்பைத் தவிர வேறெதையும் நெனைக்காதே” என்றார்.

காலையில் அவன் எழுந்திருக்கும்போது பாதி சமையலை முடித்திருப்பார். முந்தின நாள் கழற்றிப் போட்டத் துணிகளைத் துவைத்துக் கொல்லைக் கொடியில் காயப் போட்டிருப்பார்.

இரண்டு வாரத்துக்குள் அப்பாவின் சமையலில் அம்மா வின் ருசி வந்து விட்டது.

படிப்பு முடித்த கையோடு வசந்தனுக்குப் பொதுத் துறை வங்கியில் வேலை கிடைத்தது. முதல் நிலை அதிகாரி யாக நேரடியாக பீகாரில் திருல்டி என்ற கிராமத்தில் சேரச் சொல்லி உத்தரவு வந்தது. ரயில் கிடையாது, பஸ் கிடை யாது, மின்சாரம் கிடையாது என்று தகவல் சேகரித்ததும் வசந்தன் தயங்கினான்.

“நாம போறோம்” என்றார் அப்பா.

“நாமளா? உங்க வேலை?”

“எங்க கம்பெனியில ஒரு டிரைவர் குறைஞ்சா ஒண்ணும் கெட்டுப் போயிடாது.”

“ஆனா, மூர்த்தி சாருக்கு உங்களைத் தவிர வேற யார் கார் ஓட்டினாலும் பிடிக்காதேப்பா.”

“எனக்குக் கூடத்தான் அம்மா சமையலைத் தவிர வேற எந்த சமையலும் பிடிக்காம இருந்தது.”

மூர்த்தி சார் சந்தோஷமும் வருத்தமுமாகத்தான் வழி யனுப்பி வைத்தார். ‘இருபத்தேழு வருஷமா ஒரு நாள் லேட்டா வந்ததில்ல. ஒரு நாள் சீக்கிரம் போகணும்னு சொன்னதில்ல. பம்பர்கூட ஒரு கீறல் விழுந்ததில்ல. உன்னை நான் டிரைவரா நெனைச்சதே இல்ல ரங்கசாமி.

இந்த கார் உன் குழந்தை மாதிரி. உன்னைத் தவிர வேற யார்கிட்டயும் பழகாது. உன் கூடவே எடுத்துட்டுப் போயிடு.''

இன்றுவரை 'அவன் அப்பா அந்த காரை குழந்தை போல்தான் பார்த்துக் கொள்கிறார்.

பீகாரில் மூன்று வருடம் முடித்து, மத்தியப் ப்ரதேசத்தில் இரண்டு வருடம் முடித்து அவன் சென்னைக்குத் திரும்பும் வரை இந்த வீடு வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

நகர சந்தடியிலிருந்து ஒதுங்கி தனி காம்பௌண்ட் சுவருடன் அமைந்து விட்ட இந்த வீடு அப்பாவைப் பொறுத்தவரை ஒரு நினைவு இல்லம் போல் ஆகிவிட்டது.

காலைச் சிற்றுண்டி பொறுப்பை மட்டும் அவரிடம் இருந்து போராடி வாங்கி விட்டான் வசந்தன். அந்த நேரம் அவர் காரைக் குளிப்பாட்டி, வசந்தன் ஓட்டிச் செல்லத் தயார் செய்து வைப்பார்.

வசந்தன் அலுவலகம் புறப்பட்டுப் போனபின், சமையலை முடித்து காரியரில் வைத்து கூடைக்கிழவியிடம் கொடுத்து விட்டு சைக்கிளை இரண்டு கிலோ மீட்டர் மிதித்து நண்பரின் மெக்கானிச் ஷாப்புக்குப் போய் விடுவார்.

அவருக்குத் தனி நாற்காலி. எந்த காரின் நோயையும் நாடி பிடித்து புரிந்து கொள்ளும் கற்பூர புத்தி காரணமாகத் தடபுடலான மரியாதை.

மாலை நேரம் தோட்டத்துக்குள் நுழைந்து விட்டால் செடிகளோடு பொழுது போய்விடும்.

அழிக்கப்பட்ட காடு போல் இப்போது அப்பாவின் தலைமுடி அடர்த்தி வெகுவாகக் குறைந்து விட்டது.

''மதுரைக்கு எப்ப போறே?'' என்றார் அப்பா, கைகளைக் கழுவிக் கொண்டே.



வசந்தன் சட்டென்று கலைந்து ''அ... இன்னிக்கு ராத்திரிப்பா'' என்றான் இருவருக்கும் தட்டுகளை வைத்தபடி.

''கண்ணன் உனக்கு ரொம்ப க்ளோஸ்தான்... ஆனாலும்...'' அப்பா தயங்கி இழுத்தார்.

''மீராகிட்ட சொல்லாம எதையோ மறைக்கிறான். அவன் மனசுல என்ன புகுந்து ஆட்டிட்டிருக்குன்னு புரியாம அவ தவிச்சுப் போயிருக்காப்பா. அவன் என்கிட்ட மனசு விட்டுப் பேசுவான். எனக்கு கண்ணனைத் தெரியும்'' வசந்தன் நம்பிக்கையுடன் சொன்னான்.

ஃ ஃ ஃ

வசந்தனைப் பார்த்ததும் கண்ணன் திகைத்துப் போனான். ''நான் நைட் பஸ்ஸுக்கு டிக்கெட் வாங்கியாச்சு. இப்ப திடீர்னு மதுரைல வந்து நிக்கறே...?''

''எனக்கும் இன்னொரு டிக்கெட் வாங்கிடாப் போச்சு'' என்றான் வசந்தன். ''எத்தனை நாளாச்சு நாம சேர்ந்து வெளியே போய்! காலேஜ் ஹவுஸ்ல சாப்டுட்டு அப்படியே தங்கம் தியேட்டர் போலாமா?''

வசந்தன் சுவாதீனமாக அந்த லாட்ஜ் கட்டிலில் அமர்ந்தான்.

''சினிமா போலாம். சீட்டாடலாம். சேர்ந்து ஒரு பீர் வேணும்னாலும் அடிக்கலாம். ஆனா...'' வசந்தனின் பார்வையைத் தவிர்த்துத் தன் துணிகளை மடித்துப் பெட்டிக்குள் வைத்தான் கண்ணன்.

வசந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கண்ணன் இயல்பாக இல்லாமல் ஏதோ ஒரு தவிப்பை ஒளித்துப் பேசுகிறானே, ஏன்?

''என்னடா ஆச்சு உனக்கு? ஏன்டா இப்படி உம்முனு கெடக்கே? மீரா என்னடா தப்பு பண்ணினா?''

''ப்ளீஸ்!'' கண்ணன் இமைகளை இறுக மூடிக் கொண்டான் ''அவளைப் பத்தி மட்டும் பேசவே பேசாதே...?''

''உன் பிரச்னை என்னன்னு சொல்லு கண்ணா. என்கிட்ட சொல்லாம யார்கிட்ட சொல்லுவே?''

''இல்லடா...இது உன்கிட்ட சொல்ல முடியாது.''

கண்ணன் நிதானமாகத்தான் சொன்னான். ஆனால், வசந்தனை ஒரு விமானம் வந்து மோதினாற் போல் இருந்தது. எழுந்தான். கண்ணனின் தோள்களைப் பற்றி குலுக்கினான்.

''யார்கிட்டயும் சொல்லாம மனசுக்குள்ளயே வெச்சு சாகப் போறியா?''

கண்ணன் இமைகளைத் திறக்காமல் பதில் சொன்னான்:

''சொல்லத்தான்டா போறேன். இனிமேலும் ஓடி ஒடி என்னால ஒளிய முடியாது. மீராகிட்ட நான் நேர்ல சொல்லத்தான் போறேன். ஆனா அதைப் பத்தி இப்ப நாம பேச வேண்டாமே... ப்ளீஸ்... ப்ப்ளீஸ்ஸ்.''

காற்று கிழித்த வாழையிலை போல கண்ணனின் உடல் நடுங்குவதை வசந்தனால் உணர முடிந்தது.

சடாரென்று இழுத்து அணைத்துக் கொண்டான்.

''சரிடா... கேக்கல...'' என்றதும் வசந்தனை கண்ணன் இறுக்கிக் கொண்டான்.

ஃ ஃ ஃ

படுக்கையறையில் மௌனம் நீடித்திருந்தது.

மீராவும் கண்ணனும் ஒரே கட்டிலில் உட்கார்ந்திருந்தார்கள்.



ஓரடி இடைவெளியில், தனிமையில் இப்படி ஒருத்தரை ஒருத்தர் தொட்டுக் கொள்ளாமல் இத்தனை நேரம் உட்கார்ந்திருக்க முடியும் என்பதே மீராவுக்கும் வியக்கும் ஒரு அதிசயமாக இருந்தது.

காற்றில் ஜன்னல் திரை சுருண்டு எழுந்து சிறகடித்தது. கண்ணன் அதை ஒரு சாக்காக வைத்து எழுந்து போய் திரைச்சீலைகளை சரியாகப் பொருத்தினான்.

திரைச்சீலை துடித்தால்கூட எழுந்து போய் சரிசெய்யத் தெரிந்திருக்கிறதே... உனக்கு என் இதயம் துடிப்பது தெரியவில்லையா. துருப்பிடித்துப் போன தூண்களைப் போல, எத்தனை நேரம் நாம் இப்படி உட்கார்ந்திருக்க வேண்டும்?

''நாளைக்கு எந்த ஊரு?'' என்று மீரா மென்மையாகக் கேட்டாள்.

கண்ணன் சட்டெனத் திரும்பிப் பார்த்தான்.

''நான் கேள்வி கேட்டுடுவேனோன்னு மதுரைக்கு ஒரு வாரம் ஓடியாச்சு. அடுத்தது எங்கேன்னு கேட்டேன்.''

கண்ணன் திரைச்சீலையை நகர்த்தி ஜன்னலுக்கு வெளியே பார்க்கலானான்.

''எத்தனை நாளைக்கு இப்படி ஓடி ஓடி ஒளிய முடியும்னு நினைக்கறீங்க? எத்தனை யுகம் ஆனாலும் நேருக்கு நேர் பார்க்காமலா போயிட முடியும்? அப்ப இந்தக் கேள்வி வராமலா போயிடும்?''

கண்ணன் ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல் சடாரெனத் திரும்பினான்.

''என்ன கேக்கணும் உனக்கு?''

மீரா அவன் டைரியை எடுத்துக் காட்டினாள். கண் விளிம்புகளில் நீர் நத்தளித்தது. கேள்வி சற்று தொண்டையில் தடுமாறியது.

"திமர்னு என்னை ஏன் பிடிக்காம போச்சு?"

கண்ணன் பதிலைத் தயாராக வைத்திருந்தான். எடுத்து அவள் மீது ஆவேசத்தோடு வீசினான்.

"ஓடிப்போன உங்கம்மாவைப் பார்த்தேன்."

"..."

"ஹைதராபாத்ல."

"..."

"எவனோ ஒரு வடக்கத்திக் காரனோட."

## 5

கண்ணனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் திராவகத் துளிகளாக அவள் மேல் வந்து விழுந்தன.

சொல்லிவிட்டு கண்ணன் ஜன்னல் பக்கம் திரும்பி இருட்டை வெறிக்கத் தொடங்கி விட்டான்.

"எங்கம்மாவைப் பார்த்தீங்களா? ஹைதராபாத்லயா?" வியப்போடு கேட்டாள் மீரா.

கண்ணன் பதில் சொல்லவில்லை.

அம்மா!

அவள் இப்போது எப்படி இருப்பாள்? நினைவுகளைக் குலுக்கிப் பார்த்தால் கூட அந்த முகம் மீராவுக்குப் பிடிபட



வில்லை. கண்ணன் அவளைப் எப்படிப் புரிந்து கொண்டான்?

கண்ணனிடம் அவள் அம்மாவின் புகைப்படத்தைக் காட்டிய அந்த ஒரே ஒரு சந்தர்ப்பம் இப்போது நினைவில் இடறியது.

தன்னுடைய இரண்டாவது வயதில் எடுத்த புகைப் படத்தை கண்ணனிடம் மகிழ்ச்சியுடன் காட்டிய தருணம் அது!

"ரெண்டு வயசுலயே உன் கண்ணுல ஒரு பிரகாசம்! இருபது வருஷம் கழிச்சு கண்ணன்னு ஒரு அப்பாவியை அடிச்சுப் புரட்டப்போற கண்ணுன்னு அப்பவே தெரியுது இல்ல?"

"அப்பாவி! யாரு? நீங்களா?"

"இவங்கதான் உன் அம்மாவா?"

"..."

"இப்ப நீ இருக்கறமாதிரியே திராபையா இருக்காங்க."

"போட்டேன்னா தெரியும்."

"இது?"

"அப்பா. பின்னால நிக்கறது அப்பாப்பா... அப்பாம்மா... அதாவது தாத்தா, பாட்டி! பாட்டி சமைச்சா வாசனை தெரு முழுக்க அப்படியே தூக்கும்!"

"அம்மா இறந்துட்டாங்கன்னு சொன்னே இல்லியா? பாவம்..."

"பொய் சொன்னேன் கண்ணன். அம்மா சாகலை. கல்யாணம் பத்திப் பேசறப்ப எதையும் நான் மறைக்கறதா இல்ல. எனக்கு நாலு வயசு இருக்கும்போது அம்மா மாடி

போர்ஷன்ல குடி இருந்தவனோட ஓடிப் போய்ட்டாங்களாம். அதுக்கப்புறம் இன்னி வரைக்கும் செத்தாங்களா, இருக்காங்களா தெரியாது...''

''ஐம் ஸாரி...''

''எம் மேல கோவமா?''

''ம்ஹூம்...''

''பின்னே வருத்தமா?''

''எதுக்கு?''

''அம்மா பத்தி இத்தனை நாள் சொல்லாததுக்கு. இப்ப இப்படி ஒரு அசிங்கமான நெஜத்தைச் சொல்றதுக்கு,''

''பைத்தியம். உனக்கு நெனைவு தெரியாத வயசுல உங்கம்மா பண்ணின ஒரு செயலுக்கு உம்மேல எதுக்குக் கோபம்வரணும்? அப்படி வந்தா அபத்தமா இருக்காதா? மீராவோட அம்மா யாரு, அப்பா யாருன்னு நான் பார்க்கப் போறதில்லை. நான் மீராவைத்தான் பார்க்கப் போறேன்.''

''ஏய்!''

''முழுசா...''

''ஐயோ... ஐயோ''

ஃ ஃ ஃ

கல்யாணத்துக்கு முன்னால் சொன்னதெல்லாம் வெறும் உபசார வார்த்தைகள் தானா கண்ணா?

இரவின் மௌனத்தை மீராவே மீண்டும் கலைத்தாள்.

''எங்கம்மாதான்னு எப்படித் தெரியும்?''



''இன்னும் இருபது வருஷம் கழிச்சு உன் மூஞ்சியும் அப்படித்தான் இருக்கும்'' என்று கண்ணன் ஜன்னலுக்கு வெளியே பார்த்தபடியே பேசினான்.

''எங்கே பாத்தீங்க?''

''சொன்னாலே அசிங்கம்.''

''எங்கே பாத்தீங்க?''

''நான் வேலை பார்த்துக்கிட்டிருந்த கம்பெனியோட சாஃப்ட்வேரைக் கொடுக்க முடியுமான்னு கேட்டுக்கிட்டு போட்டி கம்பெனியிலேர்ந்து ஒரு ஆள் வந்தான். நெறைய பணம் தரேன்னான். கூடவே எனக்குப் பொண்ணுங்க அரேன்ஜ் பண்ணித் தருவாங்கன்னு சொல்லி ஒரு 'மாமி'யைக் காமிச்சான். அந்தப் பொம்பளை வேற யாரும் இல்ல... உங்கம்மா. கூட ஒரு வடக்கத்திக்காரன் வேற! சொல்லக்கூடாதுன்னு நெனைச்சேன். சொல்ல வெச்சுட்டே!''—தெரியாமல் கடித்துவிட்ட அழுகிய காயைத் துப்புவதுபோல் அவன் வார்த்தைகளை துப்பினான்.

மீரா அவன் முதுகையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மீராவோட அம்மா யாரு, அப்பா யாருன்னு நான் பாக்கல. எனக்கு மீராதான் முக்கியம்' என்று சொன்ன அதே இதயம்தான் இன்று இவ்வளவு கசப்பை உமிழ்கிறதா?

''நீங்கள் சொல்ற அந்தம்மா எங்கம்மா இல்லன்னு ஆகி இருபது வருஷத்துக்கு மேல போயாச்சு. இப்ப திடீர்னு எங்கம்மாவை நீங்க ஹைதராபாத்ல பாத்ததால என் உறவு வேண்டாம்னு ஆய்டுமா? என்னால புரிஞ்சுக்க முடியல கண்ணன்.''

மீராவின் குரலில் வேதனை புரண்டது.

'புரியாம போறதுக்குப் பெரிசா என்ன இருக்கு! உன்னைப் பாத்தாலே, உன் பக்கத்துல வந்தாலே... என்

உன்னைப் பத்தி நெனைச்சாலே உங்கம்மா மூஞ்சிதான் குறுக்க வந்து நிக்குது. இனிமே நீயும் நானும் சேர்ந்து வாழமுடியும்னு எனக்குத் தோணல...''

எவ்வளவு எளிதாகச் சொல்லிவிட்டான்!

சட்டென்று அவளுடைய ஒரு பகுதியே இயங்காமல் போய்விட்டது போல் இருந்தது. உள்ளுக்குள் எரிமலை கொதித்தது. ஆனால், அது பீறிடவில்லை. உள்ளுக்குள் சூறாவளி சுழன்றது. ஆனால், அது இடம் பெயரவில்லை.

ஆர்ப்பாட்டமில்லாமல் ஒளிர்ந்து கொண்டிருந்த அகல்விளக்கை ஊதி அணைத்துவிட்டான்.

போகட்டும்.

திரியிலிருந்து கசப்புப்புகை சற்று நேரம் நாசியில் நிற்பது போல் அவனுடைய இந்தச் செயல் அவள் நினைவில் சில நாட்கள் கரிக்கும். அப்புறம் தானாக எல்லாம் அடங்கிப் போய்விடும்.

கண்ணனின் டைரியை அவன் தலையணை மீது போட்டாள் மீரா.

ஒருக்களித்து கட்டிலுக்கு வெளியே பார்த்து முகம் வைத்துப் படுத்துக் கொண்டாள். கண்களுக்குள் நீர் சுட்டது.

அடிவயிற்றில் ஒரு காய்ச்சல் குடிபிடிப்பதை அவள் உடல் உணர்ந்தது.

ஃ ஃ ஃ

சுந்தரியின் ஒரு கை அவள் மடியில் இருந்த பிங்கியின் மென்பட்டு உடலை வருடிக்கொண்டு இருந்தது. இன்னொரு கையில் 'அடிமைத்தளையில் இருந்து சுதந்திரத்தை



நோக்கி' என்ற தலையணைப் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள்.

படித்துக்கொண்டிருந்தாள் என்று சொல்ல முடியாது. பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வை புத்தகத்தின் வரிகளில் நொண்டியடித்துக் கொண்டிருந்தது. கவனம் புத்தகத்தில் இல்லை.

உள்ளறையில் இருந்து வரும் சின்னச் சின்ன ஒலிக் குறிப்புகளுக்காகச் செவிகள் விறைத்து நின்றன.

இதோ கண்ணன் குளித்து முடித்து வந்துவிட்டான். உடை அணிகிறான். தன் அலுவலக சிறுபெட்டியைத் திறக்கிறான். அதில் சில காகிதங்களை நகர்த்துகிறான்.

வழக்கமாக இந்த நேரத்தில் மீரா வெளியே வந்திருப்பாள். கண்ணனின் ஷூக்களைத் துடைத்திருப்பாள். சுந்தரியை முந்திக்கொண்டு அவனுக்கு டிபன் தட்டு வைக்க வேண்டும் என்று பரபரத்திருப்பாள்.

இப்போதெல்லாம் மீரா வருவதில்லை.

அவளுக்கும் கண்ணனுக்கும் நடுவில் இருக்கும் சின்னச் சின்ன சரச ஒலிகளை இப்போது கேட்க முடிவதில்லை. அவர்களுக்கிடையில் பேச்சு குறைந்துவிட்டதா? அல்லது முற்றிலும் நின்றுவிட்டதா? சுந்தரிக்குப் புரியவில்லை.

மீராவும் கண்ணனும் பழையபடி இல்லை என்பது மட்டும் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

கூடாது கூடாது என்று எவ்வளவு சொன்னாலும் அதட்டினாலும் கேட்காமல் கண்ணனுக்கும் மீராவுக்கும் இடையே உள்ள உறவில் ஏற்பட்டிருக்கும் விரிசலை நினைத்து நினைத்து அவள் மனம் ரகசியமாக சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

கண்ணன் பெட்டியை மூடும் ஒலி வந்ததும் சுந்தரி தன் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள்.

கண்ணனுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்வதில் அவளுக்கு என்றுமே சலிப்பு வந்தது இல்லை.

கண்ணனின் கல்யாணப் பேச்சு வந்தபோது, அம்மாவுக்கு ஏனோ சுந்தரி பற்றி அவனிடம் பேசவேண்டும் என்று தோன்றாமல் போய்விட்டது. அல்லது குழந்தை தரிக்கமுடியாத இந்தப் பாதிப்பெண்ணின் கல்யாணத்தைப் பற்றி கண்ணனிடம் எப்படிப் பேசுவது என்று தயங்கி இருந்துவிட்டாளோ என்னவோ...

கண்ணனிடம் மட்டுமல்ல. யாரிடமும்தான், தன் கல்யாணத்தைப் பற்றி அம்மா எப்படிப் பேச்செடுக்க முடியும் என்று சுந்தரிக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் உண்மை சுடும். சுட்டது

விதியோ, விஞ்ஞானக்குறையோ— சுந்தரியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவளுக்கு யாரோ ஒருவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, உப்பு, புளி கரைத்துக் குடித்தனம் நடத்தும் ஆசையெல்லாம் இல்லை.

கண்ணன். கண்ணன். கண்ணன்.

சின்ன வயதிலிருந்தே ஒன்றாக விளையாடி, ஒன்றாகப் படித்து, ஒன்றாகச் சாப்பிட்டு, ஒன்றாகத் தூங்கி கண்ணன் மேல் கொள்ளையாய்ப் பிரியம் வளர்ந்துவிட்டது. அரச மரத்தின் வேராய் இதயத்தின் ஒவ்வொரு துணுக்கிலும் அது ஊன்றிவிட்டது. வேரூன்றிய பிரியத்தை வெளியில் சொல்லமுடியாமல் உடல்நிலை தடுத்துவிட்டது. ஓட்டைக் குடத்தில் எந்த ஜீவநதியை உள்வாங்கி இருத்திக் கொள்ள இயலும்?



சுந்தரிக்குக் கண்ணனைக் கவர்ந்துகொள்ளும் தைரியம் இல்லாமல் போயிருக்கலாம். ஆனால், இதயத்தில் பீடம் போட்டு அமர்ந்தவனை வெளியேற்ற அவளால் முடியவில்லை.

அவனைப் பொறுத்தமட்டிலும் சுந்தரி, திருப்பாவை அருளிய கோதை நாச்சியாரைப் போல. கண்ணன், திருவரங்கத்தான்.

கண்ணனின் துணிகளை மடிக்கும்போது, தன் நெஞ்சை விட்டகலாத துணைவனின் துணிகளை மடிப்பதாகவே கற்பனை செய்துகொள்வாள். அவனுக்குப் பரிமாறும் போதும் அந்த எண்ணத்துடன்தான் பரிமாறுவாள்.

அவனுக்குச் செய்யும் ஒவ்வொரு பணிவிடையிலும் அவளாக மனதில் ஏற்படுத்திக்கொண்ட அந்த ரகசிய உறவு காரணமாக இதயம் பூரித்துப் போகும்

தன் குழந்தையை டீச்சரிடம் ஒப்படைத்துவிட்டு வரும் ஒரு தாயைப் போலத்தான் கண்ணனை மீராவிடம் விட்டு வைத்திருப்பதாக அவள் தனக்குச் சமாதானம் சொல்லிக் கொள்வாள்.

அவனோடு செலவாகும் நேரங்களையும் அவனுக்காகச் செலவாகும் நேரங்களையும் வாழ்க்கையின் சின்னச் சின்ன சந்தோஷத் துணுக்குகளாக அவள் கோத்து வைத்திருந்தாள்.

ஃ ஃ ஃ

கண்ணன் அறையைவிட்டு வெளியே வந்ததும், "கண்ணா, கம்ப்யூட்டிங் சொல்யூஷன்ஸ் நாகராஜுக்குக் காலைல போன் பண்ணனும்னு சொன்னியே" என்றாள்.

"மறந்தே போய்ட்டேன் பாரு. ரொம்ப தாங்க்ஸ் சுந்தரி" என்று கண்ணன் போன் அருகில் உட்கார, சுந்தரி

அவன் அணிந்திருந்த உடைகளைப் பார்த்து, பொருத்தமான காலுறைகளை அலமாரியிலிருந்து எடுத்து ஷூக்களின் அருகில் வைத்தாள்.

ஃ ஃ ஃ

எதனாலோ மீராவுக்குத் தூக்கம் கலைந்தது. நள்ளிரவு கடந்திருக்கும்.

அவளுக்கு வெகு அருகில் மூச்சுச் சத்தம் கேட்டது.

கண்ணனின் மூச்சு. அவனன்றி வேறு யார் அவ்வளவு நெருக்கமாக வரமுடியும்?

கண்ணனின் வியர்வையை அவள் நாசி உணர்ந்தது.

மீரா அசைவின்றி படுத்திருந்தாள்.

நடுங்கும் நான்கு விரல்நுனிகள் அவள் வயிற்றுமேட்டில் மெள்ளப் படிந்தன. தயங்கின.

சற்றே மேடிட்டிருந்த மீராவின் வயிறு சிலிர்த்தது.

தலை, முகம், கை, கால் என்று எந்த அடையாளமும் பதியாமல், வெறும் உயிரோட்டத்தை மட்டும் பெற்றிருந்த அவளது கர்ப்பக்கிரக ஜீவன் ஒரு முறை துள்ளிய மாதிரி இருந்தது.

கண்ணன் உணர்ந்துவிட்டானா? அவளை விலக்கி வைத்த தவறைப் புரிந்துகொண்டு விட்டானா?

'கண்ணா...' என்று ரகசியமாக அரற்ற வேண்டும் போல் இருந்தது.

'மன்னிக்க முடியாத தவறு எதுவும் இல்லை' எனச் சொல்லி அவனை மார்புறத் தழுவிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.



அவள் வயிற்றில் படிந்த அவன் விரல்களை அப்படியே வயிற்றோடு அழுத்திக் கொள்ள வேண்டும்போல் துடிப்பாக இருந்தது.

கண்ணனின் அடுத்த அசைவுக்காக அவள் சில யுகங்கள் காத்திருந்தாள்.

கண்ணனிடம் அசைவில்லை.

சில விநாடிகள்தான். விரல்கள் விலகிவிட்டன. மூச்சு நகர்ந்துவிட்டது.

பூமியின் நீர்க்கண் ஒன்று திடீரென திறந்து, வானம் ஆவேசத்துடன் நீர் பீறிடுவதுபோல் மீராவுக்குள் ஆவேசம் பொங்கியது.

என்ன வேண்டுமாம் அவனுக்கு?

அவனுடைய உடைமை பத்திரமாக் இருக்கிறதா என்ற கவலையா?

மீரா வேண்டாம். அவள் வெறும் சிப்பி. அவள் வயிற்று முத்து மட்டும் வேண்டுமாமா?

ஃ ஃ ஃ

"உனக்கென்ன பைத்தியமா?" என்று கேட்டாள் டாக்டர். பதினாறு வாரம் ஆச்சு. இப்பப் போய்க் கருவைக் கலைக்கணும்னு சொல்றே?"

"எனக்கு வேணாம் டாக்டர்" என்று மீரா உலர்ந்த குரலில் சொன்னாள். ஆனால் தீர்மானமாகச் சொன்னாள்.

# 6

டாக்டர் சில விநாடிகள் மீராவையே கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

''ஒவ்வொரு தடவை செக்கப்புக்கு வரும்போதும் நார்மல் வளர்ச்சிதானே டாக்டர்...''னு ஆசை ஆசையா கேப்பே இல்லியா...?''

''ம்!''

''கொழந்தையோட ஹார்ட் பீட்டைக் கேக்கணும்னு ஸ்டெதாஸ்கோப்பை உன் காதுலகூட மாட்டிவிடச் சொல்லுவியே...?''

''ம்!''

''நீயா இப்பக் கருவைக் கலைக்கணும்னு சொல்றே?''

அழுதுவிடக்கூடாது என்று பிடிவாதமாக உதடுகளை இறுக்கமாக வைத்துக்கொண்டு 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தாள் மீரா.

''தனியாகவா வந்திருக்கே...?''

அதற்கும் ஒரு தலையசைப்பு.

''இந்த ரூம்லயே வெயிட் பண்ணு... எங்க சீனியர் டாக்டரை வரச்சொல்றேன். ஒரு ஸ்கேன் எடுத்துப் பார்த்துட்டு இந்த ஸ்டேஜ்ல கலைக்க முடியுமான்னு அவங்ககிட்ட ஒரு வார்த்தை பேசி முடிவு பண்ணிடலாம்.''

டாக்டர் தன் அறைக்குத் திரும்பி போன் செய்தாள். சீனியர் டாக்டருக்கு அல்ல... கண்ணனுக்கு!

ஃ ஃ ஃ

கிளினிக் வாசலில் அம்பாஸிடர் வந்து நிற்பதை மீரா கவனித்தாள். இது வசந்தனின் கார் ஆயிற்றே? அவன் எப்படி இங்கே வந்தான்...?

அவள் காத்திருந்த அறைக் கதவு திறந்து வசந்தன் உள்ளே நுழைந்தான்.



''இவங்க ஹஸ்பெண்ட் வரலையா?'' என்று கேட்டுக் கொண்டே பின்னால் வந்த டாக்டரிடம், ''அவன் ஏதோ கான்ஃபரன்ஸ்ல சிக்கிட்டிருக்கான் டாக்டர் ... அவன்தான் என்னை அனுப்பி வெச்சான்'' என்று புன்னகையுடன் பதில் சொல்லி விட்டு மீராவை நெருங்கினான் வசந்தன்.

''மீரா, போலாம் வா ''

இத்தனை நேரம் இறுக்கமாக இருந்த மீரா, வசந்தனை அவ்வளவு நெருக்கத்தில் பார்த்ததும் உடைந்து போனாள். அழுகை பீறிட்டது. அவள் தோள்களை ஆறுதலாக அணைத்து வசந்தன் எழுப்பினான்

ஃ ஃ ஃ

ஆபீஸ்லேர்ந்து பர்மிஷன் போட்டுட்டு நீ கௌம்பினப்ப, நான் கொஞ்சம்கூட சந்தேகப்படலியே மீரா... இப்படில்லாம் கூட முட்டாள்தனமான யோசனை உனக்கு வருமா?''

கிருஷ்ணன் கோயிலில் கிரானைட் தரையில் வசந்தனும் மீராவும் எதிரெதிரே உட்கார்ந்திருந்தார்கள்.

மீராவின் முகம் அழுகையில் சற்று வீங்கியிருந்தது.

''நான் வேறென்னதான் செய்வேன் வசந்த்...? எனக்கு கண்ணனைப் பழிவாங்கணும்னு தோணுச்சு ... 'நான் உனக்கு வேண்டாம்னா, உன் குழந்தையும் எனக்கு வேண் டாம்'னு ஒரு ஆவேசம் வந்தது.''

''உன் நியாயம் ரொம்ப நல்லா இருக்கு மீரா! உங்கம்மா பண்ணின வேலைக்கு, கண்ணன் உங்கிட்டேர்ந்து ஒதுங்கினா...அது மன்னிக்க முடியாத குத்தம். ஆனா, கண்ணன் பேர்ல கோச்சுக்கிட்டு, ஒண்ணுமே அறியாத ஒரு உயிருக்கு நீ தண்டனை குடுத்தா, அது தர்மம்... அப்படித் தானே?''

மீரா மீண்டும் அழ ஆரம்பித்தாள். அழுகையினூடே தன் வயிற்றை விரல்களால் தொட்டுத் தொட்டு முத்தம் கொடுத்தாள்.

''தப்புதான்... தப்புதான்... இந்த முட்டாள் அம்மாவை மன்னிச்சிர்ரா குட்டி'' என்று அரற்றலாக மீரா சொன்ன போது, வசந்தன் தன் கண்களும் கசிந்து போவதை உணர்ந்தான்.

மீராவுக்கும் கண்ணனுக்கும் நடுவில், கண்ணுக்குப் புலப்படாத திரை எப்படி விழுந்தது?

ஒன்பது மாதங்களுக்கு முன்பு மலைக்கோட்டைப் படிகளில் பார்த்த அந்த மீராவா இது?

ஃ ஃ ஃ

பொது நண்பனின் ஒருவனின் கல்யாணத்தைச் சாக்காக வைத்து, மூன்று பேருமே திருச்சிக்குப் போயிருந்த சமயம் அது.

உச்சிப் பிள்ளையாரைப் பார்க்க வேண்டும் என்று மீரா ஆசைப்பட்டாள். நண்பனின் முகூர்த்தம் முடிந்த கையோடு அவளை அழைத்துக் கொண்டு வசந்தனும் கண்ணனும் புறப்பட்டு விட்டார்கள்.

பாலை வெயில் காற்று தகித்தது. பிச்சைக்காரர்கள் அலுமினியப் பாத்திரங்களைக் குலுக்கி ஓசைப்படுத்தி இறைஞ்சினார்கள். கடைக்காரர்கள் தேங்காய்த் தட்டை வாங்கச் சொல்லி வற்புறுத்தினார்கள்.

மீராவும் கண்ணனும் எதையும் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. கிட்டத்தட்ட நாற்பது படி ஏறிய பிறகுதான், வசந்தன் பக்கத்தில் இல்லாததையே கவனித்தார்கள்.



திரும்பிப் பார்த்தால், பத்து படிகள் தள்ளி கீழே வசந்தன் புன்னகையுடன் ஏறிக்கொண்டிருந்தான்.

''ஏண்டா மெதுவா வரே? கால் வலிக்குதா?''

''ஹப்பா... நான் ஒருத்தன் உங்ககூட இருக்கேன்றது இப்பவாவது ஞாபகத்துக்கு வந்ததே! பிரதர், மீரா முன்ன சொன்ன மாதிரி, நான் ஒசில சினிமா பாத்துட்டு வரேன்.''

''என்னது?''

''ஆமாண்டா உங்க ரெண்டு பேரையும் நடக்கவிட்டுப் பின்னாலேர்ந்து பாத்துக்கிட்டே வர்றது வந்து ரொம்ப நல்லாயிருக்கு. மீரா உன்கிட்ட பேசறபோதும் நீ திரும்பிப் பார்த்து அவகிட்ட பதில் சொல்றபோதும் ரெண்டு பேர் கண்லயும் வழியுது பாரு.''

''என்ன... என்ன வழியுது?''

''உங்களைக் கேட்டா காதல்னு சொல்லுவீங்க. என்னை மாதிரி ஆளுங்களைக் கேட்டா ஜொள்ளுன்னு சொல்லுவோம். ஆனா, அதைத் தள்ளி நின்னு பார்த்தாத் தாண்டா சுகம்.''

''ஏய்! கண்ணன். அவன் பல்லுலயே ஒண்ணு போடுங்க.''

''இவன் இப்படித்தான் ஏதாவது உளறிக்கிட்டிருப்பான். நீ வா, மீரா.''

''ஐயோ! வசந்தன் பின்னால வந்தா என்னால ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. வசந்த். நீ முன்னால ஏறு.''

''அட, கன்னம்லாம் செவந்து போச்சுப்பா!''

''உதைப்பேன் ராஸ்கல். ஒண்ணு, கூட வா... இல்ல, முன்னால போ!''

வசந்தன் சிரித்துக்கொண்டே முன்னால் போனான். எப்போதாவது திரும்பிப் பாாத்தால், மீரா கற்பனைக் கல்லைப் பொறுக்கி, அவன்மீது எறிந்தாள் அல்லது முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

''வசந்த.''

''இப்ப என்ன?''

''இந்த தாயுமானவர் சந்நிதி இருக்கு. வாழைத்தார் வாங்கிச் சாத்தறதா வேண்டுக்கிட்டா நல்லதுன்னு சொன்னாங்களே?''

''அடிரா சக்கை! கண்ணா, கவனிச்சியா? இன்னும் முகூர்த்தநாளே முடிவாகலை. அதுக்குள்ள தலைச்சன் பிரசவத்துக்காக அட்வான்ஸா, தாயுமானவருக்குப் பிளான் பண்ணியிருக்கா இவ.''

''நீ எப்படி வேணும்னாலும் லொள்ளு பேசிக்க... எனக்குக் கவலை இல்லை.. எங்க முதல் கல்யாண அனிவர்ஸரிக்கு பஹூன் கட்றப்ப, ஒரு தொட்டிலும் கட்டி யிருக்கணும்...''

கொஞ்சம் வெட்கம் மாறாத தீர்மானமுமாக அன்றைக்குச் சொன்ன அந்த மீராவா இது...?

ஃ ஃ ஃ

''போலாமா...?'' என்று கேட்டான் வசந்தன். ''உன்னை வீட்ல விட்டுட்டு, நான் ஆபீஸ் போறேன்... கண்ணன் போன் பண்ணினதும் போட்டது போட்டபடி கௌம்பிட்டேன்...''

''என்னால உனக்கு தெனம் தொந்தரவு... இல்லியா?''



''அய்யய்ய... எங்க மீரா இந்த மாதிரி அழுமூஞ்சிப் பேச்செல்லாம் பேசமாட்டானு இல்ல நெனைச்சிட்டிருந்தேன்...! கமான், சியர் அப்!''

மீரா சிரித்தாள். கன்னங்களைத் துடைத்து, கண்ணீர்ச் சுவடுகளை அழித்தாள். ''நீ ஆபீஸுக்குப் போ வசந்த். நான் தனியா வீட்டுக்குப் போயிடுவேன். உன்னைப் பாத்தாங்கன்னா, எனக்கு என்னவோ ஏதோன்னு அத்தை பயந்துடுவாங்க.''

''இதான் ஒரிஜினல் மீரா!'' என்று உற்சாகப் புன்னகையுடன் சொல்லிவிட்டு வசந்தன் எழுந்தான்.

ஃ ஃ ஃ

அடுப்பில் ரசம் கொதித்தது.

''உப்பு போட்டேனா, இல்லையா?'' — அத்தை குழம்பினாள்.

இப்படித்தான் காலையில் துவைத்த புடவையை மறுபடியும் சோப்பு நீரில் நனைத்து விட்டாள்.

இப்போதெல்லாம் அடிக்கடி இந்தத் தடுமாற்றம் வருகிறதே, ஏன்?

அத்தைக்குப் புரியாமல் இல்லை.

அவள் கண்ணெதிரிலேயே ஒரு கண்ணாமூச்சி ஆடப்பட்டு வருகிறது. அவளுக்குத் தெரியாது என்று கண்ணனும், தெரிந்துவிடக் கூடாது என்று மீராவும் முனைந்து முனைந்து ஆடும் அந்த ஆட்டம் அத்தையை வேதனைக்குள்ளாகிவிட்டது.

குதூகலமாகக் கொண்டை உயர்த்தி நின்ற இரண்டு பூக்கள் இப்போது ஏதோ ஒரு ராட்சதக் காலுக்குக் கீழே நசுங்கிக் கொண்டிருப்பதை அவளால் தாங்க முடியவில்லை.

என்ன செய்யலாம்...? கேட்காமல் இருந்துவிட்டால், இரண்டு பேரும் கடைசிவரை மௌனம் சாதித்துத் தோற்றுப் போவார்கள் என்று அவளுக்குக் கவலையாக இருந்தது.

மீராவுக்கு இளகிய மனம். அழுத்திக் கேட்டால் நொறுங்கிப் போகலாம். கண்ணனிடம் எதற்குத் தயக்கம்? அவள் வளர்த்த பிள்ளைதானே அவன்?

அத்தை அடுப்பை அணைத்து விட்டு, போனை நோக்கி நடந்தாள்.

கண்ணன்தான் போனை எடுத்தான். அத்தை குரல் கேட்டு ஆச்சரியப்பட்டான்.

"கண்ணா. உனக்கும் மீராவுக்கும் என்ன பிரச்னை?"

அத்தை அப்படித் திடுமென்று நேரடியாகக் கேட்பாள் என்று எதிர்பார்த்திருக்க மாட்டான்.

"அ... அதெல்லாம் ஒண்ணும் இல்லியே..." என்று தடுமாறினான்.

"கேக்கறதுக்கு எனக்கு உரிமையில்லைன்னா கேக்கலை."

அத்தையின் அஸ்திரம் கண்ணனைத் தாக்கிவிட்டது.

"அத்தை.. நேர்ல சொல்றேனே. எல்லாம் இன்னிக்கு ஒரு முடிவுக்கு வந்துரும்."

அத்தை திருப்தியுடனும் பெருமையுடனும் ரிஸீவரை வைத்தாள்.

அவளுக்குக் கண்ணனைத் தெரியும். மீராவின் மீது உயிரையே வைத்திருப்பவன். கணவன் — மனைவிக்கு இடையில் சின்னச் சின்ன உரசல்கள் சுவாரஸ்யமானவை



தான். அவை முற்றிப் போய் வெடி குண்டுகளாக வெடிக்கும் முன் கவனிக்கப்பட வேண்டியவை. அத்தை கவனித்து விட்டாள்.

கண்ணன் விட்டுக் கொடுக்கக் கற்றுக் கொண்டவன். 'எல்லாம் இன்னிக்கு ஒரு முடிவுக்கு வந்துவிடும்' என்று நம்பிக்கையூட்டும் விதமாகச் சொல்லிவிட்டான், ஆபீஸிலிருந்து வந்ததும் மீராவைச் சமாதானம் செய்து விடுவான். பிணக்கு தீர்ந்து விடும். அந்தப் பூக்கள் மறுபடி மகிழ்ச்சி பொங்க தலை நிமிர்ந்து விடும்.

அத்தை சின்னத் துள்ளலுடன் சமையலறைக்குள் மிச்ச வேலையை முடிக்க நுழைந்தாள்.

ஃ ஃ ஃ

"வாங்கோ கண்ணன்...உட்காருங்கோ..."

வக்கீல் வீரராகவன் வெற்றிலைச் சிவப்புடன் சிரித்துக் கண்ணாடியை மூக்கில் ஏற்றிக் கொண்டார். "இந்தத் தடவை எந்த க்ளையன்ட் கொடுத்த செக் திரும்பி வந்திருக்கு...?"

கண்ணன் உலர்ந்த முகத்துடன் அவருக்கு எதிரில் அமர்ந்தான்.

"நான் ஆபீஸ் வேலையா வரலை சார்...ஒரு பர்சனல் மேட்டர்..." என்று கண்ணன் குரலைத் தழைத்தான்.

"சொல்லுங்கோ..."

"என் வொய்ஃப்..."

"தெரியுமே... மீரா!"

கண்ணன் உதடுகளை ஈரம் செய்து கொண்டு கேட்டான்.

''மீராவை நான் டைவர்ஸ் பண்றதா முடிவு பண்ணிட்டேன்... அதுக்கு எப்படி அப்ளை பண்ணனும்...?''

# 7

**வக்கீல்** வீரராகவன் சில விநாடிகள் மௌனமாக கண்ணனின் முகத்தையே உற்றுப் பார்த்தார்.

''நேத்து ஏதாவது சண்டையா...? கோபத்துல மீரா ஏதானும் வரம்பு மீறிப் பேசிட்டாளா...? அதெல்லாம் சகஜம் ஸ்வாமி... திருக்குறள்லயே ஊடலுக்குன்னே ஒரு அதிகாரம் இருக்கு. சின்ன மனஸ்தாபத்துக்கெல்லாம் பொசுக் பொசுக்னு வக்கீலை தேடிண்டு ஓடி வந்துரக் கூடாது... லவ் மேரேஜ் இல்லியோ உங்களது! வீட்டுக்குப் போங்கோ... எல்லாம் சரியாப் போயிருக்கும்...'' என்று புன்னகைத்தவாறே கூறினார்.

''என் கேஸை நீங்க எடுத்துக்கத் தயாரா இல்லைன்னா, உங்க ஜூனியர் யாரையாவது பார்க்கட்டுமா...?''

வக்கீலின் பழுத்த முகத்தில் இப்போது சிரிப்பு தொலைந்தது.

''அவ்வளவு சீரியசா...?'' என்று கேட்டார் தொங்கிய முகத்துடன். ''ரைட்... என்ன அடிப்படையில விவாகரத்துக்கு அப்ளை பண்றதா உத்தேசம்...?''

''மீராவோட அம்மா குடும்பக் கௌரவத்தைக் கெடுக்கிற மாதிரி யார் கூடவோ ஓடிப்போயிட்டாங்க. அவங்களை இப்ப ஹைதராபாத்ல பார்த்தேன்...''

''அப்படின்னா உண்மையை மறைச்சிருக்கிறதா அர்த்தம். மீரா, இந்த விஷயத்தை உங்ககிட்ட கல்யாணத்துக்கு முன்னால மறைச்சாளா...?''



''இல்லை சார்...எதையும் மறைக்கலை.''

''கண்ணன்... நம்ம நாட்ல எடுத்தோம் கவிழ்த்தோம்னும் விவாகரத்தைக் கையோட டைப் அடிச்சு வாங்கிண்டு வந்துர முடியாது. நம்பிக்கைத் துரோகம் பண்ணலை. பொய் சொல்லி ஏமாத்தலை. வக்கிரமா நடந்துக்கலை. கொடுமைப் படுத்தலை. இதெல்லாம் இல்லைன்னா எதுக்காக விவாகரத்துன்னு கோர்ட் கேக்கும்...?''

''ஒருத்தருக்கொருத்தர் மனசு அனுசரித்துப் போகலை. இனிமே அனுசரித்துப் போறதுக்கு சான்ஸ் இல்லை...'' என்றான் கண்ணன்.

''அப்படின்னா ரெண்டு பேரும் ம்யூச்சுவலா டைவர்ஸுக்கு அப்ளை பண்ணலாம். என் மூத்த பொண்ணு கல்யாணத்துக்கு நீங்க ரெண்டு பேரும் ஜோடியா வந்தப்போ வீடியோக்காரன் புது ஜோடியை விட்டுட்டுக் கொஞ்சநேரம் உங்க பின்னாடியே அலைஞ்சுண்டிருந்தான்... இப்ப வந்து...டைவர்ஸா...?''

''மீராவும் சம்மதிச்சுட்ட டைவர்ஸ் கெடைச்சுடுமா...?''

''மீரா இப்ப கர்ப்பமா இல்ல இருக்கா...? பெட்டிஷனே ஃபைல் பண்ண முடியாது! மனசு அனுசரித்துப் போகலைனு விவாகரத்து வாங்கணும்னா, புருஷனும் பொண்டாட்டியும கொறைஞ்ச பட்சம் பன்னிரண்டு மாசமாவது பிரிஞ்சு வாழ்ந்திருக்கணும். அப்பத்தான் விவகாரத்து மனுவே போடலாம். அதுக்கப்புறமும் ஆறு மாசம் கழிச்சுத்தான் கோர்ட் கேஸையெடுத்துக்கும்... இந்த டயத்துல கணவனும் மனைவியும் சேர்ந்துடணுங்கறதுக்காகத்தான் சட்டமே இவ்வளவு நிதானமா நடந்துக்கறது. நீங்க எதுக்கும் மீராவோட கலந்து பேசிட்டு, அப்புறமா வாங்களேன்...''—

'கலந்து பேசி' என்ற வார்த்தைகளுக்கு தேவைக்கு அதிகமாகவே அழுத்தம் கொடுத்தார் வக்கீல்.

ஃ ஃ ஃ

''வக்கீலைப் பார்க்கிற அளவுக்குப் போயாச்சா...?''— அத்தையின் உடம்பு நடுங்கியது. ''உன் மனசுல என்ன தான்டா நெனைச்சுட்டு இருக்கே...?''

கண்ணனை அடிக்கும் ஆவேசத்தில் இருப்பவள் போல் அத்தை ஆவேசமாக எழுந்தவள், தடுமாறி அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டாள்.

மீரா சிந்தனையற்றுப் போய் நின்றிருந்தாள்.

''உனக்குப் புத்தி இருக்காம்மா...?'' என்று சுந்தரியின் குரல் இடையில் புகுந்து புறப்பட்டது. ''ஆபீஸ்லேர்ந்து திரும்பி வந்தவனைச் சாப்பிடறியான்னுகூடக் கேக்காம போலீஸ் ஸ்டேஷன்ல நிக்கவெச்ச மாதிரி கேள்விமேல கேள்வியா கேட்டுட்டு இருக்கியே... கண்ணன், நீ சாப்பிட வா!'' என்றாள்.

அத்தை, சுந்தரியின் பேச்சை மதிக்கவில்லை. அவள் குரலில் ஆவேசம் தணியவில்லை. ''அப்படி என்னடா மீரா தப்பு பண்ணிட்டா...? ஓடிப்போன அவங்கம்மாவை ஹைதராபாத்ல பார்த்தாளாம்!'' அத்தையின் நெஞ்சுக் கூடு கோபத்தில் ஏறி இறங்கியது. ''இப்ப என்ன... அந்த அம்மாவை இந்த வீட்ல கொண்டு வெச்சுக்கணும்னு மீரா அடம்பிடிக்கறாளா...? அவங்கம்மா எப்பவோ ஓடிப் போனதுக்கு, இப்ப மீராவே வேண்டாம்னா என்னடா அர்த்தம்...?''

''அத்தை...ஹைதராபாத்ல என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியாது. எல்லாத்தையும் சொல்ற நெலமைல யும் நான் இல்லை. மனசுக்குள்ள ஒண்ணு வெச்சுக்கிட்டு



வெளில ஒரு வேஷம் போட என்னால முடியலை. நானும் மீராவும் பிரியறதுதான் ஒரே வழி!''

கண்ணன் இந்தப் பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டு வருபவன் போல, சட்டென எழுந்து உள்ளே போய் விட்டான்.

அத்தை, மீராவைத் திரும்பிப் பார்த்தாள். மூச் சிரைப்பு சற்று வேகம் பிடித்தது. 'வா' என்பதுபோல் சைகை செய்தாள். மீரா நெருங்கி வந்ததும், 'சடார்' என்று அவளைக் கட்டிப் பிடித்தாள். இறுக அணைத்தாள்.

''மீரா...நீ எதுக்கும் கவலைப் படாதே. எனக்கு கண்ணனைத் தெரியும். அவன் ஏதோ படபடப்புல பேசறான். உம்மேலே அவனுக்கு எந்தக் காலத்துலயும் வெறுப்பு வராது. அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துடாதே. நாங்கள்லாம் இருக்கோம்...''

மீராவின் நெஞ்சு விம்மியது. கன்னங்களை நனைத்துக் கண்ணீர்க் கோடுகள் இறங்கின.

பிளந்த பாறையின் வழியே பீறிட்டுப் பொங்கும் புனலைப் போல் வழிந்த அந்தக் கண்ணீர் அவள் விருப்பம் இல்லை. அது ஒரு தன்னிச்சை செயல். இமை மூடித் திறப்பது போல மீரா மறுபடி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அத்தை, மீராவின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ஊர்ல எல்லாருக்கும் நடக்கற மாதிரியா உங்க கல்யாணம் நடந்தது? அதையெல்லாம் கண்ணன் மறந்துடுவானா என்ன? மாட்டான்! நீ கொஞ்சம் விட்டுப் பிடி மீரா. அவன் தானா வழிக்கு வந்துடுவான்.''

''ஊர்ல எல்லாருக்கும் நடக்கற மாதிரியா உங்க கல்யாணம் நடந்தது?''

அத்தையின் வார்த்தைகள் மீராவின் தூங்கும் நினைவுகளைப் புரட்டின.

ஃ ஃ ஃ

அன்றைக்கு மீராவின் அப்பாவைப் பார்த்துப் பேசுவதற்கு கண்ணனும் வசந்தனும் சேர்ந்து வருவது என்று ஏற்பாடாகியிருந்தது.

ஒரு ஐஸ்க்ரீம் பார்லரில் உட்கார்ந்து ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள் மூன்று பேரும்.

''வசந்த்...உன்னை நெனைச்சாத்தான் கொஞ்சம் கவலையா இருக்கு'' ஐஸ்க்ரீமின் குட்டிச் சிகரத்தை, நுனி நாக்கால் வருடியபடி மீரா சொன்னாள்.

ஐஸ்க்ரீமின் ரோஸைவிட மீராவின் நாக்கு ரோஸ்தான் வசீகரமாகப்பட்டது கண்ணனுக்கு 'என்னோட பிங்க்...'

வசந்தன், கண்ணனின் பின்னந்தலையைத் தட்டினான். கண்ணன் திடுக்கிட்டுப் போய் வசந்தனைப் பார்த்தான்.

''என்னை நெனைச்சாத்தான் கவலையா இருக்குன்னு சொல்லி மீரா என் காலை வாரப் பார்க்கறா. அதை 'ஏன்னு' கேக்காம, நீ பாட்டுக்கு விட்டர் விட்டரா ஜொள்ளு விட்டுட்டிருக்கியே...''

''ஹி...ஹி...ஏன் மீரா...?'' என்றான் கண்ணன் அசட்டுத்தனமாக.

''ஹி...ஹி...சொல்லு மீரா!'' என்று நக்கலடித்தான் வசந்தன்.

மீரா பொய்க் கோபத்துடன் வசந்தனை முறைத்தாள்.

''இவன்தான் பெரிய நியாயவான், தர்மவான், சக்திமான் ஆச்சே. பஸ்ல கண்டக்டர் சரியா மிச்சம் தரலைன்னா சட்டையைப் பிடிச்சிருவானே...அன்னிக்கு எக்ஸிபிஷன்ல யார் வீட்டுக் குழந்தையையோ முரட்டுத்தனமா தூக்கி ராட்டினத்துல உக்கார வெச்சதுக்கு, அந்த ராட்டினத்துக்காரன்கிட்ட சண்டைக்குப் போயிடலையா?''



''கண்ணா...நைஸா என்னைத் தட்டிக்கழிக்கப் பார்க்கறா பாரு.''

''வசந்த் வராம, நான் தனியா வர மாட்டேன்...'' என்றான் கண்ணன் மிரண்டு.

''யாருப்பா வசந்தனை வர வேண்டாம்னு சொன்னது? எங்கப்பா ஏதாவது சொல்லப் போக சிலுப்பிக்குவானோன்னு பயமா இருந்தது. சொன்னேன்...'' என்றாள் மீரா. உதட்டில் புன்னகையைத் தடவி.

''யம்மாடி...அன்னபட்சி, மேகம், காத்து. கழுத்துல லெட்டர் கட்டின புறா, ஆஞ்சநேயர்னு ஒரே சமயத்துல ஆறேழு ரோல்ல உனக்கும் அவனுக்கும் நடுவுல அலையா அலைஞ்சிருக்கேன். காதல் தூதுக்கு மட்டும் என்னை யூஸ் பண்ணிட்டு இப்பக் கழட்டி விடலாம்னு பார்த்தா நடக்காது. நானும் வருவேன். கண்ணனும் நானுமா உங்கப்பாவை வழிக்குக் கொண்டு வரோம்...'' என்று வசந்தன் பற்களைக் காட்டிச் சிரித்தான்.

ஃ ஃ ஃ

''நமஸ்காரம்...'' என்று கைகளைக் கூப்பினார் வரதராஜன் மீராவின் அப்பா.

பார்வை கண்ணனிட மிருந்து வசந்தனுக்கு! வசந்தனிட மிருந்து மீராவுக்கு என்று தாவிக் கொண்டே இருந்தது.

''கம்ப்யூட்டருக்கு நல்ல எதிர்காலம் இருக்கு இல்லியா?''

''ஆமா சார்!'' என்றான் கண்ணன் ஆர்வமாக.

''ரொம்ப சந்தோஷம் உங்களைப் பார்த்ததுல.. எனக்குக் கொஞ்சம் அவசரமா வேலை இருக்கு. இன்னொரு தடவை சாவகாசமாப் பேசுவோம். மீரா, டீ குடு. நான் கெளம்பறேன்'' என்று சொல்லி சட்டென்று எழுந்து போய் விட்டார்.

வசந்தனும் கண்ணனும் அந்த வீட்டில் திடீரென அந்நியர்களாக்கப்பட்ட மாதிரி உணர்ந்தார்கள்.

மீரா கண்களாலேயே மன்னிப்புக் கேட்டாள்.

''சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல முடியலையே மீரா...'' என்றான் வசந்தன் ஆற்றாமையுடன்.

''தாத்தா, பாட்டி கிட்டப் பேசலாம்... அவங்க என்னோட திக் ஃப்ரெண்ட்ஸ்!'' என்றாள் மீரா.

தாத்தா, பாட்டி இருவரும் தோழர்கள் போல் கைகோத்து வந்தார்கள்.

''பார்த்தா ரொம்ப சாதுவாத் தெரியறியே... இந்த வாலை உன்னால சமாளிக்க முடியுமாப்பா...?'' என்று கண்ணனிடம் தாத்தா கேட்டபோது, கண்ணனின் கன்னங்கள் சிவந்து போயின.

''கொஞ்சம் அன்பைக் காமிச்சாப் போதும். எங்க மீரா வீட்டு நாய் மாதிரி. காலடில வாலை ஆட்டிக்கிட்டுக் கிடப்பா...'' என்றாள் பாட்டி, அவளை அருகே இழுத்து இறுக அணைத்து.

''இவ்வளவு நாள் மீராகூடப் பழகி இருக்கேன்... நான் பார்த்ததே இல்லையே...'' என்றான் வசந்தன்.

''எதைப் பர்த்தது இல்லை...?'' என்று பாட்டி புரியாமல் கேட்டாள்.



''மீராவோட வாலை...'' என்றான் வசந்தன்' மீரா பாய்ந்து வந்து, அவன் தலையில் 'ணங்' கென்று ஒரு குட்டு குட்டினாள்.

சிரித்தார்கள். இறுக்கம் தளர்ந்தது.

''அவங்கப்பன் ஒரு முசுட்டு முள்ளம்பன்றி... நாங்க பதமா விஷயத்தை எடுத்துச் சொல்றோம். நீதானேப்பா மாப்பிள்ளைத் தோழன். வெரிகுட்...வெரிகுட்! எனக்குப் பந்தியில ரெண்டு லட்டு விழறா மாதிரி பாத்துக்க போறும்...'' என்று தாத்தா வசந்தனிடமும் வேடிக்கை செய்தார்.

கண்ணனும் வசந்தனும் நம்பிக்கையோடுதான் புறப் பட்டுப் போனார்கள்.

இரவு வரதராஜன் அந்த நம்பிக்கைகளை மீராவிடம் நொறுக்கிப் போட்டார்.

''ஃப்ரெண்டுன்னா ஹால்வரைக்கும் கூப்பிடு. காபி குடு... நல்லதா நாலு வார்த்தை பேசி அனுப்பு. அவ்வளவு தான். அதோட நின்னுக்கணும். இந்த லவ்வு, கிவ்வுன்னு உளறிட்டு வந்து நிக்காதே... கல்யாணம் பண்ணிக் குழந்தை பெத்தப்புறம்கூட எவன் கூடவோ ஓடிப் போனாளே... உங்கம்மா....அந்தக் கண்றாவி லவ் எல்லாம் இன்னொரு தடவை இந்த வீட்ல வேண்டாம்...''

''இல்லப்பா...கண்ணன்...''

''ஷ்...ஷ்! எல்லாக் கதையும் கேட்டேன். வீட்லயே கல்யாணம் ஆகாத ஒரு அத்தைப் பொண்ணு இருக்கா ளாமே... அதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது...''

''கண்ணன் ரொம்ப நல்லவருப்பா...''

''அவன்தான் பெரிசுன்னு நீ நெனச்சா, உங்கம்மா போல நீயும் ஓடிப் போய்டு. ஆனா, ஒண்ணு... அப்புறம் நான் உன் அப்பனில்லை. நீ என் பொண்ணு இல்லை.''

முரட்டு முள்ளம்பன்றி சிலுப்பிக் கொண்டு விட்டது. இனி யார் பேச்சும் எடுபடாது.

"அவனை விட்டுத்தள்ளு..." என்றாள் பாட்டி. "வாழப்போறது நீயும் கண்ணனும்தானே...? அவன் போல உனக்கு நம்பிக்கையும் மனசுல தைரியமும் இருக்கு. இல்லியா...? உங்கப்பனுக்குத் தெரியாம ஆக வேண்டிய காரியத்தைப் பாரு..."

ஃ ஃ ஃ

வசந்தனின் அப்பாவும் கண்ணனின் அத்தையுமாக முகூர்த்த நாள் குறித்தார்கள்.

வடபழனி கோயிலில் காலை ஆறரையிலிருந்து எட்டுக்குள் முகூர்த்தம். பட்டுப்புடவை, பூமாலை, தாலி என்று சகலமும் வசந்தன் ஏற்பாடு செய்தான்.

"மீராவின் அப்பா காலையில் ஐந்தரை, ஆறு மணிக்குக் கிளம்பி வாக் போவது வழக்கம். அவர் அந்தண்டை போனதும், இந்தண்டை வந்து மீராவைக் கொத்திப் போ" என்று வசந்தனிடம் அவள் பாட்டி சொல்லியிருந்தாள்.

"நீ பரபரப்புல இருப்பே...நானே காரை ஓட்டறேன்" என்று வசந்தனின் அப்பா, தன் காரை எடுத்துக் கொண்டு வந்து விட்டார்.

அடுத்த தெருமுனையில் அவர் காரை நிறுத்தியிருந்தார்.

வசந்தன் மட்டும் மீராவின் வீட்டுக்கு எதிரில் காத்திருந்தான்.

அவள் அப்பா அரைடிராயருடன் வாக்கிங் கிளம்பித் தெருமுனை திரும்பியதும் தாத்தாவையும் பாட்டியையும் விழுந்து வணங்கினாள் மீரா.



பாட்டி கண்களில் நீர். இறுக்கி மூடி வைத்திருந்த உள்ளங்கையை விரித்தாள். வைர நெக்லஸ் ஒன்று கண் சிமிட்டியது.

"வழிவழியா வந்துக்கிட்டு இருக்கறதுடி. இது மருமகளுக்காகன்னு பத்திரப்படுத்தியிருந்தேன். உங்கப்பனுக்குத் தெரியாது. இந்தக் கெழவியோட சீதனம். போட்டுக்க" என்று மீராவைக் கட்டியணைத்துக் கண்ணீர் உகுத்தாள்.

தாத்தா வாசலில் ஒரு பார்வையும் வீட்டில் ஒரு பார்வையுமாகப் பொறுமையின்றித் தவித்தார்.

"ஏ கெழவி...உன் பேத்தி கழுத்துல நீ தாலி கட்டப் போறியா... கண்ணன் தாலி கட்டப் போறானா...? அனுப்பி வைடி அவளை...நேரமாச்சு. மனசு திக்...திக்குனு அடிச்சுக்குது!" என்று இரைந்தார்.

மீரா வீட்டை விட்டு வெளிப்பட்டாள்.

"வா, நேரமாச்சு" என்று வசந்தன் அவசரப்படுத்திய நேரம், மீராவின் அப்பா எதையோ மறந்துவிட்டவர் போல் நின்றார்.

வீட்டை நோக்கி. அதே தெருவுக்குள் மறுபடி நுழைத்தார்.

# 8

அப்பா அப்படித் திடுமென்று திரும்புவார் என்று சற்றும் எதிர்பார்த்திராத மீரா, பயத்தில் வசந்தனின் கையை இறுகப் பிடித்தாள்.

"வசந்த்... இப்ப என்ன பண்றது...?"

''வா, இந்தப் பக்கமா போயிடலாம்'' என்ற வசந்தன் மீராவை இழுத்துக்கொண்டு எதிர் திசையில் விரைந்தான்

அடுத்த தெரு முனையில் மீராவையும் வசந்தனையும் எதிர்பார்த்து, வசந்தனின் அப்பா தவித்துக் கொண்டிருந்தார். வசந்தனையும் மீராவையும் பார்த்தவுடன் ''என்ன... கிளம்பலாமா...?'' என்று பரபரத்தார்.

''ஆமாம்ப்பா... சீக்கிரம் வண்டியை எடுங்க... இவங்கப்பா தேடத் தொடங்கறதுக்கு முன்னே, நாம இந்த இடத்தை விட்டுப் போயிடணும்...''

வசந்தனும் மீராவும் காருக்குள் தங்களைத் திணித்துக் கொள்ள, வசந்தனின் அப்பா காரை எடுத்தார். அவருடைய சர்வீஸில் தோட்டா போல் அவர் காரை அப்படிக் கிளப்பியதே இல்லை!

ஃ ஃ ஃ

வசந்தனின் வீட்டில் முதல் வேலை திருத்தம். அருவி வேகத்தில் பட்டுப்புடவைக்கு மாறி, பாட்டி கொடுத்த நெக்லஸையும் அணிந்தாள் மீரா மாலைகளை எடுத்துக் கொண்டான் வசந்தன்.

அடுத்த திருத்தம்—வடபழனி கோயில்.

சரிகை வேட்டி தடுக்க கண்ணன் ஓடிவந்து எதிர் கொண்டான். ''ஒண்ணும் பிரச்னை இல்லையே'' என்று மூச்சிறைத்தான்.

''அத்தை, சுந்தரி... எல்லாரும் வந்தாச்சா...?''

''ம்... மீரா உனக்குச் சந்தோஷம்தானே...?''

''நல்ல நேரம் பார்த்தேடா, இதைக் கேக்கறதுக்கு! மொதல்ல தாலியைக் கட்டு... மத்ததை சாவகாசமா அப்புறம் விசாரிச்சுக்கலாம்...''



கண்ணன் இரண்டாவது முடிச்சு போடும்போதே, மீரா உணர்ச்சிகளை அடக்க முடியாமல் வெடித்து அழுதாள். அத்தனை பேரின் பார்வையையும் உதாசீனம் செய்து கண்ணனை இறுக அணைத்து அவன் தோளில் தலை சாய்த்து குலுங்கினாள்.

மூன்றாவது முடிச்சைப் போட்டுவிட்டு கண்ணன் அவள் முதுகை வருடிக் கொடுத்தான்.

சுந்தரி பார்வையைத் திருப்பி சூன்யத்தை வெறித்தாள்.

''கொஞ்ச நேரம் அப்படியே அசையாம இருங்கப்பா. வீடியோ காமிராக்காரன் எவனையாவது பிடிச்சு இழுத்துட்டு வரேன்...'' என்று வசந்தன் சொன்னதும், கண்ணீரும் சிரிப்புமாக மீரா அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

அத்தையின் கால்களையும் வசந்தனின் அப்பா கால்களையும் கண்ணீரால் நனைத்தாள்.

''மீரா... இனிமே நீ எங்க வீட்டுப் பொண்ணு. இப்படி அழக்கூடாது...''

அத்தை, அவளது கண்ணீர்க் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல கையெழுத்துப் போட்ட கையோட ரெண்டு பேரும் உங்க வீட்டுக்குப் போறீங்க. உங்கப்பா கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கறீங்க. பெரியவங்க மனசு எப்பவும் இளகின மனசு!'' என்று அத்தை மீராவின் கரைந்த மையைக் கன்விளிம்பில் சரி செய்தாள்.

ஃ ஃ ஃ

மீராவின் அப்பா தோட்டத்துச் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டு இருந்தார். மீராவையும் கண்ணனையும்

நேருக்கு நேர் பார்த்தவுடன் சற்று நேரம் சலனமற்ற சுனை நீர் போல் செயலற்று நின்றிருந்தார். ரப்பர் குழாயில் இருந்து நீர் விழுந்து வீணாகியது.

என்ன நினைத்தாரோ, சட்டென்று ரப்பர் குழாயைத் தன் தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்தார். நீர் அவர் முகத்தையெல்லாம் மூடி வழிந்து இறங்கியது.

மீராவுக்குத் துக்கமாக இருந்தது. அப்பாவின் இதயம் மட்டும் பாறையில் செதுக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றியது. அவளது இதயம் சூடு வைக்கப்பட்டது போல் துடித்தது.

அப்பாவின் கால்களில் விழுந்தாள். கண்ணனும் சேர்ந்து மார்பில் ஈர மண்பட விழுந்தான்.

"சேச்சே! இந்த வீட்டை அசிங்கப் படுத்தாதே... என் கால்ல விழறதுக்குப் பதிலா, ஏதாவது பனை மரத்துக் கால்ல விழறதுதானே..? அவ்வளவுதானே மதிப்பு கொடுத்தே எனக்கு...?"—மீராவின் அப்பா ரப்பர் குழாயை எறிந்துவிட்டுப் பேசினார். முகத்தில் வழிந்த நீர் உதடுகளில் பட்டுத் தெறித்தது.

"அப்பா... எங்க ரெண்டு பேரையும்..."

"நீ திருட்டுத்தனமா எப்ப இந்த வாசலைத் தாண்டினியோ அப்பவே நீ உங்கம்மா பொண்ணு...என் பொண்ணு இல்லேன்னு தலை முழுகிட்டேன். அப்படியே வெளியே போயிடு..."

வேறு வழியில்லை. நீர் அடித்து நீர் விலகி விட்டது. அப்பாவுடனான உறவு கண்ணாடியில் விழுந்த விரிசல் போல் ஆகிவிட்டது. இனி ஒன்று சேராது. வெளியே வந்தார்கள். மீரா திரும்பிப் பார்த்தாள்.

மாடி ஜன்னலில் இருந்து தாத்தாவும் பாட்டியும் ஆசீர்வாதம் பண்ணினார்கள். மீரா, கண்ணனின் தோள்



தொட்டாள். கண்ணனும் திரும்பிப் பார்த்தான். புன்னகைத்தான். பின் மீராவைத் தோளில் அணைத்துப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

"மீரா, ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். சாகறவரைக்கும் நம்மளை யாரும் பிரிக்க முடியாது! இது சத்தியம்..."

கண்ணனின் குரல் தழுதழுத்தது

ஃ ஃ ஃ

அன்றைக்கு அப்படி சத்தியம் செய்த கண்ணன்தான் இன்றைக்குப் பிரியலாம் என்று கொடி தூக்கியிருக்கிறான்.

படுக்கையறையில் நாற்காலி முனகும் ஒலி கேட்டது.

கட்டிலில் அமர்ந்து, ஜன்னல் வழியாக வெளியே தெரிந்த இருட்டில், நேற்றைய வாழ்க்கைச் சித்திரத்தை வெறித்துக் கொண்டிருந்த மீரா திரும்பினாள். இருவாட்சி மணம் அறையில் பரவியிருந்தது.

ஆடும் நாற்காலியில் உட்கார்ந்து, புத்தகம் ஒன்றைத் திறந்து, அதில் பார்வையைப் பதித்திருந்தான் கண்ணன். அதனால்தான் நாற்காலியின் முனகல்.

அதே நாற்காலியில் அவன் உட்கார்ந்திருந்தபோது, அவன் பாதங்களின் மேல் தன் பாதங்களை வைத்து, அவன் கைகள் இரண்டையும் தன் இரு கைகளால் பற்றி, அவன் முகத்துக்கு நேரே தன் முகத்தை இருத்தி, பயத்துடனும் பரவசத்துடனும் ஆடியது நினைவுக்கு வந்தது.

அப்போதும் நாற்காலி முனகியது. அந்த முனகலுக்கு ஒரு புது அர்த்தம் கற்பித்து வெட்கப்பட வைத்தான் அவன்.

அதன்பின் அந்த நாற்காலியில் அத்தையோ, சுந்தரியோ, வீட்டுக்கு வந்த விருந்தாளியோ, யார்

அமர்ந்து முனகல் கேட்டாலும் அவனுக்குச் சந்தோஷமாகத் தான் இருக்கும்.

சொல்லிவைத்த மாதிரி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்வார்கள். அவள் ரகசிய சிரிப்பு ஒன்றைச் சிந்துவாள். அவன் ஒற்றைக் கண்ணை இருட்டு நட்சத்திர மாகச் சிமிட்டிக் காண்பிப்பான்.

''ச்சீ...வெட்கங்கெட்ட ராஸ்கல்!''

கண்ணன் ஏன் படுக்கையறையில் இருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்துவிட்டது.

வெளியே போனால், அத்தையின் கேள்வி. இங்கேயே இருந்து நெருப்புக் கோழி போல் புத்தகத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டால், அவளைப் பார்க்க வேண்டிய தர்மசங்கடம் கூட இல்லை.

இந்த இருவாட்சி மணக்கும் அறையில், இருவரும் ஒரே மூச்சைப் பகிர்ந்து கொண்டதையெல்லாம் முற்றும் மறந்து, இப்படி இயந்திரம் போல் உட்கார்ந்திருக்க எப்படி இவனால் முடிகிறது...?

''கண்ணன்...'' என்றாள் மீரா. அந்த நான்கெழுத்தை உச்சரிப்பதற்குள் அவள் நா உலர்ந்து போனது.

கண்ணன் முகத்தை நிமிர்த்தி சக ஊழியனைப் பார்ப்பது போல் அவளைப் பார்த்தான்.

''என்மேல இல்லாத பிரியம் இந்தக் குழந்தை மேல எப்படி வந்தது...?''

கண்ணன் புரியாதது போல் அவளைப் பார்த்தான்.

''டாக்டர்கிட்டேர்ந்து போன் வந்ததும் அவசர அவசரமா வசந்தனை நீங்க அனுப்பி வெச்சது எதுக்காக...?



எம்மேல இருக்கற அக்கறையா...? இல்ல, குழந்தை மேல இருக்கற உரிமையா...?''

கண்ணன் புத்தகத்தை மெள்ள மூடினான்.

''குழந்தை உன்கிட்டயே இருக்கட்டும். நான் எந்த உரிமையும் கொண்டாட மாட்டேன். நீ மிஸஸ் கண்ணனா இந்த வீட்ல இருக்கற வரைக்கும், உரிமை இருக்கோ, பிரியம் இருக்கோ, எனக்கு கணவன்ங்கற பொறுப்பு இருக்கோ. டாக்டர் என்னைக் கூப்பிட்டுச் சொல்லும் போது அந்தப் பொறுப்பை நான் எப்படித் தட்டிக் கழிக்க முடியும்...?'' கண்ணன் தன் விரல்நுனிகளை ஆராய்ந்தபடி சொன்னான். ''எனக்கு உன் கணவன்ங்கற பொறுப்பு வேணாம். நாம பிரியறதைத் தவிர வேற வழியில்ல. தள்ளிப் போடறதால, இது வேற மாதிரி ஆகப் போறதில்ல...''

''நீங்க என்னைக் காதலிக்கறதா சொன்ன தெல்லாம்...?''

''அப்ப சொன்னேன்...''

''இப்ப...?''

''ப்ச்...''

காலம் சில கணங்கள் இயக்கமற்று ஸ்தம்பித்திருந்தது.

''ஒரு வருஷம் நாம தனித்தனியே இருந்தாகணும்னு வக்கீல் சொல்லிட்டாரு. அதனால நான் வேற ஏதாவது ஊர்ல வேலை எடுத்துக்கிட்டு ஒரு வருஷம் போயிடலாம்னு இருக்கேன்...''

அவர்களுக்குள்ளான உறவில் சில இழைகள் தன் கண்ணெதிரே பிரிவதை அவளால் உணர முடிந்தது.

"இது உங்க வீடு...நீங்க எதுக்காகப் போகணும்...? விட்டெறிஞ்சவுடனே வெளிய போக வேண்டியவ நான் தானே...? ஒண்டவந்தவளுக்கு எதுக்கு உபசாரம்...?"

"உன் இஷ்டம்..." என்றான் கண்ணன்.

ஃ ஃ ஃ

மீரா ஆபீஸ் போகும் வேனில் ஏறியதும், வழக்கம் போல் ஜெயமணி எழுந்து முன்பக்க இருக்கையை அவளுக்கு விட்டுக் கொடுத்தாள்.

"எனக்கும்தான் கொழந்தை பொறந்திருக்கு. ஆனா, கர்ப்பக் காலத்துல நான் இவ்வளவு தூரம் வாடிப் போகலை...ரெகுலரா செக்கப்புக்குப் போயிட்டிருக்கே, இல்ல...?"

மீரா, வரவழைத்த புன்னகையுடன் ராஜியின் கேள்விக்குத் தலை அசைத்தாள்.

"வர வர டி.வி. விளம்பரத்துல விவஸ்தையே இல்லாமப் போச்சு!" என்று காயத்ரி, அன்றைய விவாதத் தலைப்பை எடுத்துக் கொடுத்தாள்.

பெண்களுக்கான ஒரு குறிப்பிட்ட விளம்பரம் பற்றி முகம் சிவக்க அவர்கள் பேசி, "அந்த ஏ. வி. கம்பெனிமேல பெண்கள் சங்கம் மானநஷ்ட வழக்குப் போடணும்..." என்று ஆவேசமாக கலாவதி இரைந்துவிட்டு, "நீ என்ன சொல்றே மீரா...?" என்று எதிர்பாராமல் கேட்டாள்.

"வழக்குப் போடணும்னா, ஒரு வருஷம் பிரிஞ்சி இருக்கணுமாம்..." என்றாள் மீரா.

"என்னடி மீரா சொல்றே...?"

மீரா தன் நிலை உணர்ந்தாள். எப்படியும் இவர்களுக்கெல்லாம் தெரியத்தான் போகிறது.



"இஸபெல்லா நீ லேடீஸ் ஹாஸ்டல்லதானே இருக்கே... அந்த ஹாஸ்டல்ல எனக்கு ஒரு ரூம் கெடைக்குமா..?"

இஸபெல்லா, மீராவின் முகம் பார்த்தாள். பின், அவள் கைகளைப் பற்றிக் கனிவான குரலில், "ஏதாவது பிரச்னையா மீரா...?" என்று கேட்டாள்.

"நானும் கண்ணனும் டைவர்ஸ் வாங்கறதா முடிவு பண்ணிட்டோம்..."

"என்னது...?"

வேன் இன்ஜினின் உறுமலுக்கும் போக்குவரத்தின் இரைச்சலுக்கும் நடுவே மீரா எவ்வளவு சொல்ல முடியுமோ அவ்வளவு சொன்னாள். மீராவின் முகவாட்டம் வேனில் கூட இருந்த அத்தனை பெண்களையும் தொற்றிக் கொண்டது.

சற்றுநேரம் மௌனம். கார் ஹாரன்களின் இரைச்சல் கூட, மௌனத்தின் ஓர் அங்கமாகத்தான் தோன்றியது.

"ரூம் கெடைக்குமா...?" என்று மீரா உலர்ந்த புன்னகையுடன் கேட்டாள்.

"விசாரிக்கிறேன்..." என்றாள் இஸபெல்லா வருத்தம் தோய்ந்த குரலில். "ஆமா... வசந்தனுக்குத் தெரியுமா...?"

"இல்ல... இன்னிக்குத்தான் சொல்லப்போறேன்..." என்றாள் மீரா.

ஃ ஃ ஃ

வசந்தனுடன் உணவு இடைவேளையில் வெளியே வந்தபோது, கூடைக்கிழவி காற்றில் மீராவுக்கு திருஷ்டி சுழித்தாள்.

"இன்னிக்கு நீ ரொம்ப அழகா இருக்கே கண்ணு' இந்த நேரத்துல மத்தவங்க கண்லேர்ந்து தப்பினாலும் தப்பலாம்... புருஷங்காரன் கண்லேர்ந்து தப்பறது கஷ்டம். வீட்ல சொல்லித் திருஷ்டி சுத்திப்போட்டுக்கம்மா..."

கிழவியின் சுருக்கங்கள் நிறைந்த சிரிப்பை மீராவால் முழுமனதுடன் ரசிக்க முடியவில்லை.

வசந்தன் கேரியரைக் கூடையில் வைத்துவிட்டு மீராவுடன் நடந்தான்.

"நான் தனியா ரூம் பாத்துக்கிட்டுப் போயிடலாம்னு இருக்கேன் வசந்த்..." என்று மீரா மெல்லிய குரலில் ஆரம்பித்தாள்.

"தெரியும்... உன்னோட வேலை வரராஜி சொன்னாங்க... நீயே பேச்சை ஆரம்பிக்கணும்னுதான் வெயிட் பண்ணேன். யாரோட அபத்த ஐடியா இது...?"

"நான் போகலைன்னா கண்ணன் ஒரு வருஷம் வெளியூர் போயிடுவாராம்... பிஸினஸ் என்ன ஆகும்...? அத்தை என்ன ஆவாங்க...?"

"நீ என்ன ஆவேன்னு யோசிக்கத் தோணல, இல்லியா...? ரெண்டு பேருக்கும் இவ்வளவு கோபம் வரும்னு இத்தனை நாள் நான் நெனச்சே பார்த்ததில்ல..."

"இது கோபம் இல்லை வசந்த்..."

"அப்ப ஈகோவா, அகங்காரமா...? அது வைரஸ் மாதிரி. உள்ள இருந்தே அழிச்சுடும். எனக்கும் கண்ணனுக்கும் நடுவுல சண்டை சச்சரவே இல்லாம இருந்ததா...? ஒரு நாள் சண்டை போடுவோம். அடுத்த நாளே அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்னு புரிஞ்சு ரெண்டு பேரும் சிரிச்சுடுவோம். நீங்க என்னடான்னா... தனியா வாழப் போறாங்களாம். தனியா..."



"கண்ணனை உனக்குத் தெரிஞ்ச அளவு எனக்குத் தெரியலையா, இல்ல எனக்குத் தெரிஞ்ச அளவு உனக்குத் தெரியலையான்னு புரியலை"

மீரா நிதானமாகச் சொன்னாள். வசந்தன் அசைவில்லாமல் சில கணங்கள் நின்றான். "அது இன்னிக்கு சாயங்காலம் தெரிஞ்சுடும்..." என்றான் மெல்லிய குரலில்.

ஃ ஃ ஃ

விசாரணை மன்றம் கூடியிருந்தது.

கண்ணன், மீரா, அத்தை, சுந்தரி, வசந்தன்.

ஹால் மின்விசிறி காற்றோசையுடன் சுற்றியது. சுந்தரி இரு குச்சிகளை இரு கைகளில் பற்றி இயக்கிக் கொண்டு இருந்தாள். குச்சிகளில் நூலால் பிணைக்கப்பட்ட நெருப்புக் கோழி பொம்மை ஒன்று, கண்களில் பொருத்தப் பட்ட மூக்குக் கண்ணாடியுடன் இப்படியும் அப்படியுமாக நடந்தது.

"இவன் நான் வளர்த்த கண்ணன் இல்ல" என்றாள் அத்தை. "நாக்குல நரம்பில்லாமப் பேச நான் ஒரு நாளும் அவனுக்குச் சொல்லிக் கொடுத்ததில்ல."

கண்ணன் விரல்களைத் திருகியபடி உட்கார்ந்திருந் தான். எதிர்த்து சொல்லவில்லை.

"கண்ணா, ஒரு அற்பமான காரணத்துக்காக டைவர்ஸ் வரைக்கும் போறது உனக்கு அசிங்கமா படலையா...?" என்று வசந்தன் விறைப்பாகக் கேட்டான்.

"டைவர்ஸ்னு முடிவு பண்ணியாச்சு... தயவுசெஞ்சு யாரும் அதைப்பத்தி பேசவேண்டாம்..." என்று கண்ணன் கூர்மையாகப் பதில் சொன்னான்.

அத்தை காதுகளைப் பொத்திக் கொண்டாள். என்ன தோன்றியதோ, எழுந்து பூஜை அறைக்குள் போய் விட்டாள்.

"மொதல்ல அந்த உருப்படாத யோசனையைத் தூக்கி எறி... மீரா மாதிரி ஒரு பொண்டாட்டி கெடைக்க, நீ நூறு ஜென்மம் புண்ணியம் பண்ணியிருக்கணும்டா..." என்றான் வசந்தன். அவன் உடலில் ஒரு மெல்லிய பதட்டம்.

"இது நானும் மீராவும் தீர்த்துக்க வேண்டிய விஷயம். விட்டுரு..." என்றான் கண்ணன்.

வசந்தனின் கன்னமேடுகள் ரத்தம் பாய்ந்து சிவந்து போயின.

கண்ணன்மீது திடீரெனப் பாய்ந்து. அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றினான்.

மீராவும் . சுந்தரியும் திகைத்துப் போய்ப் பார்த்தார்கள்.

# 9

சில்லறை பாக்கியைத் தராத கண்டக்டர், குழந்தையை அஜாக்கிரதையாகக் கையாண்ட ரங்கராட்டினக் காரன் என்று எவ்வளவோ பேர் மீது வசந்தன் கோபப் பட்டுப் பாய்ந்திருக்கிறான். நியாயம் தவறியபோதெல்லாம் அவனுக்குக் கோபம் வந்திருக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் அவனது கோபம் கண்ணனைக் காப்பாற்றும் நோக்கில்கூட வெளிப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அவனுக்குக் கண்ணன் மீது கோபம் வந்ததில்லை.



இப்போது அடாத கோபம் வந்திருந்தது. கண்ணனின் சட்டையைக் கொத்தாகப் பற்றச் செய்திருந்தது.

மீராவின் அதிர்ச்சி, சுந்தரியின் திகைப்பு எதுவும் வசந்தனின் புத்தியில் ஏறவில்லை. அவனது மூக்கு விடைத்து, உலைத்துருத்திபோல் அதிலிருந்து மூச்சு வெளிப்பட்டது. கன்ன மேடுகள் ரத்தம் பாய்ந்து சிவந்து போயின.

கண்ணனின் சட்டையை விட்டுவிட்டு அவன் தோள்களை அழுத்திப் பிடித்தான். அவன் முகத்துக்கு நேரே தன் முகத்தை நெருக்கத்தில் வைத்துச் சீறும் குரலில் வசந்தன் பொரிந்தான் !

"சாட்சிக் கையெழுத்து நான் போட்டிருக்கேன்டா. தட்டிக் கேட்பேன். நீ நெனைச்சபோது சேர்த்துக்கறதுக்கும், நெனைச்சபோது தூக்கி எறியறதுக்கும் மீரா ஒண்ணும் நாதியத்துப் போனவ இல்ல..."

சுந்தரி திகைப்பிலிருந்து மீண்டு இரண்டே எட்டில் அவர்களை அடைந்தாள்.

"கண்ணன் மேலேர்ந்து கையை எடு" என்று கீச்சிடும் குரலில் கத்தினாள். "இத்தனை வருஷம் பழகின கண்ணனைவிட நேத்து வந்த இவ உனக்குப் பெரிசாப் போயிட்டாளா? நீ இதுல தலையிடாத. இப்படிப் பரிஞ்சுட்டு வர்றியே, தெரியாமத்தான் கேக்கறேன்... மீரா என்ன, கண்ணன் பொண்டாட்டியா, இல்ல... உன் பொண்டாட்டியா?"

வசந்தன் விதிர்த்து கண்ணனிடமிருந்து கைகளை விலக்கினான்.

சுந்தரி இப்படிப் பேசியதற்கு, கண்ணன் அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிடப் போகிறான் என்று எதிர்பார்த்து கண்ணனை நிமிர்ந்து பார்த்தான்.

கண்ணன், கண்களை சில கணங்கள் மூடினான். திறந்தான்.

சுந்தரியை ஒரு வார்த்தை சொல்லாமல் அந்த இடத்தைவிட்டு விலகிப்போனான்.

வசந்தன் விசை முடிந்துபோன பம்பரம் போல தரையில் அப்படியே ஓய்ந்துபோய் உட்கார்ந்தான்.

"ஐ'ம் ஸாரி மீரா. நான் தோத்துட்டேன்" என்றான்.

ஃ ஃ ஃ

நீல ஆகாயம், வெள்ளை மேகங்கள், பூத்துக் குலுங்கும் குல்மொஹர் பூக்கள், சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகள் எல்லாமே அழகு இழந்து கிடந்தன. காற்று களைத்துப்போய் அசைவின்றிக் கிடந்தது.

மீரா பெட்டியை வைத்துவிட்டு அத்தையின் காலில் விழுந்து வணங்கினாள்.

அத்தை குனிந்து மீராவை நிமிர்த்தி அணைத்தாள்.

உடலும் உடலும் மட்டும் கட்டுண்டு இழையவில்லை. இருவருக்குள்ளும் ஒளிர்ந்த உயிர்கள்கூட ஒன்றுடன் ஒன்று கலந்துவிட முனைந்து தவித்தன.

"கவனமா இருடி ராஜாத்தி. நீதானே இங்கே வரக் கூடாது? நீ எப்பக் கூப்பிட்டாலும் நான் ஓடிவரேன்" என்று மீராவின் நெற்றியில், கன்னத்தில் முத்தமிட்டாள். அத்தைக்கு இரவோடு இரவாகப் பத்து வயது கூடிப் போயிருந்தது.

வாசல்கதவின் மரச்சட்டத்தில் மீரா பூசிய மஞ்சளும், வைத்த குங்குமப் பொட்டுகளும் திடீரென நிறமிழந்தது போல் தெரிந்தன.



'வலது காலை எடுத்து வெச்சு வா' என்று அன்று அத்தை அணைத்து இழுத்துக்கொண்ட வாசலை மீராவின் பாதங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தாண்டின.

அத்தை சுவரைப் பிடித்துக் கொண்டு சமையலறை வாசல் வரை வந்து, அங்கே அறுந்த திரை போலத் தொய்ந்து விழுந்தாள்.

அத்தையின் ரத்த அழுத்தத்தைப் பரிசோதித்த டாக்டரின் முகம் வெளிறியது.

"பிரஷர் கன்னா பின்னான்னு எகிறியிருக்கே! உடனடியா ஊசி போடறேன் மிஸ்டர் கண்ணன். நாலு மணி நேரமாவது இங்கேயே படுத்திருக்கட்டும், அப்புறம் பிரஷர் செக் பண்ணிட்டுத்தான் வீட்டுக்குப் போலாமானு சொல்ல முடியும்."

கண்ணன் கட்டிலில் அமர்ந்து அத்தையின் நெற்றியில் உள்ளங்கை பதித்து வருடினான்.

அத்தை பலவீனமாக அவன் கையை நகர்த்தி விட்டாள்.

"அத்தை... எல்லாத்தையும் மனசுல எதுக்கு ஏத்திக்கறே?"—கண்ணன் இறைஞ்சுவது போல் கேட்டான். வெயிலில் வீசியெறியப்பட்ட பூவைப் போல அவன் வாடியிருந்ததை அத்தை கவனித்தாள்.

"உன்னை மாதிரி துடைச்சி எறியத் தெரியலையேடா" என்று பலவீனமான குரலில் சொன்னாள்.

"சரி... சரி... இப்ப அதைப் பத்திப் பேசி டென்ஷனாக வேண்டாம்."

"மீராவை மறுபடி வீட்டுக்கு அழைச்சுட்டு வந்துடறியா கண்ணா?"

"அதைப் பத்திப் பேச வேண்டாமே அத்தை."

"உனக்கு மீராவைப் பிடிக்காமப் போனதுக்கு அவங்கம்மா காரணம் இல்ல... எனக்குத் தெரியும்."

கண்ணன் திடுக்கிட்டுப் போய் அத்தையின் முகம் பார்த்தான்.

"அன்னிக்கு சுந்தரி வசந்தனைக் கேக்கக்கூடாத கேள்வி கேட்டா. நீ தடுத்துப் பேசல. அப்பவே எனக்குப் புரிஞ்சு போச்சுடா. வசந்தன் நம்ம வீட்டுப் பையன்டா... அவனைப் போய் எப்படி கண்ணா..."

"அத்தை... போதும். இந்தப் பேச்சை இத்தோட நிறுத்திக்க. நீ லட்சம் தடவை கேட்டாலும் நான் ஒண்ணே ஒண்ணுதான் சொல்லுவேன் அத்தை, இனிமே மீராவோடு நான் சேர்ந்து வாழமுடியாது. அவ நடுவுல வந்தவ. நடுவுலயே போயிட்டா. அதுக்காக நீ மனசையும் உடம்பையும் கெடுத்துக்காதே அத்தை!"

அத்தை சலித்துப் போய் ஒருக்களித்துத் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அதன்பின் அவள் கண்ணனிடம் ஒரு முறைகூட மீராவைப் பற்றி விசாரிக்கவில்லை.

ஃ ஃ ஃ

அந்தச் சிறிய சதுரக் கண்ணாடியில் இரண்டு இடங்களில் விளிம்பு சேதமாகியிருந்தது. மீரா தன் பிம்பம் பார்த்து நெற்றிப் பொட்டை ஒட்டினாள். திரும்பினாள்.

அறையில் ஈரம் கசிந்த சுவர்களின் வாசம் தூக்கலாக இருந்தது. இந்த லேடீஸ் ஹாஸ்டலின் எல்லா அறைகளிலுமே இதேபோன்ற வாசம் இருக்குமா அல்லது அவளுக்குக் கிடைத்த இந்த அறையில் மட்டும்தான் இந்த வாசமா என்று மீராவுக்குத் தெரியவில்லை.



ஹாஸ்டலில் அவளுக்குத் தனியறை கிடைக்கவில்லை. இஸபெல்லாவின் அறையிலேயே தங்கிக் கொள்ளலாம். என்று நினைத்தாள். அதற்கும் வழியில்லை. இஸபெல்லாவின் அறையில் இருந்தவள் அந்த அறையை விட்டு வேறு அறைக்கு மாற்றிக் கொள்ள ஒப்பவில்லை மாதவி என்னும் புரொபசர் ஒருத்தியின் அறையில் மீராவுக்கு இடம் கிடைத்தது. ஒரு அறைக்கு இரண்டு பேர், யாராக இருந்தாலும் அனுசரித்துக் கொள்ளலாம் என்று மீரா அந்த அறையில் இணைந்து கொண்டாள். மாதவியை அங்கிருந்தவர்கள் 'மாதவி மேடம்' என்று அழைத்தார்கள். மீராவும் அப்படியே அழைக்கப் பழகிக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

ஜன்னலுக்கு வெளியே மாமரம் சலசலத்தது.

'ஜன்னல் பக்கம் வாட்ச், வளையல்னு எதையும் வைக்காதே. அப்பப்ப குரங்கு வரும்' என்று மாதவி மேடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

ஜன்னலை நெருங்கி பெயின்ட் உதிர்ந்த கம்பிகளில் விரல்களைப் பதித்து வெளியே பார்த்தாள்.

கிளைகளை விலக்கிக் கொண்டு அடர் சாம்பல் நிறத்தில் ஒரு குரங்கு, வித்தைக்காரன் போல் நடந்து கிளை நுனியில் உட்கார்ந்தது. அவளைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தி முறைத்தது.

இதற்கு அப்பா உண்டா? தாத்தா பாட்டி உண்டா? இதன் அம்மா தன் மார்போடு அணைத்து இதைத் தான் சென்ற இடம் எல்லாம் அழைத்துப் போனதா அல்லது வீசி எறிந்துவிட்டு இன்னொரு குரங்கோடு ஓடிப் போனதா?

இதற்குக் காதல் உண்டா? கல்யாணம் உண்டா அல்லது விவாகரத்துக்காகக் காத்திருக்கிறதா?

எதுவாக இருந்தாலும் இன்று தந்தையில்லை. தாயில்லை, குடும்பமில்லை. ஆதரவற்றதாக, தனியாக நிற்பதாகத் தோன்றியது.

குரங்கை 'வா' என்று கையசைத்து அழைத்தாள்.

அது உடனே பற்களை விரித்துக் காட்டியது. கிளைகளில் தாவி விரைந்து காணாமல் போனது. இதுவும் மனிதர்களோடு சேர்ந்து மாறி விட்டது போலும்.

மீரா கட்டிலில் அமர்ந்தாள்.

கண்ணனுடனான உறவுக்கு நேர்ந்த விபத்து, வசந்தனுடன் இருந்த உறவையும் சற்று பாதித்து விட்டது. அவனால் முன்போல் அவளைத் தடையின்றி கேலி பேச முடிவதில்லை. அவள் காயங்களைக் கிளறி விடக் கூடாது என்ற கவனத்துடன் அவன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

ஹாஸ்டல் கேட்வரை அவளுடைய பெட்டியைச் சுமந்து வந்தபோது, "மீரா, எனக்கு இன்னும் கண்ணன் பேர்ல நம்பிக்கை இருக்கு. நீ அவசரப்பட்டு எந்தத் தப்பும் பண்ணிடாதே" என்றான் வசந்தன்.

மீரா சிரித்தாள். "நீ பயப்படற மாதிரில்லாம் எதுவும் செய்ஞ்சிட மாட்டேன்."

"அதுக்குச் சொல்லல. தனியா இருக்கறச்சே மனசு நெனைக்க வேண்டாததை எல்லாம் நெனைக்கும். 'எனக்கு மட்டும் இப்படி ஆயிடிச்சே'ன்னு தன்னிரக்கம் பாரமாப் போட்டு அழுத்தும்."

"எதுவா இருந்தாலும் நான் மனசுவிட்டுச் சொல்ல நீ இருக்கியே வசந்த."

"ஆமா... நான் இருக்கேன் இல்ல? நான் இருக்கேன் மீரா. எப்பவும் இருப்பேன்." அவன் கண்கள் நனைந்



திருந்தன. மீராவை உள்ளே அனுப்பிய பின் எந்தப் பக்கம் போவதென்று தெரியாமல் தடுமாறும் மேகம் போல் சற்று நேரம் அந்த கேட் அருகிலேயே நின்றிருந்தான்.

அவன் தயங்கித் தயங்கிப் புறப்பட்டுப் போனதை அறை ஜன்னலில் இருந்து மீரா பார்த்தாள். உணர்ச்சிகளால் இதயம் கனத்துப் போனது.

அன்றைக்கு இரவு இமைகளை மூட முடியவில்லை. மின்விசிறியின் சுழற்சியில் வசந்தனின் வெவ்வேறு முகங்கள் வந்து போயின.

கண்ணனின் பயிற்சியகத்துக்கு அவளைப் பெருமையோடு அழைத்துப் போன வசந்தன். கண்ணனின் காதலை அவளிடம் தூது சொன்ன வசந்தன். அவள் அப்பாவின் முன் கவலையோடு நின்ற வசந்தன். கல்யாணத்தன்று அவளை உரிமையோடு கண்ணனிடம் இழுத்துப் போன வசந்தன்.

அப்போதெல்லாம் கண்ணன் உடலாக இருந்தபோது உயிராகவும், உயிராக இருந்தபோது உடலாகவும் கொண்டாடப்பட்ட வசந்தன்—

கண்ணன் மீது பாய்ந்தது யாருக்காக?

அவளுக்காக.

வசந்தனின் பீறிட்ட ஆவேசம் அகங்காரமானதா? நியாயமற்றதா? அதை அடக்குவதற்கு சுந்தரி பயன்படுத்திய இரக்கமற்ற ஆயுதம், கண்ணனிடம் பாதிப்பையே ஏற்படுத்த வில்லையா?

"எப்படி கண்ணா, இப்படி இதயத்தை காலிசெய்ட்டால் நிரப்பிக் கொண்டாய்? என்னிடம்தான் என்று நினைத்தேன். வசந்தனிடம் கூடவா? எல்லாவற்றையும்

தகர்த்துத் தாறுமாறாக்கிவிட்டு இப்போது நீ சந்தோஷமாக இருக்கிறாயா?''

ஃ ஃ ஃ

கண்ணன் மொட்டைமாடி சிமெண்ட் தரையில் மல்லார்ந்திருந்தான். வானத்தில் சிடுக்கு, சிடுக்காக நட்சத்திரங்கள். கிழிபட்ட மேகங்கள். குறைபட்ட நிலா.

காற்றின் வேகத்தில் மொட்டைமாடிக் கதவு தடதடவென நடுங்கியது.

அவனுடைய கை நீண்டிருக்க, அதன் விடைத்த தசையில் தலை வைத்து மீராவும் உடன்படுத்திருந்த நாட்களில் இதே நட்சத்திரங்கள் கோலப் புள்ளிகளாகக் கண் சிமிட்டியிருக்கின்றன. நிலா குறும்போடு மேகங்களுக்குப் பின்னே ஓடியிருக்கிறது.

' கண்ணா.''

மொட்டைமாடிக் கதவைப் பிடித்து சுந்தரி நின்றாள்

முகத்தைப் புரட்டி. ''ம்?'' என்றான்.

''உனக்கு வேற ஏதாவது வேணுமா?'' அவள் முகத்தில் நிழல், கீற்று கீற்றாக விழுந்திருந்தது.

எவ்வளவோ சொன்னாலும் தன் தூக்கத்தை வீசியெறிந்துவிட்டு அவனுக்குப் பரிமாறுவதற்காக அவள் விழித்திருக்கிறாள். அவன் உறங்கப் போகும்வரை புத்தகத்தில் இமைகளை மிரட்டிப் பார்வையைப் பதித்திருக்கிறாள்.

அத்தை அவன் பார்வையில் இடறுவதே குறைந்துவிட்டது.



''ஒண்ணும் வேணாம் சுந்தரி. நீ தூங்கப் போ.''

''நீ?''

''நானும் படுக்கவேண்டியதுதான்.''

கண்ணன் புரண்டு எழுந்து, நிற்காமல் படிகளில் இறங்கிப் போனான்.

சுந்தரி மொட்டை மாடிக் கதவைத் தாளிடும் ஓசை கேட்டது.

கண்ணன் படுக்கை அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

ஹைதராபாத்தில் எழுதாமல் நிறுத்திவிட்ட அவனுடைய டைரியை எடுத்தான்.

அன்றைய தேதிக்கான பக்கத்தைப் பிரித்தான்.

நடுங்கும் விரல்களால் எழுத ஆரம்பித்தான்.

# 10

மீரா கம்ப்யூட்டர் திரையை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கீ—போர்டில் அவளது விரல்கள் ஏறக்குறைய ஒரு 'பாலே' நடனம் ஆடிக் கொண்டிருந்தன.

அவளுடைய கீ-போர்டுக்குப் பக்கத்தில் கட்லெட்டுடன் ஒரு காகிதத் தட்டு நீண்டது.

மீரா கவனம் கலைந்து நிமிர்ந்து பார்த்தாள்.

வசந்தன்!

அவன் முகத்தில் ஒரு மெல்லிய புன்முறுவல். கூடவே சிறு ஆச்சரியம் கலந்த குரலில், "நீ கௌம்பலையா?" என்று கேட்டான்.

மீரா சாய்ந்து உட்கார்ந்தாள். கை விரல்களை ஒன்றாகக் கோத்து நெட்டி முறித்தாள். "டாக்டருக்கு போன் பண்ணி செக்கப்புக்கு நாளைக்கு வர்றதா சொல் விட்டேன்'' என்றாள்.

"எதுக்கு மீரா தள்ளிப் போடறே?"

"அர்ஜண்ட் ஸ்டேட்மெண்ட் வசந்த். வேலையை முடிக்காம போறதுக்கு இஷ்டமில்லை. ஒண்ணும் பிரச்னை யில்லைனு டாக்டர் சொல்லிட்டாங்க."

"ஏழரை மணிக்குள்ள ஹாஸ்டலுக்குத் திரும்பணும்னு சொல்லுவியே."

"போயிடலாம்."

மீரா கம்ப்யூட்டருக்குச் சில ஆணைகள் கொடுத்து விட்டு கட்லெட்டை எடுத்துக் கொண்டாள்.

"அத்தை இன்னிக்கு போன் பண்ணியிருந்தாங்க மீரா. நீ மானேஜர் ரூம்ல இருந்ததால கூப்புடல."

மீராவின் முகத்தில் லேசான சந்தோஷம். "எப்படி யிருக்காங்களாம்?" என்று கேட்டாள் ஆர்வமாக.

"நீ எப்படியிருக்கேனு அவங்க கேட்டாங்க. இன்னிக்கு செக்கப்புக்குப் போகணும்னு ஞாபகப்படுத்தச் சொன் னாங்க."

மீரா நெகிழ்ந்தாள். வாயில் போட்டதை விழுங்க முடியாமல் தவித்தாள்.

"நீயும் இப்ப அங்க போறதில்லையா வசந்த்?"



வசந்தன் சற்று நேரம் மௌனமாயிருந்தான்.

"முன்னெல்லாம் ரெண்டு நாளைக்கு ஒரு தடவையாவது அவன் வீட்டுக்குப் போய்ட்டிருப்பேன். இப்ப என்னவோ மனசு வரமாட்டேங்குது'' என்றான் வசந்தன், முறு முறுக்கும் குரலில்.

"என்னால ஒரு நல்ல நட்பு கெட்டுப் போச்சா வசந்த்?"

"சீச்சி... நட்புல்லாம் கெட்டுப் போயிடலை மீரா. அது நெஞ்சுல இருக்கு. நமக்கே உடம்புல ஒரு காயம்பட்டா, அந்த இடத்தை ஆறுற வரைக்கும் உபயோகப்படுத்தாம இருக்கறதில்லையா? கண்ணன் மனசு ஆறட்டும். தப்பைப் புரிஞ்சிக்கட்டும். அதுவரைக்கும் தொந்தரவு பண்ணாம இருக்கேன். அவ்வளவுதான்!"

வசந்தன் சொல்லி முடிக்கவும் போன் ஒலித்தது. "அத்தையா இருக்கும்'' என்றான். மீரா அந்த எதிர் பார்ப்போடு முகத்தில் சந்தோஷத்தைத் தேக்கிக் கொண்டு ரிஸீவரை எடுத்தாள்.

அத்தை இல்லை. அவளுடன் ரூமில் தங்கியிருக்கும் மாதவி மேடம்.

"மீரா ... உன்னைச் சந்திக்கறதுக்கு இன்னிக்கு ஒருத்தரை அழைச்சிட்டு வர்றதா இருக்கேன். நீ ஏழரை மணிக்குள்ளே ரூமுக்கு வந்துடுவே இல்லை?"

"யார் மேடம்?"

"நேர்ல பாத்துக்கோயேன்'' மாதவி மேடம் போனை வைத்து விட்டாள்.

ஃ ஃ ஃ

மாதவி மேடத்துக்கு முப்பத்தாறு வயது இருக்கும். ஜாதகத்தில் ஏதோ கோளாறு. அதனால் வந்த வரன்கள்

எல்லாம் தட்டிப்போய், கல்யாணமே வேண்டாமென்று முடிவு செய்து விட்டதாக ஒரு முறை சொன்னாள். பின், ஒரு நாள் இரவு அறை விளக்கை அணைத்த பின்பு, மல்லாந்த வாக்கில் படுத்திருந்த மாதவி மேடம் 'ஆண்கள் எல்லாம் மோசக்காரர்கள், காமக் கொடூரர்கள்' என்றாள். ஒரு மாலைப் பொழுதில் அவளது ஆற்றாமை வேறொரு விதமா வெளிப்பட்டது.

"கல்யாணம் பண்ணிக் கொடுக்க எங்கப்பாவுக்கும் துப்பு இல்ல. உன்னை மாதிரி தானாப் பாத்துக்க எனக்கும் சாமர்த்தியம் இல்ல."

ஹாஸ்டலில் தங்கியிருப்பவர்களிலேயே சீனியர் என்ற வகையில் அவளது அதிகாரம் கொடி கட்டிப் பறந்தது. காலேஜ் புரொபசர் வேறு.

யாராவது ஒரு பெண் தவிர்க்க முடியாத காரணத்தால் கொஞ்சம் தாமதமாக வந்துவிட்டால் போதும். அவள் யாருடனோ சுற்றிவிட்டு வந்திருக்கிறாள் என்று மறுநாளே பேச்சு கிளம்பிவிடும். வதந்தியின் பின்னணியில் மாதவி மேடம் இருப்பாள்.

அவள் இயல்பே அதுதான் என்று இஸபெல்லா மூலம் தெரிந்தபோது மீராவுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

. மீரா தங்குவதற்கு அந்த ஹாஸ்டலில் வேறு அறையே கிடைக்காததால்தான் அவளை மாதவி மேடத்தின் அறையில் தங்கவைக்க நேர்ந்தது என மன்னிப்பு கோரும் தொனியில் இஸபெல்லா சொன்னபோது மீரா நெகிழ்ந்து போய். 'பரவாயில்ல... அதனால் என்ன இஸபெல்' என்று அவளைச் சமாதானப்படுத்தினாள்.

மாதவி மேடம் பற்றி மற்றவர்கள் சொன்னதையெல்லாம் மீராவால் நம்ப முடியவில்லை.

ஆனால் அவள் பேச்சு, நடந்து கொள்ளும் விதம் ஆகியவற்றைப் பார்த்தால் நம்பாமலும் இருக்க முடியவில்லை.



சில இரவுகளில் மீரா படிக்கும் புத்தகத்தைப் பிடுங்கி படியில் வைத்துக் கொண்டு 'காதலிச்ச காலத்துலேயே கண்ணனை அத்துமீற அனுமதிச்சது உண்டா?' என்பாள். அல்லது வசந்தன்னு ஒரு பையன் அடிக்கடி வரானே, அவன் யாரு?' என்பாள்.

கேள்விகளுக்கு பயந்தே மாதவி மேடம் மாலை வகுப்பு எடுத்துவிட்டு வருவதற்குள் படுத்துவிடுவது என்று ஒரு பழக்கத்தை மீரா ஏற்படுத்திக் கொண்டிருந்தாள்.

இன்றைக்கு மாதவி மேடம் யாரை அழைத்து வரப் போகிறாள்?

ஃ ஃ ஃ

ஹாஸ்டலைச் சுற்றி சின்ன தோட்டப் பகுதி இருந்தது. நான்கு சிமெண்ட் பெஞ்சுகள் இருந்தன. மாதவி மேடம் கேட் அருகில் இருந்த பெஞ்சில் உட்கார்ந்திருந்தாள்.

''உனக்காகத்தான் காத்திருக்கோம். வா, வா'' என்று மீரா நுழைந்த உடனேயே மடக்கினாள்.

''ரேணு, இதான் மீரா...'' என்று அறிமுகப் படுத்தினாள்.

ரேணுவுக்குப் பத்தொன்பது வயது இருக்கலாம். கல்லூரிப் புத்தகங்களை மார்போடு அணைத்திருந்தாள். மாதவி மேடத்தின் அண்மையில், பொறியில் அகப்பட்ட எலிபோல் தெரிந்தாள்.

''ரேணு எங்க காலேஜ்ல கடைசி வருஷம். நல்ல புத்திசாலிப் பொண்ணு. இப்ப சமீபகாலமா ஒரு பிரச்னைல மாட்டிட்டிருக்கா. அதான் உன்னைப் பார்க்கட்டும்னு கூட்டிட்டு வந்தேன்.''

ரேணு மீராவைப் பார்த்து, உதடுகளைப் பிதுக்கித் தனக்கும் புரியவில்லை என்றாள்.

''ரேணு நல்லாயிருந்த பொண்ணு. இப்ப ஆறு மாசமா லவ்வுன்னு ஒரு பையன் பின்னால சுத்திட்டிருக்கா. ஆம்பிளை வாசனை பாத்துட்டா இல்லையா? மயக்கத்துல, நான் நல்லது சொன்னா காதுல ஏறமாட்டேங்குது. அதான் காதலிச்சி, சீரழிஞ்சு இப்ப நடுத்தெருவுல நிக்கற உன்னைக் காட்டினாலாவது பளிச்சுனு புத்தில உறைக்கும்னு கூட்டிட்டு வந்தேன்.''

சூர்ப்பனகையின் காலால் இதயத்தில் உதைபட்ட மாதிரி இருந்தது மீராவுக்கு. வலமோ, இடமோ போய்க் கொண்டிருந்த நரி இன்றைக்கு மேலேயே பாய்ந்துவிட்டது. பாடம் சொல்லித் தரும் ஆசிரியையா இவள்? நாருக்கு என்றால் என்ன என்று இவளுக்கு யார் சொல்லித்தரப் போகிறார்கள்?

''இவ காதலுக்காக பொறந்த வீட்டை உதறிட்டு வந்துட்டா ரேணு! வயித்துல குழந்தையும் கொடுத்துட்டு இப்ப புருஷன் வெளில போடினு துரத்திட்டான் ஏதோ... நாலு காசு சம்பாதிக்கறதால ஹாஸ்டல்லயாவது இடம் கெடைச்சது. சொல்லேன் மீரா, லவ்வுல மாட்டிகிட்டா என்ன கதி என்ன ஆகும்னு.''

மீரா அவள் கையை உதறினாள்.

''மேடம், கொஞ்சம் புத்தியோட நடந்துக்குங்க...'' என்றாள். ரேணுவிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு விடுவிடுவென்று ஹாஸ்டலுக்குள் போய்விட்டாள்.

ஃ ஃ ஃ

மீரா ஒருக்களித்துப் படுத்திருந்தாள். ஜன்னலுக்கு வெளியே மாமரம் இருட்டோடு கலந்திருந்தது. வயிற்றுப் பாரத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு புரண்டு படுத்தும் தூங்க முடியவில்லை



மாதவி மேடம் தன் கட்டிலில் தொண்டை கட்டிய சிங்கம்போல் குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். அவளிடமிருந்து ஒரு நச்சு புறப்பட்டு சுற்றியிருந்த காற்றில் கலந்திருந்த மாதிரி தோன்றியது. அந்த நச்சு நெடியில் மீரா பாதுகாப்பற்றவள் போல் உணர்ந்தாள்.

எழுந்தாள். விளக்கைப் போடாமல் தன் கைப்பையில் துழாவி சில்லறை நாணயங்களை எடுத்துக் கொண்டாள்.

ஹாஸ்டலின் முகப்பில் நாணயம் போட்டுப் பேசும் தொலைபேசி இருந்தது.

ஃ ஃ ஃ

அப்பாவின் கால் விரல்களைச் சொடக்கு எடுத்துக் கொண்டிருந்தான் வசந்தன்.

ரங்கசாமி சுண்ணாம்பு தடவி வெற்றிலை நரம்பைக் கிழித்துக் கொண்டே காலை சுகமாகக் காட்டியபடி இருந்தார்.

பெரிய விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டு ஒரு லாந்தர் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு தந்தையும் மகனும் அன்றைய அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வது வழக்கம்.

''ஜாங்கிரி எடுத்துக்கிட்டியா?'' என்றார் வெற்றிலையை மடித்தபடி.

''யாருப்பா வாங்கிட்டு வந்தது?''

''சுந்தரமூர்த்தி வந்திருந்தான். அவன் மச்சினி ஜாதகம் கொண்டு வந்து கொடுத்தான். நம்ம வீட்ல சம்பந்தம் பேசணும்னு அவங்க வீட்ல ரொம்ப ஆசைப் படறாங்களாம்.''

வசந்தன் நிமிர்ந்தான். "வேணாம்ப்பா. கொஞ்ச நாளைக்கு என் கல்யாணப் பேச்சுக்கே இடம் கொடுக்கா தீங்கப்பா..."

"எனக்குத் தெரியாதா வசந்தா? கண்ணன் மீரா வாழ்க்கைல பெருசா இடி ஒண்ணு விழுந்திருக்கு. இப்ப போய் உன் கல்யாணப் பேச்சை எடுப்பேனா? தட்டிக் கழிச்சு அனுப்பிட்டேன்..."

வெற்றிலையை வாயில் போட்டு விரல்களைத் துடைத் துக்கொண்டார். தன் கால்களை மடக்கி வசந்தனின் கால்களை இழுத்து சொடக்கு எடுக்க ஆரம்பித்தார்.

'அப்புறம் கண்ணன்கிட்ட நீ பேசவே இல்லையா?"

வசந்தன் பதில் சொல்லும் முன் தொலைபேசி ஒலித்தது. வசந்தன் எடுத்தான்.

"வசந்த்!" மீராவின் குரலில் சின்ன நடுக்கம் இருந்தது. "வசந்த் எனக்கு இந்த ஹாஸ்டல் வேண்டாம். பிடிக்கல. தனியா ஒரு போர்ஷன் வேணும். நாளைக்கே வேணும். ப்ளீஸ்...மறுத்து எதுவும் சொல்லிடாத..."

ஃ ஃ ஃ

"பிடிச்சிருக்கா?" என்று கேட்டான் வசந்தன்.

மீரா காற்றில் பறந்த கூந்தல் முடிகளை ஒதுக்கினாள். கண்களில் அந்த வீடு அளித்த பிரமிப்பு. "ரொம்ப..." என்றாள்.

சிறிய வீடு. அறுநூறு சதுர அடி கட்டடம். வீட்டைச் சுற்றி சின்ன தோட்டம். தோட்டத்தைச் சுற்றி காம்பௌண்ட் சுவர்.

"வீட்டுச் சொந்தக்காரர் அப்பாவுக்கு ரொம்ப வேண்டி யவர். இப்ப பாம்பேல இருக்கார். வீட்டை பொறுப்பா



பாத்துக்க நம்பிக்கை யானவங்களை குடித்தனம் வைக்கணும்னு சொல்லி இருந்தாரு. டெலிபோன் வசதி கூட இருக்கு."

"நீ போகாதுனு இப்ப உங்கப்பாவும் சேர்ந்து எதுக் காக அல்லாட ஆரம்பிச்சுட்டாரா வசந்த்?"

"தனி வீடா இருக்கறதால எனக்குக் கொஞ்சம் பயம். எதுக்கும் நீ ஜாக்கிரதையா இருக்கணும். மளிகை, பால் எல்லாம் பக்கத்துலயே இருக்கு. ரைட்...நான் நல்லா இருக்கு. பால் காய்ச்சுடறியா?" என்ற வசந்தன் பால் பாக்கெட்டையும் பாத்திரத்தையும் காரிலிருந்து எடுத்து வந்தான்.

ஃ ஃ ஃ

வராந்தாவில் வலை துவாரங்கள் வழியே வெயிலின் அச்சு பதிந்திருந்தது. மடக்கிய குடையுடன், நிதானமான நடையில் நடந்து வந்த கிழவரை அந்த கம்ப்யூட்டர் பயிலகம் ஆச்சரியத்துடன் வரவேற்றது.

"உங்களுக்கு யாரைப் பார்க்கணும்?"

"கண்ணனை!"-நடையில் இருந்த தளர்ச்சி அவர் குரலில் இல்லை.

"உங்க பேரு..."

"பேரெல்லாம் சொன்னா ஞாபகம் இருக்காது. மீரா வோட தாத்தான்னு சொல்லுப்பா..."

கேள்விப்பட்டதும், கண்ணனே தன் அறையிலிருந்து வெளிப்பட்டான்.

"வாங்க" என்று அவர் கைகளைப் பற்றி உள்ளே அழைத்துப் போனான். அவன் குரலில் உற்சாகம் இல்லை. புன்னகையில் வரவேற்பு இல்லை.

குளிரூட்டப்பட்ட அறை. கறுப்புக் கண்ணாடிச் சுவர்கள்.

''எப்படி இருக்கிங்க தாத்தா? பாட்டி எப்படி இருக்காங்க?''

''நாங்க கெடக்கோம் விடு. எங்க மீரா எப்படி இருக்கா?'' என்றார் தாத்தா கோபமாக ''கேள்விப்பட்டதுலேர்ந்து எங்க ரெண்டு பேர் மனசும் கெடந்து அடிக்குது. உன்னை நம்பித்தானே, என் மகளைக்கூடப் பகைச்சுக்கிட்டு, எங்க பேத்தியை உன் கூட அனுப்பினோம். இப்ப டைவர்ஸ் கேக்கணும்னு தனியா பிரிச்சு அனுப்பிட்டியாமே...உனக்கென்ன பைத்தியமா?''

''தாத்தா... இப்படிப் படபடன்னு பேசாதிங்க. உக்காருங்க முதல்ல. கூலா ஏதாவது சாப்பிடறீங்களா?''

''கூலா சாப்பிடணும்னா பெட்டிக் கடைல காசை எறிஞ்சா கெடைக்குது. அதுக்காக உன்னைத் தேடி வரல...

கண்ணனின் முகம் வெளுத்துப் போயிருந்தது. ஒரு பேப்பர் வெயிட்டை இரண்டு கைகளுக்கும் நடுவில் உருட்டிக் கொண்டிருந்தான்.

''நீ மீராவைக் காதலிச்சது உண்மைதானே?''

''ம்...''

''அவளை அழைச்சுட்டுப் போய் கோயில்ல தாலி கட்னது...''

''ம்...''

''மீரா எப்படியாவது வேணும்னு தானே அன்னிக்கு எங்களைச் சுத்திச் சுத்தி வந்தே? இன்னிக்கு எங்ககிட்ட சொல்லக்கூட இல்ல. அவளை வெளியே அனுப்பியிருக்கே...''



தாத்தாவின் குடைமுனை மேலும் கீழும், இடதும் வலதுமாகக் காற்றில் வட்டங்கள் போட்டது.

''இப்ப என்ன செய்யணும்?''

கண்ணன் குரலில் சற்று கடுமை சேர்த்துக் கேட்டான். தாத்தாவின் குரல் உடனே தாழ்ந்துபோனது.

''இத பாரு கண்ணா... நானும் மீராவோட பாட்டியும் அறுபது வருஷமா ஒண்ணா இருக்கோம். அறுபது மாசம் கூட உன்னால மீராவோட இருக்க முடியலையா?''

''முடியல... முடியப்போறதும் இல்ல...''

''ஏன் இப்படி முரட்டுப் பிடிவாதம் பிடிக்கறே கண்ணா? நீயும் மீராவும் மறுபடி ஒண்ணாயிட்டீங்கன்னு தெரிஞ்சாத்தான் பாட்டி மனசு சமாதானமாகும்.''

''கொஞ்சம் இருங்க, வந்துடறேன்...'' —கண்ணன் எழுந்து வெளியே வந்தான். கைக்குட்டையால் தன் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான். தன் உதவியாளனை நெருங்கினான்.

''உள்ள ஒரு பெரியவர் உக்காந்திருக்கார். அவர் வந்து கேட்டா நான் அவசர வேலையா வெளியே போயிட்டதா சொல்லிடு'' என்றான். அறைக்குள் திரும்பாமல் கம்பெனியை விட்டு வெளிப்பட்டான்.

ஃ ஃ ஃ

மீரா நேரம் பார்த்தாள். மணி ஒன்பது இருபது. வேன் வந்துவிடும். வாரப் பத்திரிகையும் டிபன் பெட்டியுமாக வாசலுக்கு வந்து நின்றாள்.

அந்த வீடு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஹாஸ்டல் அறையில் தொண தொணவென்று வாரிக்கொட்ட மாதவி

மேடம் இருந்தாள் என்றால், இங்கே 'ஹலோ' சொல்லக் கூட ஆள் இல்லை.

இஸபெல்லாவையும் தன்னுடன் தங்கச் சொல்லலாமா என்று முதலில் நினைத்தாள். இஸபெல்லாவின் இயல்பான வாழ்க்கை முறையைத் தொந்தரவு செய்ய வேண்டா மென்று அவளை விட்டுவிட்டாள்.

வேன் வரப்போகிறது என்று நினைத்திருந்த நேரத்தில் வேகமாக ஒரு ஆட்டோ வந்து நின்றது.

ஆட்டோவிலிருந்து அவளுடைய பாட்டி இறங்கியதைப் பார்த்தபோது திகைப்பும், ஆச்சரியமும், சந்தோஷமும், வருத்தமுமாக இருந்தது. ஓடிப்போய் பாட்டியைக் கட்டிப் பிடித்தாள்.

''பாட்டி! எப்படியிருக்கே பாட்டி?''

பாட்டிக்கு வாய் குழறியது. அழுகையில் குரல் நடுங்கியது.

''உங்க தாத்தாவுக்கு அட்டாக்குடி மீரா... ஆஸ்பத்திரில சேர்த்திருக்கு. உடனே உன்னைப் பாக்கணும் ங்றாரு... வருவியா?''

## 11

திருப்பத்தில் ஒரு பள்ளத்தில் ஆட்டோ சற்று சாய்ந்து நிமிர்ந்தபோது, கண்ணீரைத் துடைத்தபடி பாட்டி டிரைவரிடம் சொன்னாள்.

''தம்பி... என் பேத்தி வயத்துல குழந்தை இருக்கு. கொஞ்சம் நிதானமாகப் பாத்து ஓட்டு...''



''தாத்தாவுக்கு என்னாச்சு பாட்டி...?''— மீரா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

''உன்னைப் பத்திக் கேள்விப்பட்டு ரெண்டு பேரும் துடிச்சுப் போயிட்டோம் மீரா. 'மாப்பிள்ளையைப் பார்த்துப் பேசிட்டு வரேன்'னு பத்து நாள் முன்னால குடையை எடுத்துக்கிட்டு உங்க தாத்தா கௌம்பிப் போனாரு. மாப்பிள்ளை சரியா மதிச்சுப் பதில் சொல்லலை போலிருக்கு. தாத்தா ஓய்ஞ்சு திரும்பி வந்தாரு. அப்பலேர்ந்து ஒரே புலம்பல்...''— பாட்டி மூக்கை உறிஞ்சியபோது மூக்குத்தியின் வைரக் கற்கள் டாலடித்தன.

''தாத்தா எதுக்காக அல்லாடணும்...? வசந்தன் பேசிப் பாத்துட்டாரு... வசந்தனோட அப்பாகூட ஒரு நடை போய் எடுத்துச் சொல்லியிருக்காரு. கண்ணன் மனசு மாறுவார்னு தோணலை... நானே இப்ப அதை நெனைச்சு வருத்தப்படறதில்லை.''

''அப்படி விடமுடியலையேடி, கண்ணம்மா... உனக்கு நல்லது செய்யறதா நெனைச்சுக்கிட்டு, உங்கப்பனை மீறி உன்னை வெளியே அனுப்பினது தப்போன்னு ஒவ்வொரு நிமிஷமும் மனசு கெடந்து தவிக்குது. ரெண்டு நாள் முன்னால தாத்தா தேதி கிழிக்கப் போனவரு, அப்படியே மரம் மாதிரி சாய்ஞ்சுட்டாரு...'' —பாட்டியின் குரலில் தழதழப்பு இணைந்து கொண்டது.

''வலது பக்கம் கை அசையலை... கால் அசையலை... நாக்கு புரளமாட்டேங்குது. பேச்சு புரியல...பக்கவாதம்!''

பாட்டி, மீராவின் கைகளை இறுகப் பற்றி அழுத்தினாள்.

''இன்ஜெக்ஷன், மருந்து, ஸ்கேனிங்னு என்னென்னவோ நடந்துக்கிட்டிருக்கு...'' பாட்டி ரவிக்கைக்குள்ளிருந்து

தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். "உன்னைப் பாக்கணும்னு ஜாடை காட்டினாரு...நான் கெளம்பி வந்தது உங்கப்பாவுக்குக்கூடத் தெரியாது."

மீரா கண்களை மூடிக்கொண்டாள்.

"கடவுளே! இவர்கள் மடியில் படுத்து வளர்ந்தவள் நான். இவர்கள் ஊட்டக் கொடுத்துச் சாப்பிட்டவள். இவர்கள் சொல்லிக் கொடுத்துக் கற்றவள். அன்பைத் தவிர வேறெதுவும் புரியாத இவர்களை ஏன் என்பொருட்டு வாட்டுகிறாய்...?"

ஃ ஃ ஃ

மருத்துவமனை நவீனமாக இருந்தது.

"பிள்ளையாருக்குப் பூ வாங்கிப் போடு ஆயா..." என்று கேட்டருகில் மடக்கிய சிறுமியிடம் பேரம் பேசாமல் பாட்டி பூ வாங்கினாள்.

மருத்துவமனை விநாயகர் பூச்சரங்களின் பின்னே மறைந்திருந்தார். பாட்டி கொடுத்த பூவும் அவர் தோளில் ஏறியது.

காற்றில் ஆஸ்பத்திரி வாசனை. தரை வரை நீண்ட பச்சைத் திரைகள். துல்லியமான வெள்ளைநிறப் படுக்கைகள்.

தாத்தா அசைவின்றிப் படுத்திருந்தார். அவளறிந்து தாத்தா இப்படிப் படுத்துப் பார்த்ததேயில்லை. மீராவைத் துக்கம் வாட்டியது. நெஞ்சில் பாரம் கூடியது. தொண்டை அடைத்தது.

மீரா மெள்ளத் தொட்டாள்—மிக மென்மையாகத் தொட்டாள்.

தாத்தா கண்களைத் திறந்தார். இடது கண்ணில் அவரது சந்தோஷம் தெரிந்தது. அவர் கைகளைப் பற்றிய போது, சதையைத் தாண்டி எலும்புகள் தட்டுப்பட்டன.



"நல்லாயிருக்கியா...?" என்று அவர் கேட்டது உதடு கோணியதில், நாக்கு புரளாததில் என்னவாகவோ உருமாறியது.

மீரா அழுகையை வெளிப்படுத்தவில்லை. "என்னைப் பத்திக் கவலைப்படாதீங்க. நான் நல்லா இருக்கேன்..." என்று அவர் நெஞ்சைத் தடவினாள்.

தாத்தா முகத்தில் ஒரு திருப்தி குடிவந்தது. ஆயாசமாகக் கண்களை மூடிக்கொண்டார்.

தாத்தாவின் அறையை விட்டு மீரா வெளியே வந்த போது அவள் அப்பா வரதராஜன், பாட்டியின் அருகில் நின்றிருந்தார்.

குறுக்கில் சக்கரநாற்காலி ஒன்று கடந்துபோனது. எதையோ விவாதித்துக்கொண்டே இரண்டு டாக்டர்கள் நடந்துபோனார்கள்.

வரதராஜனின் கண்களுக்குக்கீழ் பிறை பிறையாகக் கறுத்திருந்தது. அவர் முகத்தில் களைப்பும் கவலையும் கூடியிருப்பதாக மீராவுக்குத் தோன்றியது.

"எப்படிப்பா இருக்கீங்க?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

அவர், பாட்டியைப் பார்த்து வெடுக்கென்று திரும்பினார். "இவ எப்படி இங்கே வந்தா?"

"நான்தாண்டா கூட்டிட்டு வந்தேன். அவர் தான் பேத்தியைப் பாக்கணும்னு ஆசைப்பட்டாரு..."—பாட்டி இறைஞ்சும் குரலில் சொன்னாள்.

"ஓஹோ... ஆஸ்பத்திரிலேர்ந்து நேரா இவ வீட்டுக்குப் போயிடறதா இருக்கீங்களா ரெண்டு பேரும்?"

"வரதராஜா என்னடா இப்படில்லாம் பேசறே? மீரா உன் பொண்ணுடா."

"எனக்குப் பொண்ணும் கெடையாது. பொண்டாட்டியும் கெடையாது. இருக்கறதெல்லாம் ரெண்டே உறவு தான். அப்பா, அம்மா. என்னைவிட பேத்திதான் முக்கியம்னா, அந்த உறவையும் அறுத்துக்க நான் தயாரா இருக்கேன்."

"கத்தியைப் பாய்ச்சற மாதிரி இப்படிப் பேசாதேடா."

"பாட்டி... விட்டுடு...எனக்காக நீங்க சண்டை போட்டுக்காதீங்க."

"நீ சும்மா இரு மீரா. ஏன்டா, இப்ப அவ நெலைமை என்னன்னு உனக்குத் தெரியுமா? நாதியத்து, தனி வீட்ல இருக்கா."

"அது, அவளா ஆசைப்பட்டுத் தேடிக்கிட்டது."

"உன் பேச்சை மீறிப்போனது தப்புதான்டா. அதுக்காக? மன்னிப்பே இல்லையா? கொறை பண்ணவங்களைக்கூட 'வாழு, போ'னு மன்னிச்சு விட்டுடறாங்களே. என்னவோ நடந்தது நடந்து போச்சு. அதுக்காக ஆத்தோட போறவளைக் கரையேத்தக்கூடாதாடா?"

"இப்படி வயித்தைத் தள்ளிக்கிட்டு வந்து நிக்கறாளே' பொறந்ததும் அதைத் தூக்கிக் குப்பைத் தொட்டில எறியச் சொல்லு. அவன் கட்டின தாலியை அறுத்து சாக்கடைல எறியச் சொல்லு. அப்புறம்தான் என்கிட்ட மன்னிப்புக் கேக்கறதுக்கே அவளுக்கு அருகதை வரும். எவ்வளவு பேரு என் மூஞ்சில காறித் துப்பியிருப்பான்? இவ்வளவு அவமானப்படறதுக்கு நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்...ம்...?"

இரண்டு வார்டுபாய்கள் சற்றுத்தள்ளி நின்று சுவாரஸ்யமாகப் பார்க்கத் தொடங்கினார்கள்.

மீரா, பாட்டியை நெருங்கி அணைத்துக் கொண்டாள்.



"பாட்டி, இப்ப தாத்தா இருக்கற நெலைமைல நீ அப்பாவோட இருக்கறதுதான் நல்லது. என்னைச் சேத்துக்கணும்னு இப்பப் போய் சண்டை போடாதே. நான் என்னைக் கவனிச்சுப்பேன். தாத்தாவைப் பாத்துக்கோ."

வரதராஜனைக் கடந்து போகுமுன், அவர் அருகில் ஒரு கணம் நின்றாள்.

"வரேம்ப்பா."

∴ ∴ ∴

மீராவின் அடிவயிற்றில் பூசிய ஜெல்லை, பஞ்சு கொண்டு துடைத்து எடுத்தாள் டாக்டர்.

"எல்லாம் கரெக்டா இருக்கு மீரா" என்றாள், புன்னகையுடன். "ஸ்கேன் பண்ணதுல நார்மல் டெலிவரிக்கு சான்ஸ் இருக்கும்னு தோணுது. அடுத்த மாசம் பதினஞ்சு தேதில டெலிவரி ஆயிடும்."

"சரி, டாக்டர்" மீரா தழைத்த புடவையைச் சீர் செய்துகொண்டு இறங்கினாள்.

வெளியே வசந்தன் காத்திருந்தான்.

"அடுத்த மாதம் பதினஞ்சாம் தேதியாம்" என்றாள் மீரா. அவனிடமிருந்து கைப்பையை வாங்கிக்கொண்டே.

"ஒண்ணாந்தேதிலேர்ந்து லீவு போட்டுடு."

"லீவு போட்டுட்டு...? வீட்ல தனியா உக்காந்து சுவத்து மூலையை முழிச்சு முழிச்சுப் பாத்துக்கிட்டிருக்கச் சொல்றியா? பதினாலாம் தேதிவரைக்கும் வரலாம்னு இருக்கேன்" என்று மீரா சிரித்தாள். காரில் ஏறினாள்.

கார் அலுங்காமல் ஓடியது.

''பாட்டிகூட போன்ல பேசிட்டிருக்கியா மீரா?'' என்று சாலையில் கண்களைப் பதித்தபடி கேட்டான் வசந்தன்.

''ம்...'' என்றாள் மீரா. ''அப்பா இல்லாத நேரம் தான் போன்லயே பேச முடியுது பாட்டியால! தாத்தாவுக்கு மெதுவாத்தான் குணமாயிட்டு இருக்காம். அவரை விட்டுட்டுப் பாட்டியால அந்தண்டை இந்தண்டை அசைய முடியலை, பாவம். கவனிச்சுக்கறதுக்கு விட்டோட ஒரு நர்ஸ் போட்டுக்கனு சொன்னாலும், புருஷனுக்குச் செய்யறதைவிட வேறென்ன வேலைனு பிடிவாதமா இருக்காங்க.''

வசந்தன் சின்னத் தயக்கத்துக்குப் பிறகு, ''மீரா...'' என்றான்.

''ம்...''

''டெலிவரி நல்லபடியா ஆனதும், தாயுமானவர் சந்நிதியில வேண்டிக்கிட்டதை மறந்துடக்கூடாது.''

''மறக்கலியே...'' என்றாள் மீரா.

சற்று நேரம் மௌனம். காரின் ரீங்காரம் மட்டும். பழைய நினைவுகள் சாகும்வரை யாரையும் விடுவதில்லை. ஒரு சொல், ஒரு காட்சி, ஒரு வாசனை—ஏதாவது ஒன்று போதும் பழசைக் கிளறுவதற்கு. வசந்தனுக்கு வருத்தமாக இருந்தது. காரில் நிலவிய மௌனம் ஒரு குற்றஉணர்வை ஏற்படுத்தியது.

மீராவுக்கு மேங்கோ மில்க் ஷேக் என்றால் பிடிக்கும் இந்த நேரத்தில் அதை வாங்கிக் கொடுக்கவேண்டும் போல் இருந்தது

ஒரு பழச்சாறு கடைக்கு முன்பாக காரை நிறுத்தி னான். மீரா, கடையைப் பார்த்துவிட்டு, வசந்தனைப் பார்த்தாள்.



''மேங்கோ மில்க் ஷேக்...'' என்றான் வசந்தன் புன்னகையுடன்.

மீரா மறுபேச்சின்றி, விருப்பத்துடன் காரிலிருந்து இறங்கியதைப் பார்த்ததும் அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

ஃ ஃ ஃ

''எல்லாம் நார்மலாக இருக்கிறது'' என் அத்தையிடம் போனில் சொன்னபோது, அத்தை போனிலேயே சற்று நேரம் விசித்தாள். மீரா, அத்தையைச் சமாதானப்படுத் தினாள். அத்தையால் அருகிலிருந்து கவனித்துக் கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம்.

''உடம்பைக் கவனித்துக்கொள், உடம்பைக் கவனித்துக் கொள்'' என்று அத்தை திரும்பத் திரும்பச் சொல்லி விட்டு, மனசே இல்லாமல் ரிசீவரை வைத்தாள். மீரா கடல் கடந்த ஒரு பிரதேசத்தில் இருக்கிற மாதிரியான ஓர் உணர்வு அத்தைக்கு.

கண்ணன் நாக்பூர் போயிருக்கிறானாம். இரண்டு மாத மாக ஊரில் இல்லை. பொதுவாகவே அவன் ஊரில் இருப்ப தில்லை என்று அத்தை சொன்னாள். கண்ணனைப் பற்றிச் சொல்லும் போது அத்தையின் குரல் செய்தி வாசிப்பவளின் குரல் போல் இருந்தது.

போனை வைக்கும்போது வாசலில் கார் வந்து நிற்கும் ஒலி கேட்டது.

மீரா ஜன்னலில் எட்டிப் பார்த்தாள். அம்பாஸடர் காரிலிருந்து வசந்தனின் அப்பா இறங்கினார்? வெள்ளை பாண்ட், வெள்ளைச் சட்டை.

முகம் மலர்ந்து கதவு திறந்து, ''வாங்க... வாங்க...'' என்று வாசல் விளக்கைப் போட்டாள்.

வாங்கி வந்த மாம்பழங்களை சிறு மேஜை மீது வைத்து விட்டு அவர் அமர்ந்தார். மீசையின் ஒன்றிரண்டு நரைகள் கூட அவருக்கு அழகாக இருந்தன.

"டாக்டர் அடுத்த மாசம் தேதி சொல்லியிருக்கறதா வசந்தன் சொன்னான். இந்த மாதிரி சமயத்துல தனியா இருக்கறது புத்திசாலித்தனம் இல்லேம்மா ... அத்தைகிட்ட சொன்னா, அவங்க வந்து..."

"இல்ல அங்கிள்...கண்ணன் ஊர்ல இல்லை. சுந்தரி யையா விட்டுட்டு..."

"அப்ப இப்படிப் பண்ணலாம்மா...நீ நம்ம வீட்டுக்கு வந்துடு. உனக்குத் தனியா ரெண்டு ரூம் கொடுத்துட றேன்..."

ஒரு சின்ன இடைவெளி விட்டு அவரே தொடர்ந்தார்.

"வசந்தனே கூப்பிட்டிருப்பாம்மா ... என்னதான் நெருக்கமாப் பழகினாலும் சில விஷயங்கள்ல தயக்கம் வந்துடுது. அதான், நான் கெளம்பி வந்துட்டேன் ... நாங்க எல்லோரும் இருக்கறப்ப, நீ எதுக்காகத் தனியா இருக் கணும்...? எப்ப வரே, சொல்லு...?"

அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் அன்பு குழைந் திருந்தது. கண்களில் கருணை மிகுந்திருந்தது.

மீராவின் இதயம் வெல்லப்பாகு போல் இளகியது. சங்கோஜம் காரணமாக ஓர் இறுக்கமும் முடிச்சிட் டிருந்தது.

"வேணாம் அங்கிள்...ஒரு பொண்ணுன்னா யாரை யாவது சார்ந்துதான் இருக்கணுமா..? அதனாலதான் ஆம்பளைங்களுக்கு அகம்பாவம் வருது. என்னால தனியா இருக்க முடியும்னு கண்ணனுக்குக் காட்டணும். எனக்குத் தனியா இருக்கறது பிடிச்சிருக்கு. தைரியமாத்தான் இருக்கேன்..."



மீரா சற்று படபடவென்று சொன்னாள்.

வசந்தனின் அப்பா முகத்தில் ஒரு கணம், ஒரே ஒரு கணம் புன்னகை நழுவிய மாதிரி தோன்றியது.

இவ்வளவு படபடப்பாகப் பேசி இருக்கக்கூடாது கண்ணன் மீது இருக்கும் கோபத்துக்கும் ஆற்றாமைக்கும் இவரிடமா வடிகால் தேடிக் கொள்வது...?

"நீ ஒண்ணும் அறியாத பொண்ணு இல்லம்மா ... எது புத்திசாலித்தனம்னு உனக்குத் தெரியாதா...? உன் இஷ்டப் படி செய்ம்மா..."

வசந்தனின் அப்பா புன்னகை குறையாமல் எழுந்தார். "ராத்திரில டெலிபோனைப் பக்கத்துல வெச்சுக்கிட்டே தூங்கும்மா... அவசரம்னா, தயங்காம எந்த நேரமாயிருந் தாலும் எங்களைக் கூப்பிடு..."

தோட்டத்துச் செடிகள் இளம் வெயிலின் மஞ்சளைப் பூசியிருந்தன. காற்றின் குளிர்ச்சி மாறி மெதுவாகச் சூடேறத் தொடங்கியிருந்தது. வண்டுகள் ரீங்காரத்துடன் அலைபாய்ந்து கொண்டு இருந்தன. ஒன்றிரண்டு பட்டாம் பூச்சிகள் அமர்வதும் பறப்பதுமாக பாண்டி விளையாடிக் கொண்டிருந்தன. இயற்கை ஆராதனை தொடங்கி இருந்த நேரம்.

மீரா நின்ற இடத்திலிருந்தே ரப்பர் குழாயை அழுத்தித் தண்ணீரைப் பீய்ச்சி, செடிகளை நனைத்துக் கொண்டிருந்தாள். வயிற்றுக் குழந்தை அவ்வப்போது தண்ணீரில் பந்தை உருட்டுவது போல் புரண்டது.

கேட் சத்தம் கேட்டது. மீரா திரும்பினாள். ஆச்சரியப் பட்டாள்.

சுந்தரி! சில புத்தகங்களை மார்போடு அணைத்தபடி கேட் திறந்து நுழைந்தாள்.

''வா சுந்தரி...'' —மீரா ரப்பர்குழாயை ஒரு செடியின் பாதத்தில் போட்டுவிட்டு, சுந்தரியைப் புன்னகையுடன் எதிர்கொண்டாள்.

சுந்தரி, மீராவின் முன்தள்ளி நின்ற வயிற்றைச் சற்று ஆர்வமும் சற்றுக் கூச்சமுமாக நுனிவிரல்களால் தொட்டுப் பார்த்தாள்.

''டெலிவரிக்கு இன்னும் எத்தனை நாளு...?'' என்று கேட்டாள்.

''பதினஞ்சு நாள். அத்தை எப்படியிருக்காங்க சுந்தரி?''

''எல்லோரும் நல்லா இருக்கோம். கண்ணன் ஊர்ல இல்லை. அம்மா சொன்னாங்களாமே...'' —சுந்தரியின் ஆர்வப் பார்வை மீராவின் வயிற்றிலிருந்து நகரவில்லை. ''வலியைக் கண்டு பயப்படக்கூடாது, தெரியும் இல்லையா...?'' என்றாள்.

''பயப்பட மாட்டேன். கவலைப்படாதே சுந்தரி... காபி சாப்பிட்றியா...?''

''தலைச்சன் பிரசவம்னா பதினாறு மணி நேரம்கூட வலி எடுக்கலாம். குழந்தை வெளியே வர்றதுக்காக, டைட்டா இருக்கற தசையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா விரிஞ்சு கொடுக்கறதுனாலதான் இந்த வலி...'' —சுந்தரி சொல்லிக்கொண்டே போனாள்.

பள்ளியிலிருந்து திரும்பிய குழந்தை பேசுவதைக் கேட்பதுபோல் மீரா, சுந்தரி பேசியதைக் கேட்டுக் கொண்டு நின்றாள்.

''என்ன மீரா முடிவு பண்ணினே...?'' என்றாள் சுந்தரி திடீரென்று.

''எதைப் பத்தி சுந்தரி...?''



சுந்தரி, மீராவின் வயிற்றைத் தொட்டாள். ''இதைப் பத்தி...'' என்றாள். ''அபார்ஷன் பண்ணிக்கறதா இருந்தேனு கேள்விப்பட்டேனே... கண்ணனும் வேண் டாம்... அவன் குழந்தையும் வேண்டாம்னு நெனைச்சுத் தானே டாக்டர்கிட்ட போனே...?''

மீராவின் புன்னகை நழுவியது. எங்கே இருந்து கேள்விப்பட்டுவிட்டாளாம்...? கண்ணன்தான் சொல்லி யிருப்பான்.

''உனக்கு வேண்டாம்னு முடிவு பண்ணிட்டா, குழந்தை யைத் தூக்கிப் போட்டுடாதே மீரா. என்கிட்ட கொடுத்துடு ப்ளீஸ்... கண்ணன் குழந்தை எங்கிட்ட வளரட்டும். ஒரு அம்மாவைவிட நல்லா பாத்துப்பேன். தருவியா...?''

சுந்தரி நெகிழ்ந்த குரலில் கேட்டாள்.

# 12

மீராவால் சுந்தரியின் கேள்வியைச் சட்டென்று புரிந்து கொள்ள முடியவில்லை.

கேள்வி புரிந்ததும், முதலில் எழுந்த உணர்ச்சி கோப மாக இருந்தாலும், சுந்தரி மீது ஒரு பரிவும் பரிதாபமும் மேலோங்கி அந்தக் கோபம் அடங்கியது.

சுந்தரியின் கூந்தலை வருடி மீரா அன்புடன் சொன் னாள் : ''இல்லையே சுந்தரி... நான் கண்ணனையும் வேண்டாம்னு சொல்லலை. இந்தக் குழந்தையையும் வேண்டாம்னு சொல்லலை. கண்ணன்தான் என்னை வேண்டாம்னு சொல்லிட்டாரு. குழந்தை எங்கிட்டதான் இருக்கும், கவலைப்படாதே.''

சுந்தரியின் முகத்தில் சின்ன ஏமாற்றமும் அந்த ஏமாற்றத்தை வெளியே காட்டாத ஒரு சாமர்த்தியமும் தென்பட்டன.

"வரேன் மீரா... வரேன் குட்டி...' என்று மீராவின் வயிற்றைத் தொட்டு விரல்களுக்கு முத்தமிட்டு விட்டு சுந்தரி புறப்பட்டுப் போனாள்.

ஃ ஃ ஃ

மற்ற ஒலிகள் எல்லாம் அடங்கி விட்ட இரவுப் பொழுதில் மீரா படுக்கையில் அசைந்த போது, கண்ணாடி வளையல்கள் கலகலத்தன.

வேணில் அவனோடு வரும் தோழிகள் அனைவரும் ஆசை ஆசையாக அவளுக்கு அணிவித்த வளையல்கள். அவர்களாகவே தீர்மானித்து, மீராவை ஆச்சரியப்படுத்தித் திடீரென்று வேணிலேயே நடத்தி வைத்த வளைகாப்பு அவனை ஆனந்தப்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் சந்தோஷத்தை அவள் கெடுக்க விரும்பவில்லை.

உண்மையில், திற்றப்படும் சந்தனத்திலும் கலகலக்கும் வளையல்களிலுமா சந்தோஷம் இருக்கிறது? அப்போது நீண்டும் அந்த விரல்கள் வழியே பாய்ந்தோடி வரும் அன்பிலும் நெருக்கத்திலும் அல்லவா வசியம் இருக்கிறது?

வளையல்கள் நொறுங்கி விடாமல் கையைச் சற்றுப் புரட்டிப் படுத்த போது மீராவின் அடிவயிற்றில் சுரீர் என்று ஒரு வலி புறப்பட்டது. முதுகெலும்பு முடியும் இடத்தில் இருந்து கீழ் வயிறு நோக்கி அந்த வலி அலை அலையாகத் தாக்கியது.

மீரா மிரண்டாள். வலி ஆரம்பித்து விட்டதா? டாக்டர் சொன்ன தேதிக்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறதே!



அப்பேர்ப்பட்டதொரு வலியை மீரா அதற்குமுன் அனுபவித்ததே இல்லை. வேதனையில் முகலட்சணம் மாறியது.

தட்டுத் தடுமாறி எழுந்தாள். வாசல்வரை சுவர் பிடித்து வருவதற்குள் இரண்டு முறை செத்துப் பிழைத்த மாதிரி இருந்தது. ஜன்னல் கதவைத் திறந்து டாக்ஸி ஏதாவது வருகிறதா என்று அபத்தமாகப் பார்த்தாள்.

அடுத்த முறை வலி தாக்கிய போது, பீதி எழுந்தது. கீழே விழுந்து தொலைத்துக் கதவைக் கூடத் திறக்க முடியாமல் போய் விட்டால்? மறுநாள் வேன் வரும்வரை யார் அவளைப் பற்றி நினைப்பார்கள்?

பீதி அவளைச் செலுத்தியது. படுக்கையறைக்குத் திரும்பினாள். படுக்கையில் அமர்ந்து பற்களைக் கடித்து வலியை அடக்கினாள்: பின்பு போனைத் தன் அருகில் இழுத்தாள்.

இரண்டாவது சிணுங்கலிலேயே வசந்தன் ரிஸிவரை எடுத்து விட்டான்.

"வசந்த்... தூங்கிட்டியா? வலி ஆரம்பிடுச்சுன்னு நெனைக்...ம்ஹ்ம்... நெனைக்கறேன். உன்னால வர முடியுமா?"

ஃ ஃ ஃ

மீரா களைத்த இமைகளை மெள்ளப் பிரித்தாள்.

ஜன்னலுக்கு வெளியே அதிகாலைப் பறவைகளின் கானம் கேட்டது. மருத்துவமனையின் நெடியை மீறி, பூக்களின் நறுமணம் காற்றில் கலந்து இருந்தது.

அவளுக்குப் பக்கத்தில் மொக்கு படுக்க வைக்கப்பட்டிருந்தது. சுருக்கங்கள் நிறைந்த உடம்புடன், இமைகளை

இமைக மூடியிருந்த அந்தப் பிஞ்சுக்கு அவளுடைய உணர்ச்சிகள் ஏதும் புரியப் போவதில்லை.

முந்தின இரவு அவளை மட்டும் உள்ளே அனுமதித்து வசந்தனை வெளியே நிற்கச் சொல்லி விட்டது மருத்துவமனை.

"நான் இங்கேயே வெளியதான் இருப்பேன். பயப்படாம போ" என்று வசந்தன் அவள் விரல்களை அழுத்திக் கொடுத்து அனுப்பினான்.

இப்போது மீராவுக்கு அவன் முகத்தைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அவளுக்கு அப்படித் தோன்றிய நேரம்... வசந்தன் உள்ளே நுழைந்தான்.

"ஹாய்..." என்றான். பிளாஸ்க்கை அருகில் வைத்து. "இந்தப் பெரிய வாலுக்கு இப்ப ஒரு குட்டி வால் முளைச்சிருக்கு பார்த்தியா?"

அவனுடைய உறக்கமற்ற கண்கள் சிவந்திருந்தன.

"ராத்திரி பூரா வெளிய நின்னியா வசந்த்?"

"இல்லையே...பெஞ்ச் போட்டிருக்காங்களே...?" என்று சிரித்த வசந்தன், "அத்தைக்குச் சொல்லியாச்சு. உங்க பாட்டிக்குச் சொல்லியாச்சு. கண்ணனுக்குக்கூட மெஸேஜ் அனுப்பிட்டேன்...ஏய்...பைத்தியம். எதுக்குக் கண் கலங்கறே?" என்று கேட்ட வசந்தன், "குட்டி... உங்கம்மாவை மொதல்ல னொய்...னொய்னு கண்ல தண்ணி விடறதை நிறுத்தச் சொல்லுடா...மீரா... பையன் மூணு கிலோவுக்கு மேல். பாரேன்... ஏதோ ரகசியத்தை வெச்சிட்டிருக்கற மாதிரி கையை எப்படி இறுக்கி மூடி வெச்சிருக்கான் பார்... யப்பா... நீளம் நீளமா நகம்..." என்றான்.

"வசந்த்..." மீராவின் குரல் உடைந்திருந்தது.



வசந்தன் 'என்ன' என்று கேட்கும் முன்பே, அவன் கையைத் தன் இரு கைகளுக்குள்ளும் பொத்தி நெற்றியில் அழுத்திக் கொண்டாள். காற்றும் அழுகையும் வார்த்தைகளுமாகக் கேட்டாள்:

"கடைசிவரைக்கும் என்கிட்டே இப்படியே இருப்பியா வசந்த்? இப்ப இருக்கற பரிவு கொறையாம இருப்பியா..."

வசந்தன் அவள் கைகளுக்குள் பொதிந்திருந்த தன் கையால் ஆறுதலாக அழுத்திக் கொடுத்தான். வார்த்தைகளற்ற அந்த மறுமொழியே மீராவுக்குப் போதுமானதாக இருந்தது.

ஃ ஃ ஃ

மீரா கண்களை மூடியிருந்தாள்.

"மீரா..."

காதருகில் ஒரு குரல் கிசுகிசுத்தது

மீராவுக்குள் உயிர் புரண்டது. கண்ணன் குரல் அல்லவா இது?

டெலிவரி ரொம்ப வலிச்சுதாடா?"

திறக்க முடியாதபடி இமைகள் கனத்தன.

"மீரா... நம்ம பையனைப் பாத்தியா? அச்சு அசலா என்னை மாதிரியே இருக்கான் இல்ல? என்ன பேரு வெக்கப் போறே?"

கண்ணன்தான்! கண்ணனேதான்!

கண்ணா, இரு. இதோ கண்ணைத் திறந்துவிடுகிறேன். அதற்குள் கோபித்துக்கொண்டு காணாமல் போய்விடாதே!

மீராவின் உடல் சற்றுத் தூக்கிப் போட்டது, இமைகளை முயற்சியோடு பிரித்தாள்.

காற்றுதான் இருந்தது. கண்ணன் இல்லை.

கண்ணன் இல்லாததை ஒப்புக்கொள்ள முடியாமல் சற்று நேரம் விழிகள், இடதும் வலதும் நேரும் பின்னுமாகச் சுழன்று அவனைத் தேடின.

ஆஸ்பத்திரியின் இரும்பு ஸ்டாண்ட்களும் வெள்ளை வர்ணம் பூசப்பட்ட இரும்பு ஸ்டூல்களும் மாத்திரைப் புட்டிகளும் பிளாஸ்க்கும் மட்டுமே பார்வையில் தட்டுப்பட்டன. கண்ணன் இல்லை

மீராவின் மீது உண்மை பாரமாக இறங்கியது.

கண்களை மறுபடி மூடினாள். எண்ணங்கள் தாறுமாறாக எங்கெங்கோ தறிகெட்டு ஓடின.

அவள் புறங்கையை விரல்கள் தொட்டன.

இந்த முறை ஏமாறமாட்டேன்.

"மீரா... மீராம்மா..."

கண்ணனின் குரல் இல்லை. இது... இது...

மீரா கண்களைத் திறந்தாள்.

"எப்படிம்மா இருக்கே?" என்று புன்னகை முகத்துடன் வசந்தனின் அப்பா நின்றிருந்தார்.

"நல்லபடியா பொறக்கணும்னு வேண்டிட்டிருந்தேம்மா. இப்பக் கோயில்லேர்ந்துதான் வரேன்..."

காகிதப் பொட்டலம் பிரித்து திருநீற்றை அவள் நெற்றியில் இட்டார்.

"உனக்காகப் பத்தியக் கொழம்பு வெச்சுக் கொண்டு வந்திருக்கோம்மா, இப்ப சாப்பிடறியா, இன்னும் கொஞ்ச நேரம் போகட்டுமா? நார்மல் டெலிவரிதானே? நீ சாப்பிட ஆரம்பிக்கலாம்... சாப்பிடணும்..."



மீரா அவரைப் பிரமிப்புடன் பார்த்தாள்.

"ஏம்மா? ஆம்பளையாச்சே, இதெல்லாம் எப்படித் தெரியும்னு பாக்கறியா? சுத்துக்க முடியாதது இந்த உலகத்துல என்னம்மா இருக்கு?"

அவர் கால்களைப் பற்றி, அவர் பாதங்களில் தலையைப் பதித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது மீராவுக்கு. அம்மா இருந்திருந்தால்கூட இவ்வளவு ஆசையாக இருந்திருப்பாளா என்று யோசனையாக இருந்தது.

"இனிமே நீ சந்தோஷமா இருக்கணும்மா... குழந்தை பொறந்தபோது கெடைச்ச சந்தோஷத்தை, நீ வேற எப்பவாவது அனுபவிச்சிருக்கியா? இப்படித்தாம்மா நமக்கு அறிமுகமாகாத சந்தோஷம் எத்தனையோ இந்த உலகத்துல இருக்கு. கைநழுவிப் போனதையே நெனைச்சுக்கிட்டு சோகமா உக்காந்திருக்கறதுல என்ன அர்த்தம் இருக்கு?"

மீராவுக்கு அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்று புரிந்தது.

"வசந்தன் எங்கே?" என்றாள்.

"கண்ணனோட அத்தை இங்க வரணும்னு ஆசைப் பட்டாங்களாம் கூட்டிட்டுவரப் போயிருக்கான்..."

நர்ஸ் ஒருத்தி வந்தாள். அவரைச் சற்று நேரம் வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, மீராவின் ஆடையை மாற்றிக்கொண்டிருந்த நேரம்... அறைக்கு வெளியே அத்தையின் குரல் கேட்டது.

ஃ ஃ ஃ

மீராவைப் பார்த்ததும் தாய்ப்பசுபோல் சிலிர்த்தாள் அத்தை. அவளுடைய நெற்றி, கன்னங்கள், கழுத்து, கூந்தல் என்று மௌனமாக நெறிது நேரம் வருடிக் கொடுத்தாள்.

துணியைச் சற்று நகர்த்தி, குழந்தையின் முகம் பார்த்தாள். கண் விளிம்புகளில் திரண்ட நீர் முத்துக்களை உதறினாள். குழந்தைக்கு வாங்கி வந்த புதிய சட்டைகளை மீராவிடம் கொடுத்தாள்.

"நீ கொடுத்து வெச்சவ மீரா. உன்னைக் கவனிச்சுக்கத் தங்கமான மனுஷங்க இருக்காங்க..." என்று வசந்தனையும் அவன் அப்பாவையும் கனிவும் நன்றியுமாகப் பார்த்தாள்.

"நீங்க கூடவே இருந்து கவனிச்சுக்கறீங்கன்னு தெரிஞ்சப்பறந்தான் எனக்குக் கொஞ்சம் ஆறுதலா இருந்தது" என்று வசந்தனின் அப்பாவிடம் சொன்னபோது, அத்தைக்கு தொண்டை அடைத்துக் கொண்டது. வசந்தனின் கையைப் பற்றினாள்.

"என்னை வீட்ல விட்டுடறியா வசந்த்!"

கண்ணன் என்ற ஒரு உறவு தளர்ந்து போனதால், எத்தனை இனிய உறவுகள் தன்னோடு இருக்கமாகின்றன என்று தோன்றியது மீராவுக்கு.

நெஞ்சம் ஆனந்தத்தால் வலித்தது.

ஃ ஃ ஃ

"டிஸ்சார்ஜ் ஆனதும் தனியாத்தான் இருக்கப் போறியா?" என்றாள் ராஜி.

வேலை தோழிகள் அத்தனை பேரும் ஒன்றாகப் புறப்பட்டு அவளையும் குழந்தையையும் பார்க்க மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள்.

"ம்..." என்றாள் மீரா.

ஜெயமணி குழந்தையிடம் ஒற்றை விரலைக் கொடுத்து, அதன் பிஞ்சு நகங்கள் பதியும் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.



"கைக்குழந்தையை வெச்சுக்கிட்டு தனியா சமாளிக்கறது கஷ்டம் மீரா. வீட்டோட ஒரு வேலைக்காரி போட்டுக்கோயேன்..." என்றாள் காயத்ரி.

மீராவுக்கு சற்று யோசனையாகத் தான் இருந்தது. பிரசவ விடுப்பு முடிந்து மீண்டும் அலுவலகம் போகத் துவங்கும்போது, அவள் என்ன செய்யப்போகிறாள்? வயிற்றுக்குள் இருந்தவரை போகும் இடமெல்லாம் குழந்தையைச் சுமந்துபோவது என்பது சுலபமாக இருந்தது. யாருடைய தயவும் வேண்டி இருக்கவில்லை.

"இல்லேன்னா... என் குழந்தையோட சேர்த்து உன் குழந்தையையும் எங்கம்மா பார்த்துக்கிட்டுப் போறாங்க. என்ன சொல்றே?" என்றாள் சித்ரா.

எப்படி... எல்லோருமே சொல்லி வைத்துக் கொண்டாற்போல், அவளிடம் பரிவை வாரிக் கொட்டுகிறார்கள்?

"எங்க தெருவுல ஒரு அம்மா இருக்காங்க. குழந்தையை ரொம்ப அருமையா பாத்துப்பாங்கனு சொல்வாங்க, அவங்களை ஏற்பாடு பண்ணட்டுமா?" என்று ஜெயமணி நிமிர்ந்தாள்.

"அனுப்பிவையேன் ஜெயமணி. நான் லீவுல இருக்கறபோதே சரியா வருமான்னு பார்த்துடறேன்..." என்றாள் மீரா.

ஃ ஃ ஃ

அபிராமிக்கு மீராவைவிட நாலைந்து வயதுதான் அதிகம் இருக்கும். சிரித்தால் மேல்வரிசைப் பற்களுடன் ஈறும் சேர்ந்து தெரியும். அதனாலேயே முகத்தில் ஒரு வெகுளித்தனம் கூடிவிடும். இரண்டு மூன்று இடங்களில் தையல் போட்டிருந்தாலும் பருத்திப்புடவை பளிச்சென்று இருக்கும். கழுத்து மடிப்பிலோ, விரல் நகத்திலோகூட அழுக்கு இல்லாமல் சுத்தமாக இருக்கும்.

அவள், குழந்தையை வெகுநாள் பழகியவளைப் போல மிக எளிதாகக் கையாண்டாள். குளிப்பாட்டுவது, பவுடர் பூசுவது, உடை மாட்டுவது என்று அத்தனையும் நறுவிசாகச் செய்தாள்.

தனிமை, தனிமை என்று யாருமற்ற சூழ்நிலையில் சிறிது காலம் பழக்கப்பட்டிருந்த மீராவுக்கு, அபிராமியின் வரவு மிகப்பெரிய ஆறுதலாக இருந்தது. அவளை அனுப்பி வைத்த ஜெயமணிக்கு நன்றி சொல்லத் தோன்றியது.

வயதில் இளையவளான மீராவை அக்கா என்றுதான் அழைப்பாள் அபிராமி.

"அக்கா... காலைல எட்டு மணிக்கெல்லாம் வந்துடறேன். தாய்ப்பால் மட்டும் நீங்க பாத்துக்குங்க. மத்தபடி நீங்க ஆபீஸ்லேர்ந்து வர்றவரைக்கும் பாப்பா என் பொறுப்பு... சொல்லு ராஜா அம்மாகிட்டே...!"

லீவை ரத்து செய்துவிட்டு அலுவலகம் போக ஆரம்பிக்கலாமா என்றுகூட மீராவுக்குத் தோன்றிவிட்டது. இன்னும் இரண்டு மாதம் போகட்டும்.

அபிராமியிடம் ஒரே ஒரு அம்சம் மட்டும் பிடிக்காமல் இருந்தது. வேலைக்குச் சேர்ந்து இருபது நாட்கள் ஆவதற்குள் மூன்று முறை சம்பள அட்வான்ஸ் என்று வாங்கி விட்டாள்.

இரண்டு மாதம் முடிந்தபோது கிட்டத்தட்ட ஐந்து மாதச் சம்பளம் அவள் பக்கம் போயிருந்தது.

"புருஷன் கூலிப்பணத்தைக் குடிச்சுட்டுத்தாம்மா வருவான். அஞ்சு வயசுல நொண்டிப்புள்ள வேற இருக்கான்..." என்று மீராவின் மனசை இளகவைத்து காசு வாங்கிப் போய்விடுவாள்.

அபிராமியையும் குழந்தையையும் தனியே விட்டு விட்டு, அக்கம் பக்கம் கடைத் தெருவுக்குப் போகுமளவுக்கு மீராவுக்குத் தைரியம் வந்திருந்த ஒரு பகல் பொழுது...



காய்கறி வாங்கிக்கொண்டு மீரா திரும்பினாள். கதவு தொட்டதும் திறந்தது.

ரவிக்கை நனைய ஆரம்பித்திருந்தது. குழந்தைக்குப் பசிக்கத் தொடங்கி இருக்கும்.

மீரா, "அபிராமி!" என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தாள். ஹாலில் இல்லை. படுக்கையறையில் நுழைந்ததும் திடுக்கென்றது.

பீரோ திறந்திருந்தது. லாக்கர் திறந்திருந்தது. பதறியடித்துக்கொண்டு போய் பார்த்தாள். அவளுடைய நகைகள், பாட்டி கொடுத்த வைர நெக்லஸ்...பணமாக வைத்திருந்த நான்காயிரத்துச் சொச்சம் எல்லாம் துடைக்கப்பட்டிருந்தது.

"அபிராமி!"

பதில் இல்லை. நிசப்தம் அடிவயிற்றில் கத்தியைப் பாய்ச்சியது.

ஐயோ.. என் குழந்தை எங்கே?

## 13

மீராவுக்குப் பீதியில் சில கணங்கள், இயக்கமற்றுப் போனதுபோல் இருந்தது.

குழந்தையை அபிராமி என்ன செய்தாள்? எங்கே போய்விட்டாள் அவள்?

"அபிராமி!" —குரல் உடைந்து இரைச்சலாக வெளிப்பட்டது.

மீரா தீப்பற்றிக்கொண்டவன் போல் ஓடினான். இந்த அறையிலிருந்து அந்த அறை. அந்த அறையிலிருந்து அடுத்த அறை. கடைசியாகச் சமையலறை!

சமையலறையில் —ஈரம் துடைக்கும் பழைய துணி மீது குழந்தை படுக்க வைக்கப்பட்டிருந்தது. நடந்த விபரீதம் புரியாமல் கைகால்களை உதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

மீரா பாய்ந்து குழந்தையை அள்ளி எடுத்தான். குழந்தையின் உடலெங்கும் மீராவின் கண்ணீரும் உதட்டு ஈரமும் நனைத்தன.

இத்தனை நேரம் ஆட்டுவித்துக் கொண்டிருந்த பயம் விலகி இப்போது அங்கே கோபமும் ஆத்திரமும் பெருகின.

''அபிராமி!'' என்று அடித் தொண்டையில் கத்தினான். பதில் இல்லை.

குழந்தையை ஏந்தி அணைத்தபடி தொலைபேசியை நோக்கி வேகமாக நடந்தான்.

* * *

கால்வாயை ஒட்டியிருந்த அந்தக் குடிசைப்பகுதியில் போலீஸ் ஜீப் வந்து நின்றது. வசந்தன் இறங்கினான். பின்னாலேயே இரண்டு கான்ஸ்டபிள்கள் குதித்தார்கள்.

கான்கிரீட் தூணை மோதி மோதி பூமியைத் துளைத்து அனுப்பிக் கொண்டிருந்த ராட்சத இயந்திரத்தின் பின்னணி ஒலி. கொட்டிக் குவித்திருந்த ஜல்லிக்கற்கள் மீது சட்டை அணியாத குழந்தைகளும் நாய்க்குட்டிகளும் விளையாடின.

வசந்தனைப் பார்த்ததும் அபிராமி ஓடிவந்து அவன் கால்களில் விழுந்தாள். கண்ணீர் அருவியாகக் கொட்டியது-



''பெரீபாளையாத்தா சத்தியமா நான் எந்தத் துரோகமும் பண்ணலைப்பா. எம் புருஷன்தான் பகல்லேயே குடிச்சுட்டு வந்து மீராம்மா ஊட்ல பூந்துட்டான். கொழந்தையைப் புடுங்கறானே பாவின்னு பயந்துபோய்த் தான் பீரோ சாவி இருக்கற எடத்தைக் காட்டிக் கொடுத்துட்டேன். கொழந்தைக்கு எதுவும் ஆயிடக்கூடாதுன்னு தான் அதை அப்படியே வுட்டுட்டு அவம்பின்னாலேயே ஓடிட்டேன்யா...''

அபிராமியின் கணவனை கான்ஸ்டபிள்கள் குடிசையிலிருந்து அள்ளி வந்தார்கள். ''மேய்... விடுங்கடா என்னை...'' என்று சக்தியில்லாத கையையும் காலையும் உதைத்துக் கொண்டே வந்த அவன், ஜீப்பில் உந்தி ஏற்றப்பட்டான்.

* * *

''நகையெல்லாம் கரெக்டா இருக்கு. பணத்துலதான் ஐந்நூறு ரூபா கொறையுது. போகட்டும் விடுங்க'' என்றான் மீரா ஆயாசமாக.

'வேலைக்காரி பேர்ல புகார் கொடுத்தது?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''வாபஸ் வாங்கிக்கறேன்'' என்றவன் அபிராமியின் பக்கம் திரும்பினான். ''இனிமே நீ என் வீட்டுக்கு வர வேணாம். உன்னை நம்பி என் குழந்தையை இனிமே விடறதா இல்லை...''

அபிராமி அவன் கால்களில் விழப் பார்த்தபோது, நகர்ந்துகொண்டான்.

வசந்தன் போலீஸ் சம்பிரதாயங்களையெல்லாம் முடித்துக்கொண்டு வரும்வரை மீரா வெளியே அவன் காரில் காத்திருந்தான்.

* * *

அன்று மாலையே மீராவுக்குச் சரியான காய்ச்சல் வந்துவிட்டது. கண்களுக்குள் அனல் அடித்தது. தொண்டை வறண்டு, நாவில் காய்ச்சலின் வெப்பத்தை உணர முடிந்தது.

பயம்தான் காரணம்!

சாயங்காலம் வீட்டுக்கு வந்த வசந்தன், அவளுடைய நிலை கண்டு பதறிப்போய் டாக்டரிடம் கூட்டிப்போனான்.

மருத்துவர் கவலைப்பட்டார். "குழந்தை உங்ககிட்ட பால் குடிக்குதும்மா. நீங்க கவனமா இருக்கணும்" என்று மாத்திரை எழுதிக் கொடுத்தார்.

மருந்து வாங்கி, அவளை வீட்டில் கொண்டுவந்து சேர்த்துவிட்டு, எதையும் சொல்லாமல், எதையும் காட்டிக் காட்டாமல் வசந்தன் புறப்பட்டுப் போனான்.

காய்ச்சல் அடங்கி, உடலில் களைப்பு குறைந்து விட்டது. ஆனால், மனதில் இருப்புக்கொள்ளாத ஒரு கவலையும் சுயகோபமும்.

கொல்லைப்புறத் தோட்டத்துக்கு வந்தாள். தோளோடு அணைக்கப்பட்ட குழந்தை பூ பாரமாகத் தூங்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் நோக்கினாள்.

அவள் வீடு. அவள் தோட்டம். திறந்தவெளி. ஆனா லும், ஒரு கூண்டுக்குள் மாட்டியிருப்பதுபோல் உணர்ந்தாள்.

எந்தக் கௌரவத்தை யாரிடம் நிலைநாட்டுவதற்காக அவள் தனிமையைத் தேர்ந்தெடுத்தாள். விடுதலை என எண்ணி, அவளே சுயமாக சிறையில் பூட்டிக்கொண்ட தற்குப் பெயர் புத்திசாலித்தனமா?

எங்கோ ஒரு சிம்மாசனத்தில் உட்கார்ந்துகொண்டு யாரை ஆட்சி செய்யப் பார்க்கிறாள்? வசந்தனையா?



என்னை செக்கப்புக்கு டாக்டரிடம் அழைத்துப் போ...

எனக்கு ஆஸ்டல் வேண்டாம். விடு பார்.

எனக்கு வலி எடுக்கிறது, ஓடி வா!

என் வீட்டில் திருடு போய்விட்டது. உடனே வா.

எனக்குக் காய்ச்சல் அடிக்கிறது. டாக்டரிடம் கூட்டிப் போ.

ம்ஹூம் ..இது சரியில்லை.

மீரா தீர்மானித்தாள். வீட்டுக்குள் திரும்பினாள். சமையலறை சுரத்துணியைப் பார்த்தபோது, அவசிய மில்லாமல் குழந்தையை கை பத்திரப்படுத்தியது.

தொலைபேசியை அணுகினாள்.

டயல் செய்து முடித்ததும் மறுமுனையில் வசந்தனின் அப்பா குரல் கேட்டது.

"எப்படிம்மா இருக்கே? காய்ச்சல் குறைஞ்சுதா?"

"அங்கிள்..."—மீரா உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள். "நீங்க மொதல்ல சொன்னபோது, முட்டாள் தனமா மறுத்துட்டேன். இப்ப சூடுபட்டதும்தான் புரியுது. உங்க வீட்ல எனக்கு ரெண்டு ரூம் தரேன்னு சொன்னீங் களே... நான் எப்ப வரலாம்?"

அவர் குரல் சந்தோஷத்தோடும் கனிவோடும் உடனே ஒலித்தது. "இப்பவே வரலாம்மா. வசந்தனை உடனே அனுப்பறேம்மா..."

ஃ ஃ ஃ

நகரத்திலிருந்து சற்று ஒதுங்கியிருந்த வசந்தனின் வீட்டில் காற்று சுத்தப்படுத்தப்பட்டது போல் மூச்சுக்கு

ஆறுதலாக இருந்தது. வெற்று நீரில் இளநீரைக் கலந்தது போல் ஒரு சுவை.

"ஒரு பேச்சுக்குத்தாம்மா உனக்கு ரெண்டு ரூம்னு சொன்னேன். அதுக்காக அந்த நாலு சுவத்துக்குள்ளதான் முடங்கிக் கெடக்கணும்னு நெனைக்காதே. வீடு முழுக்க உன்னோடதுதான்" என்று வசந்தனின் அப்பா பொய்யற்ற குரலில் சொன்னபோது மீராவின் இதயம் நெகிழ்ந்தது. ஊற்றெடுத்த கண்ணீரை மிகச் சிரமப்பட்டு அடக்கினாள்.

காலையில் அவள் எழுந்திருக்கும்போது கிணற்றடியில் தண்ணீர் தயாராக இருக்கும்.

"கிச்சன் பொறுப்பு என்னோடது" என்று மீரா சொன்னபோது, மென்மையாக அதையும் அவர் மறுத்தார்.

"பாப்பா உன்னை நம்பியிருக்கும்மா. அடுப்படியில் ரொம்ப நேரம் இருந்தா பால் 'வத்திப்போயிடும்னு சொல்வாங்க. இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்!"

ஒரு இளம்தாய் தவிர்க்க வேண்டிய உணவு வகைகளை அந்த வீட்டிலேயே செய்வதில்லை என்பதை அவள் கவனித்தாள்.

'நான் இல்லேன்னாலும் வொர்க்ஷாப் வேலை நடக்கும். நீ ஆபீஸ் போகலாம்னா. நான் சும்மாத்தான் இருக்கேன். பாப்பாவைச் சந்தோஷமாப் பாத்துப்பேன்."

வசந்தனும் ஆபீஸிலிருந்து திரும்பியதும் குளித்துவிட்டு முதல் வேலையாகக் குழந்தையைத் தேடி வந்துவிடுவான்.

குழந்தையின் தலைக்கு ஆதாரமாக அதன் கழுத்துக்குப் பின்னால் உள்ளங்கையைப் பதித்து, அவன் தொட்டிலில் இருந்து எடுத்து முகரும் அழகை மீரா வியப்பாள். தூளியில் போட்டு மெல்லிய ராகத்தை இழுத்து அவன் அதை உறங்கவைப்பதை ரசிப்பாள். அவன் மடியி



லேயே அது ஈரம் செய்தாலும் அசிங்கம் செய்தாலும் அதையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வதைப் பிரமிப்பாள்.

சில சந்தர்ப்பங்களில் அவளிடம் வீறிட்டு அழும் குழந்தை, வசந்தனின் கைகளுக்குப் போனதும் சட்டென்று அடங்கி சமாதானமாவது கண்டு மீரா ஆச்சரியப்பட்டாள்.

அவள் விடுப்பை முடித்துக் கொண்டு அலுவலகம் போகத் தொடங்கியபின் ஒருநாள் வசந்தனின் அப்பா அவள் அறை வாசலில் தயங்கி நின்றார்.

"என்ன மாமா?" என்று கேட்டாள் மீரா. அழைப்பில் அந்த அந்நியோன்யம் எப்போது, எப்படி வந்தது என அவளுக்கே தெரியவில்லை.

"மீரா. வெள்ளிக்கிழமை நாள் நல்லாயிருக்கு. அன்னிக்கு குழந்தைக்குப் பேர் வெக்கலாம்னு தோணுது."

"சரி, மாமா..."

"உன் உறவுக்காரங்க, நெருக்கமான ஃப்ரெண்ட்ஸையெல்லாம் கூப்பிடலாம்?"

"உங்களை விட்டா உறவுக்காரங்க வேற யார் மாமா எனக்கு இருக்காங்க?"

"அப்படிச் சொல்லாதேம்மா. கண்ணனோட அத்தையைக் கூப்பிடணும். கண்ணனைக்கூட வரச் சொல்லணும்மா. அறுந்து போச்சுன்னு நெனைச்ச எத்தனையோ உறவுகூட குழந்தைகளால ஒண்ணு சேர்ந்திருக்கும்மா."

மீரா பதில் எதுவும் சொல்லவில்லை.

ஃ ஃ ஃ

வசந்தனைப் பார்த்ததும் கண்ணனின் முகத்தில் நூறு உணர்ச்சிகள் ஒன்று மாற்றி ஒன்று இடம் பிடிக்கப் பார்த்தாற்போலிருந்தது. "வா... டா..." என்றான்.

கண்ணனின் அலுவலக அறையின் குளிரூட்டப்பட்ட காற்றில் மலர்களின் மணம் கலந்திருந்தது. வசந்தன் மூச்சை இழுத்து அதை அனுபவித்தான்.

தன்னுடன் கண்ணனுக்கு நேரடியான பிணக்கு இல்லை என்றே வசந்தனுக்குத் தோன்றியது. ஆனாலும், முன்னர் காற்று மட்டுமே இடைவெளியாக இருந்த நட்பில் இப்போது காட்டுமுட்களால் தைத்த திரை ஒன்று அவர்களுக்கு நடுவில் இழுக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றியது.

''அப்பா எப்படியிருக்காரு?'' என்றான் கண்ணன் உலர்ந்த குரலில்.

''அப்பா, மீரா, குழந்தை எல்லோரும் நல்லா இருக்காங்க...' என்றான் வசந்தன்.

''இந்த வெள்ளிக்கிழமை உன் கொழந்தைக்குப் பேர் வெக்கறதா இருக்கு கண்ணா. வந்துடு...''

கண்ணன் முகத்தில் மறுபடியும் உணர்ச்சிகளின் போராட்டம். அவசியமில்லாமல் கைக்குட்டையால் முகம் துடைத்தான். கண்ணாடி தம்ளர் தண்ணீரைக் குடித்தான்.

''என்ன பேர் வெக்கப்போறீங்க?'' என்றான் வலிய ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு.

''கௌதம்'னு மீரா சொன்னாள்... பிடிச்சிருக்கா?''

''ம்...''

''கண்ணா... கிளம்பட்டுமா?''

அவர்களுடைய சந்திப்பு எதுவும் இவ்வளவு குறைபட்ட ஆயுளுடன் இருந்ததில்லை.

''அப்பாவை விசாரிச்சதா சொல்லு...'' என்று கூறி, வசந்தனை அறைக்கதவு வரை வந்து வழியனுப்பினான்.



மீராவைப் பற்றியோ, குழந்தையைப் பற்றியோ விசாரிக்கவில்லை. தயங்குகிறான் என்று வசந்தனுக்குத் தோன்றியது.

ஃ ஃ ஃ

வீடு கல்யாணப்பெண் போல் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

வண்ணக் காகிதத் தோரணங்கள் காற்று இழுத்த இழுப்புக்கெல்லாம் வாலாட்டின. ஜிகினாப் பின்னல்கள் சுழன்று சுழன்று மாயாஜாலம் செய்தன. மல்லிகைச் சரங்களும் கதம்பச் சரங்களும் வாசம் பரப்பித் தங்களை அறிவித்துக் கொண்டன.

வசந்தனின் அப்பாவுக்கு இரண்டு நாட்களாக அதே வேலை. இப்போதும் சமையலறையில் கேசரி அல்வாவை நெய்மணத்தோடு அவர்தான் கிளறிக்கொண்டு இருந்தார். சுற்று வேலைகளைச் செய்தால் போதும் என்று மீராவை உரிமையோடு அதட்டித் துரத்திவிட்டார்.

கூடத்தின் மையத்தில் தொட்டிலில் குழந்தை படுத்திருந்தது. சாவி கொடுத்தால் சுற்றும் பிளாஸ்டிக் ராட்டினத்தைப் பார்க்கப் பார்க்க, அதன் ஒளிவீசும் கண்களில் ஒரு பரபரப்பு. கைகளையும் கால்களையும் உதைத்த வேகத்தில் அதை எட்டிப் பிடித்துவிடுவது போன்ற அவசரம்.

வருபவர்கள் உட்காரப் பாய் விரித்துக் கொண்டிருந்த போது, வாசலில் தபால்காரனின் குரல்.

மீராவின் பெயருக்கு மணியார்டர் வந்திருந்தது.

நடுங்கும் கையெழுத்தில் பாட்டி ஆசீர்வாதங்களை அனுப்பியிருந்தாள். தாத்தா படுக்கையிலிருந்தே தன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக எழுதியிருந்தாள்.

மீராவுக்கு நெஞ்சை அடைந்தது.

"உனக்கு இன்னிக்கு இன்னொரு ஆச்சரியம் கூட இருக்கு மீரா" என்றான் வசந்தன்.

மீரா நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கென்னவோ கண்ணன் இன்னிக்கு தன் குழந்தையைப் பார்க்க வருவான்னு தோணுது."

மீரா ஒரு புன்னகையால் அதை அலட்சியம் செய்து விட்டு வசந்தனை இரக்கத்தோடு பார்த்தாள்.

வாசலில் வேன் ஒலி கேட்டதும் விரைந்தாள்.

ஃ ஃ ஃ

வேன் தோழிகள் அவரவரது விருப்பங்களைக் குழந்தைக்காக வாங்கி வந்திருந்தார்கள். வெள்ளி அரைஞாண் கயிற்றை விட, பிளாஸ்டிக் கிலுகிலுப்பைதான் கௌதமை வசீகரித்தது.

அன்புடன் சிலர், ஆவலுடன் சிலர், அதைரியத்துடன் சிலர் என்று குழந்தையைக் கைமாற்றிக் கொண்டார்கள். அது மிரண்டு வீறிட்டபோதெல்லாம் வசந்தனின் தோளில் தான் சமாதானம் ஆனது.

வசந்தன், மீரா இருவருக்கும் பொதுவாக இருந்த வங்கித் தோழர்கள், வேன் தோழிகள் இவர்கள் அத்தனை பேரையும் தனித்தனியே வரவேற்று கவனித்துக் கொண்ட வசந்தனின் அப்பாவை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

அவர்கள் அனைவரும் போகிற நேரத்தில் அத்தை ஆட்டோவில் வந்து இறங்கினாள்.

கண்ணனோடு அவள் காரில் வந்து இறங்குவாள் என்று எதிர்பார்த்திருந்த வசந்தனுக்குத்தான் பெரும் ஏமாற்ற



மாக இருந்தது. மீரா அவனை அர்த்தத்துடன் பார்த்த போது, பார்வையை அவசரமாக விலக்கிக் கொண்டான்.

அத்தை உடல் மெலிந்திருந்தாள். முகத்தின் சிரிப்புக்குப் பின்னால் ஒரு களைப்பு இருந்தது.

குழந்தையைச் சற்று நேரம் மடியில் வைத்துக் கண்மூடி இருந்தாள். இனிப்பை எடுத்துக் கொள்ளவில்லை.

அத்தை புறப்பட்டபோது, "வசந்தா, அவங்களைக் கொண்டு போய் விட்டுட்டு வந்துடு" என்றார் அவன் அப்பா.

ஃ ஃ ஃ

மறுநாள் இளங் காலையில் முதிராத வெயிலில் குழந்தையை ஏந்தி வசந்தன் தோட்டத்தில் நடந்தபோது, வாசலில் கார் வந்து நின்றது.

கண்ணன் காரில் இருந்து இறங்கினான்.

வசந்தனுக்குள் உற்சாகம் பீறிட்டது.

வீட்டுக்குள் பாய்ந்தோடிப் போனான். "மீரா, நான் சொன்னேனே...நேத்து எல்லோரும் இருப்பாங்களேன்னு வெட்கப்பட்டுக்கிட்டு வராம இருந்திருக்கான். இப்ப குழந்தையைப் பார்க்க கண்ணன் வந்திருக்கான்..."

குழந்தையின் துணிகளை அலசிக் கொண்டு இருந்த மீரா, நம்பிக்கையற்று அவனைப் பார்த்தாள்.

கூடத்தில் கண்ணனின் நிழல் தெரிந்தது!

வசந்தன் சொன்னது உண்மைதானா? வானம் புரண்டு விட்டதா? குழம்பியிருந்த குட்டை தெளிந்து விட்டதா?

மீரா கூடத்துக்குள் நுழைந்தாள்.

''வா... கண்ணா... உக்காருடா...''

வசந்தன் குழந்தையுடன் உற்சாகமாக அவனுக்கு நாற்காலி விரித்தான். ''நேத்து வர முடியலையாடா?''

கண்ணன் சுற்றிலும் கண்களை ஓட்டினான்.

அலங்கரிக்கப்பட்டிருந்த சுவர்களிலிருந்து விழிகளை மீட்டு, வசந்தன் தழைத்துக் காட்டிய குழந்தையின் மீது பார்வையை ஒரு கணம் நிறுத்தினான்.

பின் தலைநிமிர்ந்து மீராவை பார்த்தான்.

''உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்'' என்றான் கண்ணன்!

# 14

எவ்வளவோ கவனமாக இருந்தும், அடிமனதின் ஆழத்தில் ஒரு படபடப்பு பிறப்பதை மீரா உணர்ந்தாள்.

பலப்பல மாதங்களுக்குப் பின் கண்ணன் கைக்கெட்டும் தூரத்தில் நின்று, நேரடியாக அவளோடு பேசியதால் ஏற்பட்ட படபடப்பா, இல்லை... 'உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்' என்று அவன் சொன்ன வார்த்தைகளால் விளைந்த படபடப்பா என்று புரியவில்லை.

ஆனால், வெளிப்படையாக சலனமற்று கண்ணனைப் பார்த்தாள்.

''உக்காரலாமே'' என்றாள்.

மீராவை விடவும் வசந்தனுக்குத்தான் அதிக தவிப்பாக இருந்தது.



முந்தின நாளின் இனிப்பை எடுத்துவர உள்ளே ஓடினான்.

''இன்னிக்குத் தேதி பார்த்தியா, மீரா?'' என்று மெலிந்த குரலில் கேட்டான் கண்ணன். மீராவின் விழிகளைச் சந்திக்காமல் பார்வையைத் தழைத்திருந்தான்.

மீரா புரியாமல் காலண்டரைப் பார்த்தாள்.

''நீயும் நானும் பிரிஞ்சு தனித்தனியா வாழ ஆரம்பிச்சு, நேத்தோட ஒரு வருஷம் முடிஞ்சாச்சு மீரா. இனிமே, நாம விவாகரத்துக்கு மனு கொடுக்கலாம். வக்கீல்கிட்ட உன்னை அழைச்சிட்டுப் போலாம்னுதான் வந்தேன்.''

ஏற்றிய விளக்கை ஊதி அணைப்பது கண்ணனுக்கு வழக்கமாகி விட்டது. மீரா இயந்திரம் போலப் புன்னகைத்தாள்.

''அதுக்கு இவ்வளவு கஷ்டப்படுவானேன்? தகவல் கொடுத்திருந்தா நானே வக்கீல் வீட்டுக்கு வந்திருப்பேனே''' என்றாள்.

வசந்தன் இனிப்புத் தட்டுடன் வந்து சேர்ந்தான்.

''என்னடா கண்ணா, புதுசா வந்தவன் மாதிரி நின்னுட்டேயிருக்கே? உக்காரேண்டா...'' என்றான் வசந்தன், பரபரப்பு குறையாமல்

''வசந்த், நான் கண்ணனுடன் வக்கீல் வீடு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்...'' என்றாள் மீரா, வசந்தனின் முகத்தைப் பார்த்தபடி.

கானல் நீரைத் தொட்டுப் பார்த்த ஏமாற்றம் வசந்தனின் முகத்தில்.

''கண்ணா, அதுக்காகவா வந்தே?''

"அப்பாவை விசாரிச்சதா சொல்லு வசந்த். மீரா போகலாமா?" — கண்ணன் வாசலை நோக்கித் திரும்பினான்.

ஃ ஃ ஃ

வக்கீலைப் பார்த்து விட்டு, கண்ணனின் கார் அவளை வாசலோடு இறக்கிவிட்டுப் போனபின்பு மீரா சற்றுநேரம் கேட்டைப் பிடித்துக்கொண்டு நின்றாள்

சுற்றியிருந்த உலகத்தையெல்லாம் ஒளித்துவிட்டு அவளைத் தனிமையாக நிறுத்தின மாதிரி இருந்தது. வெகுநாட்களுக்குப் பின்பு மீண்டும் அந்த உணர்வு வந்திருந்தது.

"ஹை... அம்மா வந்தாச்சு பாரு..." என்று வசந்தனின் குரல் மாடிதொட்டிச் செடிகளுக்குப் பின்னிருந்து வந்ததும் திரும்பிப் பார்த்தாள்.

வசந்தனின் அணைப்பில் குழந்தை சிரித்தது

வானத்து வட்ட நிலாவையும் ஜரிகைத் தூளாகச் சிதறியிருந்த நட்சத்திரங்களையும்விட அம்மாவைப் பார்த்ததும் குழந்தையின் முகத்தில் மலர்ந்த ஆனந்தத்தைக் கவனித்த போது, ஒளிக்கப்பட்டிருந்த உலகின்மீது மீண்டும் ஒளி பாய்ச்சப்பட்டாற் போலிருந்தது.

மீரா குழந்தைக்குக் கைவீசி வேடிக்கை காட்டிக் கொண்டே சந்தோஷமாக கேட்டைத் திறந்தாள்.

ஃ ஃ ஃ

வங்கி மேலாளரிடமிருந்து வசந்தனுக்கு அழைப்பு வந்திருந்தது. அவர் அறைக்கதவை அவன் திறந்ததும், இருக்கையிலிருந்து எழுந்து முகமலர்ச்சியுடன் வரவேற்றுக் கை குலுக்கினார்.



"வசந்தன், ஒரு சந்தோஷமான சேதி. உங்களுக்கு ப்ரமோஷன் ஆர்டர்ஸ் வந்திருக்கு. நம்ம கிளையிலேர்ந்து நாலு பேர் இன்டர்வியூவுக்குப் போனதுல நீங்க மட்டும் தான் செலக்ட் ஆகியிருக்கீங்க."

வசந்தனுக்கு மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருந்தது. திறமைக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரம்.

கூடவே உள்ளுக்குள் ஒரு கவலை பூத்தது. பதவி உயர்வு என்றால் நிச்சயம் மாற்றலும் இருக்கும்.

"தாங்க்யூ சார்" என்று நன்றியைத் தெரிவித்துவிட்டுத் தயங்கி, "போஸ்டிங் எங்க சார்?" என்று கேட்டான்.

"அது இன்னும் முடிவாகலை. மொதல்ல பதினஞ்சு நாள் மும்பைல டிரெயினிங். அதை முடிச்சதுக்கப்புறந்தான் ப்ளேஸ் ஆஃப் போஸ்டிங் எல்லாம். உங்களுக்கென்ன வசந்தன்? எங்க போட்டாலும் ஜமாய்ப்பீங்க. இந்தாங்க. டிரெயினிங் ஆர்டரைக் கைல பிடிங்க."

பயிற்சிக்கான உத்தரவை வாங்கிக் கொண்டு அவருக்கு மீண்டும் நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்ததும், சக ஊழியர்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

"மும்பைல டிரெயினிங்கா? மச்சம்யா!" என்று முதுகில் தட்டினார்கள். கை குலுக்கினார்கள். வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். பக்கத்து இனிப்புக் கடைக்கு அவன் பர்ஸைப் பிடுங்கி ஆள் அனுப்பினார்கள்.

அப்பாவுக்கு போன் செய்து சொன்னான். அப்பா குரலில் சந்தோஷத்தை நிரப்பி வாழ்த்தினார். "மீரா கிட்ட சொல்லிட்டியா?" என்றார்.

"இனிமேதாம்பா" என்றான்.

அந்த சந்தோஷச் செய்தியை மீராவுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் போலத்தான் இருந்தது. இன்டர்காமில்

அழைத்துச் சொல்வதைவிட, மாடிக்குப் போய் நேரிலேயே சொன்னால் நிறைவாக இருக்கும் என்றும் மனதில் பட்டது

ஆனாலும் ஒரு தயக்கம். சின்ன உறுத்தல். மும்பை பயிற்சியை முடித்துவிட்டு வந்தவுடன் வேற்றூருக்கு மாற்றல் உத்தரவு வந்துவிடும். உடனேயேவா அல்லது சற்று நாட்கள் கழித்தா என்பது தெரியவில்லை, ஆனால், மாற்றல் உண்டு.

தனக்கு இருக்கும் ஆதரவாக வசந்தனை மீரா நினைத்திருக்கையில் அவன் மாற்றலாகிப் போவதாகச் சொன்னால், அதை அவள் எப்படி எடுத்துக்கொள்வாள்? கண்ணனுடனான உறவு கோர்ட்டில் இன்னும் அறுபடவில்லை. அந்தக் குரூர நாடகம் அரங்கேறுகையில் அவளைத் தனிமையில் விட்டுப்போக நேர்ந்துவிட்டால்?

சிந்தித்து, தயங்கி, முடிவெடுத்து அவன் மீராவை நோக்கிப் போவதற்குள், விஷயத்தைக் கேள்விப்பட்டு மீராவே ஓடிவந்துவிட்டாள். பதவி உயர்வு அவனுக்கே கிடைத்துவிட்ட ஒரு மகிழ்ச்சி அவள் முகத்தில். பூரிப்போடு கைகுலுக்கினாள்.. வாழ்த்தினாள். இனிப்பு வந்து சேர்ந்ததும் முதல் இனிப்பை அவள் எடுத்துக் கொண்டாள். மீராவின் இயல்பான சந்தோஷமே அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

ஃ ஃ ஃ

சென்னையைப் போலவே மும்பை வியர்த்தது.

கடலை ஒட்டியிருந்த அகலமான நடைபாதையில் வசந்தன் நின்றான். சவுபாத்தி பீச். பழுப்பும் நீலமுமாகக் கடல் அலைகள் ஆர்ப்பரித்து எழும்பின. கான்க்ரீட் வடிவங்கள் நெருக்கமாக நிரப்பப்பட்ட கரை அணைப்பில்



மோதி கோபமாக வெடித்தன. புகைச் சிதறல்களாக, நுரைப்பூக்களாகப் பின்வாங்கின.

மும்பை பெருமை கொள்ளும் இடங்களில் ஒன்றான நாரிமன் பாயிண்ட்டில் அவன் வங்கியின் பயிற்சி மையம் இருந்தது. பதவி உயர்வு பெற்ற சக அதிகாரிகள் வெவ்வேறு ஊர்களிலிருந்து பயிற்சிக்கு வந்திருந்தார்கள்.

அன்றைய தினம் முடிந்தபின் மும்பை நண்பன் மித்ராவுடன் வசந்தன் கடற்கரைச் சாலைக்கு வந்திருந்தான்.

நடைபாதையில் உப்புக் காற்றின் பிசுபிசுப்பு. தள்ளுவண்டிகளில் கோதுமைப் பண்டங்கள் விதம் விதமாகத் தயாராகி விற்பனையாயின. காரில் வந்து இறங்கிய குழந்தைகள் பலூன்களைத் துரத்திக் கொண்டு ஓடின.

மித்ரா மும்பையைப் பற்றி நிறைய தகவல்களை இறைத்தான். மும்பை பெருநகரம் கொஞ்சம் கொஞ்சமாக கடலின் சில பகுதிகளுக்குள் ஊடுருவி ஆக்கிரமித்திருந்ததைப் பற்றி, ஒரு ஃப்ளாட் இரண்டு கோடி, மூன்று கோடி ரூபாய் என விற்கப்படுவது பற்றி, கடற்கரையோரம் இருக்கும் மகாலக்ஷ்மி கோயில் காரணமாக மும்பை செழுமையாக இருப்பது பற்றி...இன்னும் என்னென்னவோ

மும்பையில் பணம் வழிந்தது. கூடவே ஏழ்மையும்.

கார்ப்பரேஷனின் தடுப்பு வேலிகளில் சாயம் போன புடவைகளும் சுடிதார்களும் பைஜாமாக்களும் உலர்த்தப்பட்டிருந்தன. சாலையோரத் தள்ளுவண்டி கையேந்தி பவன்களை அடித்தட்டு மக்கள் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். நடைபாதையில் அலுமினியப் பாத்திரங்களுடன் ஆக்கிரமித்திருந்த குடும்பங்கள், சதுர அடி இருபதாயிரம் ரூபாய் விலை போகும் பிரதேசத்தில், தயாபைசா கூடக் கொடுக்காமல் பழுப்பேறிய பற்களுடன் சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சாலையைக் கடக்க வேண்டியிருந்த ஒரு தருணத்தில் தற்செயலாக வசந்தன் அதைக் கவனித்தான்.

சாலையை இரண்டாகப் பகிர்ந்த சிறு சிமெண்ட் பாதையில் துணி இல்லாமல் அந்தக் குழந்தை படுக்க வைக்கப்பட்டு இருந்தது. சிமெண்டின் சொரசொரப்பைச் சற்றும் பொருட்படுத்தாது குழந்தை புரண்டு படுத்தது.

வசந்தன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே புஷ்டியான இரண்டு நாய்கள் அந்த நடைபாதையில் ஏறி... குழந்தையை முகர்ந்து பார்த்தன.

ஐயோ! குழந்தையின் அம்மா அப்பா வசந்தன் கிட்டத் தட்டப் பாய்ந்தான்

''ஹை'' என்று நாய்களை விரட்டினான். குழந்தையை அவன் அள்ளப்போன சமயம் எங்கிருந்தோ அதன் தாய் முளைத்தாள். துணி மூட்டையைக் கீழே இறக்கி, குழந்தையின் பக்கத்தில் அமர்ந்தாள்.

வசந்தனின் எலும்புகள் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தன.

''அறிவிருக்கா உனக்கு? குழந்தையை இப்படிப் போட்டுட்டுப் போயிருக்கியே! நாய் தூக்கிட்டுப் போயிருந்தா என்ன ஆகியிருக்கும்?'' அவன் தொண்டை நரம்புகள் புடைத்தன. அந்தக் கோபம் குழந்தை பற்றிய பயத்தில் எழுந்த கோபம்.

அவன் சொன்னதில் ஒரு வார்த்தைகூடப் புரியாமல், தாய் மூக்கு வளையத்தைச் சரி செய்து கொண்டு சிரித்தாள்.

''வா...வா...'' என்று எதிர்சாரியில் இருந்து மித்ரா அழைத்தாள்.



வசந்தன் குழந்தையைப் பார்த்துக் கொண்டே சாலையைக் கடக்க முற்பட்டு இரண்டு டாக்ஸிகளிடம் வசவு வாங்கினான்.

ஃ ஃ ஃ

பயிற்சி வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. வாராக் கடன்களின் வசூல் பற்றி டை கட்டிய பொதுமேலாளர் நிறுத்தாமல் பேசிக் கொண்டிருக்கிறார்.

வகுப்புக்கு வெளியே கைப்பிடியில் மீரா தன் புடவையை அலசிக் கொண்டிருக்கிறாள். வசந்தனின் அப்பா, கார் முன் கண்ணாடியைப் பளபள என்று துடைத்துக் கொண்டிருக்கிறார்.

குழந்தை தூளியிலிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டியிருக்கிறது. கன்றுக்குட்டி அளவுக்கு உயரமாக இருக்கும் இரண்டு நாய்கள் தூளியைச் சுற்றி வருகின்றன. வசந்தன் பார்த்து மிரள்கிறான்

''மீரா! குழந்தையைக் கவனி'' என்று கத்துகிறான்.

மீரா திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

''அப்பா, நீங்களாவது நாயைத் துரத்துங்கள்'' என்று கூவுகிறான்.

அப்பா காரின் வழுக்கையைத் துடைக்கிறாரே தவிர, அவன் குரலுக்கு செவி சாய்க்கவில்லை. பெரிய நாய் தூளியோடு குழந்தையைக் கவ்வித் தூக்கிக் கொண்டு ஓடுகிறது. இரண்டாவது நாயும் அதைத் துரத்திக் கொண்டு ஓடுகிறது.

வசந்தன் பயந்து எழுந்திருக்க, நாற்காலி இடறிக் குப்புறடித்து...

ஃ ஃ ஃ

விழிப்பு வந்தது. வசந்தன் கட்டிலில் இருந்து கீழே விழுந்திருந்தான். உடல் தெப்பலாக நனைந்து உடைகள் ஒட்டிக் கொண்டிருந்தன. சிறு விளக்கைப் போட்டான். மூன்று மணி காட்டியது கடிகாரம்.

கனவு!

என்றாலும் அவனைப் புரட்டிப்படித்த கனவு.

சே...என்ன பைத்தியக்காரத்தனமான கனவு! இனி தூங்க முடியாது. விடிந்தால் ஞாயிறு. பயிற்சிக்கு இருக்கும் ஒரே விடுமுறை தினம்.

❀ ❀ ❀

வசந்தனை எதிர்பாராமல் பார்த்ததும் மீராவுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

"டேய், யார் வந்திருக்காங்க பாரு" என்று தொட்டில் குழந்தையிடம் அறிவித்தாள்.

"என்ன வசந்தா, உடம்புக்கு ஒன்னுமில்லையே?" என்று அப்பா அரளிச் செடியருகில் இருந்து கேட்டுக் கொண்டே வந்தார்.

வசந்தன் தன் பயணப்பெட்டியை சோபாவின் அருகில் வைத்தான். தொட்டிலில் இருந்து குழந்தையை அள்ளி னான். முத்தங்களால் நனைத்தான்.

"வசந்த். என்ன ஆச்சு? டிரெயினிங் முடிஞ்சிருச்சா என்ன?"

"இல்ல மீரா... கௌதமைப் பார்க்கணும் போல இருந்தது. இன்னிக்கு லீவுதானே? நல்லவேளை ஃப்ளைட்ல எடம் இருந்தது."

"வசந்த்..." மீராவின் குரலில் வியப்பு பரவசத்துடன் வெளிப்பட்டது.



"சாயந்திர ஃப்ளைட்ல திரும்பிப் போயிடுவேன்."

"என்ன வசந்த் நீ? இன்னும் ஒரு வாரத்துல திரும்பி வரப்போறதானே? இப்ப குழந்தையைப் பார்க்கறதுக்காக எதுக்கு இப்படி மடத்தனமா ஃப்ளைட் பிடிச்சு வரணும்?"

"என்னைக்காணாம குழந்தை ஏங்கிப் போயிருக்குன்னு நேத்து நீ போன்ல சொன்னியே?" வசந்தன் குழந்தையை முகர்ந்து முத்தமிட்டபடி பேசினான்.

மீரா அவனையே இமை கொட்டாமல் பார்த்தாள். அவள் கண்கள் ஈரத்தால் பளபளத்தன.

"நான் மட்டுமில்லை வசந்த். இந்தக் குழந்தையும் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியிருக்கு!" என்று சற்றுப் பொறுத்து அவள் சொன்னபோது, வசந்தன் குழந்தையுடன் தோட்டத்துக்குப் போய்விட்டிருந்தான்.

❀ ❀ ❀

முற்பகலில் மும்பையிலிருந்து வாங்கி வந்திருந்த ஒரு ரங்கராட்டின பொம்மையை இயக்கி அவன் குழந்தைக்கு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். குழந்தை அவன் மடியில் படுத்துப் பயமும், பரவசமுமாக வானவில் நிறங்களுடன் சுழன்ற பொம்மையைக் குஷியான கூச்சலுடன் இமைக்காமல் ரசித்துக் கொண்டிருந்தது.

அவனைச் சுற்றி ரயிலும் காரும் ஓடிக்கொண்டிருந்தன. குரங்கு பொம்மை ஒன்று ஜிங்கு ஜிங்கென ஜால்ரா தட்டிக் கொண்டிருந்தது.

அழைப்பு மணி ஒலித்தது.

மீரா கதவைத் திறந்தாள்.

வாசலில் நின்றிருந்த மனிதருக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். நெற்றி மிக அகலமாகி முன்வழுக்கையாக

உருமாறியிருந்தது. வேஷ்டியும் முழுங்கை வரை மூடும் சட்டையுமாக, கையில் பெரிய துணிப்பை ஒன்றை வைத்திருந்தவர் மீராவைப் பார்த்ததும் திகைத்து அரையடி பின் வாங்கினார்.

"நீ... நீங்க... இது ரங்கசாமி வீடுதானே?"

"ஆமாமாம்...உள்ள வாங்க..." என்று மீரா கதவை அகலமாகத் திறந்தாள்.

"அடடே... வா சுந்தரமூர்த்தி... உள்ள வா" என்று வசந்தனின் அப்பா வாசல்வரை வந்து வரவேற்றார்.

"வாங்க மாமா" என்றான் வசந்தன்.

எதிரே மாடு வந்துவிட்டதைப் போன்ற மிரட்சியோடு மீராவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அடியெடுத்து வைத்தார், சுந்தரமூர்த்தி.

"என்ன சுந்தரமூர்த்தி பார்க்கறே? இது நம்ம வீட்டுப் பொண்ணு மாதிரிடா! மீரா, இவன் என் ஒண்ணுவிட்ட மச்சினன். விழுப்புரத்துல பெரிய கை!" வசந்தனின் அப்பா அவருக்குக் கை கால் அலம்ப செம்பில் நீர் மொண்டு கொடுத்தார்.

"எலையைப் போடும்மா..." என்றார் மீராவிடம்.

"இருக்கட்டும்" என்றார் சுந்தரமூர்த்தி. அவர் பார்வை வசந்தனின் மீதும் அவன் மடியில் இருந்த குழந்தையின் மீதும் படர்ந்து சட்டென விலகியது.

அதன்பின் வசந்தனின் அப்பா குசலம் விசாரித்து சில கேள்விகள் கேட்டபோது, சுந்தரமூர்த்தி படித்ததை ஒப்புவிக்கிற பள்ளிக்கூடப் பையன் போல் பதில் சொன்னாரே தவிர, பார்வை மீராவின் நிழலைப் பிடித்துக் கொண்டு அவள் நகர்ந்த திசையெல்லாம் நகர்ந்தது.



"என் மச்சினி ஜாதகம் கொடுத்துட்டுப் போனேனே, வசந்தன் ஜாதகத்தோட அபாரமாப் பொருந்தியிருக்குன்னு அவங்க வீட்ல சொல்றாங்க. ஆனா, போன தடவையே நீங்க ஏன் தட்டிக் கழிச்சீங்கன்னு இப்ப எனக்குப் புரியற மாதிரி இருக்கு..." என்று சுந்தரமூர்த்தி திக்கித் திணறி முணகலாகச் சொன்னார்.

## 15

சுந்தரமூர்த்தி அப்படி அபத்தமாகச் சொன்னது வசந்தனின் அப்பா காதில் விழுந்ததா, இல்லையா என்று அவர் முகத்தைப் பார்த்து மீராவால் புரிந்து கொள்ள முடியவில்லை. வசந்தன் கவனித்ததாகவும் தோன்றவில்லை.

சுந்தரமூர்த்தியைப் பார்த்தாள் மீரா. அந்த ஆளைப் பார்த்தவுடன், பாவம் என்று தோன்றியது.

தலைகுனிந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சாப்பாடு, அவர் தொண்டையில் நிறைவாக இறங்கவில்லை.

விடை தெரியாத கேள்விகள் நெஞ்சில் பொங்கிக் கொண்டிருக்கையில், எப்படி நிறைவாக உணவு உண்ண முடியும்...?

ஃ ஃ ஃ

சுந்தரமூர்த்தி புறப்பட்டுப் போய்விட்டார். குழந்தை தூளியில் தூங்கியது. சாப்பிட்டு முடித்துத் தூணில் சாய்ந்து அமர்ந்து அப்பாவும் மகனுமாக வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது இயல்பான மலர்ச்சிகளையெல்லாம் அவன் பொருட்டு பணயம் வைக்கும்படி ஆகி விட்டதோ என மீராவுக்குத் தோன்றியது.

வசந்தன் விமானத்துக்குப் புறப்பட வேண்டிய நேரம் வந்தபோது, குழந்தையை மறுபடி எடுத்துக் கொஞ்சினான்.

"பத்திரம், பத்திரம்..." என்று நூறு முறை சொல்லி விட்டுத்தான் அவளிடமே ஒப்படைத்தான்.

"பேசாம இதை நீ உன் கூட மும்பைக்கு எடுத்துட்டுப் போயிடு..." என்று சிரித்தாள் மீரா. அந்தச் சிரிப்பில் கொஞ்சம் நிறைவு, கொஞ்சம் பெருமை, நிறைய சந்தோஷம்.

ஃ ஃ ஃ

வசந்தன் மும்பையில் இருந்து பயிற்சி முடிந்து வந்தபின் ஒரு தினம்...அன்றைய வேலைகளெல்லாம் முடித்து, விவிதபாரதியில் பழைய பாடல்களைக் கேட்டுக்கொண்டு வசந்தன் படுத்திருந்தான்.

"வசந்தா, இன்னிக்குச் சுந்தரமூர்த்திகிட்டேர்ந்து ஒரு லெட்டர் வந்தது..." என்று வானொலியைக் குறைத்தார் அவன் அப்பா.

"என்னவாம்...?"

"இந்தா...நீயே படிச்சுப் பாரேன்..."

வசந்தன் எழுந்து அமர்ந்து, நுணுக்கி நுணுக்கி எழுதப் பட்ட கடிதத்தைப் படித்தான். அப்பாவை நிமிர்ந்து பார்த் தான். பார்வையில் பச்சாதாபம்.

"அவங்களால அப்படித்தாம்ப்பா நினைக்க முடியும். விடுங்க..."



அப்பா, அவனைத் தயக்கத்தோடு பார்ப்பதுபோல் இருந்தது. ஏதோ சொல்ல நினைப்பதும் அதற்கு இது சரியான சந்தர்ப்பமில்லை என்று தீர்மானிப்பதும் புரிந்தது.

"என்னப்பா...?" என்று கேட்டால் நிச்சயம் சொல்லி விடுவார் என வசந்தனுக்குத் தெரிந்திருந்தது. ஆனால், அதைத் தெரிந்து கொள்வதைத் தள்ளிப் போடச் சொல்லி உள்மனம் சொன்னது.

"நீ தூங்குப்பா..." என்று அவர் சொன்னதும் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

பழைய திரைப்பாடல்கள் இதமாகத் தொடர்ந்து ஒலித்தன.

ஃ ஃ ஃ

கண்ணன் சற்று படபடப்பாக உணர்ந்தான். எழுந்ததிலிருந்தே அவனுடைய ரத்தம் தறிகெட்ட வேகத்தில் ஓடிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. செய்தித்தாளைப் பிரித்தால், ஒரு தாள் நழுவி ஓடியது. சுந்தரி கொடுத்த காபியை ஆற்றும் போது, அது மடியில் கவிழ்ந்தது. இப்போது ஷேவ் செய்து கொள்ளும் போது, காதருகில் ஒரு வெட்டு விழுந்து க்ரீம் நுரை வெள்ளையிலிருந்து சிவப்பாக மாறிக் கொண்டிருந்தது.

டெட்டால் போட்டுக் காயத்தைச் சுத்தம் செய்கையில், கண்ணாடியில் சுந்தரியின் பிம்பம் தெரிந்தது. கையில் பிங்கியோடு நின்றிருந்தாள்.

"என்ன கண்ணா, ஒரே பதட்டமா இருக்கே...?" என்றாள்.

தெரியும். தெரிந்திருந்தும் கேட்கிறாள்!

"கோர்ட்ல என்ன சொல்லப் போறே கண்ணா...?"

சுந்தரியின் கண்களில் தெரிந்தது ஆர்வமா, அவசரமா என்று புரியவில்லை.

''புதசா சொல்றதுக்கு என்ன இருக்கு சுந்தரி...? எல்லாம் இன்னியோட முடிஞ்சு போயிடும்...''

''நான் மீராவைப்பத்திக் கேக்கலை கண்ணா...''

கண்ணன் புரியாமல் புருவங்களைச் சுருக்கினான்.

''குழந்தை...''—சுந்தரி தன் பிங்கி பொம்மையின் காதைத் திருகியபடி மெலிந்த குரலில் தொடர்ந்தாள் : ''குழந்தை உன்கிட்டதான் இருக்கணும்னு கேளு கண்ணா... விட்டுக் கொடுத்துடாதே...''

கண்ணன் சுந்தரியைப் பார்த்த பார்வையில் ஒரு பரிதாபம் இருந்தது. எவ்வளவு சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாளே என்ற ஆதங்கம் இருந்தது.

அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் கண்ணன் குளியலறைக்குள் நுழைந்து விட்டான்.

ஃ ஃ ஃ

விடிந்ததிலிருந்து அத்தையின் மனதில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

எவ்வளவோ தருணங்களில் கண்ணனை நினைத்துப் பெருமிதப்பட்டு அவள் இதயம் நிரம்பியிருக்கிறது! ஆனால், வீட்டுக்கு வெளியே மீரா கால் எடுத்து வைத்ததிலிருந்து கண்ணனின் முகம் அவளுக்கு அந்நியமாகிவிட்டது. இதயத்தில் இருந்து ஒரு கிளை முறிந்து வீழ்ந்து விட்டாற் போலானது. அவனுடன் பேசும் பேச்சு உயிரற்று போனது.

ஆனால், இன்றைக்கும் அந்த மௌனம் தொடர்ந்தால் மீட்கமுடியாத ஓர் இழப்பு நேர்ந்துவிடும் என்ற அச்சம்



அவளை ஆட்டிப்படைத்தது. அந்தப் போராட்டத்தில் நெஞ்சு சற்றுக் கனத்து வலித்தது.

கண்ணன் 'பசியில்லை' என்று காலை உணவை மறுத்து விட்டதைச் சமையலறையில் இருந்து கேட்டுக்கொண்டு தான் இருந்தாள்.

சட்டை போடும்போது பித்தான் அறுந்து, சுந்தரியை அவன் தேடுவதைக் கவனித்தாள். சுந்தரி வெளியில், அவன் வண்டியைத் துடைக்கப் போயிருந்தாள். மாற்றுச் சட்டையை அவன் அணிய ஆரம்பித்தபோது, அத்தை எதிரில் போய் நின்றாள்.

''கண்ணா...!''

கண்ணனின் உடல் சிலிர்ப்பது தெரிந்தது. எத்தனை யுகங்களுக்குப் பிறகு அத்தை அவன் பெயர் சொல்லி அழைக்கிறாள்!

''கண்ணா, இத்தனை வருஷத்துல நான் உன்கிட்ட எதுவுமே கேட்டதில்லை. இப்ப கேக்கறேன்...''— அத்தையின் குரல் தாங்கொணாத துக்கத்தில் நடுங்கியது.

''மீரா, நம்ம வீட்டுப் பொண்ணு... அவ உறவை அறுத்துடாதே... விவாகரத்தெல்லாம் வேண்டாம். அவளை வீட்டுக்குக் கூட்டிட்டு வாடா.''

கண்ணன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டான். சற்று பின்னால் நகர்ந்து அத்தையின் கால்களில் விழுந்தான்.

''என்னை மன்னிச்சிடு அத்தை...'' என்றான். ''இது வரைக்கும் நீ சொல்லி, எதையாவது தட்டியிருக்கேனா...? ஆனா, இந்த விஷயத்துல மட்டும் உன் பேச்சை என்னால கேக்க முடியலை. மீராவும் நானும் சேரணும்னு எந்த ஆசையும் மனசுல வெச்சுக்காதே.''

அந்தை அவன் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்காமல் சரேலென்று வெளியேறினாள். அவள் வெளியேறிய வேகத்தில் கதவு சற்று நேரம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது.

* * *

கார் மெள்ளத் திரும்பி, அந்த மரத்தடி நிழலில் நின்றது.

ஓட்டி வந்த வசந்தனின் அப்பா காரிலிருந்து இறங்கினார். மீராவிடமிருந்து கௌதமை வாங்கிக் கொண்டார்.

மீரா கதவு திறந்து இறங்கினாள். மரக்கிளைகள் வேண்டாம் என்று உதிர்ந்த பழுத்த இலைகள், பூமியில் கம்பளம் விரித்தது போல் கிடந்தன. தாழ்வான காற்று அவற்றைப் புரட்டும்போது, தாங்கள் தேவையானவர்களா, இல்லையா என்று புரியாமல் அந்த இலைகள் தவிப்பதாக அவளுக்குத் தோன்றியது

நீதிமன்றத்தின் பழமையான பிரமாண்டமான கட்டடங்களை ஒரு முறை அவள் பார்வை மேய்ந்தது.

ராட்சத வௌவால்கள்போல் கறுப்பு அங்கிகளை வீசிக்கொண்டு நடமாடும் வக்கீல்கள். பூண் போட்ட கழியுடன் ரேகை பார்த்து, நல்ல வார்த்தை சொல்லிக் குளிர்விக்கக் காத்திருக்கும் குறிசொல்பவர்கள். களைப்பும் எரிச்சலுமாக போலீஸ்காரர்கள். புன்னகையும் வேடிக்கையுமாக அரசியல் புள்ளிகள். வன்மத்துடன் பங்காளிகள். சுயநலத்துடன் சகோதரர்கள். கண்ணீருடன் தாய்மார்கள். வேதனையுடன் மனைவிகள்.

இந்தச் சோம்பலான கட்டடத்தில் எத்தனை பேருடைய தலையெழுத்துகள் மாற்றி எழுதப்பட்டிருக்கின்றன. இன்று... அவளுடையதும்!



அவளைப் பற்றி அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. இந்தத் தினத்தை எதிர்கொள்ளும்போது, அதைரியத்தில் கை-கால்கள் நடுங்கும் என்று நினைத்திருந்தாள். அப்படி எதுவும் இல்லை.

சற்றுத் தள்ளி, இன்னொரு மரத்தடி நிழலில் கண்ணனின் கார் வந்து நிற்பது தெரிந்தது. கண்ணன் வந்து விட்டான்!

இதயத்தின் ஓரத்தில் மட்டும் 'முணுக் முணுக்' என்று ஒரு சிறு வலி மருத்துவர் காயத்தைத் தைக்கும் போது வலி இருந்தாலும் அதை எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாலேயே அந்த வலியைப் பொருட்படுத்தாமல் விடுவதில்லையா...? அப்படித்தான் இன்றைய வலிக்கும் அவள் தயாராகியிருந்தாள்!

வசந்தன் அலுவலகம் புறப்பட்டபோது, இதைப் பற்றி எதுவும் பேசாமல் கவனமாகத் தவிர்த்து விட்டிருந்தான்.

"நீ போயிட்டு வாம்மா... நானும் கௌதமும் இங்கே விளையாடிட்டிருக்கோம்..." என்றார் வசந்தனின் அப்பா.

மீரா, தீர்ப்பு மன்றத்தை நோக்கி நிதானமாக நடந்தாள்.

* * *

நாற்பது நிமிடங்களில் மீரா திரும்பி வந்து விட்டாள். தானாக எதுவும் கேட்கக்கூடாது என்று வசந்தனின் அப்பா காரை எடுத்தார்.

நீதிமன்ற வளாகத்தை வண்டி தாண்டும்போது, மீரா மெல்லிய குரலில் சொன்னாள்: "எல்லாம் முடிஞ்சாச்சு மாமா..."

ஒரு சின்ன இடைவெளி கொடுத்து, "வீட்டுக்குப் போறதுக்கு முன்னால அம்மன் கோயிலுக்குப் போகலாமா...?" என்று கேட்டாள்.

"போலாம்மா..."

கார் கண்ணாடியில் அவர் பார்த்தபோது, தூங்கும் குழந்தையை மடியில் வைத்து அவள் வருடிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் பார்வை எதிலும் பதியாமல் இருப்பதாகத் தோன்றியது. அவள் மனதில் என்ன ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை அவரால் படிக்க முடியவில்லை.

கோயில் வாசலில் வண்டியை நிறுத்தினார்.

"கௌதம் தூங்கறான். கார்லயே இருக்கட்டும்..." என்று அவள் மட்டும் இறங்கிக் கோயிலுக்குள் போனாள்.

அந்த நேரத்தில் கோயிலில் கூட்டம் இருக்காது என்று அவளுக்குத் தெரியும். கடவுளிடம் மீரா என்ன கேட்கப் போகிறாள்...?

அவர் வேண்டுவதையே அவளும் வேண்டுவாளா...?

போன வேகத்திலேயே மீரா வெளியே வந்து விட்டாள். காரில் ஏறி அமர்ந்து, "போலாம் மாமா—" என்றாள்.

கண்ணாடியில் பார்த்த போது, சட்டென்று அந்த வித்தியாசம் அவர் கண்களில் பட்டது.

கோயிலுக்குள் நுழையும் போது மீராவின் கழுத்தில் இருந்த தாலி, இப்போது இல்லை!

அந்தத் தாலி, அவள் கழுத்தில் ஏறுவதற்கும் அவர் தான் கார் ஓட்டினார். இன்று விலகுவதற்கும் அவர் தான் கார் ஓட்டுகிறார். அந்தச் சோகமான விநோதம் அவரைத் தாக்கியது.

ஃ ஃ ஃ

உணவு இடைவேளையின் போது வசந்தனுடன் பழ வண்டி நிற்கும் இடம்வரை நடந்தபோது, மீரா மௌனமாக அந்தக் கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.



அவள் பெயருக்கு வந்திருந்தது அத்தையிடமிருந்து...

வசந்தன் கடிதத்தைப் பிரிக்காமலேயே மீராவைப் பார்த்தான்.

"படி..." என்றாள் அவள்.

வசந்தன் பிரித்தான். கடிதம் தடுமாறும் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்தது. இரண்டு, மூன்று இடங்களில் எழுத்து கரைந்து இருந்தது.

அத்தையின் கண்ணீரா, மீராவின் கண்ணீரா...?

கடிதத்தின் இறுதி வாக்கியம் மறுபடி படிக்க வைத்தது.

"நீ கண்ணனின் மனைவியாக இல்லாமல் வேண்டுமானால் போகலாம். ஆனால் என்றைக்கும் எங்கள் வீட்டுப் பெண்தான் என்னை மறக்க மாட்டாயே...?"

வசந்தன் நிமிர்ந்தான் "அத்தையை எனக்குத் தெரியும். கண்ணையா, உயிரானு கேட்டா... கண்ணென்னு சொல்றவங்க இன்னிக்கு எவ்வளவு தூரம் மனசு ஒடிஞ்சு போயிருக்காங்க. இதையெல்லாம் அவங்க தாங்கிக்கிட்டிருக்கிறதே ஒரு அதிசயம் தான்!"

"பாட்டிகிட்டேர்ந்தும் போன் வந்தது..." என்றாள் மீரா. "உங்கப்பா மனசுலயும் இரக்கம் இல்லியேடினு கொஞ்சம் அழுதாங்க. அப்புறம் நான் நல்லா இருக்கணும், தைரியமா இருக்கணும்னு வாழ்த்தினாங்க..."

கடைக்காரன் அனுமதியுடன் பழ வண்டியிலிருந்த வாழைக் குலையிலிருந்து கனிந்த இரண்டு பழங்களைப் பிய்த்து எடுத்தான் வசந்தன்.

"இன்னொரு விஷயமும் உன்கிட்ட சொல்லணும் மீரா... எப்படிச் சொல்றதுனு யோசனையா இருக்கு..."

"சொல்லு வசந்த்..."

"இன்னிக்கு ரீஜினல் ஆபீஸ்லேர்ந்து போன் வந்தது எனக்குக் கேரளாவுக்கு மாத்தலாகும் போலிருக்கு..."

"பக்கத்துல தானே...? குழந்தை அழுற சத்தம் கேட்டா- ஃப்ளைட் புடிச்சு ஓடி வர்ற தூரம்தானே...? எதுக்கு யோசிச்சிடுறே...?" என்று மீரா சிரித்துக்கொண்டே கேட்டாள். "பிரமோஷன்ல மாத்தலாகிப் போகும்போது சந்தோஷமா போகணும்..."

மீரா சிரித்துக்கொண்டே சொன்னபோதிலும் அவள் உள்மனதில் யோசனைகள் ஓடுவதை முகத்து வரிகள் காட்டிக் கொடுத்தன.

ஃ ஃ ஃ

வேன் சின்னச் சின்னக் குலுக்கல்களுடன் ஓடிக் கொண்டிருந்தது.

மீரா இனிப்புப்பெட்டியை எடுத்துத் தோழிகளிடம் நீட்டினாள்.

"நீ பண்ணினதா...? எக்ஸலண்டா இருக்கே..! என்ன விசேஷம்...?" என்று ராதிகா ஒன்றை எடுத்துக் கொண்டாள்.

"நேத்து கௌதமுக்குப் பிறந்ததான்..." என்றாள் மீரா.

"இப்பத்தான் அவனை ஆஸ்பத்திரில வந்து பார்த்த மாதிரி இருக்கு. அதுக்குள்ள ஒரு வருஷம் ஓடிப் போச்சா...?"—ஜெயமணி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஏன் மீரா எங்களையெல்லாம் கூப்பிடலை...?" என்று ராஜி சிணுங்கினாள்.



"வசந்தனுக்கு மாத்தல் உத்தரவு வந்திருக்கு ராஜி... உடனே திருவனந்தபுரத்துல போய் ரிப்போர்ட் பண்ணணும்னு... கிளம்ப வேண்டியிருந்தது. அப்பப் போய், கௌதம் பர்த்டேனு கலாட்டா பண்றதுல எனக்கு இஷ்டமில்லை..."

"வசந்தன் கிளம்பிப் போயாச்சா...?"

"ம்.."

"அப்படின்னா, மறுபடி நீ குழந்தையோட தனியா இருக்கப் போறியா மீரா...?" திடுமென்று ராஜி கேட்டாள்

அந்தக் கேள்விக்குச் சரியான பதில் கிடைக்காமல்தான் தவித்துக் கொண்டிருப்பதை அவளிடம் எப்படிச் சொல்வது...?

"ஏய்... நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே...?"— மீராவின் முகவாயைத் தன் பக்கம் திருப்பினாள் சித்ரா.

"கண்ணனோட இனிமே உறவு இல்லைனு ஆயாச்சு. வசந்தன் உன் மனசைப் புரிஞ்சுக்கிட்டவரா, நல்லவரா இருக்காரு. நீ ஏன் வசந்தனைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது...?"

## 16

வேனில் சற்று நேரம் மௌனம் நிலவியது. கும்மென்று இன்ஜினின் ரீங்காரம் மட்டும்.

சித்ரா அப்படிக் கேட்பாள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''நீ ஏன் வசந்தனைக் கல்யாணம் பண்ணிக்கக்கூடாது?''

மீராவிடமிருந்து அதை ஏற்றோ, மறுத்தோ உடனடியான பதில் இல்லை.

ராஜிதான் முதலில் சுதாரித்தான். ''ஏய்... ஜொள்ளு... வாய்ல வந்தபடி பேசிடக்கூடாது...'' என்று சித்ராவின் தலையில் செல்லமாகத் தட்டினாள். ''வசந்தன் எவ்வளவு கண்ணியமானவர். அந்த மாதிரி எண்ணத்தோடயா மீரா கிட்ட பழகிக்கிட்டிருக்காரு? அவங்களது ஒரு நல்ல நட்பு; அதைப் போய் இப்படிக் கொச்சைப்படுத்தறியே!''

''இதுல நட்பு எங்கே கொச்சைப்படுது?'' என்று சித்ரா ஆவேசமாகக் கேட்டாள்.

''கண்ணன், மீராவை வீட்டைவிட்டு அனுப்பினப்ப வசந்தன் பொறுப்பா அவளைத் தன் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகலியா? அது நட்பு. கண்ணனும் மீராவும் சேரணும்னுதானே வசந்தனும் ஆசைப்பட்டாரு! அப்ப இவ மிஸஸ் கண்ணன். ஆனா இப்ப? இவ மிஸஸ் கண்ணன் இல்ல... மறுபடி தனி மீராவாயிட்டா. இப்ப மீராவை வசந்தன் ஏன் கல்யாணம் பண்ணிக்கக்கூடாது?''

''முட்டாள்! அடிப்படைல அவங்க ஃப்ரெண்ட்ஸ்!''

''இருந்தா என்ன? ரெண்டு நண்பர்கள் சேர்ந்து ஒரு பிஸினஸ் ஆரம்பிச்சா, உடனே நட்பைக் கொச்சைப் படுத்திட்டாங்கன்னு சொல்லுவியா? , வியாபாரத்துல பங்குதாரரா இருக்கலாம்... வாழ்க்கைல இருக்கக் கூடாதா? இன்னும் சொல்லப் போனா, கணவன் — மனைவிக்குள்ள தாம்பத்தியத்தை விடவும் ரொம்ப முக்கியமானது நட்புதான் ராஜி...''

''நானும் சித்ரா கட்சிதான்'' என்றாள் ஜெயமணி. ''மீராவோட வாழ்க்கை கண்ணனோட முடிஞ்சு போயிடல. அவ ஏன் தனியா நிக்கணும்? வசந்தனைப் போல இவ



மனசை முழுசாத் தெரிஞ்சி வெச்சிருக்கற இன்னொருத்தர் கிடைக்கப் போறதில்ல. வசந்தனும் மீராவும் கல்யாணம் பண்ணிக்கறதுல எந்தக் கொச்சைத்தனமும் இல்ல...''

ராஜி பதிலுக்கு ஏதோ சொல்ல வாய் திறந்து நிறுத்திக் கொண்டாள். மீராவின் முகத்தைப் பார்த்தாள்.

மீரா இரண்டு தரப்பு பேச்சுக்கும் எந்தப் பிரதிபலிப்பும் காட்டாமல் மௌனமானதோர் புன்னகையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்போதெல்லாம் அடிக்கடி வேள் தோழிகளுக்கு அவளே பேச்சுப் பொருளாகிவிட்டாள். வம்புக்காகப் பேசுகிறவர்களாயில்லாமல், அவள் வாழ்க்கை குறித்த அக்கறையுடன்தான் பேசுகிறார்கள் என்பது அவளுக்குப் புரிந்திருந்தது.

ஏதாவது ஒன்றை இழப்பதும் ஏதாவது ஒன்றைப் பெறுவதுமாகத் தானே காலத்தின் பல் சக்கரம் அவள் வாழ்க்கையைச் சுழற்றிக் கொண்டிருக்கிறது?

மௌனமாகக் காத்திருப்பதைத் தவிர, வேறொன்றும் சிறப்பாகச் செய்துவிட முடியாது என்ற சேதி அவள் புன்னகையில் ஒளிந்திருந்தது.

ஃ ஃ ஃ

அத்தை ஆட்டோவில் வந்து இறங்கியபோது வசந்தனின் அப்பாவும் கௌதமும் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அத்தை கேட்டைத் திறந்ததும், குழந்தை விளையாட்டை நிறுத்திவிட்டு வசந்தனின் அப்பாவின் காலை பயத்துடன் கட்டிக்கொண்டது.

"பாட்டிடா..." என்றார், அவனை முன்னால் கொண்டு வந்து "வாங்கம்மா... மீரா இன்னும் கொஞ்ச நேரத்துல ஆபீஸ்லேர்ந்து வந்துடுவா."

கௌதமின் கன்னத்தைச் செல்லமாக நிமிண்டினாள் அத்தை. கொண்டு வந்த பட்டை சாக்லேட்டை அவனிடம் நீட்டினாள். கௌதம், வசந்தனின் அப்பா முகத்தைப் பார்த்து அனுமதி பெற்று அதைத் தயக்கத்துடன் பற்றி இழுத்துக் கொண்டான்.

"உங்ககூடப் பேசணும்னுதான் வந்தேன்" என்றாள் அத்தை, உள்ளே நுழைந்ததும்.

"ஒரு நிமிஷம்... காபி எடுத்துட்டு வரேன்."

அவர் கௌதமைக் கீழே பொம்மைகளுக்கு நடுவில் விட்டுவிட்டு உள்ளே போனார்.

அத்தை கூடத்துத் தூணில் சாய்ந்து உட்கார்ந்தாள். உடலில் முன்பிருந்த வலு இல்லாமல் போய்விட்டது. ஓய்வில்லாமல் கடிகார முள் மாதிரி வேலைசெய்ததெல்லாம் இப்போது பழங்கதை ஆகிவிட்டது. அவள் உடம்பை மனசு வதைத்துக் கொண்டிருந்தது.

கௌதம் தனக்குத்தானே மழலையில் கத்திக்கொண்டு பொம்மைகளை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தான். அத்தை அந்தக் குழந்தையின் செயலில் மனதைப் பறி கொடுத்தாள். குழந்தையின் புருவமும் கண்களும் அப்படியே கண்ணனைப் போலவே. இப்படித் தானே கண்ணனும் அவளிடம் வந்து சேர்ந்தான்!

குழந்தையை நோக்கிக் கைகளை நீட்டினாள். கௌதம் திகைத்துப்போய் விளையாடுவதை நிறுத்திவிட்டு மெள்ளப் பின்வாங்கினான். கௌதமின் திகைப்பு கூட அத்தைக்கு ஆனந்தமாக இருந்தது. எழுந்து போய்



அவனை அள்ளிக் கொள்ளலாமா என்று எண்ணிய தருணத்தில் வசந்தனின் அம்மா காபி டம்ளருடன் வந்தார்.

காபி மணம் கூடத்தை நிறைந்தது. அத்தை காபி டம்ளரைக் கையில் எடுத்தாள்.

வசந்தனின் அப்பா சற்றுத் தள்ளி சாய்ந்து உட்கார்ந்தார்.

குழந்தை அவர் மடியில் பாதுகாப்பாக ஏறி உட்கார்ந்து கொண்டு பொம்மைகளைத் திருகியது.

"வசந்தனுக்கு வெளியூருக்கு மாத்தலாகியிருக்கறதா வந்து சொன்னான்."

"ஆமா...கேரளா ரீஜின், இப்ப திருவனந்தபுரம் ஆபீஸ் போயிருக்கான்: கேரளாவுல எந்த பிராஞ்ச்னு இனிமேத்தான் முடிவு பண்ணுவாங்களாம். ஒரு மாசம், ரெண்டு மாசம் தனியா சமாளிச்சுப்பான். அப்புறம் வீடு பாத்துக் கூப்புடுவான்."

அத்தைக்கு வசந்தனின் அலுவலக விவரங்கள் எல்லாம் தேவையற்றவை என்று வசந்தனின் அப்பாவுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனால், வேறு என்ன பேசுவது என்று புரியாமல் அவர் பேசினார்.

"எனக்கு மீராவைப் பத்திதான் கவலையா இருக்கு. அவ மறுபடியும் தனியா இருக்கறதை என்னால நெனைச்சிப் பார்க்க முடியல. சுந்தரி இருக்கற வரையிலும் என்னாலயும் விட்டுட்டு வர முடியலை. மீராவுக்கு ஒரு வழி பொறக்கற வரைக்கும் என் மனசு சமாதானமாகாது. சந்தோஷமா வாழ வேண்டிய வயசுல போய்..."—அத்தையின் குரல் கம்மி விட்டது. சட்டென்று பேசுவதை நிறுத்திவிட்டு வசந்தனின் அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள். புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நான் சொல்லப் போறது உங்களுக்குச் சரியாப் படலைன்னா இந்தப் பேச்சை இந்தக் கூடத்தோடயே மறந்துட்டுப் போயிடறேன்."

"சொல்லுங்க" என்றார் வசந்தனின் அப்பா.

"வசந்தனையும் என் மகனாகத்தான் நெனைச்சிட்டிருக்கேன். ஆனாலும் சில விஷயங்களை அவன்கிட்ட நேர்ல பேச முடியாதுன்னுதான் பெரியவர் உங்ககிட்ட பேச வந்திருக்கேன். சுத்தி வளைச்சிப் பேசாம நேரே விஷயத்துக்கு வரேனே...நாம ஏன் அவங்களை சேர்த்து வைக்கக் கூடாது?"

வசந்தனின் அப்பா முகத்தில் புன்சிரிப்பு. சந்தோஷம் சாயங்கால புஷ்பம் போல் பூத்தது. "யார்கிட்டப் பேசறதுன்னு புரியாமத்தாம்மா நான் தவிச்சிக்கிட்டிருக்கேன். வசந்தனுக்கு எங்க சொந்தத்துல ஒரு பொண்ண எடுக்கறதா இருந்தது கூட இப்ப விட்டுப்போச்சம்மா. மீராவைப்போல ஒரு தங்கமான பொண்ணு கெடைக்க அவனுக்குக் கொடுத்து வெச்சிருக்கணுமே!"

"அப்புறம் என்ன?"

"மீராவை எப்படிம்மா கேக்கறது? தங்கிக்க எடம் கொடுத்த உரிமைல கேக்கறதா அவ மனசுல தோணிடக் கூடாது இல்லையா?"

"அத்தை புன்னகைத்தாள். தான் மீராவின் தோழி சித்ரா மூலம், மீராவின் மனதில் இருப்பதை அறியச் சொல்லி இருந்ததாகவும், மீராவுக்கு எந்த மறுப்பும் இருக்காது என்றும் சொன்னாள்.

"மீராகிட்ட சம்மதம் வாங்க வேண்டியது என் பொறுப்பு..." என்றாள்

"வசந்தன்கிட்ட நான் பேசறேன்மா" என்று அவர் சொன்னார்.



அந்த நேரம் பார்த்து வாசல் கதவு திறந்து மீரா நுழைந்தாள்.

அலுவலகத்தில் இருந்து களைப்புடன் திரும்பியிருந்தவளுக்கு அத்தையைப் பார்த்ததும், மழையைப் பார்த்தது போல் ஒரு சந்தோஷம் வந்தது

"காபி சாப்பிட்டுட்டு வா மீரா...நாம கோயில் வரைக்கும் ஒரு நடை போயிட்டு வரலாம்" என்றாள் அத்தை.

மீரா மறுக்காமல் தலையசைத்தாள்.

ஃ ஃ ஃ

கடல் தளும்பிக்கொண்டிருந்தது. பெரிய பெரிய மீன் வலைகள் கரையுடன் கட்டப்பட்டு கடலில் மூழ்கிக் காத்திருந்தன. உப்புக் காற்றில் பிசுபிசுப்பு. காற்றுடன் விளையாடும் கீற்றுகளுடன் தென்னை மரங்கள் வளைந்திருந்தன.

இயற்கையின் ஓவியக் கண்காட்சி கேரளா.

கரையில் இழுத்து போடப்பட்ட கட்டுமரங்களில் ஒன்றில் உட்கார்ந்திருந்தான் வசந்தன்.

வசந்தனின் அப்பா கறுப்பும் வெள்ளையுமாகக் கலந்திருந்த மணலிலிருந்து சௌதம் விளையாட பெரிய கிளிஞ்சல்களாகப் பொறுக்கிக் கொண்டிருந்தார்.

"மீரா இதுக்கு சம்மதிக்கணுமே...?" என்றான் வசந்தன்.

"அவளை அத்தை கேட்டாச்சு வசந்தா, மீராவுக்கு எந்த ஆட்சேபணையும் இல்ல."

"அப்ஜெக்ஷன் இல்லைங்கறது வேற... சம்மதம்கறது வேறப்பா."

"மீராவைப் பத்தி எனக்குத் தெரிஞ்ச அளவுகூட உனக்குத் தெரியலையா வசந்தா? மீரா அப்படிச் சம்மதமில்லாம எதுவும் செய்யறவ இல்ல. நீ வேற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கறதா வெச்சுக்குவோம். மீராவையும் சௌதமையும் பிரிஞ்சு உன்னால இருக்க முடியுமா?"

"முடியாது. ஆனா."

"நீ பயப்படறே வசந்தா. அவளைத் தனியா விடவும் பயப்படறே... சேத்துக்கவும் பயப்படறே. அவளை நீ யார்கிட்டேர்ந்தும் தட்டிப் பறிக்கல. மீரா வேண்டாம்னா நீ வேற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாராகணும். இல்லேன்னா, இந்தக் குழப்பம் தீராது. மீராவுக்காகவும் சௌதமுக்காகவும் உன் வாழ்க்கையைக் கெடுத்துக்கிட்டதா நெனைச்சு மீரா குற்ற உணர்ச்சியோட வாழ வேண்டி இருக்கும்."

கிளிஞ்சல்களோடு அவர் நிமிர்ந்தார். "ஆனா, மத்தவங்க சொல்றாங்களேன்னு மீரா பேர்ல பரிதாபப்பட்டு நீ இதுக்கு சம்மதிக்க வேண்டாம், வசந்தா!" என்றார்.

வசந்தன் கட்டுமரத்திலிருந்து எழுந்தான்.

"இல்லப்பா. மீராவுக்குச் சம்மதம்னா, எனக்கும் முழு சம்மதம்தான்ப்பா."

அவன் அப்பா முகத்தில் மலர்ச்சி வந்தது.

"மீராவைவிட ஒரு நல்ல மருமக எனக்குக் கெடைக்க மாட்டா வசந்தா!"

ஃ ஃ ஃ

"வாங்க... வாங்க..." — கண்ணன் இருக்கையிலிருந்து எழுந்து வரவேற்றான். "உட்காரு வசந்த்... எப்படியிருக்கே மீரா?"



அவன் முகத்தில் முந்தின சந்திப்பில் இல்லாத ஒரு சின்ன மலர்ச்சி இருந்ததை மீரா கவனித்தாள்.

கண்ணனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் வசந்தன் அருகில் அமர்ந்தான்.

"கங்கிராஜுலேஷன்ஸ்" என்றான் கண்ணன் மலர்ந்து சிரித்து "கல்யாணமாமே?"

"ஆமாம் கண்ணா..." என்றான் வசந்தன். "இன்விடேஷன்லாம் அடிக்கல. நெருக்கமானவங்களை மட்டும் நேர்ல கூப்பிடலாம்னு."

"குட், குட்!" கண்ணனின் பார்வை வசந்தனிடமிருந்து மீராவுக்கு, மீராவிடமிருந்து வசந்தனுக்கு என்று தாவியது. "எனக்குத் தெரியும். இது இப்படித்தான் முடியும்னு."

மீரா ஒரு சின்ன திடுக்கிடலோடு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் என்ன? அப்படியானால், தன்னையும் வசந்தனையும் சந்தேகப் பார்வை பார்த்துக் கொண்டா கண்ணன் கோர்ட்வரை போக வேண்டும் என்று அடம் பிடித்தான்?

மீரா எழுந்து விட்டாள்.

"வசந்த்... நீ பேசிட்டு வா. நான் வெளியே வெயிட் பண்றேன்."

கண்ணன், வசந்தன் இருவர் முகத்திலிருந்தும் புன்னகைகள் நழுவின.

மீரா கதவு திறந்து வெளியே வந்தாள். பழகிய ஊழியர்களின் புன்சிரிப்புகளையும், அவற்றுக்குப் பின்னே பரபரக்கும் வம்பு ஆர்வத்தையும் ஏற்றபடி விசிட்டர்களுக்கான ஹாலில் காத்திருந்தாள்.

ஐந்து நிமிடங்களில் வசந்தன் வந்து சேர்ந்தான்.

"என்ன மீரா, அப்படி பொசுக்னு எழுந்து வந்துட்டே?" என்று வசந்தன் கேட்பான் என்று எதிர் பார்த்து பதில் தயார் செய்து வைத்திருந்தாள்.

"நெக்ஸ்ட் எங்கே மீரா?" என்று மட்டும் வசந்தன் கேட்டபோது சற்று தடுமாறி விட்டுத்தான் பதில் சொன்னாள்.

ஃ ஃ ஃ

ஆர்ப்பாட்டங்கள் எதுவுமற்ற எளிமையான திருமணமாக அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வசந்தனின் வீட்டுப் பூஜையறைதான் மணமேடை. காகிதத் தோரணங்கள் மட்டுமே அலங்காரம். குத்து விளக்குகளில் சுடர்கள் வெண்சிவப்பாக நிமிர்ந்து எரிந்தன. மலர்ச்சரங்கள், ஊதுவத்திகள் மணம் பரப்பின.

வசந்தன் புது வேட்டியும் சட்டையும் அணிந்திருந்தான். மீரா எளிமையான நூல் புடவை உடுத்தியிருந்தாள்.

இருவர் கழுத்திலும் மாற்றிக் கொண்ட சம்பங்கி மாலைகள்.

அலுவலகத் தோழர்கள், வேண் தோழிகள் என்று நெருக்கமானவர்கள் மட்டுமே கூடியிருந்தனர்.

"ரெண்டு பேரும் இப்படி ஊஞ்சல்ல உக்காருங்களேன்" என்றாள் அத்தை.

வசந்தனும் மீராவும் ஊஞ்சலில் புன்னகையோடு அமர்ந்தார்கள்.

"மீரா, 'ஆனந்தாம்ருத' பாடுவியே... இப்பப் பாடேன்"— அத்தை அவளை நிமிண்டினாள்.



மீராவுக்கு உண்மையிலேயே நெஞ்சு நிறைந்து ஆனந்தம் ததும்பிக் கொண்டிருந்தது. அவளைச் சுற்றியிருக்கும் நல் இதயங்களைப் பார்க்கப் பார்க்க இதயம் வெடித்து விடும் போல் நிறைந்து போனது. அந்த நிறைவுடன் அவள் பாடத் தொடங்கினாள்.

"ஆனந்தாம்ருத கர்ஷிணி... அம்ருத வர்ஷிணி."

வார்த்தைகளுடன் குரல் குழைந்து, ராகத்துடன் இழைந்து ஒலித்தது.

வாழையிலைகளைப் பிரித்துப் பிரித்து சிதையாததை மட்டும் அடுக்கிக் கொண்டிருந்த வசந்தனின் அப்பா கண்களை மூடிக் கொண்டார்.

பொருந்தி உட்கார முடியாமல் பொம்மைகளைப் புரட்டித் தேய்த்துக் கொண்டிருந்த கௌதமின் ஒலியைத் தவிர அந்த இடத்தில் வேறு குறுக்கீடுகள் இல்லை.

மீரா பாடி முடித்ததும், தோழிகள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

"மீரா மட்டும் பாடினா போதுமா? வசந்தும் பாடணும்" என்று சித்ரா குரல் கொடுத்தாள்.

கூடியிருந்தவர்கள், வயதை மறந்து கல்லூரி மாணவர்கள் போல, "வசந்த் பாடு, வசந்த் பாடு" என்று ஒரே குரலில் குரல் எழுப்பினர்.

வசந்தன் புன்னகையுடன் இரு கைகளையும் உயர்த்தினான். குரல்கள் அடங்கின. கௌதம் இந்தச் சத்தத்தில் மிரண்டு ஓடிவந்து அவன் கால்களைக் கட்டிக் கொள்ள, வசந்தன் அவனை அப்படியே தூக்கி மடியில் இருத்திக் கொண்டான். ஒற்றைக் கையை கௌதமின் மார்பில் வைத்துத் தன்னுடன் நெருக்கிக் கொண்டான்.

கால்களால் தரையை உந்தி ஊஞ்சலை மிக மெதுவாக அசைத்து ஆட்டினான்.

ஊஞ்சல் முன்னும் பின்னுமாக நகர ஆரம்பித்ததும் கௌதம் சந்தோஷமாகி அதன் சங்கிலியைப் பற்றிக் கொண்டான்.

வசந்தன் இமைகளை மூடி தொண்டையைச் செருமிக் கொண்டு கணீர் என்ற குரலில் ஆரம்பித்தான்.

''ஆண்டவன் அன்பே சக்தி தரும்...''

ஒரே ஒரு இடத்தில் குரல் பிசிறடித்து சுருதி விலகிய போது, அவன் கைகளால் கும்பிட்டு 'மன்னியுங்கள்' என்று சைகை செய்து பாட்டைத் தொடர்ந்தான்.

பாடி முடித்ததும் அவனுக்கும் கைதட்டல்கள் விழுந்தன. கைதட்டல்கள் ஓயும் முன் மீரா அடுத்த பாட்டைத் துவக்கினான்.

கனக்கும் நகைகளும், பட்டுப் புடவைகளும், ஜிகினாத் தோரணமுமாக அமர்க்களப்படும் எந்தக் கல்யாணத்திலும் கூட இப்படியொரு பிரத்தியேக நிறைவு கிடைத்ததில்லை என்று கூடியிருந்தவர்களுக்குத் தோன்றியது.

பாடல்கள் முடிந்து தோழிகள் நெஞ்சோடு அணைத்து மீராவை வாழ்த்தினார்கள். நண்பர்கள் கை குலுக்கினார்கள்.

வசந்தனின் அப்பா இலைகளைப் போட, தோழிகளே முன் நின்று பரஸ்பரம் வேலைகளைப் பிரித்துக் கொண்டு பரிமாறி, சாப்பிட உட்காரும் நேரம் போன் ஒலித்தது.

வசந்தனின் அப்பா எடுத்தார். மீராவைத் திரும்பிப் பார்த்தார்.

''மீரா, உனக்குத்தாம்மா போன்...கண்ணன் கிட்டேர்ந்து...'' என்றார்.



# 17

போன் மீராவின் கைக்கு வந்தது.

இத்தனை நேரம் அவள் முகத்தில் புதுப்பால் பொங்குவது போல் பொங்கி நிறைந்திருந்த ஆனந்தம் சட்டென்று அடங்கிப் போனது.

''ஹலோ...'' என்றாள் வெறுமையாக.

''கங்கிராஜுலேஷன்ஸ், மீரா...''

கண்ணனின் மறுமுனைக் குரலை வைத்து அவன் சந்தோஷமாகச் சொன்னானா, எகத்தாளமாகச் சொன்னானா என்று மீராவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''நான் திடீர்னு புனா புறப்பட்டு வரும் படியா ஆயிடுச்சு. அதான் கல்யாணத்துல கலந்துக்க முடியல...''

''அந்தை சொன்னாங்க...'' என்றாள்.

அவனது வாழ்த்துகளுக்கு நன்றி தெரிவித்தாள்.

வெகு சுருக்கமாக அந்த உரையாடல் முடிந்து விட்டது.

கண்ணன், வசந்தனிடம் பேச விரும்புகிறானா என்று கூடக் கேட்கவில்லை. அவன் அடுத்த வார்த்தை பேசும் முன் மீரா ரிஸீவரை வைத்துவிட்டாள்.

''சாப்பிடலாமா...?'' என்றாள் புன்னகையை வலிய வரவழைத்து.

''இன்னிக்கு ஒரு மாறுதலுக்கு லேடீஸ்லாம் முதல்ல உக்காரட்டும். ஆம்பளைங்கல்லாம் பரிமாறிட்டு அடுத்த பந்தில உக்காரறோம்...'' என்றான் வசந்தன்.

மறுப்பு தெரிவித்த சில பெண்களை அன்பாக அதட்டி உட்கார வைத்துவிட்டு, வசந்தனும் அவன் தோழர்களும் தூக்குகளை எடுத்துக்கொண்டனர்.

ஃ ஃ ஃ

எல்லோரும் கிளம்பிப் போய், அமளி எல்லாம் அடங்கி விட்டது.

மீராவை நெஞ்சோடு அணைத்து, "இனிமேலாவது நீ சந்தோஷமா இருக்கணும், கண்ணம்மா..." என்று வாழ்த்தி, நெற்றியில் முத்தமிட்டுவிட்டு அத்தையும் புறப்பட்டு விட்டாள்.

இரவுச் சாப்பாடு முடிந்து வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு மீரா சமையலறை விளக்கை அணைத்தாள் கொல்லைக் கதவைத் தாளிட்டுவிட்டுக் கூடத்துக்கு வந்தாள்.

வசந்தனின் மடியில் கௌதம் தூங்கிப்போயிருந்தான்.

ஊஞ்சலில் மெள்ள ஆடிக்கொண்டு இருந்த வசந்தனின் அப்பா அவளைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

மீரா தூணில் சாய்ந்து நின்றாள்.

இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்?

நேற்றாக இருந்தால் வசந்தனின் மடியிலிருந்து கௌதமைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குப் போய் இருப்பாள். அல்லது, கௌதமை அவன் மடியிலேயே தூங்க விட்டு விட்டு, அவன் 'குட்நைட்' சொல்லியிருப்பாள்.

ஆனால், இன்று...?

"வசந்தா... புழுக்கமா இல்லியா?" அவனுடைய அப்பா ஊஞ்சலில் இருந்து இறங்கினார். "நானும் கௌதமும் இன்னிக்கு மாடில படுத்துக்கறோமே..."— பாயைச்



சுருட்டி எடுத்துக் கொண்டார். கௌதமை அள்ளிக் கொண்டார். மாடிக்குப் போய்விட்டார்.

மீரா மெள்ள தூணில் முதுகு சாய்த்துக் கூடத்தில் உட்கார்ந்தாள்.

வசந்தனுடைய பார்வை மட்டத்துக்குள் மீரா வந்ததும் அவன் இன்னமும் பார்வையைத் தழைத்துக் கொண்டான்.

"நான் இன்னிக்குக் காலைல ரொம்ப சந்தோஷமா இருந்தேன் வசந்த்..."— மீரா மிக மெல்லிய குரலில் சொன்னாள்.

வசந்தன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களில் வழக்கமாக இருக்கும் குறும்பும் நெருக்கமும் இப்போது காணவில்லை. முகத்தில் லேசான பதட்டம். என்னவோ சொல்ல வேண்டும் போல் அவன் தொண்டைப் பந்து ஏறி இறங்கியது.

அவன் என்னவோ சொல்கிறான் என்று மீராவுக்குத் தோன்றியது. தனக்குத்தான் காதில் சரியாக விழவில்லையோ என்று, "ம்...?" என்றாள்.

"கண்ணன் என்ன சொன்னான், மீரா?" என்று கேட்டான் வசந்தன்.

"புனாவுக்குப் போயிட்டதால வர முடியலைன்னாரு வாழ்த்துச் சொன்னாரு. உன்கிட்டப் பேசணுமான்னு கூட கேக்காம போட்டுன்னு ரிஸீவரை வெச்சுட்டேன்..." என்றாள் மீரா, மன்னிப்பு கோரும் குரலில்.

"அதனால என்ன...? நான் பேசினாலும் அதேதான் சொல்லியிருப்பான்..."

கண்ணனைப் பற்றி அவன் பேசியதாலேயே கண்ணனை அந்தக் கூடத்தில் அரூபமாகக் கொண்டுவந்து

அவர்களுக்கு நடுவில் உட்கார்த்தி வைத்துவிட்டாற் போலிருந்தது.

"லீவு எப்ப முடியுது வசந்த்...?" என்று பொதுவான பேச்சுக்கு மீரா மாறினாள்.

"இன்னும் நாலு நாள்ல..."

அதன்பின் மறுபடி மௌனம். இருவருக்கும் உடைக்கப் பிடிக்காதது போல் நீண்டுகொண்டே போன மௌனம்.

முற்றத்துக் காற்றில் மீராவின் கேசக் கற்றைகள் அலைந்து விளையாடின. தூணைப் பற்றியிருந்த ஒரு கையை அகற்றி, விரல்களால் வெகு இயல்பாக அவள் கேசத்தைக் கோதிக்கொண்ட போது வசந்தனுடைய விழிகளும் அவள் விழிகளும் சந்தித்தன.

மீரா புன்னகைத்தாள்.

வசந்தன் ஒரு தடுமாற்றத்துடன் எழுந்தான். "டயர்டா இருக்கு. காலைல பேசிக்கலாம். குட் நைட்...!"

"குட் நைட்!" என்றாள் மீரா, புன்னகை மாறாமல்.

வசந்தன் தன் அறைக்குள் போய் மறைந்ததும் மெள்ள எழுந்தாள். விளக்கை அணைத்து விட்டு அவளுடைய பழைய அறைக்குப் போனாள்.

ஃ ஃ ஃ

காலையில் சூரிய வெளிச்சம் பட்டு அவள் பதறி எழுந்து வெளியே வந்தபோது, கூடத்தில் காபி மணந்து கொண்டிருந்தது.

வசந்தன் செய்தித் தாளைப் பிரித்து காற்றோடு போராடிக் கொண்டிருந்தான். கௌதம் சாக்பீஸ் கிறுக்கலை நிறுத்தி விட்டு ஓடி வந்து அவள் கால்களைக் கட்டிக் கொண்டான்.



அடுப்படியிலிருந்து 'ஸ்ய்ய்ங்' என்ற சட்னிக்குத் தாளிக்கும் இசை ஓசை. கூடவே மணம்.

"குட்மார்னிங்..." என்று முகத்தில் மலர்ச்சியைக் காட்டினான் வசந்தன்.

இரவு அவள் வெகுநேரம் தூங்காமல் தத்தளித்துக் கொண்டிருந்த காரணத்தால் எழுந்திருக்கத் தாமதமாகி விட்டது என்பதைச் சொல்லிக் கொள்ள அவளுக்கு வெட்கமாக இருந்தது.

"குட்மார்னிங் மீரா..." என்று வசந்தனின் அப்பா சமையலறையிலிருந்தே குரல் கொடுத்தார்.

அவள் கௌதமைத் தூக்கிக் கொண்டாள். "குட் மார்னிங்..." என்று எழும்பாத குரலில் சொல்லிவிட்டு, கிணற்றடிக்கு விரைந்தாள்.

ஃ ஃ ஃ

அத்தை பூஜையறையில் படங்களுக்குப் பூக்களை வைத்துக் கொண்டிருந்த நேரத்தில், சுந்தரி தயக்கத்தோடு அவள் எதிரே வந்து நின்றாள்.

"ஏன் சுந்தரி என்னவோ போல நடக்கறே...?"

"அதைத்தாம்மா உன்கிட்ட சொல்லணும்னு வந்தேன். உட்கார்ந்தா, எழுந்தா கால், மளுக்கிக்கற மாதிரி இருக்கும்மா. கன்னுன்னு வலிக்குது. முடக்குவாதம் வருதோனு தோணுது..."

சுந்தரியின் கையில் இருந்த புத்தகத்தை அத்தை பிடுங்கினாள்.

"கண்ட புஸ்தகத்தைப் படிச்சு, நீயே பாதி டாக்டர்னு நெனைச்சுக்கறே ... எங்கேயாவது இடிச்சிக்கிட்டிருப்பே..! ஒத்தடம் கொடுக்கறேன், வா..."

"எனக்கென்னவோ இது ஆர்த்ரிடிஸ் ப்ராப்ளம்னு..."

"கொஞ்சம் வாயை மூடறியா?"—அத்தை கடிந்து கொள்ளும் குரலில் சொன்னாள்.

சுந்தரி சிரித்தாள். "ஏம்மா, இவ்வளவு பழைய மனுஷியா இருக்கே...பேசினாலே துர்தேவதை ததாஸ்து சொல்லிடும்னு பயப்படறியா...?"

அத்தை, சுந்தரியை முறைத்தாள்.

"அச்செல் காஷாக என்ன சொல்லி இருக்கார் தெரியுமாம்மா? பார்வையற்றோருக்கு. பார்வையற்றோர் வழி காட்டும் பழைய தடப்பிலிருந்து விலகி..."

"உன் காஷாயத்தைக் கொண்டு போய் குப்பைல கொட்டு..." என்றாள் அத்தை, சற்று கோபமாக. "ஒத்தடம் கொடுத்தா எல்லாம் சரியாயிடும். வந்து காலை நீட்டிப் படு..."

சுந்தரி சிரித்துக் கொண்டே புத்தகத்தைத் தன் அம்மா விடமிருந்து பறித்தாள்.

ஃ ஃ ஃ

மீரா துணியை உதறி உலர்த்திக் கொண்டிருந்தபோது வசந்தனின் அப்பா, "இங்கே கொஞ்சம் வாம்மா..." என்று குரல் கொடுத்தார். "வசந்தா, நீயும் வா..."

வசந்தன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் அடையாளம் வைத்து விட்டு கூடத்துக்கு வந்தான். மீராவும்.

"வசந்தா, உங்க ரெண்டு பேருக்கும் டிக்கெட் வாங்கியிருக்கேன்..." என்று இரண்டு ரயில் டிக்கெட்டுகளை அவர் நீட்ட, இருவரும் ஆச்சரியமாகி அவரைப் பார்த்தனர்.



"திடீர்னு உங்க உறவு முறை மாறிப் போனதுல ரெண்டு பேருக்கும் தர்ம சங்கடமாத்தான் இருக்கும். பழகின வீட்ல வேற மாதிரி நடந்துக்கறது கஷ்டம்தான். ரெண்டு, மூணு நாளைக்கு வெளியூர் போயிட்டு வந்தா சரியாயிடும். கௌதம் என்கிட்ட இருக்கட்டும்..."

வசந்தன், மீராவைத் திரும்பிப் பார்த்தான்.

"யோசிச்சா குழப்பமாத்தான் இருக்கும். எனக்காகப் போயிட்டுத்தான் வாங்களேன்!" என்று அவர் சற்று அழுத்தமாகச் சொன்னபோது, வசந்தனால் மறுக்க முடியவில்லை.

ஃ ஃ ஃ

கொடைக்கானல் பஸ் நிலையம் அருகில் இருந்த ஓட்டலில் ரூம் கிடைத்தது. ரயில் பயணத்திலும் சரி, பஸ் பயணத்திலும் சரி... தானும் மீராவும் இயல்பை இழந்து, மாறுவேடம் அணிந்து அவஸ்தைபடுவதுபோல் வசந்தனுக்குத் தோன்றியது.

அவன் மிகவும் குறைவாகத்தான் பேசினான். ஆனால் அவன் பேசிய வார்த்தைகளில் எல்லாம் ஜாக்கிரதை உணர்ச்சி இருந்தது. மீராவுடன் தனியறை என்பது மூச்சுமுட்டுவது போலிருந்தது.

குளித்து உடை மாற்றியவுடன், "ஒரு வாக் போயிட்டு வரலாமா?" என்று அந்த அறையிலிருந்து தப்பித்துச் செல்வது போல வசந்தன் கேட்டான்.

"போகலாமே..." என்று மீரா, தன் ஷாலை உருவி எடுத்துக்கொண்டாள்.

கொடைக்கானலின் தார்ச்சாலைகள் ஈரமாக இருந்தன. வாகனங்களின் புகையால் தெருவோரச் செடிகள் கறுத்துக் கிடந்தன.

ஒரு தேன்நிலவு ஜோடி, இடைவெளி இல்லாமல் ஒருவர் கால் மற்றவரைத் தடுக்க... சிரிப்பு குறையாமல் நடந்தனர்.

வசந்தன் பேரிக்காயைத் துண்டம் போட்டு வாங்கி வந்து மீராவிடம் நீட்டினான். "இது, ஆப்பிளோட க்ராஸ் பண்ணி வளர்த்தது. ருசி வித்தியாசமா இருக்கும்..." என்றான்.

கோக்கர்ஸ் வாக் பகுதியை அடையும் வரை இருவரும் தனித்தனியே இயற்கையை ரசித்துக்கொண்டு வந்தார்கள்.

பச்சைக்குன்றின் இடுப்பில் வகிர்ந்தது போலிருந்த அந்த நடைசாலையில் மேகத்தை உதிர்த்துவிட்டாற் போல பனிப்புகைத் திட்டுகள். இடதுபுறம் சரேலென்று சரிந்த பள்ளத்தாக்கில் பனித்திரையினூடே எத்தனை வர்ணங்கள்! சரத்துணியை உதறியது போல் முகத்திலும் பின் கழுத்திலும் மெலிதான சாரல்.

குளிரை ரசித்து மீரா தோள்களைக் குறுக்கிக் கொண்டாள். வசந்தன் கைகள் சில்லிட்டிருப்பதை உணர்ந்தான்.

மீராவின் கன்னத்தில் அந்தச் சில்லிட்ட கையை வைத்து அழுத்தி, அவளைச் சிலிர்க்கச் செய்து அலற வைக்கப் பழைய வசந்தனால் முடிந்திருக்கும். இப்போது கைகள் தாமாக பாக்கெட்டுகளில் ஒளிந்து கொண்டன.

பச்சைப் பசேலென்ற நரம்புகளுடன் இதழ்களை மட்டும் ஆரஞ்சாக வைத்திருந்த பூவை மீரா ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

"வெல்கம் டு கொடைக்கானல் சார்..." என்று குரல் கணீரென்று அண்மையில் கேட்டது.

கம்பளிக் குல்லாயுடன் கழுத்தில் இரண்டு காமிராக்களைத் தொங்க விட்டிருந்த அந்த போட்டோகிராபர்



பற்களை விரித்துச் சிரித்தான். அவன் அணிந்திருந்த பழைய கம்பளிச் சட்டையில் நிறைய இடங்களில் நூல் பூத்திருந்தது.

"உலகத்திலேயே ரொம்ப அருமையான ஸ்பாட்டுக்கு நீங்க வந்திருக்கீங்க சார்... ரெண்டு பேரும் இந்த பேக்ரவுண்டுல ஒரு போட்டோ எடுத்துக்காம போனா, ஹனிமூனே கம்ப்ளீட் ஆவாது! இப்படி, இந்தக் கல்லுல ஜோடியா உட்காருங்க... இல்ல, இந்தப் பூச்செடியை ரெண்டு பேரும் பாத்திட்டிருக்கிற மாதிரி எடுக்கவா?"

வசந்தன் நெளிந்தான். "அதெல்லாம் வேணாம்" என்றான்.

"ஜஸ்ட் ஃபிஃப்டி ருபீஸ் சார்... மாக்ஸி பிரிண்ட் போட்டு, உங்க வீடு தேடி போட்டோ வரும். பாருங்க, எவ்வளவு ஜோடி நம்மகிட்ட எடுத்திட்டிருக்காங்க..." என்று ஒரு ஆல்பத்தை வசந்தனின் முகத்துக்கு நேரே விசிறிக் காட்டினான். "டோண்ட் ஸே நோ... மேடம், தோளை நேரா போட்டுக்குங்க. சார் இடுப்புல கை போட்டுக்கிட்டு இப்படி நில்லுங்க."

வசந்தன் முகம் சிவந்தது. நான்தான் வேண்டாங்கறேனே."

"வசந்த்... நான் கொஞ்சம் பழம் வாங்கிட்டு வந்துடறேனே" என்று மீரா, அந்தச் சூழ்நிலையைத் தவிர்க்க விரும்பியவள் போல் சற்றுத் தள்ளியிருந்த பழவண்டி நோக்கி நகர்ந்து விட்டாள்.

"யாஷிகா காமிரா சார். படம்லாம் சூப்பரா வரும்... பாருங்க."

போட்டோகிராபர் பிடிவாதமாக ஆல்பத்தை வசந்தனிடம் நீட்டினான்.

வசந்தனுக்குத் திடீரென்று கோபம் கட்டுப்பாட்டை மீறியது. ஆல்பத்தை அவனிடமிருந்து பறித்துப் பள்ளத்தாக்கில் வீசியெறிவதுபோல் கை உயர்த்தி விட்டான்.

ஒரு கணம்... ஒரே கணத்தில் பொட்டில் அறைந்தாற் போல் கோபம் விலகியது. மீரா அவனைப் பார்த்தால் என்ன அர்த்தம் கற்பித்துக் கொள்வாள்?

ஆல்பத்தைத் தழைத்து போட்டோகிராபரிடமே திருப்பிக் கொடுக்கும் போது, வெகு தற்செயலாகத்தான் அந்தப் புகைப்படம் அவன் பார்வையில் இடறியது.

"வசந்த்...இங்க வாயேன். இந்தப் பழங்களைப் பாரேன். வித்தியாசமா, அழகா இருக்கு..." என்று மீரா அவனை அழைத்தாள்.

வசந்தன் திரும்பிப் பார்த்தான்.

மீரா கையை உயர்த்தி, முகத்தில் சிரிப்புடன் அவனை அழைத்துக் கொண்டிருந்தாள்.

"ஒரு நிமிஷம் மீரா..." என்று தயக்கமாகக் குரல் கொடுத்தான்.

மறுபடி ஆல்பத்தில் இருந்த அந்தப் புகைப்படத்தைப் பார்த்தான்.

படகு முகாம் அருகில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

மட்டக்குதிரையின்மீது மீராவை உட்கார்த்தி, அவளுக்குப் பின்னால் நெருக்கி உட்கார்ந்து, அவள் தோளில் முகவாய் பதித்து, அவள் கன்னத்தோடு கன்னம் உரசிக்கொண்டிருந்த முகம்—

கண்ணனுடையது!



# 18

வசந்தன் ஆல்பத்தை மெள்ள மூடினான். அதைத் திருப்பிக் கொடுத்தபோது அவனுடைய கைகளில் சில்லிப்பு நீங்கி, லேசாக வியர்த்திருந்தது.

புகைப்படத்தில் இருந்த கண்ணனும், மீராவும் ஆனந்தமாகச் சிரித்தது இப்போதுகூட இந்த மலைச் சிகரத்தில் எங்கு திரும்பினும் எதிரொலிப்பது போல் இருந்தது.

ஆல்பம் தூக்கி எறியப்படாமல் முழுசாகத் திரும்பக் கிடைத்ததும் தனக்குள் முணுமுணுத்தபடி, சற்றே அச்சத்துடன், அந்த போட்டோ கிராபர் அடுத்த ஜோடி தேடி நகர்ந்து விட்டான்.

கண்ணன், மீரா!

அவனுடைய கண்ணன், அவனுடைய மீரா!

புகைப்படத்தில் இருவர் கண்களிலும் ஊற்றாக வீசிய ஒளியும், நிரம்பித் ததும்பின ஆனந்தமும்...

யுகத்தின் இறுதிவரை அந்த ஆனந்தம் தொடரும் என்ற நம்பிக்கையுடன்தானே அன்றைக்கு அப்படிப் பொங்கிச் சிரித்திருக்கிறார்கள்?

இடையில் கண்ணனுக்குப் புத்தி தவறி விட்டது.

புத்தி தவறியவன் செய்த செயலுக்கு தானும் துணை போகலாமா?

வசந்தனுக்கு உடலும் மனமும் பதறின.

கண்மணியின் உடைமை இப்போது வசந்தனின் பொறுப்பில் இருக்கிறது. அவ்வளவுதான்.

வைரத்தைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி நண்பன் கொடுத்தால் அதைத் தன் மாலையில் கோத்துப் போட்டுக் கொள்வது எப்பேர்ப்பட்ட அயோக்கியத்தனம்?

பள்ளத்தாக்கில் இருந்து குளிர்க்காற்று சுழன்று எழும்பி அவனை நனைத்தது.

ரம்புடான் பழங்களை அள்ளி எடுத்துக் கொண்டு மீரா வந்து சேர்ந்தாள்.

"என்ன வசந்த், ஒரு வழியா அந்த போட்டோ கிராபரைத் துரத்திட்டியா?"

"மீரா..."

"ம்..."

"நாம இன்னிக்கு நைட்டிரெயின்ல ஊருக்குத் திரும்பிடலாம்."

மீரா ஏன் என்று கேட்கவில்லை.

"எனக்கு கௌதமைப் பார்க்கணும் போல இருக்கு மீரா. உனக்கு?"

மீரா சற்றே யோசித்து விட்டு, "எனக்கும்தான்" என்றாள்.

ஃ ஃ ஃ

கொடைக்கானலைச் சுற்றி விட்டு வந்த அவர்களைப் பார்த்ததும், வசந்தனின் அப்பா சற்று ஆச்சரியப் பட்டுப் போனார். ஆனால் எதுவும் கேட்கவில்லை.

வசந்தன் அவர் பார்வையைத் தவிர்த்து கௌதமை அள்ளிக் கொண்டதில் ஒரு அவசரம் கூட இருந்தது.

"சித்ரா ரெண்டு தடவை போன் பண்ணிட்டா வசந்தா..." என்றார். அவங்க வீட்டுல ஒரு டின்னருக்கு



உங்க ரெண்டு பேரையும் வரச் சொல்லியிருந்தாளாமே... 'ஊர்லேர்ந்து திரும்பி வந்ததும் மறக்காம வரச் சொல்லுங்க அங்கிள்'னு ஞாபகப் படுத்தச் சொன்னா"

"சரிப்பா.."

"குளிச்சிட்டு வாங்க. அடைமாவு இருக்கு. சூடா சாப்பிடலாம்" என்று இவர் சமையலறைக்குள் நகர்ந்து விட்டார்.

ஃ ஃ ஃ

சித்ரா வீட்டு ஊஞ்சலில் வெற்றிலைச் செல்லத்தைத் திறந்து வைத்துக் கொண்டு அவள் மாமியார் உட்கார்ந்திருந்தாள். தொலைக்காட்சி பெட்டியில் ஏதோ ஒரு கதாநாயகன் ஏதோ ஒருவில்லனைப் புரட்டிப் புரட்டி அடித்துக் கொண்டிருந்தான்.

அலுவலகத்திலிருந்து திரும்பும் வரை குழந்தையைப் பார்த்துக் கொண்டதற்குப் பிராயச்சித்தமாக, தான் திரும்பிய பிறகு, தொலைககாட்சியோடு ஐக்கியமாகி, தண்ணீர் டம்ளரைக் கூட எடுத்துத்தர மாட்டாள் மாமியார்என்று சித்ரா சொல்லியிருக்கிறாள்.

மீரா டைனிங் ஹாலில் உட்கார்ந்தபடி தொலைக்காட்சியில் லயித்துப் போயிருந்த சித்ராவின் மாமியாரை ரகசியமாக ரசித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

கூடத்திலிருந்து டைனிங்ஹால் சற்று மறைவாக ஒதுங்கியிருந்தது. மீரா பார்த்துக் கொண்டிருந்ததை சித்ராவின் மாமியார் உணராமல், 'ஐயையோ, இந்தக் கட்டைல போறவன் என்னடி இப்படிப் பண்றான்... இந்தப் பொண்ணும் பாரு அசடு மாதிரி அவனை அப்படியே நம்பறது...!. என்று பக்கத்தில் இருக்கும் யாரிடமோ சொல்

லது மாதிரி தன்பாட்டுக்குத் திரைக்காட்சியில் ஒன்றிப் பேசிக் கொண்டிருந்தாள்.

சித்ரா, மீராவின் முகத்தைப் பற்றித் திருப்பினாள்.

"ஏய். அங்க என்ன வேடிக்கை? இது தெனம் நடக்கற ராமாயணம். பக்கத்துல பாம்பு வந்து படம் எடுத்து ஆடினாக்கூட எங்க மாமியாருக்குத் தெரியாது. நீ இப்ப ஒழுங்கா சாப்பிடப் போறியா, இல்லையா?" என்று அதட்டினாள்.

சாப்பிடேன் மீரா" என்று சொல்லிவிட்டு வசந்தன் புன்னகை மாறாமல் சாப்பிடத் துவங்கினான்.

மீரா கண்கள் பளபளக்க இன்னொரு முறை சித்ராவின் மாமியாரைப் பார்த்துவிட்டு சாப்பிடத் துவங்கினாள்.

நெய் மணக்கும் சர்க்கரைப் பொங்கலும், எண்ணெய் கமகமக்கும் புளியோதரையும் என்றைக்குமே சித்ராவின் கை மணத்துக்குப் பெயர் போனவை.

அவளுடைய சந்தோஷத்துக்காக சற்று அதிகப்படியாகவே வயிற்றில் திணித்துக்கொண்டு மீராவும் வசந்தனும் ஹாலுக்கு வந்தார்கள்.

"அப்புறம்?" என்றாள் மாமியார், தொலைக்காட்சி ஒலியைக் குறைக்காமலே. "ஹனிமூனுக்கு எங்கேல்லாம் போனீங்க?"

"அத்தை, நீங்க சாப்பிட வரீங்களா?" என்று சித்ரா அவளை அழைத்துப் பார்த்தாள்.

"இருக்கட்டும் என்ற மாமியார். "ஏண்டி மீரா, உனக்கு எத்தனை குழந்தை?" என்று கேட்டாள். அவள் முகத்தில் வெகு அக்கறையுடன் விசாரிப்பது போன்றதொரு பாவம்,

"ஒரு பையன், கௌதம்" என்றான் வசந்தன்.



"ஒண்ணோட நிறுத்திடாதீங்கப்பா... பாரு, ஒத்தைப் பிள்ளையா இருக்கறதாலத்தான் மாத்து எடம் இல்லாம, எல்லோருக்கும் பாரமா நான் ஒரே எடத்துல கேம்ப் அடிச்சு உக்காந்திருக்கேன். கண்ணனை மாதிரி ஒண்ணு பெத்துக்குடுத்துட்டே... இப்ப வசந்தன் மாதிரி அடுத்த வருஷத்துக்குள்ள ஒண்ணு பெத்துக்குடுத்துடு" என்று மீராவிடம் சொல்லி, தான் சொன்னதைத் தானே ரசித்து, கண் சிமிட்டினாள்.

"சித்ரா, நான் காலைல ஃப்ளைட்ல ஊருக்குப் போறேன். இன்னும் பேக்கிங்லாம் முடியல... கெலம்பட்டுமா...?" என்றான் வசந்தன்.

சித்ரா குழந்தையை இடுப்பில் இடுக்கிக்கொண்டு, அவசரம் அவசரமாகக் குங்குமம் எடுத்து மீராவிடம் நீட்டினாள்.

ஃ ஃ ஃ

கார் சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

போக்குவரத்து குறைவாக இருந்த போதிலும் வசந்தன் ஒருமுறைகூட சாலையிலிருந்து பார்வையை விலக்கி மீராவின் பக்கம் பார்க்கவில்லை.

சித்ராவின் மாமியார் பேசிய பேச்சு மறுபடி, மறுபடி அவன் மனதில் சில்வண்டின் ரீங்காரம் போல் விட்டு விட்டு ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

ஒரு கல்யாணம் முடிந்தவுடன், வளைகாப்பு, சீமந்தம் என்று பேச்சு திசை திரும்புவது இயல்பாக இருக்கலாம். இயற்கையான எதிர்பார்ப்பாகக்கூட இருக்கலாம். ஆனால் எல்லோர் கல்யாணம் போலவா தன் கல்யாணம்?

வீட்டுக்குள் நுழைந்தவுடன் அப்பாவின் பார்வை, கேட்க முடியாத கேள்வியை வைத்துக் கொண்டு தன்னைத் துளைக்கப் போகிறது.

இன்றைக்கு இரவும் தானும் மீராவும் வேறு வேறு அறைநோக்கிச் சென்றால் அப்பாவின் மனம் என்ன பாடு படும் என்று தோன்றியது.

ஒரே படுக்கை அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு கட்டிலின் இந்தப்பக்க விளிம்பில தானும், அந்தப்பக்க விளிம்பில் மீராவுமாக எதிரெதிர் திசையில் உட்கார்ந்துகொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ளாமல் மௌனமாக, தர்மசங்கடத்துடன் வீற்றிருப்பது போல் ஒரு சித்திரம் மனதில் உருக் கொண்டது.

அந்தக் கற்பனைச் சித்திரமே அவனுள் நடுக்கத்தை ஏற்படுத்தியது.

இந்த மாதிரியான ஒரு நிலையைப் பற்றி மீராவிடம் எப்படிப் பேசுவது?

"வசந்த்..."

மீராவின் குரல் சின்னத் தயக்கத்துடன் வந்தது.

லேசான திடுக்கிடலோடு "ம்..." என்றான் வசந்தன்.

"கொஞ்ச நேரம் பீச்ல உக்கார்ந்து பேசிட்டுப் போலாமா?"

"ம்ம்..."

வசந்தன் கடற்கரையை நோக்கிக் காரைத் திருப்பி னான்.

ஃ ஃ ஃ



அந்த நேரத்தில் கடற்கரையை ஒட்டிய சாலையில் சொற்பமான வண்டிகளே நின்றிருந்தன.

காரிலிருந்து இறங்கியதும், அரை டிராயர் அணிந்த சிறுவன் ஒருவன் எங்கிருந்தோ ஓடிவந்து முழுவதுமாக மலர்ந்திருந்த மல்லிகைச் சரங்களைக் காட்டி, "அக்கா, வாங்கிக்கக்கா" என்று இறைஞ்சினான்.

"பூ இருக்கு வேணாம்பா" என்று மறுத்தாள் மீரா.

"அக்கா, அக்கா" என்று கெஞ்சத் தொடங்கினான் அவன். "பூவெல்லாம் வித்துட்டுப் போனாத்தாங்கா வீட்டுல சோறாக்க முடியும். இப்ப வீட்டுக்குப் போனாத் தாங்கா என்னால வீட்டுப் பாடமெல்லாம் பண்ண முடியும். வேணாம்னு சொல்லாதேக்கா வாங்கிக்கக்கா."

இறைஞ்சுதலாகத் தொடங்கிய அவன் குரல் தழதழந்து அழுகைக்கு முன்னோடியாக மாறியது. நெஞ்சில் எவ்வளவோ வேதனையைப் புதைத்து வைத்துக்கொண்டு கொஞ்சமே கொஞ்சம் துன்பத்தை மட்டும் வெளிப்படுத் தின மாதிரி தோன்றியது மீராவுக்கு.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

கடற்கரை விளக்கின் வெளிச்சம் அவன் முகத்தில் பிரதி பலித்துக் கொண்டிருந்தது. பட்டு வேட்டியின் பளபளப்பு போல் அந்தச் சின்னஞ் சிறிய முகத்தில் ஒரு களை. இருந் தாலும் கூட ஏழ்மையின் தாக்குதலை அவனது உடை களிலிருந்தும், செருப்பற்ற தூசு படர்ந்த கால்களிலிருந்தும் அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

"வாங்கிக்கக்கா" என்றான் பரிதாபமாக.

சிறுவனிடமிருந்த பூவை மீரா மொத்தமாக வாங்கிக் காருக்குள் வைத்தாள். அவன் காசை வாங்கிக் கொண்டு சந்தோஷம் துலங்க ஓடிப்போனான்.

''அவ்வளவையும் வாங்கணுமா மீரா? அவன் நம்மைப் பேச்சிலேயே ஏமாத்தியிருந்தா...?'' என்று கேட்டான் வசந்தன்.

''போயிட்டுப் போறான் வசந்த். நம்பறது நம்ம குணம். ஏமாத்தறது அவன் குணமா இருந்தா இருந்துட்டுப் போகட்டுமே...நம்பி ஏமாந்தவங்களைப் பாத்து இப்படித் தப்பா நடந்துகிட்டியேன்னு யாரும் கை நீட்டிச் சொல்லிட போறதில்லை...'' என்றபடி நடை பயிலுகிறவர்களுக்கான பாதையில் ஏறினாள் மீரா.

ஒரு பசு மாடு சோம்பலாக எழுந்து மணலை அசுத்தம் செய்தது. ஒரு சர்தார்ஜி வாக்மேனை மாட்டிக் கொண்டு, அவர்களைப் பார்த்தபடி வேக வேகமாக அடியெடுத்து வைத்து நடந்து போனான்.

அந்த சர்தார்ஜியைப் பார்த்துக் கொண்டே நடை பாதையில் ஏறியபோது வசந்தனுக்குத் தடுக்கி விட்டது. தடுமாறி விழப் போனவன், தன்னிச்சையாக மீராவின் தோள்களைப் பற்றினான். அதே வேகத்தில் கைகளை விலக்கிக் கொண்டு ''ஸாரி'' என்றான்.

மீரா அவனை ஆச்சர்யமாகப் பார்த்தாள்

''இப்ப எதுக்கு ஸாரி?'' என்று கேட்டாள். ''என்னைத் தொட்டதுக்கா? இதுவரைக்கும் நீ என்னைத் தொட்டதே இல்லையா? உன் கை எம்மேல பட்டதே இல்லையா?''

வசந்தன் பதில் இன்றித் தவித்தான்.

''இதைப் பத்தித்தான் உன்கிட்ட பேசணும்னு சொன்னேன், வசந்த்.''

மணலில் கால்கள் புதைய சற்று தூரம் நடந்தபோது வசந்தன் எதுவும் பேசாமல், ஆனால் எதையோ பேச வேண்டும் போன்ற தவிப்புடன் நடந்தான்.



மணல் சற்று மேடிட்ட பகுதியில் அமர்ந்ததும் மீரா அவன் கண்களுக்குள் பார்த்தாள்.

''வசந்த், எனக்கு இது பிடிக்கல...'' என்றாள். ''என்னவோ தப்பு பண்ணிட்டவன் போலவே நீ என்கிட்ட நடந்துக்கறே.''

வசந்தன் உதடுகளை சரப்படுத்திக் கொண்டான்.

''தப்பு இல்லையா மீரா? அப்பா கேட்டதும், நான் உடனே சரின்னு சொல்லியிருக்கக் கூடாதுன்னு இப்பத் தோணுது. நீ வெறும் மீராவா இருந்தப்ப எனக்கு எந்தத் தடுமாற்றமும் இல்ல! உன்கிட்ட சகஜமாப் பேச முடிஞ்சது. உன்னை சகஜமாத் தொட முடிஞ்சது. ஆனா, உன் கழுத்துல தாலி கட்டினப்புறம் எனக்கு கையைக் கட்டிப்போட்ட மாதிரி இருக்கு. உண்மையைச் சொல்லு...உனக்கு அந்த மாதிரி தோணவே இல்லையா?''

''எனக்கும் முதல்ல அப்படித்தான் இருந்தது வசந்த். ஆனா, இப்ப நான் தெளிவா இருக்கேன்.'' மீரா மணலை அள்ளி கை இடுக்கு வழியே சரிய விட்டாள். ''நாம ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் நிமிர்ந்து பாக்க முடியாம, மனசுல ஒண்ணை வெச்சுக்கிட்டு, வெளில ஒண்ணு பேசிட்டு இருக்கறதுக்காகவா கல்யாணத்துக்கு சம்மதிச்சோம்? இல்ல! நிச்சயமா இல்ல! நிச்சயமா இல்ல! நானும் நீயும் ஒருத்தரை ஒருத்தர் முழுசாப் புரிஞ்சிக்கிட்டவங்கன்ற தைரியத்துலதான் சேர்ந்து இருக்கலாம்னு முடிவு பண்ணினோம்.''

வசந்தன் நெளிந்தான். நீதிமன்றம் பிரித்துப் பார்த்து விட்டாலும், இன்னும் அவனால் கண்மணியிடமிருந்து மீராவைப் பிரித்துப் பார்க்க முடியவில்லை என்பதை இவளிடம் எப்படிச் சொல்வது?

"ஆனா, உன்னை என்னால மனைவியா பார்க்க முடியல மீரா..." என்று சொல்வதற்குள் நாக்கு உலர்ந்து விட்டது.

"பார்க்க வேண்டாம்! மனைவியாத்தான் பார்க்கணும்னு யார் உன்னை வற்புறுத்தினாங்க? நீ என்னை மீராவா பாரு வசந்த். அது எனக்குப் போதும். தாலி கட்டின காரணத்துக்காக என்னை யாரோவா பார்த்து உன்னையும் வருத்திக்காதே. அதை என்னால தாங்க முடியல. நான் மீராவாவே இருக்கேன். நீ வசந்தனாவே இரு. நாம சேர்ந்து இருக்கறது வேற யார் கண்ணையும் உறுத்தாம இருக்கறதுக்கு கழுத்துல இந்தத் தாலி இருந்துட்டுப் போகட்டும்..."

மேலே வானில், மேகங்கள் நிலவை மூடுவதும், விலகுவதுமாக வேகமாக நடை போட்டன.

வசந்தன் தனக்குள்ளேயே சற்று நேரம் தடுமாறிவிட்டு மெள்ளச் சொன்னான்.

"அப்படியில்ல மீரா... இத்தனை நாளா, வசந்தனா நான் உன்னைத் தொட்டபோது, அது உனக்குப் பெரிசாத் தோணியிருக்காது. ஆனா இப்ப தொட்டா, தாலி கட்டின ஆம்பளையா தொடப் பார்க்கறேனோன்னு நீ நெனைச்சிடுவியோன்னு தான்..."

"வசந்த்.. நான் இப்ப ஆம்பளை துணைக்காக ஏங்கலை. நல்ல நண்பனுக்குத்தான் ஏங்கிட்டிருக்கேன்.." மீராவின் கண்களில் ஈரத்தில் நிலா பளபளத்தது. "அதையும் நான் இழந்துடுவேனோன்னு இப்ப பயம் வந்திருச்சு..."

"மீரா" வசந்தன் பதறி அவள் கையைப் பற்றினான்.

மணல் துகள்கள் ஒட்டிக்கொண்டு இருந்த அவனுடைய கைகளைத் தன் கைகளுக்குள் வைத்து அழுத்தினாள்.



"தப்பு எம் பேர்லதான் மீரா. முதல்நாளே உன்கிட்ட என் மனசுல இருக்கறதைத் தெளிவா எடுத்துச் சொல்லியிருக்கணும். எங்கேர்ந்தோ ஒரு காம்ப்ளெக்ஸ் வந்து தலை மேல பாரமா உக்கார்ந்துடுச்சு. இப்ப தெளிவாய்டுச்சு. வரியா, கொஞ்ச நேரம் தண்ணில நின்னுட்டு வரலாம்?"— வசந்தன் பழைய உற்சாகத்தோடு கேட்டான்.

மீரா முதலில் எழுந்தாள். பறக்கும் புடவைத் தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டு வசந்தன் எழுந்திருக்க கை நீட்டினாள்.

வசந்தன் அந்தக் கையைப் பற்றினான்.

♣ ♣ ♣

கரையைப் பளார் என்று அறைந்த அலைகள், திரும்புகையில், வலித்ததோ என்று நுரைப்பூக்களால் வருடிக் கொடுத்தன.

படம் எடுத்து எழும்பும் அலை முதுகில் நிலா வெள்ளிக் கோடுகள் வரைந்தது.

வசந்தனும் மீராவும் கைகோத்து நின்றார்கள். ஒவ்வொரு அலை திரும்புகையிலும் கால்கள் ஈரமணலில் இன்னும் சற்றுப் புதைந்தன.

நிலா வெளிச்சம் அல்லாத இன்னொரு வெளிச்சம் அலையில் படர்ந்தது. நகர்ந்தது. மீரா, வசந்தன் முகத்தில் மையம்கொண்டது.

"மிஸ்டர்..." என்ற அதிகாரக் குரலில் சற்று எள்ளலும் இருந்தது.

டார்ச் வெளிச்சத்தைப் பீய்ச்சிக் கொண்டு இரண்டு கான்ஸ்டபிள்கள் நின்றிருந்தார்கள்.

"இந்நேரத்துக்கு இங்கே என்னய்யா ஜல்ஸா பண்ணிட்டிருக்கீங்க ரெண்டு பேரும்? ஜீப்புல இன்ஸ்பெக்டர் இருக்காரு. கூப்புடறாரு. நடங்க... நடங்க..."

# 19

கான்ஸ்டபிளின் அசிங்கமான கேள்வி வசந்தனைக் காயப்படுத்தினாலும் அவன் அதிரவில்லை. மீராவிடமிருந்து கையை விலக்கவும் இல்லை. அலைகளில் இருந்து நகர்ந்து, உலர்ந்த மணல் பகுதிக்கு வந்ததும் கான்ஸ்டபிளிடம், "எங்கே இருக்கார் உங்க இன்ஸ்பெக்டர்?" என்றான்.

சாலையில் ஜீப்பின் முன்பகுதியில் சாய்ந்து நின்றிருந்த இன்ஸ்பெக்டர் புருவங்களை நெரித்து வரவேற்றார்.

வசந்தன் தன்னை அறிமுகம் செய்து கொண்டதும் மீராவையும் அவனையும் பார்த்துப் பொதுவாகப் புன்னகைத்தார்.

"ஜீப்புக்குள்ள பாருங்க... ரெண்டு ஜோடியை உக்கார வெச்சிருக்கோம். கழுத்துல தாலி இல்ல. கேட்டா ஃப்ரெண்ட்ஸ்னு சொல்றாங்க. நண்பர்களாயிருக்கிறவங்க இருட்ல, பீச்சுல உக்காந்திருக்க நேரம் காலம் கிடையாதா சார்?" என்று நட்பான குரலில் பேசினார்.

"உங்க கான்ஸ்டபிள் எங்ககிட்ட ரொம்ப இன்ஸலண்டா பேசினார் இன்ஸ்பெக்டர்" என்றான் வசந்தன், கோபத்தை அடக்கிக்கொண்டு.

"போலீஸ்காரங்கன்னா அப்படித்தான் பேசுவாங்க சார். நல்லவங்க யார், பொல்லாதவங்க யார்னு தெரியற வரைக்கும் மயிலு, மயிலுன்னு பேசிட்டிருந்தா எங்களையே



ஏச்சிட்டுப் போயிடுவாங்க. பாத்துக்கிடுங்க. கணவன்—மனைவியா இருந்தாக்கூட இப்படி நேரம் கெட்ட நேரத்துல பீச்சுல நீங்க தனியா இருக்கறது உங்களுக்கும் நல்லதில்ல, எங்களுக்கும் தலைவலி... பாத்துக்கிடுங்க. நாட்டுல இருக்கற அத்தனை பேரும் யோக்கியமானவங்களா இருந்தா, பிரச்னையே இல்லையே... என்ன மிஸ்டர் நான் சொல்றது? உங்க கணவரைக் கூட்டிக்கிட்டு வீட்டுக்குப் புறப்படுங்க. கௌம்புங்க சார்..."

காரில் ஏறியதும் மீரா, வசந்தனைப் பார்த்துச் சிரித்தாள்

"நாம சேர்ந்து இருக்கறது வேற யார் கண்ணையும் உறுத்தாம இருக்கறதுக்கு கழுத்துல இந்தத் தாலி இருந்துட்டுப் போகட்டும்னு சொல்லி அரை மணி நேரம் கூட ஆகலை. இதுக்கு ஒரு மரியாதை கெடைச்சிருக்கு பாத்தியா?"

வசந்தன் இறுக்கம் தளர்ந்து புன்னகை செய்தான்.

"காரை சீக்கிரம் எடு. 'நோ பார்க்கிங் பாத்துக்கிடுங்க'ன்னு சொல்லிட்டே அந்த இன்ஸ்பெக்டர் மறுபடி வந்துடப் போறாரு" என்று மீரா சொன்னதும் வசந்தன் வாய்விட்டுச் சிரித்தான். காரை நகர்த்தினான்.

ஃ ஃ ஃ

கதவைச் சாத்திவிட்டு மீரா கட்டிலில் வந்து உட்கார்ந்தாள்.

படித்துக்கொண்டிருந்த பத்திரிகையை மூடிவிட்டு "கௌதம் தூங்கியாச்சா?" என்றான் வசந்தன் எழுந்தபடி.

"ம். மாமா மாடிக்கு எடுத்துட்டுப் போயிட்டார்" என்ற மீரா ஒரு சின்ன தயக்கத்துக்குப் பின், "மாமாவைப்

பார்த்தியா வசந்த்? நாம ரிசிப்ட்டே கார்லேர்ந்து எறங்கற தைப் பார்த்ததும் அவர் மூஞ்சில லைட்டு போட்டா மாதிரி ஒரு வெளிச்சம் வந்ததே, கவனிச்சியா?'' என்று கேட்டாள்.

''அப்பா அப்படித்தான். நம்ம சந்தோஷம்தான் அவர் சந்தோஷம் மீரா!'' என்று வசந்தன் நெகிழ்ந்த குரலில் சொன்னான்.

''ஆனா, நானும் நீயும் வேற வேற ரூம்ல தூங்கினா அந்தச் சந்தோஷம் அவர் மூஞ்சிலேர்ந்து காணாமப் போயிடும் வசந்த்'' என்றாள் மீரா.

''கதவைச் சாத்திட்டே இல்லே?''

''யெஸ்...''

''குட் நைட்!''

''குட் நைட்!'' என்றாள் மீரா

ஃ ஃ ஃ

வழக்கம் போல, காரின் சத்தம் கேட்டதுமே, சுந்தரி தான் கதவைத் திறந்தாள். காரில் இருந்து இறங்கிய கண்ணன் முகமெங்கும் சந்தோஷம் ததும்ப விரைந்து வந்தான்.

''சுந்தரி, அத்தை எங்கே? இன்னும் தூங்கலியே?''

''அம்மா டி.வி. பாத்துட்டிருக்காங்க'' என்றாள் சுந்தரி, அவனுடைய உற்சாகத்தால் கவரப்பட்டு.

சத்தம் கேட்டு அத்தை நிமிர்ந்தாள்.

கண்ணன் அவள் அருகில் வந்து அமர்ந்தான். பரீட்சையில் முதலாவதாகத் தேறிவிட்டு, அம்மாவின்



எதிரில் வந்து நிற்கும் மகனின் பரபரப்பு அவன் முகத்தில் இருந்தது.

''அத்தை, இதப்பாரு'' என்று கையிலிருந்த கண்ணாடித் தாளிட்ட ஃபைலை அவளிடம் நீட்டினான். ''நம்ம கம்பெனி டீலுக்கு அமெரிக்காலேர்ந்து ஆர்டர்ஸ் வந்திருக்கு.''

முந்தைய அத்தை புரிகிறதோ, இல்லையோ அதை வாங்கிப் பார்த்திருப்பாள். அவனை இழுத்து உச்சந்தலை யில் முத்தமிட்டிருப்பாள். பூஜையறையில் வைத்து குங்குமமும், பூவும் தூவி அவனிடம் தந்து, 'நீ அமோகமா இருக்கணும்!' என்று வாழ்த்தியிருப்பாள். ஆனால், இப்போது எதுவும் புரியாதவன் போல், அந்த ஃபைலை பார்வையால் கூடத் தீண்டாமல் நகர்ந்து கொண்டாள்.

கண்ணன் முகத்து சந்தோஷம் காயப்பட்டுச் சிதைந்தது.

''அத்தை, எவ்வளவு சந்தோஷமான விஷயம் சொல் றேன்... ஏன் இப்படி விட்டேத்தியா நடந்துக்கறே? நீ ரிப்பன் வெட்டி ஆரம்பிச்சு வெச்ச கம்பெனி, அத்தை. இது எவ்வளவு பெரிய ஆர்டர் தெரியுமா? என்னைப் பாக்க மாட்டியா? 'நல்லா இரு' னு உன் வாயால சொல்ல மாட்டியா?''

கண்ணன் சற்று ஆவேசத்துடன் அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பிப் பிடித்தான்.

அத்தை அவனை வெறித்துப் பார்த்தாள். அவள் கன்னத்தில் பதிந்திருந்த அவன் கையை விலக்கினாள்

''நல்லா இரு!'' என்றாள் ஒரு புன்னகையைக்கூடச் சேர்க்காமல்.

ரிமோட்டில் தொலைக் காட்சியை அணைத்துவிட்டு விருட்டென்று உள்ளே போய் தன் அறையில் படுத்து விட்டாள்.

கண்ணன் அப்படியே உறைந்து போயிருந்தான்.

அவன் தோளை சுந்தரியின் கை பற்றியது.

''கண்ணா... அம்மாவுக்கு உடம்பு சரியில்ல'' என்று மிக மெல்லிய குரலில் சொன்னாள். அவனிடமிருந்து அந்த கிளையை வாங்கினாள்.

''எக்ஸலண்ட், கண்ணா!'' என்றாள். முகத்தில் நிறைய உற்சாகம் காட்டி.

கண்ணன் அவளை உயிரற்ற பார்வை பார்த்தான். எழுந்தான். தளர்ந்த நடையில் தன் அறை நோக்கி நடந்தான்.

''கண்ணா.''

சுந்தரியின் குரல் தேயத் தேய கண்ணன் அறைக் கதவை சாத்திவிட்டான்.

⁂ ⁂ ⁂

தோட்டத்தில் அந்தி வெயிலின் பொன்னொளி செடிகளை வருடிக் கொண்டிருந்தது. கிடைத்த இடத்திலெல்லாம் காற்று நுழைந்து விசிலடித்துக் கொண்டிருந்தது

அத்தை புல் தரையில் நீண்டிருந்த தன் நிழலைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தபோது, கேட் அசையும் சத்தம் கேட்டது.

திரும்பினாள். முகம் சூரியன் போல் பிரகாசமானது.

''மீரா, வா... வா...''

''மீரா கௌதமுடன் கேட் திறந்து நுழைந்தாள்.

'உங்களைப் பாக்கத்தாம்மா வந்தேன்'' என்றாள் மீரா.



''வாடா என் ராஜா!'' அத்தை கௌதமைத் தொட்டதும் அவன் யோசித்துவிட்டு அவள் கைகளுக்கு மாறினான்.

''எனக்கும் கேரளாவுக்கு மாத்தல் கெடைச்சிருக்கும்மா. சொல்லி உங்ககிட்ட ஆசிர்வாதம் வாங்கிட்டுப் போலாம்னுதான் வந்தேன்!''

''உள்ளே வா. குங்குமம் எடுத்துக்கோ.''

பூஜையறையில் மீராவும் கௌதமுமாகத் தரையில் விழுந்து நமஸ்கரித்து எழுந்த போது, அத்தை இழுத்து அணைத்துக்கொண்டாள்.

மீராவின் நெற்றியில் குங்குமம் வைத்த போது அறை வாசலில் நிழலாடியது.

சுந்தரி நின்றிருந்தாள்.

''வா, சுந்தரி!'' என்றாள் மீரா. ''கேரளாவுக்கு எனக்கும் மாத்தல் கெடைச்சிடுச்சு. அத்தைகிட்ட ஆசிர்வாதம் வாங்கிட்டுப் போலாம்னு வந்தேன். எப்படியிருக்கே?.''

''நல்லா இருக்கேன்'' சுந்தரி வெறுமையான குரலில் சொன்னாள். பார்வை மீராவை விடுத்து, கௌதமின் மீது நிலைத்திருந்தது.

''வாடா செல்லம்...'' என்று குழந்தையை இழுத்துக் கொண்டாள். கௌதம் திமிறத் திமிறக் கன்னத்தில் முத்தமிட்டாள். மூச்சோடு சேர்த்து அவனையே உள்ளே இழுத்துக் கொள்வது போல் உச்சி முகர்ந்தாள்.

சுந்தரியின் முகத்தில் அந்தக் தருணத்தில் வீசிய ஒளியையும் திருப்தியையும் வேறெப்போதும் அத்தையோ, மீராவோ பார்த்ததில்லை.

கௌதம் ஸ்பிரிங் போல துள்ளி விலகி மீராவின் கால்களுக்குப் பின்னே போய் நின்றான்.

''உனக்குப் பெரிய பெரிய பொம்மையெல்லாம் தரேன் வா.''

''தாணாம்' '...கௌதம், மீராவிடமிருந்து விலக மறுத்தான்.

அத்தை மீராவின் கையை அன்பாக வருடிக் கொடுத்தாள். ''அப்பப்ப லெட்டர் போடு. வாரம் ஒரு தடவை போன் பேசு. மீரா...''

''சரிம்மா.''

''எந்த ஊருன்னு சொன்னே?'' சுந்தரி மீராவைப் பார்த்துத் திரும்பினாள்.

''புனலூர் பக்கத்துல ,பொன்கரா'ன்னு ஒரு கிராமம். மழையும் அருவியுமா அட்டகாசமா இருக்காம். அம்மாவையும் அழைச்சிட்டு வந்து நீ கொஞ்ச நாள் இரேன் சுந்தரி...''

சுந்தரி சிரிப்பில்லாமல், ''பார்க்கலாம்'' என்றாள்.

ஃ ஃ ஃ

வழியனுப்பு விழாவில் வேன் தோழிகள் எல்லோரும் கண் நனைந்திருந்தார்கள். மீராவுக்கு நினைவுப் பரிசாக ஒரு காமிரா கொடுத்தார்கள்.

ராஜியும், சித்ராவும், ஜெயமணியும், இஸபெல்லாவும் இல்லாத கேரளா எப்படியிருக்கப் போகிறதோ என்று மீராவையும் கண் கலங்க வைத்தார்கள்.

ஃ ஃ ஃ

பொன்கரா கிராமம் பசுமையில் தோய்த்து எடுக்கப்பட்டது போல் இருந்தது. சூரியனோடு சேர்ந்து எழுந்துவிடும் மனிதர்கள் சுறுசுறுப்பாக இருந்தார்கள். எண்ணி நான்கு தார்ச்சாலைகள்தான். மிச்சப் பாதையெல்லாம்



மண்சாலைகள். மாட்டு வண்டிகளின் 'கிணு...கிணு' கௌதமுக்கு வசீகரமாக இருந்தது.

குறுக்கிடும் ஓடைகளில் தண்ணீர் சளைக்காமல் ஓடிக்கொண்டிருந்தது. மாசு இல்லாத காற்று நுரையீரல்களுக்கு இதமாக இருந்தது.

வசந்தன் பார்த்திருந்த வீடு, சென்னையில் இருந்தது போலவே பெரிதாக இருந்தது. தோட்டமும் கிணறுமாக அவன் அப்பாவுக்குப் பிடித்திருந்தது.

வசந்தனுக்குப் பொன்கரா கிளையில் பதவி. மீராவுக்கு பத்து கிலோ மீட்டர் தள்ளி புனலூரில் வங்கிப் பணி.

ஒரு நாளைக்கு இரண்டே பஸ்கள்தான். வசந்தனின் அப்பா காரில் கொண்டு போய் விட்டு வருவதும், அவள் பஸ் பிடித்து திரும்பி வருவதும் வாடிக்கையானது.

மீரா கிணற்றடியில் துணி அலசிக் கொண்டிருந்த ஒரு ஞாயிறு காலை, வானத்தில் இருந்து திடீரென்று ஒரு குரல் இறங்கியது.

''மோளே...மோளே''

மீரா அலசுவதை நிறுத்தி விட்டு அக்கம் பக்கம் பார்த்தாள்.

''மோளே...இவிட நோக்கு. முகளில் நோக்கு மோளே...''

குரல் வந்த திசையில் அண்ணாந்து பார்த்தாள்.

பூட்டிக் கிடந்த பக்கத்து வீட்டுக்கு ஆள் வந்தாயிற்றா! அந்த வீட்டு மொட்டை மாடியில் அந்த அம்மணி நின்றிருந்தாள்.

ஈரக்கூந்தலை உலர விட்டபடி, பழுத்த பப்பாளி நிறத்தில் சுமார் நாற்பது வயதுப் பெண்மணி கறுத்த புருவங்கள்

சிவப்புப் பொட்டு கழுத்தில் ஜொலிக்கும் தங்கக் கோடு. வெண்பட்டு உடுத்தியிருந்தாள்.

சிரிப்பில் நட்பு பொங்கி வழிந்தது.

"என்டே பேரு சந்திரிகா. ஞான் அடுத்த வீட்டில் உண்டு. வீட்லேக்கு வா மோளே."

"வரேன்" என்றாள் மீரா புன்னகைத்து.

"ஓ... தமிழோ?"

"தமிழ்தான்."

"எனிக்கும் கொறச்சு தமிழ் வரும்..." அம்மணியின் சிரிப்பு இன்னும் விரிந்தது. "வீட்டுக்காரர் தமிழ்தான்...நீ வரியா... ஞான் வரட்டா?"

"பத்து நிமிஷத்துல வரேன்" என்றாள் மீரா .

ஃ ஃ ஃ

சந்திரிகா, வீட்டுக் கதவை அகலமாகத் திறந்து மீராவை வரவேற்றாள். நவீன பாணியில் கட்டப்பட்ட வீட்டில் மூலைக்கு மூலை பித்தளை பளபளத்தது. நடுக் கூடத்தில் ஐந்து முகங்களுடன் ஒரு விளக்கு எரிந்தது.

புகைப்படம் காட்டி தன் இரண்டு மகன்களும் வெளி நாட்டில் இருப்பதாகச் சொன்னாள். கணவன் சேது மாதவன் புனலூரில் சிறு நகைக்கடை வைத்திருப்பதாகச் சொன்னாள். அவளுடைய தமிழில் மலையாள மணம்.

அவள் பேசிக் கொண்டிருந்தபோது வெற்று மார்போடு அறையை விட்டு வெளியே வந்த அந்த சேதுமாதவன் மீராவைப் பார்த்து விட்டு சட்டென்று உள்ளே திரும்ப...

"நாணச்சா... இவிட வரு .." என்றாள் சந்திரிகா.



அவர் ஒரு அவசரச் சட்டையுடன் மறுபிரவேசம் செய்தார். கைகளைக் கூப்பினார். சந்திரிகாவின் மூத்த மகனுடைய பெயர் நாணு என்னும் நாராயணன். 'நாணுவின் அப்பா' என்று பொருள் வரும்படி 'நாணச்சா' என்று சந்திரிகா அழைத்தது மீராவுக்கு மிகவும் பிடித்தது. நாணச்சனைப் பார்த்து அவளும் கை கூப்பினாள்.

"ஈ குட்டிடெ பேரு மீரா. அடுத்தவீட்டு ஸ்த்ரீ. தமிழ் நாணச்சா... தமிழ்" என்றாள் சந்திரிகா, அகலமாகச் சிரித்தபடி.

"நமஸ்காரம்மா..."

அவருக்கு ஐம்பதுக்குக் குறைவான வயது. பிடிகருணை உடம்பு. கழுத்தில் தடிமனான தங்கச் சங்கிலி. நான்கு விரல்களில் மோதிரங்கள்.

"நமஸ்காரம்" என்றாள் மீரா.

அவர் சந்திரிகாவிடம் "இளநி கொடுத்தியா?" என்றார்.

பாதி வெட்டி வைத்த இளநீரை எடுத்து உச்சியை ஒரே சீவில் விலக்கினார். நீட்டினார்

"பெரிய வீடாயிருக்கே. வேலைக்காரங்கள்லாம் உண்டா?" என்று கேட்டாள் மீரா.

"ஐயோ... ஜோலிக்கு ஆளு வெச்சா, ஹவ்ஸ்பெண்ட், வொய்ஃபுக்குள்ள இன்ட்டிமஸி போயிருமே" என்றாள் சந்திரிகா முகம் சிவக்க.

மீரா அவளை ஆச்சரியமாகப் பார்க்க, சேதுமாதவன் சற்றே வெட்கத்துடன் எழுந்து உள்ளே போய்விட்டார்.

"மீரா வீட்டுல ஆ வயசாய மனுஷன் யாரு? அம்மாவனா?" என்று கேட்டாள் சந்திரிகா, கண்களைச் சுருக்கி.

"அம்மாவன்னா?"— மீரா குழம்பினாள்.

"ஃபாதர் இன் லா."

"அதே... என்றாள் மீரா புன்னகையுடன்.

"ஓ... மலையாளம் வந்து... மீராவுக்கு எந்த ஹெல்ப் வேணங்கிலும் இவிட வரலாம். இது நிங்ஙள்ட வீடு மோளே!"

மீரா சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தபோது அழைப்பு மணி ஒலிக்க, திரும்பினார்கள்.

வாசலில் வசந்தனின் அப்பா நின்றார்.

"என்ன மாமா!" என்று அவர் முகத்துப் பரபரப்பைப் பார்த்து மீரா எழுந்தாள்.

"கௌதமைக் கவனிச்சியாம்மா மீரா? ஒடம்பு கொதிக்குது. நல்ல காய்ச்சல். இந்த ஊர்ல டாக்டரெல்லாம் கெடைப்பாங்களான்னு கேளும்மா..." என்றார் வசந்தனின் அப்பா.

# 20

கௌதமுக்குக் காய்ச்சல் என்றதைக் கேட்டதும் மீரா பதறி எழுந்தாள்.

சந்திரிகா உள்ளே திரும்பி, "நாணச்சா" என்று அழைத்தாள். "நம்முடே வர்கீஸ் டாக்டரின்டே வசம் இவரே கூட்டிக்கொண்டு போயாட்டே..." என்றாள்.

"போலாம், வாங்க" என்று அப்படியே கிளம்பினார் சேதுமாதவன்.

டாக்டர் வர்கீஸ் புனலூரில் கிளினிக் வைத்திருந்தார். சதுரமான கண்ணாடியும் மழித்த முகமும் காதோரங்களில் நரையுமாகப் பழைய இந்தி நடிகர் போல இருந்தார். டார்ச் அடித்துப் பார்த்து கௌதமின் தொண்டையில் சிறு ரணம் இருப்பதாகச் சொன்னார். மூன்று நாட்களுக்கான மருந்து எழுதிக் கொடுத்தார். இந்தச் சின்ன விஷயத்துக்கு எதற்காகப் பதற வேண்டும் என்று வசந்தனின் அப்பாவிடம் வேடிக்கையாகக் கேட்டார். எந்நேரமானாலும் தன்னைத் தொந்தரவு செய்யலாம் என்று மீராவிடம் தன் தொலைபேசி எண்ணைக் கொடுத்தார். சேதுமாதவனிடம் வெளிநாட்டில் இருக்கும் அவர் மகன்களைப் பற்றி விசாரித்தார். அனுப்பிவிட்டார்.



ஃ ஃ ஃ

வீட்டுக்கு வந்ததும் கௌதமைப் பார்க்க சந்திரிகா வந்திருந்தாள்.

"இந்த ஊர் தண்ணி ஒத்துக்கலை போல இருக்கு" என்றாள் மீரா.

சந்திரிகாவுக்குக் கோபமே வந்து விட்டது. "மோளே இவிட கிட்டுந்ந வெள்ளத்தினே காளும் வேறே நல்ல வெள்ளம் கிட்டுகையில்லா" என்றாள். குழந்தைக்காக ஏதாவது நேர்த்திக்கடன் நிறைவேற்றாமல் விட்டிருக்கலாம் என்றும், ஒருவேளை கடவுள் அதை ஞாபகப்படுத்தலாம் என்றும் சொன்னாள்.

இன்ஸ்பெக்ஷனுக்குப் போயிருந்த வசந்தன் பிற்பகலில் திரும்பியதும் அவனிடம் அது பற்றி சொன்ன மீரா, "கௌதமுக்காக நான் எதுவும் வேண்டிக்கலையே வசந்த்?" என்றாள்.

"வேண்டுதல் இருக்கே மீரா. கௌதம் வரதுக்கு முன்னாலேயே வேண்டிக்கிட்டியே, மறந்து போச்சா?"

மீரா குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

"திருச்சி மலைக்கோட்டைல தாயுமானவர் சந்நிதில வாழைத்தார் சாத்தறதா வேண்டிக்கலையா?"

கடவுளே! மீராவின் உடல் சிலிர்த்தது.

'அடிரா சக்கை! கண்ணா, கவனிச்சியா, இன்னும் முகூர்த்தநாளே முடிவாகலை. அதுக்குள்ள தலைச்சன் பிரசவத்துக்காக அட்வான்ஸா தாயுமானவருக்கு ஐஸ் வைக்க பிளான் பண்ணியிருக்கா இவ' என்று அன்றைக்கு மலைக்கோட்டையில் வசந்தன் வேடிக்கையாகச் சொல்லி அவள் கன்னத்தைச் சிவக்கவைத்த காட்சி இடும் என்று அவள் மனதில் உயிர்த்து எழுந்தது

அப்புறம் கண்ணனுடன் கோலாகலமான கல்யாணமும் அதற்கப்புறம் சில மாதங்களுக்குக் குறைவற்ற சந்தோஷமு மாக இருந்த பொழுதுகள் அவள் மனதில் புரண்டு எழுந்தன.

எல்லாம் கலைக்கப்பட்டு கண்ணன் இல்லாமல் போனதும் அந்த வேண்டுதலும் கவனமில்லாமல் போய் விட்டது.

"கௌதமுக்கு சரியாகட்டும் மீரா. நாம மலைக் கோட்டைக்குப் போயிட்டு வந்துடலாம்" என்றான் வசந்தன்.

ஃ ஃ ஃ

காலையில் கண்விழித்தபோதே, நெஞ்சை யாரோ இறுக்கிப் பிடித்திருந்ததுபோல் இருந்தது அத்தைக்கு மூச்சு சற்றுச் சிரமத்துடன் வந்தது. எழுந்திருக்க யோசனையாக இருந்தது.

பக்கத்தில் பார்த்தாள். சுந்தரி தூங்கிக் கொண்டிருந் தாள். இரவு வெகுநேரம் வரை அவள் கால்வலியில் தூக்க மில்லாமல் அவஸ்தைப்பட்டு, கடைசியில் ஒரு வலி நிவாரண மாத்திரை போட்டுக்கொண்டது அத்தைக்குத் தெரியும்.



தனக்கு முன்பாகவே எழுந்து கண்ணனுக்குத் தேவையானதைக் கவனித்துவிடும் சுந்தரி, அந்த மாத்திரை காரணமாக இன்னும் எழுந்திருக்கவில்லை என்று தோன் றியது. அவளை எழுப்ப அத்தைக்கு மனம் வரவில்லை.

தன் வலி பற்றி கண்ணனிடம் தெரிவிக்க அவளுக்கு விருப்பமில்லை. அவனுடைய கவனிப்பை இந்த உடல் ஏற்றுக்கொண்டாலும் மனம் ஏற்றுக்கொள்ளாது என்று தோன்றியது. வாரக் கடைசியில் அவன் வெளியூர் போகும் வரை, வலி பற்றி வெளியே சொல்வதில்லை என்று அத்தை தீர்மானித்தாள்.

மெள்ள எழுந்தாள். சுந்தரியின் தலையணையைச் சரிசெய்து நகர்த்திவிட்டு அத்தை படுக்கை அறையைவிட்டு வெளியேறினாள்.

ஃ ஃ ஃ

திருச்சியில் வெயில் தகித்தது.

மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையாரைச் சந்திக்க ஏறிக் கொண்டிருந்த கூட்டத்தை மீரா ஆர்வமின்றி கவனித்தாள்.

நிமிர்ந்து பார்த்தபோது முடிவில்லாத உயரத்துக்குப் படிகள் ஏறிக்கொண்டேயிருந்தாற் போலிருந்தது.

கடிவாளம் போட்டுத் தடுத்து நிறுத்தப் பார்த்த போதிலும் பழைய நினைவுகள் பீறிட்டு வந்தன. அவளை யும் கண்ணனையும் படிகளில் முன்னே நடக்கவிட்டு வசந்தன் பின்னாலிருந்து பார்த்துப் பேசிய வேடிக்கைப் பேச்சுகள் அவள் செவிகளுக்குள் இப்போதும் ஒலித்தன.

கண்ணன் மீதும் தன் மீதும் வசந்தன் அன்றைக்குப் பொழிந்த அந்த அப்பழுக்கில்லாத அன்பை நினைத்தால் இன்றைக்கும் நெஞ்சு நெகிழ்கிறது.

திரும்பிப் பார்த்தாள். கௌதம் ஒரு கையை வசந்த விடமும், இன்னொரு கையை வசந்தனின் அப்பாவிடமும் கொடுத்திருந்தான். அவர்கள் அவனை இழுத்து உயர்த்திப் பிடித்ததில் படிகளில் கால் வைக்காமல் அந்தரத்தில் ஊஞ்சலாடியபடி சுமக்கப்பட்டதில் கௌதமுக்கு சொல்லில் தெரிவிக்க முடியாத பெருமை.

கௌதமின் காய்ச்சல் இரண்டாவது நாளே சரியாகி விட்டது என்றாலும் அதுவரை வசந்தன் எப்படி தவித்துப் போனான்! இப்படி வாரி வழங்கிக் கொண்டேயிருக்க வசந்தனிடம் மட்டும் அன்பு எப்படிக் கொட்டிக் கிடக் கிறது?

''இவனுக்கு நான் என்ன திருப்பித் தந்திருக்கிறேன்? அவன் பதிலுக்கு எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதை எனக்குச் சௌகரியமாக நினைப்பது என்ன நியாயம்?''

திடீரென்று கௌதம் 'சுச்சு' என்றது. வசந்தனின் அப்பா அதை அழைத்துக்கொண்டு வசதியான இடம் தேடி நகர்ந்தார்.

வசந்தன், மீராவோடு சேர்ந்து கொண்டான். அவன் சட்டை நனைந்து முதுகில் ஒட்டிக்கொண்டு இருந்தது. வாழைத்தாரைப் பற்றியிருந்த கை சிவந்து போயிருந்தது

''பொன்கரால ஜில்ஜில்னு இருந்துட்டு இந்த வெயில் தாங்கல இல்லியா?'' என்று கேட்டான் மீரா புன்னகைத்து.

''கேரளா உனக்குப் பிடிச்சிருக்கா மீரா?''

''ரொம்ப! அந்த ஊரு... அந்த வீடு... அந்த கிளுகிளுப்பு எல்லாமே பிடிச்சிருக்கு. ஆனா.''

''ஆனா, என்ன மீரா?''



''மனசுக்குள்ள எப்பவும் ஒரு குற்ற உணர்ச்சி இருக்கு வசந்த்.''

''எதுக்கு?'' வசந்தன் ஆச்சரியமாகக் கேட்டான்.

''பளிச்சுனு சொல்லத் தெரியல. நான் சுயநலக்காரியா இருக்கேனா வசந்த்?''

''ஏய்... என்ன இது திடீர்னு உளறல்? சந்தோஷமா இருக்கறது சுயநலம்னா, நான்கூட இப்ப ரொம்ப சுயநல மாத்தான் இருக்கேன் மீரா. அப்பாவும் கௌதமும் வந்தாச்சு. ஏறலாமா?''

❀ ❀ ❀

தாயுமானவர் சந்நிதியில் வாழைத்தார் சாத்தினிட்டு, மீண்டும் படிகள் ஏறி, உச்சிப் பிள்ளையாரையும் தரிசித்து முடித்தபோது கௌதம் வசந்தனின் தோளில் தூங்கி யிருந்தான்.

கண்ணனோடு வந்து நிறைவேற்றியிருக்க வேண்டிய வேண்டுதல். இப்போது வசந்தனின் துணையோடு நடந்து முடிந்திருக்கிறது.

குழந்தையை அணைத்துச் சுமந்து படிகளில் இறங்கும் வசந்தனைப் பார்த்தாள்.

''கண்ணனை மாதிரி ஒண்ணு பெத்துக் குடுத்துட்டே. இப்ப வசந்தன் மாதிரி ஒண்ணு பெத்துக் குடுத்துடு'' என்று சித்ராவின் மாமியார் பக்கத்தில் வந்து காதில் இரைந்தாற் போலிருந்தது. மீரா திடுக்கிட்டு நகர்ந்து படிகளில் தடுமாறி, வசந்தனின் தோளைப் பற்றினாள்.

''ஏய்... என்னாச்சு?'' என்றான் வசந்தன்.

''ஒண்ணுமில்ல...'' என்றாள் மீரா, தன்னை நிதானப் படுத்திக் கொண்டு.

❀ ❀ ❀

"மோளே வரூ" என்றாள் சந்திரிகா. அப்போதுதான் குளித்தது போல் புதிதாக இருந்தாள். நெற்றியில் சந்தனக்கீற்றுக்கு மேல் குங்குமம்.

கொண்டு வந்திருந்த கிண்ணத்தைத் திருப்பிக் கொடுத்தாள் மீரா. "நீங்க கொடுத்த தேங்காய்ப் பாயசம் ரொம்ப நல்லா இருந்தது. கௌதமுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. எப்படிப் பண்ணணும்னு தெரிஞ்சிட்டுப் போலாம்னு வந்தேன்."

சொல்லித் தர ஒப்புக்கொண்டாள் சந்திரிகா. அதற்கு முன்னால் டீ போட்டு கொடுப்பதாக சொல்லிவிட்டு சமையலறைக்குப் போனாள். அங்கிருந்த பத்திரிகையை எடுத்தாள். மலையாளப் புத்தகம். நண்டு நண்டாக இருந்த எழுத்துக்கள் புரியவில்லை. சந்திரிகாவுக்கு உதவியாக சமையலறைக்குப் போகலாம் என்று எழுந்தபோது, அந்தத் திசையிலிருந்து ரகசியக் குரல்கள் கேட்டன.

"ஏய்... ஆ.. பெண்குட்டி ஹாலில் உண்டு..."

"ஆரு இருந்தால் எந்து? எனிக்கு தரானுள்ளது தரூ."

"அய்யே... அடுப்பில் சாயா சூடாயி..."

"இவிடே ஞானும் கொதிச்சுக் கொண்டிருக்குந்நு"

மீரா தனக்குள் புன்னகைத்தபடி ஹாலில் உட்கார்ந்து விட்டாள்.

சற்று நேரத்தில் சந்திரிகா தேநீரோடு வந்து சேர்ந்தாள். அவள் கன்னங்களில் வெட்கச் சிரிப்பு.

"எத்தற வயசாயாலும் புருஷன்மாருடே ஆசை கண்டுட்டு ஸ்த்ரீகளோட நாணம் போகுந்நில்லா. இருபது வயசிலுள்ளா சந்தோஷம் நாப்பது வயதிலும் அங்ஙனே உண்டாயிருக்கும்" என்ற சந்திரிகா, மீராவுக்கும்கூட



அவளைக் கட்டிப்பிடித்து விளையாடும் அனுபவம் இருந்திருக்கும் என்றாள்.

மீராவின் புன்னகை உறைந்தது.

டைபை முடிச்சிட்டு முடிந்ததும் எத்தனை சந்தர்ப்பங்களில் அவளை கதவின் நிழலுக்கு இழுத்து கண்ணன் விளையாடியிருக்கிறான்! அவள் கூந்தலில் முகம் புதைத்திருக்கிறான்! அவள் கழுத்தை அவன் மூச்சால் சூடாக்கி குறுகுறுப்பேற்றி இருக்கிறான்...!

"சந்திரிகா...டீயில் சர்க்கரை கம்மியாயிருக்கு, பாரு" என உள்ளிருந்து சேதுமாதவனின் குரல் வந்தது.

"என்றே பார்த்தாவு அடுத்த ரவுண்டினு கெடந்நு அலையுகையாணு... மோளே... ஞான் உடனே வராம்."

சந்திரிகா எழுந்து உள்ளே போனாள்.

மீராவுக்கு தேநீர் ருசிக்கவில்லை.

ஃ ஃ ஃ

நள்ளிரவில், மீரா திடுக்கிட்டு விழித்தாள். விழித்த வேகத்தில் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். காற்றே குளிராயிருந்தது. மின்விசிறி வேறு சுழன்றுகொண்டிருந்தது. ஆனாலும், அவள் கழுத்திலும் கூந்தலுக்குள்ளும் வியர்த்திருந்தது.

பயம்! அவள் கண்ட கனவு, அவள் மீது கவிழ்த்த பயம்.

வசந்த்... உனக்கு ஒண்ணும் ஆகிவிடவில்லையே? நான் கண்டது வெறும் கனவு தானே? ஐயோ எப்படிப் பயந்து விட்டேன்!

அவள் கட்டிலிலிருந்து எழுந்து விளக்கைப் போட்டாள். வசந்தன் சலனமின்றித் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் அசையாது படுத்திருந்ததைப் பார்க்கப் பார்க்க அவள் உள் மனதில் துளியில்லை. அவன் நெஞ்சு ஏறி இறங்குவதாகத் தோன்றுவது வெறும் பிரமையா, இல்லை நிஜமா?

மீரா மெள்ள கை நீட்டி அவன் மார்பைத் தொட்டாள். மார் ஏறி இறங்குகிறது. குபீரென்று அவளுள் ஒரு விடுதலையுணர்வு பிரவகித்தது. அப்படியே சரிந்து அவன் மார்பில் முகம் புதைந்து விம்ம ஆரம்பித்தாள்.

வசந்தன் சட்டென விழித்துக்கொண்டான். எரியும் விளக்கும் அவன் மார்பில் முகம் புதைத்த மீராவும் புரிந்து, "ஹேய்... மீரா... என்னம்மா...?" என்று அவளைக் கலைக்காமல் அவள் தலையை வருடினான்.

"வசந்த். என்னை விட்டுப் போயிடாதே வசந்த்..." அவள் குரல் அழுகையில் உடைந்தது.

"மீராம்மா... என்னம்மா ஆச்சு? நான் எங்கேயும் போகலியே... கனவு கண்டியா என்ன?"

மீரா நிமிர்ந்தாள். ஆனால், கையை அவன் மீதிருந்து விலக்கவில்லை. "ரொம்ப மோசமான கனவு வசந்த்... நீ... நீ..."

"கனவுல நான் செத்துப்போயிட்டேனா?" வசந்தன் புன்னகையுடன் கேட்டான்.

"வேண்டாம் வசந்த்... அப்படிப் பேசாதே. அது வெறும் கனவுதான். நீ உயிரோட இருக்கே. இதோ என்கூட பேசிட்டிருக்கே!"

"அப்புறம் என்ன? கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டுப் படுத்துக்கோ. நிம்மதியாத் தூங்கு. காலைல எல்லாம் சரியாயிடும்..."



மீரா எழுந்தாள். முகத்தைத் துடைத்துக் கொண்டாள். விளக்கை அணைத்தாள். தன் இடத்தில் படுத்துக் கொண்டாள்.

சில நிமிடங்கள் அங்கே மௌனம் கனத்தது.

"வசந்த்!" மீரா இருட்டில் அவன் பக்கம் திரும்பினாள்.

"ம்?"

"தூங்கிட்டியா?"

"இல்ல"

"உன் கையைக் கொடேன். பிடிச்சுட்டே தூங்கறேன்"

வசந்தன் தன் கையை அவள் பக்கம் நீட்டினான். அதைப் பற்றி இரு கைகளுக்குள்ளும் பொத்தி தன் கன்னத்துக்கடியில் மீரா வைத்துக் கொண்டாள்.

இன்னும் சில நிமிடங்கள் நிசப்தத்தில் கழிந்தன.

"வசந்த்..." மீரா அவன் கையை அழுத்தினாள்.

"இன்னும் தூங்கலையா?" என்றான் வசந்தன்.

"வசந்த்.. வாழ்க்கை அப்படி திடுதிடுப்புன்னு முடிஞ்சு போயிடுமா வசந்த்?"

"தூங்கும்மா..."

"அப்படி முடிஞ்சுபோனா, உனக்கு நான் ஏதோ பாக்கி வெச்சிருக்கற மாதிரி உறுத்தலாயிடும் வசந்த்..."

மீராவின் கண்ணீர் இறங்கி அவன் கையில் சுட்டது.

"வசந்த்... நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே...?"

## 21

மீராவின் அடுத்த கண்ணீர்த்துளி வசந்தனின் கையில் சூடாக உருண்டு இறங்கியது.

ஒரு கனவு? அந்தக் கனவு அவளை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்று நினைத்து வசந்தன் ஆச்சரியப் பட்டான். வாழ்க்கை திடுதிப்பென்று முடிந்து விடுமோ என்ற அச்சமும் அந்த அச்சத்தின் விளைவாக அவளுள் ஒரு குற்ற உணர்ச்சியும் எப்படிப் புரண்டு வதைக்கின்றன!

"நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே வசந்த்?" என்று அந்த அச்சம்தான் அவளைக் கேள்வி கேட்க வைத்து விட்டது.

"வசந்தன், "ம்" என்று பதில் சொன்ன அதே கணம் அந்த இரவின் மற்ற அமைதியைக் கிழித்துக் கொண்டு ஹாலில் இருந்த தொலைபேசி பெரிதாக அலற ஆரம் பித்தது.

தாயிடம் அமைதியாகப் பால் குடித்துக் கொண்டி ருக்கும் குழந்தை இடி விழுந்த சத்தம் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு விலகுவது போல், வசந்தனின் கையைத் தன்னிச்சையாக விடுவித்தாள் மீரா.

வசந்தனும் அதே வேகத்தில் எழுந்தான். ஒரே எட்டில் கதவை அடைந்து திறந்து, ஹாலில் பிரவேசித்த போது ஹால் விளக்கு விழித்தது. அவன் அப்பா ரிஸீவரை எடுப்பது தெரிந்தது. கண்களை மட்டும் நிமிர்த்தி அவர் அவனைப் பார்வையிட்டார்.

தொலைபேசி கொண்டு வந்த சேதி அவர் முகத்தில் சுருக்கங்களைக் கொண்டு வந்தது. கண்களை அழுந்த மூடி சேதியை உள்வாங்கிக் கொண்டார். கண் அசைவில் வசந்தனை அருகில் அழைத்தார்.



"கண்ணன்" என்றார் குரல் நடுங்க.

வசந்தன் ரிஸீவரை வாங்கிக் கொண்டதும் படுக்கை யறைக் கதவருகில் வந்து நின்ற மீராவை நோக்கி நகர்ந் தார். அவர் முகத்தில் கலக்கம்.

"மீரா ஊர்லேர்ந்து போன்மா. கண்ணனோட அத்தைக்கு..." என்று சொல்லி நிறுத்தினார்.

"அத்தைக்கு... அத்தைக்கு என்ன?" மீரா பதறினாள்.

"மாஸிவ் ஹார்ட் அட்டாக்காம்..."

"ஐயையோ. எந்த ஆஸ்பத்திரில சேர்த்திருக்கும்?"

"வீட்டுக்கே கொண்டு வந்தாச்சாம்..." என்றவர் பிற்சேர்க்கையாக "எல்லாம் முடிஞ்சிபோச்சாம்" என்றார்.

மீராவிடமிருந்து ஒரு விம்மல் வெடித்துப் புறப்பட்டது.

வசந்தன் ரிஸீவரை வைத்து விட்டுச் சுவரில் அப்படியே சாய்ந்தான்.

ஃ ஃ ஃ

உதிர்ந்த பூவிதழ்களும் ஊதுபத்திகளின் புகையும் அந்த அறையில் சோகமான ஒரு வாசத்தை நிரப்பி யிருந்தன. அவ்வப்போது மனிதக் குரல்கள் முனகின. அரற்றின. தேய்ந்தன.

கண்ணனின் கண்கள் விளக்குச் சுடரையே வெறித்துக் கொண்டு இருந்தன. மூச்சின் இயக்கத்தைத் தவிர அவனி டத்தில் வேறு எந்த இயக்கமும் இல்லாதது போல் புலப் பட்டான்.

கடைசி வரை அத்தை அவளை மன்னிக்கவேயில் லையா? மீரா விலக்கப்பட்ட தினத்திலிருந்து அத்தையும் விலகி விட்டாள், அவளுக்கு என்று ஒரு புன்னகை இல்லை.

'கண்ணா' என்ற அன்பு விளி இல்லை. அருகில்அழைத்து வருடல் இல்லை. ஒரு வார்த்தை பேச்சு இல்லை—கடைசி கடைசியாக உயிர்வாயு ஊட்டப்பட்டுக் கொண்டிருந்த அந்தத் தருணத்தில் பேசிய பேச்சைத் தவிர.

மருத்துவமனையின் கண்ணாடிச் சதுரத்தின் வழியே அத்தையை அவன் தவிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த போது டாக்டர் வெளியில் வந்தார். அத்தை அவனிடம் பேச விரும்புவதாகச் சொன்னார்.

கண்ணன் துடித்துக் கொண்டு அத்தையிடம் ஓடினான்.

''கண்ணா, உம் பேர்ல எனக்குக் கோபம் இல்லடா'' என்று அவள் விரல் நுனிகள் அவன் உச்சந்தலையை வருடப் போகின்றன என்ற வேட்கையுடன் அவன் அத்தையின் கையைப் பற்றினான்.

குனியச் சொல்லி சைகை செய்தாள். உலர்ந்த விழிகளால் அவனைப் பார்த்தாள். உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள்.

''நீ கொள்ளி வெச்சா என் உடம்பு வேகாதுடா. வசந்தன் தான் எனக்கு நெருப்பு வைக்கணும்.''

அத்தை அவன் மீது நெருப்பை வாரியிறைத்து விட்டதை உணராதவள் போல் கண்களை மீண்டும் மூடிக் கொண்டாள்.

அதன் பின் இயந்திரம் அவளுக்காக அதிக நேரம் சுவாசிக்கவில்லை

ஃ ஃ ஃ

அத்தை ஓய்ந்து போனபின்பும் அவளைக் காண தைரிய மற்றவனாக கண்ணன் விளக்குச் சுடரையே பார்த்துக் கொண்டிருந்தான்.



சுந்தரி வீட்டுக்கும் மருத்துவமனைக்கும் பரபரப்பாக ஓடி ஓடி அலைந்ததாலோ என்னவோ, இப்போது அவளும் இயலாதவளாகி பக்கத்து அறையில் கால்வலியின் கருணையற்ற தீவிரத்தில் களைத்துக் கிடந்தாள். வசந்தனின் காலடி ஓசைக்காக கண்ணன் விளைவுகளை எண்ணிக் கொண்டு காத்திருந்தான்.

ஃ ஃ ஃ

தெருவே களையிழந்து கிடந்தது.

கண்ணன் வீட்டு வாசலில் தெறிக்கிடந்த மனிதர்கள் எல்லோரும் தெருமுனையில் காரைக் கண்டதும் சுறுசுறுப்பானார்கள்.

அழுக்கும் சேறுமாகத் தன் நீண்ட பயணத்தில் சேர்த்துக்கொண்டே கறைகளோடு கார் வந்து நின்றது.

வசந்தன் இறங்கினான். துவண்டு போயிருந்த கௌதமை மீராவிடமிருந்து அவன் அப்பா வாங்கிக் கொண்டார்.

கேட்டை நெருங்கும் முன்பாகவே மீராவின் துக்கம் வெடித்தது.

கடைசிக் கடைசியாக இந்தத் தோட்டத்தில் நின்று தானே அத்தை அவளை இன்முகத்துடன் வரவேற்றாள்! இங்கே நின்றுதானே அவளைச் சிரித்த முகத்துடன் வழியனுப்பினாள்!

வாசல் கதவைத் தாண்டும்போது, ''வா, மீரா'' என்று அந்தக் கம்பீரமான குரல் எங்கிருந்தாவது ஓடிவந்து வரவேற்குமே. அந்தக் குரல் இனி கிடையாதா?

கண்ணனோடு இந்த வீட்டில் முதன்முதலில் அவள் அச்சத்துடன் அடியெடுத்து வைத்தபோது அத்தை இங்கே

நின்றுதானே அருகில் அணைத்துத் தலையை வருடிக் கொடுத்தான்.

'எந்தக் குழந்தையாவது தன் அம்மாகிட்ட உன்னை அம்மான்னு கூப்பிடலாமான்னு கேக்குமா? கண்ணனுக்குத் தான் நான் அத்தை. உனக்கும் சுந்தரிக்கும் நான் அம்மா தான்' என்று இந்த ஹாலில்தானே தன் தோளில் சாய்த்து நெற்றியில் முத்தமிட்டாள்.

அத்தை வழக்கமாக டி.வி. பார்க்க உட்காரும் அதே இடத்தில்தான் கிடத்தப்பட்டிருந்தாள். மீராவை,கண்ணன் விலக்கிய தினத்திலிருந்து அவள் கம்பீரம் தேய்ந்து விட்டிருந்தது. வாழ்க்கையின் புயல் தினங்களில் எதிர்த்து நின்று வெற்றி கண்ட மதர்ப்பு கடைசி தினங்களில் காணாமல் போயிருந்தது.

மீரா அத்தையின் மீது கவிழ்ந்து வெடித்து அழுதாள்.

விளக்கின் திரியைத் தூண்டிக்கொண்டிருந்த கண்ணன் திரும்பினான்.

எழுந்தோடி வந்த வசந்தனைத் தாவி அணைத்துக் கொண்டான். வசந்தனை அவன் இறுக்கிய வேகத்தில், வார்த்தைகளால் சொல்ல முடிந்திராத நூறாயிரம் சேதிகள் ஒளிந்திருந்தாற் போலிருந்தது.

பொம்மையை உடைத்துவிட்டு அழுது அரற்றும் குழந்தையை, 'போனால் போகிறது போ' என்று வருடிக் கொடுக்கும் ஒரு அன்னையைப் போல கருணையுடன் கண்ணனின் தலையை, பின்கழுத்தை, முதுகை வருடிக் கொடுத்தான் வசந்தன்.

"அத்தை தானா சாகலை வசந்த்... என்னாலதான் செத்தாங்க" என்று கண்ணன் அவன் தோளில் உதடுகளைப் புதைத்துக் குமுறியபோது, "முடிஞ்சுபோனதைப் பேச வேண்டாம் கண்ணா. நடக்க வேண்டியதைப் பார்ப்



போம்" என்று அவனைத் தன்னுடன் இறுக்கிக்கொண்டான் வசந்தன்.

"வசந்த் தம்பி, உங்க கையாலதான் கொள்ளி வைக்கணும்னு அத்தையம்மா சொல்லிட்டாங்களாம். சீக்கிரம் குளிச்சிட்டு ஈரத்துணியோட வாங்க தம்பி" என்றது ஒரு தூரத்து உறவு.

மீரா ஒரு கணம் திரும்பிப் பார்த்தாற்போல் இருந்தது.

கண்ணன், வசந்தனை விலக்க முடியாமல் இன்னும் இறுக்கிக் கொண்டான்.

ஃ ஃ ஃ

ஆண்கள் அற்ற வீட்டில் ஆட்சியை ஏற்று கண்ணனை யும் சுந்தரியையும் வளர்த்து உருவாக்கியிருந்த அந்தக் கம்பீரமான அத்தையைச் சாம்பலாக்கி ஒரு சட்டியில் திருப்பித் தந்துவிட்டார்கள்.

கொள்ளி போடும் உரிமை கண்ணனுக்கு இல்லை, வசந்தனுக்குத்தான் என்று பொதுவில் அறிவிக்க வேண்டி வந்ததுமே, வசந்தனின் அப்பா முடிவு செய்துவிட்டார்.

கண்ணனைத் தர்மசங்கடப்படுத்திப் பார்ப்பதில் அநாகரிகம் இருப்பதாகப் பட்டதால் கௌதமின் உடல் நிலையைக் காரணமாக வைத்து மீராவையும் அழைத்துக் கொண்டு மறுநாள் விடியலிலேயே பொன்கராவுக்குப் புறப்பட்டுவிட்டார்.

மாத்திரைகளின் ஆதரவோடு சுந்தரியும் அவளுக்கு உதவியாக சில நாட்களுக்கு ஒரு தற்காலிக சமையல்காரி யும் வந்திருந்த ஆட்களைக் கவனித்து அனுப்பிவிட் டார்கள்.

எல்லாம் ஓயட்டும் என்று வசந்தன் காத்திருந்தான்.

கண்ணன் ஹைதராபாத்திலிருந்து திரும்பி வந்த பின் அவர்களுக்கு நடுவில் எழுப்பப்பட்ட சுவர் அத்தையின் மரணத்தால் பலவீனப்பட்டுப் போயிருந்தது.

கண்ணன் தன் முகக் கவசத்தை விலக்கி, வசந்தனைப் பார்க்கத் தயாராக இருந்தாற்போலிருந்தது.

அத்தையின் புகைப்படத்தைப் பெரிதாக்கி அதற்கு மாலை அணிவித்த நேரத்தில் கண்ணன் தன்னைச் சுற்றி எழுப்பியிருந்த கோட்டை தகர்ந்து போனது. அந்தப் படத்தின் முன் அவன் அழுத அழுகையில் அவனுடைய தைரியம் எல்லாம் கரைந்து போனது.

''கடைசி வரைக்கும் அத்தைக்கு எம்மேல இருந்த கோபம் குறையவே இல்லை, வசந்த். உண்மை என்னன்னு தெரிஞ்சுக்காமலேயே அவங்க வாழ்க்கை முடிஞ்சு போச்சு, அவங்க இருந்த வரைக்கும் என் மனசுக்குள்ள பூட்டி வெச்சிருந்ததைத் தெறந்து காட்டற தைரியம் எனக்கு வரவே இல்ல...''

கண்ணனாகச் சொல்லட்டும் என்று வசந்தன் அப்போதும் ஒன்றும் கேட்கவில்லை. சொல்வதா, வேண்டாமா என்று முடிவு செய்ய முடியாமல் கண்ணன் தத்தளிப்பது தெரிந்தது.

ஃ ஃ ஃ

வானில் நட்சத்திரங்கள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தன. நிலா ஓய்வெடுக்கப் போயிருந்தது. மொட்டை மாடியில், ஓடுகள் பதித்த தரையிலிருந்து மெலிதான வெப்பம் கசிந்து கொண்டிருந்தது.

வசந்தனும் கண்ணனும் வானம் பார்த்துப் படுத்திருந்தார்கள்.



மொட்டை மாடியின் தனிமையில் அவர்கள் எத்தனையோ விஷயங்களை, எத்தனையோ இரவுகளில் விவாதித்திருக்கிறார்கள். தடைகள் உடையும் இடம் அது. ரகசியங்கள் காணாமல் போகும் விசித்திர தளம் அது.

அங்கே கண்ணனை அழைத்து வந்த பின் சற்று நேரம் வானத்து நட்சத்திரங்களைப் பார்வையிட்ட பிறகு வசந்தன் கண்ணனைப் பார்த்துத் திரும்பினான்.

''கண்ணன் வேற, வசந்தன் வேறன்னு நான் நெனைச்சதேயில்லை'ன்னு அத்தை அடிக்கடி சொல்வாங்களே, ஞாபகமிருக்கா, கண்ணா?''

''அதையெல்லாமும் மறந்திட்டேன்னு நெனைச்சிட்டியா, வசந்த்?''

கண்ணனின் குரல் நெகிழ்ந்திருந்தது.

''நெஞ்சுக்குள்ள வெச்சு வெடிக்கற அளவுக்கு அப்படி என்ன ரகசியம் வெச்சிருந்தே கண்ணா? அத்தை கிட்டத் தான் சொல்ல முடியலை. இந்த வசந்தனைக் கூடவா ஒதுக்கி வெச்சிட்டே? என்கிட்ட கூடவா உன்னால பேச முடியாமப் போயிருச்சு?''

வசந்தனின் அந்தக் கேள்வி கண்ணனை இன்னும் நிலை குலைந்து விட்டது.

குரல் வராமல் சற்று நேரம் வசந்தனைக் கண்ணீரினூடே பார்த்துக் கொண்டிருந்தான்.

பின் பரபரவென்ன எழுந்தான். கீழே போனான். திரும்பி வந்தபோது தன் டைரிகளை வசந்தனின் முன்னால் கொண்டு வந்து போட்டான்.

''நமக்குள்ள ரகசியம் இல்ல, வசந்த். படி, நீ படிச்சுப் பாரு.''

கண்ணன் மொட்டை மாடி கைப்பிடிச் சுவர் அருகில் போய் நின்று கொண்டான்.

வசந்தன் எழுந்து அமர்ந்தான். முதல் டைரியைத் திறந்தான். முதல் பக்கத்தில் மீராவின் இதழ்கள் பதிக்கப்பட்ட லிப்ஸ்டிக் அடையாளம்.

பக்கங்களை ஒவ்வொன்றாகப் புரட்டினான்.

ஜனவரி—15

என் மீராவிடமிருந்து பிரிக்கப்பட்டு ஹைதராபாத் என்னும் நரகவாசலை மிதித்தேன்.

ஹை—டெக் நகரமாம். என்னைப் பொறுத்தவரை மீரா இல்லாத இடம் பனிப்பாறைகள் நிறைந்த பொட்டல் வெளி. வெயில் எரிக்கும் மணற்பாலை. சுவாசக்காற்று அற்ற சந்திரவெளி. மீரா, ஐ மிஸ் யூ மீரா. மீரா, ஐ லவ் யூ மீரா. மீரா, உன் விரலின் நுனி, உன் உதட்டின் ஓரம் ஏதாவது ஒன்று வேண்டும் எனக்கு. மீரா...மீரா...மீரா... மீரா...மீரா...

ஜனவரி—16

மீராவை நினைத்து இன்று தலையணையில் முகம் புதைத்துக் கிடந்தேன். சமயத்தில் தான் அணிவித்த தாலியும் அவளே அணிந்த சங்கிலிகளும் என்னைக் குத்தினாலும் மீராதான் இந்த இலவம் பஞ்சைக் காட்டிலும் எனக்கு மெத்.

மீரா...இன்று டையை முடிச்சிட்ட போது ஒரு விரல், முடிச்சின் உள்ளே சிக்கிக் கொண்டது. தெரியுமா? ஐயோ. நீ இல்லாமல் எனக்கு டை அணியப் பிடிக்கவேயில்லை.

ஒட்டலின் கதவு நிழலில் நீ நின்றிருப்பதாக நானே கற்பனை செய்து கொண்டு...



ஜனவரி—17

மீராவின் குரலைச் சுமந்து வந்த என் தொலைபேசி டார்லிங்சே, உன்னை இன்று முழுவதும் வேறு யாருடன் பேசவும் பயன்படுத்த மாட்டேன்.

'பைத்தியக்காரி, என் குரலைக் கேட்டதற்கு ஏன் அழுகிறாய்?' என்று அவளை அதட்டும் போதுதான் பார்க்கிறேன், என் கண்களிலும் நீர். என் தொண்டையும் அடைத்துக் கொள்கிறது.

மீரா...கடலளவு, ஆகாயம் அளவு என்றெல்லாம் சொல்வது கூடக் குறைவு. அளவிட முடியாத அளவு உன்னை நேசிக்கிறேன். ஐ லவ் யூ...ஐ லவ் யூ...ஐ லவ் யூ...

ஜனவரி—22

ச்சீ...நீயெல்லாம் ஒரு மனிதனா! மீராவுக்கு போன் செய்த இரண்டு தடவையும் அவசரமாகப் பேசி வைத்துவிட்டாய். உனக்குப் பிடித்தவளோடு வேண்டிய நேரம் பேச முடியாமல் குறுக்கிடுகிறது என்றால் இந்த வேலை எதற்கு? தூக்கிக் கடலில் போடு.

மீரா, ஸாரிடா. நாளைக்கு உன்னோடு நீயாக போனை கட் பண்ணும் வரை பேசுகிறேன்...ப்ராமிஸ்.

ஜனவரி—28

எனக்கு மீரா வேண்டும். மீரா இப்போதே, இங்கேயே என் பக்கத்தில் வேண்டும். ப்ளீஸ் மீரா...வா...இப்போதே வா.

என் கழுத்தைத் தொட்டுப் பார். சூடு தெரிகிறதா என் உடம்பைத் தொட்டுப் பார். கொதிக்கிறதா?

உன்னால் மட்டுமே என்னைக் குளிர்விக்க முடியும்.

குளித்து விட்டு முதுகில் தண்ணீர்த் துளிகளும் கூந்தல் நுனியில் மட்டும் நனைந்த ஈரமும் உன் சந்தன சோப் வாசமும் எனக்கு இப்போதே வேண்டும்...வா...ப்ளீஸ்...வா!

ஜனவரி—30

அன்று டைரியின் தாளில் மீரா என்று எழுதி வார்த்தை அடிக்கப் பட்டிருந்ததை வசந்தன் பார்த்தான். நிமிர்ந்தான்.

"ஜனவரி முப்பது அன்னிக்குத்தான் மீராவோட அம்மாவைப் பாத்தியா?" என்றான்.

"இல்லை..." என்றான் கண்ணன். "மீராவோட அம்மாவை நான் இதுவரைக்கும் பார்த்ததேயில்லை..."

"பின்னே?" என்றான் வசந்தன்

# 22

மொட்டைமாடியில் திடீரென்று காற்று நுழைந்து டைரியின் பக்கங்களைப் படபடக்க வைத்தது.

வசந்தன் டைரியை மூடிவிட்டு கண்ணனைப் பார்த்தான்

வார்த்தைகள் தொண்டையில் முட்டி நிற்பவன் போல் கண்ணன் எச்சிலைக் கூட்டிக்கூட்டி விழுங்கினான்.

"மீராவோட அம்மாவை நீ ஹைதராபாத்ல பாத்ததா ஏன் பொய் சொல்லணும் கண்ணா? மீரா மேல திடீர்னு எதனால அந்த வெறுப்பு? எந்தத் தப்பும் பண்ணாதவளுக்கு எதுக்கு அந்தத் தண்டனை?"

கண்ணன் ஈரமான கண்களுடன் வசந்தனைத் திரும்பிப் பார்த்தான். "தண்டனை அவளுக்கில்ல வசந்த்... எனக்கு! தப்புபண்ணினது அவ இல்ல... நான்."



கண்ணன், வசந்தனின் அருகில் வந்து அமர்ந்தான். அவன் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டான்.

"நடந்ததை நான் சொல்லி முடிச்சதும் நீ என்னைக் கேவலமாப் பாப்பியோன்னு எனக்குப் பயமாயிருக்கு வசந்த்."

"நம்ம உடம்புல சுமந்துட்டு அலையற அதே அழுக்கைத் தெருவோரத்துல பார்த்ததும் அருவருப்பாகி மூஞ்சியைத் திருப்பிக்கறோமே, அந்தச் சராசரி மனுஷ குணம் நல்ல நட்புல கெடையாது கண்ணா..."

வசந்தன் இப்படிச் சொன்னதும் கண்ணன் முகத்தில் ஒரு தெளிவு வந்தது.

"ஹைதராபாத்ல மீராவைப் பிரிஞ்சு இருந்த நாள்ல அவளுக்காக நான் ரொம்ப ஏங்கிப் போயிருந்தேன் வசந்த். சிலநாள் ராத்திரி ஒண்ணு, ரெண்டுமணி வரைக்கும் கூட புரோகிராம் எழுதற வேலை இழுக்கும். அதுக்கப்புறம் தனியா வந்து ரூம்ல படுக்கும்போது ஏக்கத்துல உடம்பு கொதிச்சுப் போயிடும்..." கண்ணன் சற்று தயங்கி விட்டுத் தொடர்ந்தான்.

"ரொம்ப போக்குகாட்டிட்டிருந்த ஒரு விஷயத்தை புரோகிராம் எழுதி சரி பண்ணினேன். அதைக் கொண்டாடணும்னு பசங்க கூப்ட்டாங்க. தண்ணிபார்ட்டி எனக்குப் புதுசு இல்ல. ஆனா, அன்னிக்குத் தண்ணிக்கு அப்புறம் நடந்த பார்ட்டி புதுசு..."

கண்ணன், வசந்தனின் விழிகளைச் சந்திக்க முடியாமல் பார்வையைத் தழைத்துக் கொண்டான்.

"நானும் நீயும் எப்பவாவது பீர் குடிப்போம் வசந்த்... அவ்வளவுதான். ஆனா, அன்னிக்கு ஃபாரின் விஸ்கி. என் லிமிட்டைத் தாண்டிப் போனதே எனக்குத் தெரியலை. பாட்டுப் பாடியிருக்கேன். செக்ஸ் ஜோக் சொல்லி

யிருக்கேன். எங்களுக்கு கம்பெனி கொடுக்கறதுக்காக சில பொண்ணுங்களை ஏற்பாடு பண்ணியிருந்தாங்க பாரு... அவங்க கூட எல்லாம் டான்ஸ் ஆடினோம். என் மனசை மீறிக்கிட்டு உடம்பு அவங்களைக் கட்டிப்பிடிச்சிருக்கு கூத்து அடிச்சிருக்கு. நெனைப்பு வந்தபோது கட்டில்ல எவளோ ஒருத்திகூட கெடந்தேன். மீராவுக்காக ஏங்கிக் கிட்டிருந்த உடம்பு கடைசில யாரோ பேர் தெரியாத ஒருத்திகிட்ட வடிகால் தேடிக்கிட்டிருக்குனு புரிஞ்சது. அந்த நிமிஷமே நான் செத்துப் போயிருக்கணும் வசந்த்..."

கண்ணன் கட்டுப்பாட்டை இழந்து அழத்தொடங்கி னான். வசந்தன் தடுக்கவில்லை. பல மாதங்களாகப் புதைத்து வைத்த நெருப்புக்குழம்பு. வெளியே பீறிட்டால் தான் அடங்கும்.

சிவந்த கண்களைத் துடைத்துக் கொண்டு கண்ணன் நிமிர்ந்தான்.

"அப்புறம் டைரியை எடுத்தா கையெல்லாம் நடுங்குது வசந்த். 'மீரா, உனக்குத் துரோகம் பண்ணிட்டேன்'னு டைரி பூரா எழுதணும்னு மனசு துடிக்குது. ஆனா முடியல. அவ குரலை போன்ல கேட்டாக்கூட என்னைச் சாட்டை யால அடிக்கற மாதிரி இருந்தது. ஒடுங்கிப் போயிட்டேன்! அசிங்கத்தை எடுத்து எம் மூஞ்சில பூசிக்கிட்டப்புறம் அவ மூஞ்சில எப்படி முழிப்பேன், வசந்த்?"

"மீரா மன்னிக்க மாட்டான்னு முடிவு பண்ணிட்டியா கண்ணா?"

"இல்ல... அவ கால்ல விழுந்து நடந்ததை நடந்தபடி சொல்லிடறதுன்னுதான் நெனைச்சிருந்தேன். அவ மன்னிச்சா அவகூட வாழறது. இல்லேன்னா..."

"மீராவை எனக்குத் தெரியும் கண்ணா. நீ பண்ணினது ரொம்பப் பெரிய தப்புதான். மீரா சுலபமாத் தாங்கியிருக்க



மாட்டா. உடைஞ்சு போயிருப்பா. ஆனா, அவ உம்மேல வெச்சிருந்த பிரியம் அதைவிட பெரிசு கண்ணா..."

"எனக்கும் அதுதான் பயம் வசந்த். எம்மேல இருக்கற பிரியத்தால அவ என்னை மன்னிச்சு ஏத்துக்கிட்டா...? மெட்ராஸ் வரதுக்கு முன்னால என் உடம்பு சுத்தமா யிருக்கானு செக் பண்ணிக்க டாக்டரைப் போய்ப் பார்த்தேன். பிளட் டெஸ்ட் எடுத்தாரு. அதுக்கப்புறம் தான் ஒரேடியா குண்டைத் தூக்கிப்போட்டாரு. என் ரத்தத்துல எய்ட்ஸ் கிருமி இருக்குனு மெடிக்கல் ரிப்போர்ட் வந்திருச்சு... வசந்த். நான் சிதறிப் போயிட்டேன்."

அவன் ரத்தத்தில் எச்.ஐ.வி. இருப்பதாக ஹைதராபாத் டாக்டர் சொன்ன அந்தக் கணத்திற்கே போய்விட்டது போல் கண்ணனின் உடல் நடுங்கிச் சிலிர்த்தது.

"அப்பத்தான் நான் பண்ணின தப்புக்கான தண்டனை என்னோட நின்னு போகணும்னு முடிவு பண்ணினேன். என்கிட்டேர்ந்து மீராவுக்கோ, அவ வயித்துல வளர்ற குழந்தைக்கோ அது பரவாம இருக்கணும்னா."

கண்ணன் டைரி பிரித்து பரபரப்பாக மார்ச் இருபத் தொன்பதை வசந்தனின் முகத்துக்கு நேரே நீட்டினான்.

"மீராவோடு இனி வாழ முடியாது / வாழப் போவ தில்லை."

"மீராவை எனக்கு நல்லாத் தெரியும் வசந்த். எம்மேல இருக்கற பாசத்துல என்கிட்டேர்ந்து விலகிப் போக மாட்டா. என்னோட சேர்ந்து தன்னையும் அழிச்சிப்பா. அதை என்னால தாங்க முடியாது. அதனாலதான் மன்னிப்புன்னு ஒரு வார்த்தையே அவ மனசுல தோணாத படி நடந்துக்கணும்னு தீர்மானம் பண்ணேன். என்கிட்ட நெருங்கறதுக்கே அவளுக்குப் பிடிக்காமப் போகணும்னு தான் மனசைக் கல்லாக்கிக்கிட்டு எப்பவோ ஓடிப்போன,

முகமே தெரியாத அவங்கம்மாவை ஒரு காரணமாக் கிவேன்.''

கண்ணனின் கண்ணீர் கண் விளிம்புகளிலேயே நின்றது.

மௌனம். எங்கோ ஒரு குழந்தை தூக்கம் கலைந்து அழுதது. அகாலமாக ஒரு காகம் கரைந்தது. வசந்தன் திடீரென்று கேட்டான்.

''நான் செத்தா என்னை மறந்துருவியா கண்ணா?''

''என்னடா இப்படில்லாம் பேசறே? நானோ, நீயோ செத்துப்போயிடறதால நமக்குள்ள இருக்கிற நட்பு செத்துப்போயிடுமாடா?'' என்று கண்ணன் துடித்துப் போனான்.

''செத்தாலே மாறாதுன்னு தெரியுதில்ல? பின்ன ஏண்டா என்கிட்டயே மறைச்சே? உனக்குக் காயம்தானடா பட்டிருந்தது? அது அசிங்கமான காயம்னு நீ நெனைச்சதால என்கிட்டக்கூட காட்டறதுக்கு யோசனை பண்ணிட்டியே, கண்ணா. ஏண்டா என்னையும் அந்நியமா நெனைச்சே?''— வசந்தனின் குரல் தழதழத்திருந்தது.

வசந்தனின் கைகளை மறுபடி பிடித்துக் கொண்டான் கண்ணன்.

''நீயும் மீரா மாதிரி தாண்டா வசந்த். அத்தனை அழுக்கோடயும் இந்தக் கண்ணனை ஏத்துப்பே. அந்த அகங்காரம் எனக்குப் போகணும்னு நெனைச்சேன். உயிர் போறவரைக்கும் உன்கிட்டக்கூடச் சொல்லக் கூடாதுன்னு தான் இருந்தேன்.''

கண்ணனின் குரல் உடைந்தது.

''ஆனா, அத்தை எனக்கு இத்தனை பெரிய தண்டனை தருவாங்கனு நெனைக்கலடா. என்னை வளர்த்து ஆளாக்கின அத்தைக்கு என் கையால கொள்ளிபோட



அருகதை இல்லைன்னு ஒதுக்கினதும் என்னால தாங்க முடியலைடா! அதுக்கு மேலயும் இறுக்கமா இருக்க முடியாமத்தான் எல்லாத்தையும் உன்கிட்ட கொட்டிட் டேன்.''

கண்ணன் இரு கைகளையும் முகத்தில் பொத்திக் கொண்டு குலுங்கினான்.

வசந்தன் கன்றைத் தடவிக் கொடுப்பதுபோல் அவனைத் தடவிக் கொடுத்தான். அந்த ஸ்பரிசம் கண்ணனை இன்னும் கரைத்தது.

ஃ ஃ ஃ

தடக் தடக், தடக் தடக் என்று சீரான லயத்தில் ரயில் ஓடிக் கொண்டிருந்தது. ரயிலில் அத்தனை பேரும் தூங்கிப் போய்விட்டார்கள்—வசந்தனைத் தவிர.

கண்ணனைப் பற்றிய நினைவுகளால் அவன் இதயத்தில் வேதனை உறைந்து போயிருந்தது. அத்தையின் மரணத் தால் நெகிழ்ந்து போயிருக்காவிட்டால் தன்னிடம் கண்ணன் தன் ரகசியங்களை திறந்து காட்டியிருக்க மாட்டான் என்று வசந்தனுக்குத் தோன்றியது.

ஆனால், மீராவுக்கு இந்த உண்மைகள் தெரிந்து போனால் அவளுடைய சந்தோஷம் பறிக்கப் பட்டுவிடும் என்று கண்ணன் பயந்ததால், எக்காரணம் கொண்டும் வசந்தன் அவளிடம் இதுபற்றி சொல்லிவிடக்கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டிருந்தான்.

''வசந்த். மீராவுக்கு நான் அமைஞ்சது நியாய மில்லடா. அதான் விதி பிரிச்சிருச்சு. இப்பத்தான்டா அவளுக்கு சரியானபடி பூர்த்தியாயிருக்கு. அவ சந்தோஷமா இருக்காளாடா?''

இந்த வார்த்தைகளை கண்ணன் உதிர்த்தபோது அவள் கண்களில் அன்பும் ஆர்வமும் எப்படித் ததும்பின!

மீரா, கண்ணனின் வீட்டைவிட்டு வெளியேறியபின், கண்ணன் தனது டைரிகளில் அங்கங்கே கொட்டியிருந்த உணர்ச்சிக் குமுறல்கள் வசந்தனின் நினைவுத்திரையில் வரிகளாக ஓடின.

* என் உயிரையே என்னிடமிருந்து பிரித்து வீதியில் வீசிவிட்டேன். இனி நான் ரத்தமும் சதையும் கலந்த வெறும் உயிரற்ற பிண்டம்தான்.

* மீரா... மீரா... மீரா... இப்போதெல்லாம் எந்த இருட்டு நிழலிலிருந்தும் நீ என் மீது பாய்ந்து கட்டிப் பிடிப்பதில்லை. சந்தன சோப்பின் மணமும் ஈரத்தை முற்றிலும் துடைக்காத உடலுமாக என் மார்பில் தலை சாய்ப்பதில்லை. என் இமைகளில் ஊதிக் கண்களைப் படபடக்க வைப்பதில்லை.

* மீரா... குழந்தை பிறந்துவிட்டதாமே! டெலிவரி சமயத்தில் உன் அருகில் நான் நின்றிருக்க உன்னிடம் அனுமதி பெற்றுக்கொண்ட அந்தத் தினத்தை நினைத்தேன். யாருக்கும் தெரியாமல் பாத்ரூமில் அழுவதைப் போன்றதொரு நரகம் ஆணுக்கு வேறில்லை. மீரா, நீ சந்தோஷமாயிருக்கிறாயா? சந்தோஷமாயிருக்க வேண்டும்... சந்தோஷமாக மட்டுமே இருக்க வேண்டும்!

* என்னைப் பார்த்ததும் உன் கண்களில் எப்படியொரு மத்தாப்பு வெளிச்சம் வீசியது! நான் குழந்தையைப் பார்க்க வரவில்லை. உன்னை வக்கீலிடம் அழைத்துப் போக வந்திருக்கிறேன் என்று சொன்னதும், அந்த வெளிச்சம் எப்படிக் கருகிப்போனது! குழந்தையைப் பார்க்கத்தான் வந்தேன் என்று என்னால் சொல்ல முடியாமல் போய்விட்டதே. அதை மார்போடு அணைத்துக் கொள்ள நான் துடித்த துடிப்பை வெளிப்படுத்த முடியா



மலே போய்விட்டதே. எனக்கு நரகத்தைத் தவிர, வேறெங்கே இடம் கிடைக்கப் போகிறது?

* மீரா... எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா? வசந்தனுக்கும் உனக்கும் திருமணமா? கூட இருந்து வாழ்ந்த இதயம் துடிக்கிறது. ஆனால், தைரியம் இல்லை. பார்வையற்றவன் கையில் கிடைத்த வைரமாய் நீ பாழாகிக் கொண்டிருந்தாய். இனி உன் வாழ்க்கை வசந்தமாகப் போகிறது.

* மீரா... உன்னை நினைக்காமல் என் நாட்கள் முடிவதில்லை. குத்தி வலிக்கும் காயத்தைத் தொடாமல் சுற்றி நகங்களால் சுரண்டி குறுகுறுப்பு ஏற்றினால் கிடைப்பது போன்ற ஓர் இதம் உன் நினைவுகளால் மட்டுமே எனக்குக் கிடைக்கிறது.

ஃ ஃ ஃ

திடீரென்று ஏதோ ஒரு குழந்தை தூக்கத்தில் விழித்தெழுந்து அலறிய அலறலில் ரயில் பெட்டியே விழித்தது.

வசந்தன் கலைந்தான்.

மீராவை இழந்த பின்பும் அவளைத் தன் இதயத்திலிருந்து இறக்கி வைக்கமுடியாமல் கண்ணனுடைய மனம் எவ்வளவு கனத்துப் போயிருக்கிறது.

மீரா சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவளை இழப்பதற்கு கண்ணன் அவ்வளவு அவசரப்பட்டிருக்கிறான் என்பது புரிந்தபோது வசந்தனின் வேதனை கூடியது.

'யாருடனும் பகிர்ந்துகொள்ள முடியாமல், நீயாக உனக்கு ஒரு தண்டனை விதித்துக்கொள்ள அவ்வளவு அவசரப்பட்டிருக்க வேண்டாம் கண்ணா!

எல்லா சாபங்களுக்கும் ஒரு விமோசனம் உண்டு உன் சாபத்துக்கும் ஒரு விமோசனம் இருக்கும்!

நீளமானதொரு விசிலைக் கூவிவிட்டு ரயில் இருட்டில் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

ஃ ஃ ஃ

மீரா, சந்திரிகாவின் வீட்டு பால்கனியில் இருந்தாள். பேச்சுத் துணைக்காக அவளை இழுத்து உட்கார வைத்துக் கொண்டிருந்த சந்திரிகா அப்போதுதான் எழுந்து கீழே போயிருந்தாள்.

உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து மீரா தனது வீட்டை ஒரு பறவை பார்ப்பது போல் பார்க்க முடிந்தது.

வசந்தனும் கௌதமும் தோட்டத்தில் இருந்தார்கள்.

வசந்தனின் தோள்களில் இரு கால்களையும் ஊன்றி கௌதம் நின்றிருந்தான். திடீரென்று கிடைத்து விட்ட உயரத்தால் ஆனந்தமாகி, கௌதம் தன் விரல்களால் மரக்கிளைகளைத் தட்டினான். தென்னை ஓலையைப் பிடித்து இழுத்தான். வசந்தனை அங்கேயும் இங்கேயுமாகப் போகச் சொல்லி உத்தரவுகள் கொடுத்துக் கொண்டிருந்தான். வசந்தன் சந்தோஷமாக அடி பணிந்து கொண்டிருந்தான்.

கண்ணனின் அத்தைக்கு நெருப்பு வைத்துத் திரும்பியதற்குப் பிறகு இன்றுதான் அவன் வசந்தனின் முகத்தில் இந்த மலர்ச்சியைப் பார்க்கிறாள். மற்றபடி வாடிய முகத்துடன் அவள் விழிகளைத் தவிர்த்தே அவன் பேசிக் கொண்டிருந்ததன் காரணத்தை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது

தாயைப்போல கருணையுடன் இருந்த அத்தையின் மரணம் ஒரு பக்கம், அவள் மரணத்தால் கண்ணனுக்கு



மறுக்கப்பட்ட உரிமை மறுபக்கம் என்று வசந்தனின் நெஞ்சில் வலியேறியிருக்கும். கண்ணனோடு சில நாட்கள் இருந்து விட்டு வந்திருக்கிறான். அந்த அதிர்வுகளிலிருந்து மீள்வதற்கு அவனுக்கு நேரம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

''மோளே... இந்தா..'' சந்திரிகாவின் குரல் வரும் முன்னரே, அவளிடம் இருந்து சுகந்தமான அடர்த்தியான கிளர்ச்சியெழுப்பும் வாசம் வந்தது. சந்திரிகா கைகளை விரித்துக் காட்டினாள். முழுவதும் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த மனோரஞ்சிதப் பூக்கள்.

''ஈ புஷ்பத்தின் ஒரு விசேஷம் உண்டு. அறிஞ்சு கூடாயோ?'' என்று கேட்டுக் கண்ணடித்துப் புன்னகைத்தாள் சந்திரிகா.

''தலையில் ஈ பூ சூடி கிடந்நால், நிண்டெ வசந்தன், மகுடிக்கு மயங்குன்ன ஸர்ப்பம் போலே நின்னில் மயங்ஙிக் கிடக்கும்.''

மீரா சற்றே தயங்கி விட்டு ஒரு தீர்மானத்துடன் அந்தப் பூக்களைச் சந்தோஷமாக வாங்கிக் கொண்டாள்.

## 23

வசந்தன் கட்டிலில் சப்பணமிட்டு அமர்ந்திருந்தான். மடியில் பிரித்து வைத்த புத்தகத்திலிருந்து பார்வை விலகியிருந்தது. சற்று நேரமாகவே அவன் மீராவைத்தான் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் அப்பாவும் கௌதமும் தூங்கப் போன பின், மீராவிடம் ஒரு தடுமாற்றம் தெரிந்தது. மனோரஞ்சிதப் பூக்களைத் தலையில் சூடுவதும் எடுப்பதும் சற்றுத் தயங்கி

விட்டு மறுபடி கூந்தலில் வைப்பதுமாக அவன் தேவையற்ற போராட்டத்தில் சிக்கியிருப்பதைப் பார்த்தால் பாவமாயிருந்தது.

வசந்தனின் வாழ்க்கை முழுமை பெறாமல் போய் விட்டது போலவும் அதற்கு அவளே காரணமாக இருந்து விட்டது போலவும் அவளாக ஒரு தீர்மானத்துக்கு வந்து அந்தக் குற்ற உணர்ச்சியால் மறுபடி மறுபடி செலுத்தப் படுவதைப் பார்த்தால் வேதனையாக இருந்தது.

'என் முட்டாள் மீராவே, நீ அனுபவித்த சுகங்கள் பற்றியும் எனக்குத் தெரியும். கண்ணனின் முட்டாள் தனத்தால் நீ இழந்து விட்ட சுகங்கள் பற்றியும் தெரியும். தானாக மலரும் பூவைப் போல், கண்ணனுக்கும் உனக்கும் இடையில்தான் அந்தச் சுகம் மலர்ந்திருக்க முடியும் என்பதும் தெரியும்.'

கண்ணனின் டைரியைப் படிக்கும் வாய்ப்பு உனக்குக் கிடைக்கவில்லை. அவன் உன் மனதின் ஏக்க வரிகளை நான் படித்தது உனக்குத் தெரியாது. அதற்கு அப்புறமும் உன்னைக் கண்ணனுக்கு மட்டுமே உரியவளாகப் பார்க்காமல் வேறெப்படி என்னால் பார்க்க முடியும்?'

மனோரஞ்சிதப் பூக்களை அணிந்து மீரா படுக்கை யறைக்குள் நுழைந்த போது, அந்த வாசத்தால் கவரப் பட்டு வசந்தன் நிமிர்ந்தான். மீரா அடுத்த அடியைத் தயக்கத்துடன் எடுத்து வைத்தாள். கட்டிலின் விளிம்பில் அமர்ந்தாள். அவள் பார்வை தரையைவதும் எழுவதுமாகத் தத்தளித்தது.

வசந்தன் அவள் பக்கம் திரும்பி உட்கார்ந்தான். புன்னகைத்தான்.

"நீ என்னிக்காவது கட்டுமரத்தில் ஏறி கடல்ல போயிருக்கியா மீரா?" என்று கேட்டான் வசந்தன் திடுதிப் பென்று.



மீரா புரியாமல் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"இல்லை...நீ போனது இல்லை. அதனால அந்த அனுபவம் எப்படி இருக்கும்னு உனக்குத் தெரியாது. என்னிக்காவது அதை இழந்துட்ட மாதிரி நீ நெனைச்சுத் துக்கப்பட்டிருக்கியா? துக்கப்பட்டதும் இல்ல..." வசந்தன் ஒரு வளர்ந்த குழந்தையிடம் பேசுவது போன்ற குரலில் பேசினான்.

"அப்படித்தான் மீரா நானும். எல்லா சுகத்தையும் அனுபவிச்சுத் தெரிஞ்சிக்கணும்னு ஆசைப்பட்டதும் இல்ல. எதையோ இழந்துட்ட மாதிரி துக்கப்பட்டதும் இல்ல. இன்னொரு தடவை என்னை நெனைச்சு நீ உன்னைக் குழப்பிக்காத மீரா."

மீரா உடனடியாக எதுவும் சொல்லாமல் சில விநாடிகளை மௌனமாகக் கழிய விட்டாள். பின் மெள்ள நிமிர்ந்தாள்.

"வசந்த், இது தப்புன்னு நெனைச்சு ஒதுங்கறியா?"

"தப்பா, ரைட்டான்னு பேச்சு இல்ல மீரா. அவசியமா, அவசியமில்லையான்னுதான் உனக்கும் தடுமாற்றம்."

மீரா நனைந்த கண்களுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். வசந்தன் அவள் கன்னத்தை மென்மையாகத் தட்டினான்.

'நான் சந்தோஷமாத்தான் இருக்கேன் மீரா. நீ பழைய மீராவா இரு போதும். குட்நைட்."

மீரா பூவைக் களைந்து வைத்து விட்டு, "குட்நைட்!" என்றாள்.

* * *

சுந்தரி அந்த அறையில் மாட்டப்பட்டிருந்த குழந்தைகளின் வெவ்வேறு படங்களைப் பார்வையால் வருடிக் கொண்டிருந்தாள்.

டாக்டரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

அத்தையின் மரணத்துக்குப் பிறகு அவனுடைய பொறுப்புகள் கூடிவிட்டாற் போலிருந்தது.

சுந்தரி தன் வேதனைகளை அவனிடம் சொல்லாமல் அவனுடைய தேவைகளைப் பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டிருந்ததை நினைத்தால் வருத்தமாக இருந்தது சுந்தரி கால் வலியின் உச்சகட்டத்தில், வேறு வழியின்றி டாக்டரிடம் வரச் சம்மதித்திருந்தாள்.

டாக்டர் தன் விரல்களைக் கோத்து மேஜை மீது வைத்துக் கொண்டார்.

"இவங்களுக்கு வந்திருக்கறது ருமாடிக் டிஸார்டர் இல்ல. என்னா மூட்டுல வலி இருக்கே தவிர, வீக்கம் இல்ல" என்றார் டாக்டர்.

"அப்படின்னா இது ஃபைப்ரோமயால்ஜியாவா?" என்று சுந்தரி புன்னகையோடு கேட்டாள்.

டாக்டர் அவளை ஆச்சரியமாகப் பார்த்தார். "நீங்க டாக்டருக்குப் படிச்சிருக்கீங்களா?"

"இல்ல டாக்டர். பொதுவாவே இவ எல்லா வகையான புத்தகமும் படிப்பா. அதை வெச்சிக்கிட்டு சொல்றா" என்றான் கண்ணன்.

"அரை கொறையாத் தெரிஞ்சுக்கறது ரொம்ப டேஞ்சர்மா. சில மருந்து தரேன். விடாம சாப்பிடுங்க. சில எக்ஸர்சைஸ் சொல்லித் தரச் சொல்றேன் விடாம



செய்யுங்க. வலி கொறையும். அதுக்காக பூரணமா கொணம் ஆய்டும்னு சொல்ல முடியாது."

மணி அடித்து பிஸியோதெரபிஸ்ட் அறைக்கு அவர்களை அழைத்துப் போகச் சொன்னார் டாக்டர்.

நாற்காலியில் இருந்து எழுந்தபோது சுந்தரியின் அந்தரை நேரப் புன்னகை, வலியின் தீவிரம் காரணமாக நழுவிக் கலைந்தது.

ஆதரவுக்காக கண்ணனின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

"நாராயண் நேச்சுரல் க்யூர் சென்டர்' என்ற வார்த்தைகள் ஆங்கிலத்தில் பசுமையான செடிகளாலேயே அமைந்திருந்தன.

வசந்தனை வரவேற்க வாசலிலேயே வெள்ளை ஜிப்பாவும் பைஜாமாவும் அணிந்திருந்த ஒரு இளைஞன் இன்முகத்துடன் காத்திருந்தான். வசந்தனை அழைத்துக் கொண்டு செம்மண் பாதையொன்றில் நடந்தான். அந்தப் பாதை நீண்டு வளைந்து பசுமைக்குள் போனது. இருபுறமும் வெள்ளை உடுத்திய இன்னும் பற்பல இளைஞர்கள் மூலிகைச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டோ, தேவையற்ற களைகளைப் பிடுங்கிக் கொண்டோ சந்தோஷமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். அந்த இயற்கை மருத்துவமையத்தின் காற்றிலேயே ஆரோக்கியத்தின் நறுமணம் கமழ்ந்தது.

பாதையின் முடிவில், ஓலைவேய்ந்த பெரிய மூங்கில் குடில் ஒன்றுக்குள் அவன் அனுமதிக்கப்பட்டான்.

காவி உடுத்தி, முகம் நிறைந்த வெண்தாடியும் மீசையுமாக ஒரு பெரியவர் அவனை வரவேற்றார். எதிரில்

இருந்த சதுரப்பாயில் அவனை அமரச் சொன்னார். அவரைப் பார்த்தால் ஒரு ஆன்மீக குரு போல் தோன்றியதே தவிர, இயற்கை வைத்தியரைப் போல் தெரியவில்லை.

ஆங்கில மருத்துவ முறையில் குணப்படுத்த முடியாத பல நோய்களை அவருடைய இயற்கை மருத்துவமையத்தில் குணப்படுத்துகிறார்கள் என்று வசந்தனுக்கு நெருக்கமான ஒரு அலுவலக நண்பர் குறிப்பிட்டிருந்ததைச் சொன்னான்.

அறிமுகம் முடிந்ததும் வசந்தன் கண்ணனைப் பற்றி விவரித்தான். அவர் கண்களை மூடியபடி கவனத்துடன் கேட்டுக்கொண்டார்.

"அந்தச் சகோதரனுக்கு என்ன வயசிருக்கும்?" என்று கேட்டார்.

"என் வயசுதான் கண்ணனுக்கு" என்றான் வசந்தன்.

"மூணு வாரம் வேலையை எல்லாம் ஒதுக்கி வெச்சுட்டு அவரால பயிற்சிக்கு வர முடியுமா?"

"வருவான். இது உயிர்ப் பிரச்னை!" என்றான் வசந்தன்.

"எய்ட்ஸைக் குணப்படுத்தறதுக்கு மருந்து கண்டு பிடிச்சிட்டா, மனுஷனுக்கு மறுபடியும் பயம் விட்டுப் போய்டும்" என்று பற்கள் பளீரிடச் சிரித்தார். "இங்கேயும் சில ஆராய்ச்சி நடந்துட்டுதான் இருக்கு. எய்ட்ஸ் பத்தி படிச்சிருக்கீங்களா வசந்தன்?"

வைத்தியரின் தமிழில் மழலை.

"படிச்சிருக்கேன்" என்றான் வசந்தன்.

"அதுவே ஒரு நோய் இல்ல. ஹெச். ஐ.வி. இருந்தா மனுஷ உடம்புல இருக்கற எதிர்ப்புசக்தி குறைஞ்சு



போயிடுது. மத்த நோயெல்லாம் வந்து பிடிச்சுக்குது நாங்க என்ன பண்றோம் இங்கன்னு தெரியுமா? மனுஷ உடம்புல எதிர்ப்புசக்தி குறைஞ்சு போகாம இறக்கறதுக்கு என்ன செய்யணுமோ அதெல்லாம் சொல்லித் தரோம். பிராணாயாமம், தியானம், சில யோகாசனங்கள். இதுதவிர, ரத்தத்துல எதிர்ப்புசக்தி ஜாஸ்தியாகறதுக்குக் கொஞ்சம் இயற்கை சிகிச்சை, சரியான உணவுப் பழக்கம்..."

"என் நண்பனை எப்ப வரச் சொல்லட்டும்?"

"எதுக்குத் தள்ளிப்போடணும்? உடனே வரச் சொல்லுங்க. இங்க வரதுக்கு முன்னால ரத்தத்தை ஒரு தடவை புதுசா பரிசோதனை பண்ணி இப்ப ரத்தத்துல ஹெச். ஐ.வி எவ்வளவு தூரம் பரவியிருக்குன்னு ஒரு ரிப்போர்ட் வேணும். இன்னும் சில டெஸ்ட்டெல்லாம் எடுத்துட்டு வரணும். நாங்க சொல்லிக் கொடுக்கற பயிற்சிகளை அந்தச் சகோதரன் தவறாம பண்ணினா அவர் ஆயுள் தானாக் கூடிடும்..." அவர் புன்னகை நம்பிக்கை ஊட்டியது.

வசந்தன் அவரை வணங்கிப் புறப்பட்டான்.

ஃ ஃ ஃ

கடற்கரையின் மணல்வெளி எங்கும் காலடித் தடங்கள். அலைகளின் ஓயாத இரைச்சல் கேட்கும் தூரத்தில் படகு நிழலில் கண்ணனும் வசந்தனும் உட்கார்ந்திருந்தார்கள். படகிலிருந்து ஈரக்கயிற்றுச் சுருளின் வித்தியாசமான வாசம் வீசியது.

"இதுக்காகவாடா மெட்ராஸ் வந்தே?" என்றான் கண்ணன்.

"பாங்க் வேலையா இங்க கோர்ட்ல ஆஜராக வேண்டியிருந்தது. அதை ஒரு சாக்கா வெச்சுக்கிட்டு வந்துட்டேன்" என்றான் வசந்தன். "நீ எப்ப வரே?"

"இப்ப எனக்கு எதுக்குச் சிகிச்சையெல்லாம் வசந்த்? நான் பண்ணின தப்புக்கு இருக்கற வரைக்கும் இருந்துட்டுப் போக வேண்டியதுதானே?" கண்ணன் மெல்லிய குரலில் கேட்டான்.

"உயிர் தியாகம் பண்றதுக்கு நீ என்ன போர்முனையிலயா நிக்கறே? முட்டாள்தனமாப் பேசாதே. அத்தை இல்லாம இப்ப சுந்தரி தனியா நிக்கறாளே... அவளைப் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு உனக்கு இல்லையா? இன்ஸ்டிடியூட்டைப் பார்த்துக்க உன் பார்ட்னரெல்லாம் இருக்காங்க. ஸோ, நீ கேரளாவுக்கு வரே. அங்க நான் எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு கண்ணா..." வசந்தன் குரலில் அழுத்தம் சேர்த்துச் சொன்னான்.

"தெரியும்டா. நீ இப்படி அல்லாடுவேனு தெரியும். அதனால தான் உன்கிட்டகூடச் சொல்லாம இருந்தேன்..." கண்ணன் சற்றுத் தயங்கிவிட்டுச் சொன்னான்.

"நான் எந்த மூஞ்சியோடடா அங்க சிகிச்சைக்கு வருவேன்? மீராகிட்டயும் அப்பாகிட்டயும் என்னடா சொல்லுவேன்?"

"உன்னை மட்டும் வரச்சொல்லலை கண்ணா. சுந்தரியோட மூட்டுவலிக்கு அங்க அற்புதமான சிகிச்சை இருக்காம். அவளுக்காக நீ வந்திருக்கறதா சொல்லிட்டாப் போச்சு..."

"நீயும் உங்கப்பாவும் ஃப்ரெண்ட்ஸ் மாதிரி பழகிட்டிருக்கீங்க. இதுவரைக்கும் நீ அவர்கிட்ட பொய் சொன்னதில்ல எதையும் மறைச்சதில்ல. எனக்காக அந்தப் பாவத்தை இப்பச் செய்யப் போறியாடா?"

"அர்த்தமில்லாத காரணங்களைச் சொல்லித் தட்டிக் கழிக்காத! உனக்காக இல்லேன்னாலும் சுந்தரிக்காவது நீ



வரணும் கண்ணா!" வசந்தன் அவன் முதுகைத் தட்டிச் சொன்னான்.

ஃ ஃ ஃ

மீரா ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள். ஜன்னல் திரைகளை மூடினாள். படுக்கை விரிப்பை மாற்றினாள். பெரிய விளக்கை அணைத்துவிட்டுச் சற்று நேரம் கட்டிலில் உட்கார்ந்தாள். எழுந்து வெளியறைக்குப் போனாள். டெலிவிஷனைப் போட்டாள். உடனே அணைத்தாள்.

காலையிலிருந்தே அவளை அறியாமல் அவளுள் ஒரு பரபரப்பு கூடியிருந்தது.

அலுவலக வேலையாக வசந்தன் சென்னைக்குப் போயிருந்த மூன்று நாட்களிலும் அவன் இல்லாத வெறுமை அவளை வெகுவாகத் தாக்கியிருந்தது.

அந்தச் சிறிய படுக்கையறையில் தனியே படுத்திருந்த இரவுகளில் ஏதோ மாபெரும் பாலையின் மணற்பரப்பில் தனித்துக் கிடந்தது போன்றதொரு அதைரியம் அவளை ஆட்கொண்டிருந்தது

வசந்தனின் முகம் பார்க்காமல், அவன் குரல் கேட்காமல் அவளுடைய தினங்கள் வெறிச்சோடிப் போனாற் போலிருந்தது

கண்ணனை வசந்தன் பார்த்தேயிராதிருந்தால், மீராவுடனான அவனுடைய உறவு எந்தத் தடுமாற்றமும் இன்றி முழுமை அடைந்திருக்கும் என்று தோன்றியது.

மீராவைப் பார்க்கும்போதெல்லாம் கண்ணனின் நினைவுகள் வசந்தன் மீது ஒரு நிழலான சுமையாகப் படிந்து அழுத்துகின்றன.

கண்ணனின் நினைவுகள் அவளுக்கு மட்டும் வராமலா இருக்கின்றன? பூத்திருக்கும் சாம்பலை ஊதினால் நினைவுகள் நெருப்பாகக் கொழுந்துவிட்டு அவளுள்ளும் எழுகின்றன. அந்த நினைவு நெருப்பு அவள் மனதில் சூடு இழுத்துப் பொசுக்கும் தீயாகவும் இருக்கிறது. நேற்றைய சந்தோஷம், இன்றைக்கு சந்தோஷமாக இருக்கிறதோ இல்லையோ, நேற்றைய வலி என்றைக்கும் வலிதான். அதனால் இப்போதெல்லாம் அவள் சாம்பலை ஊதிப் பார்ப்பதில்லை. வசந்தனுக்கும் அந்தத் தெளிவு வரும் நாளுக்காக அவள் உள்மனம் ஏங்கியது.

ஃ ஃ ஃ

கேட் திறக்கப்படும் ஒலி கேட்டு மீரா வாசலுக்கு விரைந்தாள்.

வசந்தன்தான்!

அவளைப் பார்த்ததும் அவன், புன்னகை விரிந்தது. அவள் இதயம் நிறைந்தது.

அவன் கையிலிருந்து அலுவலகப் பெட்டியை அவள் வாங்கிக் கொண்டாள்.

''என்ன வசந்த், இன்னிக்கு லேட்டு?''

''ரயில் லேட்டா வந்ததால ஆபீஸுக்கே லேட்டாத் தானே போனேன்? கௌதம் எங்கே?''

''பக்கத்துக் கோயில்ல ஏதோ கதகளியாட்டம். மாமா அவனையும் அழைச்சிட்டுப் போயிருக்காரு. குளிச்சிட்டு வரியா, சாப்பிடலாம்?''

''ம்.''

முற்றத்தில் கால்கழுவும்போது வசந்தன் முகத்தைத் திருப்பி அவளைப் பார்த்தான்.



''மீரா... சொல்ல மறந்துட்டேனே... கண்ணன் இங்க வரப்போறான். நம்மகூடத் தங்கப்போறான்!''

## 24

முற்றத்தின் வழியே ஆகாயம் திறந்து கிடந்தது.

நட்சத்திரங்கள் கூட்டம் கூட்டமாகச் சிடுக்காகிக் கிடந்தன—மீராவின் மனதைப்போல்.

வசந்தன் சொன்னது அவள் காதில் சரியாகத்தான் விழுந்ததா?

'கண்ணன் இங்கே வரப்போறான்... நம்மகூடத் தங்கப் போறான்' என்றா சொன்னான்?

அவள் காலடியிலிருந்து பூமி இழுக்கப்படுவதுபோல் உணர்ந்தாள். தூணைப் பற்றித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டாள்.

''நிஜமாத்தான் சொல்றியா வசந்த்?'' என்றபோது குரல் நடுங்கியது. ''இப்ப திடீர்னு கண்ணன் எதுக்கு இங்க வரணும்?''

வசந்தன் அவள் பதற்றத்தைப் புரிந்துகொண்ட மாதிரியே தெரியவில்லை.

''சுந்தரிக்கு இப்ப மூட்டுவலி ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சாம். இங்கிலீஷ் வைத்தியத்துல சட்டுனு குணம் தெரியலை இங்க நம்ம ஊருக்குப் பக்கத்துல ஒரு இயற்கை வைத்தியசாலை இருக்கு தெரியுமா? அங்க இந்த மாதிரி மூட்டுவலிக்கும் பக்கவாதத்துக்கும் மூலிகை எண்ணெயெல்லாம் பூசி நல்லா குணமாக்கிடறாங்க. ரெண்டு மூணு வாரம் தங்கியிருந்து சிகிச்சை எடுத்துக்கணும். சுந்தரிக்குத்

துணையா கண்ணனும் வரான்...'' என்று இயல்பான தொனியில் சொல்லிக்கொண்டே அவன் முகத்தை வசந்தன் பார்த்தான்.

''பழசையெல்லாம் அவ்வளவு சீக்கிரம் உன்னால மறக்க முடியுதா வசந்த்?'' —மீரா மெல்லிய குரலில் கேட்டாள்.

''மறக்க வேண்டியதை மறக்காம பிடிவாதமா ஞாபகம் வெச்சிருக்கறதால என்ன லாபம் மீரா?''

மீரா பதில் சொல்லவில்லை.

கண்ணனின் அத்தையின் இறப்புக்குப் போய் வந்ததிலிருந்தே வசந்தனிடம் இந்த மாறுதலை அவள் பார்த்தாள். கண்ணனுடனான பழைய நட்பை உயிர்ப்பிப்பதற்காக வசந்தன் உலகத்தையே புரட்டத் தயாராகிவிட்டதை உணர்ந்திருந்தாள். 'ஏன் அப்படி? எதற்காக?' என்ற கேள்விக்குத்தான் விடைபுரியவில்லை.

என்ன இருந்தாலும் கண்ணனுக்கும் வசந்தனுக்கும் இடையிலான நட்பைக் கேள்வி கேட்க அவள் யார்?

அவனிடம் இரக்கமற்றவனாக, இதயமற்றவனாக நடந்துகொண்டவன், அருகாமைக்கு வந்துவிட்டால் மட்டும் அவள் மனம் இளகப்போகிறதா என்ன? ஒருக்காலும் இல்லை! வந்தால் வரட்டுமே!

''வந்தா வரட்டுமே!'' என்றாள் உரக்க.

''ம்?'' என்றான் வசந்தன் திகைத்து.

''குளிச்சிட்டு வா, சாப்பிடலாம்'' என்று மீரா உள்ளே நகர்ந்தாள்.

ஃ ஃ ஃ



''தப்பு வசந்தா?''

வசந்தன் நிமிர்ந்து தன் அப்பாவைப் பார்த்தான். அவனிடம் அண்மையில் இவ்வளவு உறுதியான குரலில் அவர் பேசினதேயில்லை.

''கண்ணன் உனக்கு ஃப்ரெண்ட் மட்டுமில்ல... எனக்கும் அவன் மகன் போலத்தான். நம்ம வீட்டுல அவன் தங்காம வெளியே தங்கியிருந்தா நானே அவன்கிட்ட சண்டைக்குப் போயிருப்பேன் —மூணு வருஷத்துக்கு முன்னால!''

அவர் கிணற்றுநீரை இறைத்து, செடிகளுக்குப் போகும் கால்வாயில் ஊற்றிக்கொண்டே பேசினார்.

''ஆனா, இன்னிக்கு இந்த வீட்டுல நீயும் நானும் மட்டும் இல்ல... மீரா இருக்கா. இந்தச் சூழ்நிலைல கண்ணன் எப்படி நம்ம வீட்டுல தங்க முடியும்?''

''கண்ணன் நம்ம ஊருக்கு வந்தப்புறம் வெளில எப்படிப்பா தங்கச் சொல்ல முடியும்?''

''கண்ணன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் தான் மீராவும்னு எனக்குத் தோணுது வசந்தா. அதனால உன்னைக் கேக்காமலேயே நான் ஒரு ஏற்பாடு பண்ணிட்டேன்...''

''என்னப்பா?'' என்றான் வசந்தன், சிறு மிரட்சியோடு

''பக்கத்து வீட்டு சேதுமாதவன்கிட்டக் கேட்டேன். அவங்க அவுட்ஹவுஸ் காலியாத்தான் இருக்காம். 'உங்க விருந்தாளி தாராளமா அங்க தங்கிக்கலாமே'ன்னு அவர் சொல்லிட்டாரு. கண்ணனை ரொம்பத் தள்ளிவெச்ச மாதிரியும் இருக்காது. மீராவை வேதனைப்படுத்தின மாதிரியும் இருக்காது. என்ன சொல்றே?''

''ரொம்ப கரெக்ட்... இதெல்லாம் நானே யோசிச்சிருக்கணும். இதுவிடத் தெளிவான முடிவு எடுக்க எனக்குத்

தெரிஞ்சிருக்காது அப்பா'' என்றான் வசந்தன், அவரிட மிருந்து கிணற்று வாளியை வாங்கிக்கொண்டே.

❧ ❧ ❧

விடியும் முன்பே எழுந்திருப்பதற்காக அலாரத்தில் நேரத்தை மாற்றி வசந்தன் வைத்தபோதே மீரா தன் நெஞ்சில் படபடப்பை உணர்ந்தாள்.

இன்னும் சில மணி நேரங்கள்தான். கண்ணன் வந்து விடுவான்!

வந்தால் வரட்டுமே என்று உதடுகள் வலியின்றி வார்த்தைகளை உமிழ்ந்துவிட்டன. ஆனால், அவளுக்குள் எரிமலை புரள ஆரம்பித்துவிட்டது.

வசந்தனுக்கு அஸ்ஸாமுக்கோ, பீகாருக்கோ மாற்ற லாகித் தொலைத்திருக்கக்கூடாதா? இயற்கை வைத்திய சாலை இருக்கும் கேரளாவுக்குத்தானா மாற்றல் வந்துசேர வேண்டும்?

சந்திரிகாவின் வீட்டு அவுட்ஹவுஸ் ஒழித்துக்கொடுக்கப் பட்டு விட்டது. கண்ணனின் வசதிக்காக என்று வசந்தன் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருந்தான். கண்ணன் தங்கியிருக்கும் நாட்களில் அவன் உபயோகத்துக்கு என்று யாரோ நண்பரிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிள்கூட வாங்கி வந்து வைத்து விட்டான்.

பேசாமல் அந்த வைத்தியசாலையில் சுந்தரியோடு சேர்த்து கண்ணனையும் தங்கச் சொல்லி விட்டால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்?

''மீரா...'' வசந்தனின் குரலில் ஒரு புன்சிரிப்பு கலந்திருந்தது.

''ம்?''



''நெனைவிருக்கா? கண்ணன் ஹைதராபாத்திலேர்ந்து திரும்பி வந்தானே... அப்ப ரயில் விடிகாலைல வந்துரும்னு ராத்திரி பூரா முழிச்சிட்டு உக்கார்ந்திருந்தியே... ரயில்வே ஸ்டேஷனுக்கு போன் பண்ணி, போன் பண்ணி என்னையும் தூங்கவிடாம அலைக்கழிச்சியே... அது ஞாபகமிருக்கா?''

''ம்'' என்று ஒற்றை எழுத்து வார்த்தையை உதிர்த்து விட்டு மீரா திரும்பிப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

இப்போது அதை நினைவுபடுத்த வேண்டும் என்ற வசந்தனுக்கு என்ன அவசியம்? கண்ணன் இங்கு வந்து தங்கும்போது பழைய கோபத்தையெல்லாம் அவன் பாராட்டி அவனிடம் வெறுப்பை உமிழ்ந்துவிடுவாளோ என்று பயப்படுகிறானா? அந்தப் பயத்தில் கண்ணனைப் பற்றிய கசப்பையெல்லாம் அவள் மறந்துவிட வேண்டும் என்று துடிக்கிறானா?

தழும்பாகிவிட்ட காயங்களையெல்லாம் மறுபடி குத்திப் பார்க்கும்படி ஆகிவிடுமோ என்று நான் தவிப்பதை உன்னிடம் எப்படிச் சொல்வேன் வசந்த்?

மீராவின் விழிகளும் கடந்துபோன நினைவுகளும் அன்றிரவு விழித்தே இருந்தன.

❧ ❧ ❧

புனலூர் ரயில்வே பிளாட்பாரம் சற்று இருண்டிருந்தது.

சிவந்து எரியும் கண்களுடன் மீரா தனியே நின்றிருந்தாள்.

ரயில் சரியான நேரத்துக்கு வந்து விடுமா என்று விசாரித்து வர வசந்தன் ஸ்டேஷன் மாஸ்டரின் அறைக்குப் போயிருந்தான்.

வசந்தன் கிளறிவிட்டதாலோ என்னவோ கண்ணனுக்காக அவள் இதேபோல் விடியாத காலையில் சென்னை பிளாட்பாரத்தில் நின்றிருந்த காட்சி நினைவில் புரண்டது.

அன்றைக்கு கண்ணன் வரும் ரயிலை எதிர்பார்த்து இதயம் சலங்கை கட்டிக்கொண்டல்லவா குதியாட்டம் போட்டது? ரயிலிலிருந்து இறங்கிய ஒவ்வொரு தலையிலும் அவனைத் தேடிக் காணாமல் எப்படித் தவித்துப் போனது?

கடைசியில் மிடில்பர்த்தில் அவனைப் பார்த்து அவனுக்கும் பிரியமான முறையில் தூக்கம் கலைக்கத் துடித்து...

கண்ணனின் காதைச் சுற்றி ஊதி, ஈர உதடுகளால் உரசி...

அன்றைக்கு அவள் தவிப்பையெல்லாம் ஒரு குறும்போடு ரசித்துக் கொண்டு துணைக்கு நின்ற வசந்தனே தான் இன்றைக்கும் துணைக்கு வந்திருக்கிறான். ஆனால்...

மீராவுக்குத் தன்னிச்சையாக தூக்கி வாரிப்போட்டது. அவளால் நிற்க முடியும் என்று தோன்றவில்லை. மண்டைக்குள் அக்னிக்குஞ்சுகள் குதியாட்டம் போட்டன.

தனிமையில் இருந்த ஒரு சிமெண்ட் பெஞ்சில் சரிந்து உட்கார்ந்தாள்.

கண்களை இறுக மூடி, மூச்சை ஆழமாக இழுத்தாள்.

''யாது மாகி நின்றாய்—காளி!
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம்—நின்றன்
செயல்க ளன்றி யில்லை.
என்ற னுள்ள வெளியில்—ஞானத்
திரவி யேற வேண்டும்;
நன்றை நாடு மனமும்—நீயெந்
நாளு மீதல் வேண்டும்...,'



''இன்னும் அஞ்சு நிமிஷத்துல ரயில் வந்துடுமாம்...'' என்று சொல்லியபடி வசந்தன் வந்து சேர்ந்தான்.

மீரா இமைகளைத் திறந்தாள், உட்கார்ந்திருந்த பெஞ்ச் மெள்ள அதிர்ந்தது. ரயிலின் வெளிச்சப் பொட்டுத் தெரிந்தது.

மீரா எழுந்தாள். இப்போது உடலில் சற்று நடுக்கம் இல்லை.

வசந்தனைப் பார்த்துப் புன்னகை செய்தாள். அவனை நெருங்கி அவன் கையை இழுத்துக் கோர்த்துக் கொண்டாள்.

ஏராள இரைச்சலுடன் ரயில் நிறுத்தத்துக்கு வந்தது.

சுந்தரிதான் முதலில் தென்பட்டாள். கால்களை நகர்த்தியபோது வேதனையில் அவள் முகம் துவண்டது.

மீரா புன்னகையை விரித்தாள். ''வா, சுந்தரி!''

மீராவின் தோளைப் பற்றிக் கொண்டு சுந்தரி இறங்கியதும், பின்னாலேயே கண்ணன் பெட்டிகளுடன் இறங்கினான்.

மீராவைச் சந்திக்க இயலாமல் அவன் பார்வை தடுமாறித் தரையில் விழுந்தது.

''ஹாய்...'' என்றாள் மீரா, அவனைப் பார்த்துப் புன்னகைத்து.

கண்ணன் சற்று மிரண்டாற் போலிருந்தது.

''வாடா...'' என்று வசந்தன் அவன் கையிலிருந்த பெட்டிகளை வாங்கிக் கொண்டான்.

''வசந்த்!'' மீராவின் குரலில் ஒரு குழந்தையின் உற்சாகம் இருந்தது, ''நம்ம வீட்டுக்குப் பக்கத்திலேயே இவர்களுக்கு இடம் பார்த்திருக்கிறதா சொல்லிட்டியா?''

"நம்ம" என்ற வார்த்தைக்கு அவன் கொடுத்த அழுத்தம் அவசியம்தானா என்று புரியாதது போல் வசந்தன் அவனைப் பார்த்தான்.

சுந்தரி தன்னை நிலைப்படுத்திக் கொண்டு "கௌதம் எப்படியிருக்கான்?" என்றாள்.

"நல்லா இருக்கான்..." என்றாள் மீரா. உன்னைப் பார்த்தாதான் ரொம்ப வேதனையா இருக்கு சுந்தரி... இவ்வளவு தூரம் மோசமாகியிருக்கும்னு நான் நெனைக்கல."

"எல்லா வேதனைக்கும் ஒரு முடிவு உண்டு மீரா" என்றான் வசந்தன்.

அவன் எதைச் சொல்லப் பார்க்கிறான்?

"இங்கே வந்த வேளை, சுந்தரிக்கு எல்லாம் சரியா விடும் பாரு" என்றான்.

அவர்கள் நிதானமாக காரை நிறுத்தியிருந்த பகுதிக்கு நகர்ந்தார்கள்.

ஃ ஃ ஃ

முட்டை உடைந்து குஞ்சு வெளியே வருவது போல் சூரிய வெளிச்சத்தில் பொன்கரா கிராமமே பசுமையாகக் கண் முன் விரிந்தபோது கண்ணன் திகைத்துப் போனான்.

"இவ்வளவு அழகா உங்க ஊரு?" என்று வசந்தனிடம் மாய்ந்து போனான்.

அவுட் ஹவுஸ்"க்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை வருடிக் கொடுத்து. "எதுக்குடா உனக்கு இவ்வளவு சிரமம்?" என்றான்.

குளித்து உடை மாற்றி பிரம்பு நாற்காலியில் ஆடிய போது "வசந்த், ஒரு சின்ன ஹெல்ப் பண்ண முடியுமா?" என்றான்.



"எதுக்கு இவ்வளவு யோசனை பண்ணி, யோசனை பண்ணிப் பேசறே? என்ன வேணும்னு சொல்லேன்" என்றான், வசந்தன் உற்சாகமாக.

கண்ணன் குரலைத் தழைத்துக் கொண்டு கேட்டான்.

"கௌதமை எடுத்துட்டு வரியாடா? என் கூடக் கொஞ்சம் நேரம் வெளையாடிட்டு இருக்கட்டும்..."

கண்ணனின் குரலில் இத்தனை வருடங்கள் அழுத்தி வைத்திருந்த ஏக்கம் வெளிப்பட்டது!

ஃ ஃ ஃ

கௌதமின் கன்னங்கள் திட்டுத் திட்டாய்ச் சிவந்து போயிருந்தன.

கண்ணனும் சுந்தரியும் மாறி மாறிக் கொடுத்த முத்தங்கள் அவனுக்குச் சற்று சலித்து விட்டன. அவர்கள் வாங்கி வந்திருந்த ரயில் பொம்மையும் ரோபோ பொம்மையும் மட்டுமே ஈர்த்துப் பிடித்திருந்தன.

தொலைந்துபோன தினங்களையெல்லாம் அன்றைக்குள்ளேயே வாழ ஆசைப்பட்டவன் போல கண்ணன் கௌதமின் ஒவ்வொரு அசைவையும் கண்கள் விரியப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அங்கிள்!" கௌதம் திடீரென்று கண்ணனின் சட்டை நுனியைப் பிடித்து இழுத்தான்.

அங்கிள்.

கண்ணனின் இதயம் வலித்தது.

"என்ன ராஜா?" என்றபோது கண்கள் நனைந்திருந்தன.

''இந்த பயிலை நிக்கச் சொல்லுங்க...'' என்றான் கௌதம், மழலை விலகாத குரலில்.

கண்ணன் எந்த ஸ்விட்சை அணைக்க வேண்டும் என்று கௌதமுக்குச் சொல்லிக் கொடுத்தான்.

மடியில் இழுத்து வைத்து உச்சி முகர்ந்தான்.

வாசலில் நிழலாடியது.

நிமிர்ந்தான்.

அந்த வீட்டின் சொந்தக்காரி சந்திரிகா என்று வசந்தன் ஏற்கெனவே அவளைக் காட்டியிருந்தான்.

கண்ணனின் முகமும் அவன் மடியில் வீற்றிருந்த கௌதமின் முகமும் ஒன்றின் கீழ் ஒன்றாக ஒரே கோட்டில் இருக்க—

இரு முகங்களையும் மாறி மாறிப் பார்த்த சந்திரிகாவின் விழிகளில் ஏராள உணர்ச்சிகள் துள்ளின.

எல்லாம் வசதியா இருக்கிறதா என்று கேட்க வந்தவள், வார்த்தைகள் சிக்க,

''நீங்கள்... நிங்கள்'' என்று தடுமாறினாள்

கண்ணன் அவளிடம் என்ன சொல்வது என்று திகைத்து போய் மிரட்சியுடன் பார்க்க—

சரியான சமயத்தில் வசந்தன் வந்து சேர்ந்தான்.

கௌதம் ஓடி வந்து வசந்தனின் கால்களைக் கட்டிக் கொண்டான்.

''அப்பா... இந்த அங்கிள் எனக்கு என்ன கொடுத்திருக்காரு பாரேன்...'' என்று ரோபோ பொம்மையின் கழுத்தை பற்றித் தூக்கிக் காட்டினான்.



வசந்தன் கௌதமைத் தூக்கிக் கொண்டான். சந்திரிகாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நீங்களும் நம்ம வீட்ல சாப்பிடலாமே'' என்றான்.

சந்திரிகா திகைப்பிலிருந்து மீளாமல் ஓரடிப் பின் வாங்கினாள்.

''இல்ல...வேண்டா... ஞான் அப்புறம் வரும்'' என்று குழப்பத்தோடு விலகினாள்.

ஃ ஃ ஃ

சந்திரிகா தோட்டத்து நிழலிலேயே நின்றிருந்தாள்.

சாப்பிட்டு விட்டு கண்ணன், சுந்தரி, வசந்தன் மூவருமாக காரில் புறப்பட்டுப் போகும் வரை எப்படியோ பொறுமையாக இருந்தாள்.

பார்வையிலிருந்து கார் மறைந்ததும் மீராவிடம் பரபரப்பாக ஓடினாள்.

''மீரே...மீரே...'' என்று அவள் கையைப் பற்றினாள். ''எனிக்கொரு சம்சயம் மீரே'' என்று அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

## 25

கண்ணனையும் கௌதமையும் சேர்த்துப் பார்த்ததிலிருந்தே சந்திரிகாவுக்குத் தாங்க முடியாத தவிப்பு உண்டாகியிருக்கும் என்று மீராவுக்குத் தெரிந்திருந்தது.

பதில் சொல்லாமல் நாசூக்காகத் தட்டிக் கழித்து அனுப்பி விடலாம். ஆனால், தட்டிக் கழிப்பதால் உண்மை

மாறிவிடப் போகிறதா என்ன...? நடந்த சம்பவம் நிசமாகத் தாகிவிடப் போகிறதா என்ன...?

மீரா தீர்மானித்தாள்.

''உங்க சந்தேகம் கரெக்ட்தான். கௌதமோட அப்பா கண்ணன் தான்!''

''அப்போன்.. அப்போன்... வசந்தன்...'' சந்திரிகா தடுமாறினாள்.

''உக்காருங்க... எல்லாத்தையும் சொல்றேன்...'' என்றாள் மீரா,

ஃ ஃ ஃ

நாராயண் இயற்கை வைத்தியசாலை...

சுந்தரியைக் கவனமாகப் பரிசோதித்து விட்டுக் கண்களை மூடிச் சற்று நேரம் கழித்துத் திறந்தார் வைத்தியர்.

''இந்தச் சகோதரிக்குத் தசை நாரெல்லாம் இறுகிப் போயிருக்கு. மூட்டுல இருக்கிற எலும்பு சுலபமா புரள மாட்டேங்குது. எங்க மூலிகை எண்ணெயால நிச்சயம் இவளுக்குப் பலன் இருக்கும். மூணு வாரம் இங்கேயே தங்கியிருந்து சிகிச்சை எடுத்துக்க நீ தயாராம்மா...?'' என்று கேட்டார்.

சுந்தரி அங்கேயே தங்கியிருக்கச் சம்மதித்ததும் மையத்தின் பெண் உதவியாளரை அழைத்து சுந்தரியைக் கூட்டிப் போய் மையத்தின் நியதிகளை விளக்கச் சொன்னார்.

அப்புறம் வசந்தன் பக்கமும் அருகில் இருந்த கண்ணன் பக்கமும் பார்த்தார்.

''இவர்தான் நீங்க சொன்ன...?''

''ஆமாம். இவன்தான் கண்ணன் .!''



''நான் கேட்ட ரிப்போர்ட்ஸ் எல்லாம் எடுத்துட்டு வந்திருக்கீங்களா?''

''இல்லை...'' என்றான் கண்ணன், அவரது விழிகளைப் பார்க்க முடியாமல். ''தெரிஞ்சவங்க யார் கண்லயாவது பட்டுருவோமோனு மெட்ராஸ்ல எந்த லேப்பிலயும் போய் டெஸ்ட் எடுத்துக்க எனக்குக் கூச்சமாயிருந்தது.''

''இங்க புனலூர்ல எங்களுக்குத் தெரிஞ்ச ஒரு டாக்டர் இருக்கார். அவர் மூலம் டெஸ்ட் எல்லாம் எடுத்து ரிப்போர்ட்டை வாங்கிட்டு வர்றோம்...'' என்றான் வசந்தன்.

அவர்களைப் பார்த்துக் கண்கள் ஒளிர, வசீகரமாகப் புன்னகைத்துத் தலை அசைத்தார் வைத்தியர்.

கண்ணனும் வசந்தனும் அவரை வணங்கிவிட்டு வெளியே வந்தார்கள்.

ஃ ஃ ஃ

கௌதம் ரோபோ பொம்மையைக் கீழே விட்டான். அது புர்புர் என்று சத்தம் செய்து, சிவப்புக் கண்களை மினுக்கி, மீராவின்மீது முட்டி நின்றதும் கைகொட்டிச் சிரித்தான். மீரா அவனுக்காகப் போலியான பயம் காட்டிப் பின்வாங்கினாள்.

அவள் மனம் திடீரென்று சுமையற்று போய்விட்டாற் போலிருந்தது.

மீரா தன் கடந்த காலத்தின் சில ஏடுகளை சந்திரிகாவிடம் புரட்டிக் காட்டிய போது, தடாகத்தில் வீசியெறிந்த கல்லை வெளியே எடுத்து பாசி நீக்கிச் சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு, மீண்டும் தண்ணீருக்குள்ளேயே எறிந்துவிட்டாற்போல்தான் உணர்ந்தாள்.

விரிந்த விழிகளுடன் சந்திரிகா கேட்டு முடித்ததும், மீராவை இழுத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''மோனே... உனக்குப் பின்னால இவ்வளவு கதை இருக்கா?''

வசந்தனின் அப்பாவின் நிழல் விழுந்ததும் சந்திரிகா எழுந்தாள். பிற்பாடு வருவதாகச் சொல்லிப் போய் விட்டாள். அப்போதிலிருந்து கௌதம் அவளை ரோபோ பொம்மை வைத்துப் பயமுறுத்தி விளையாடிக்கொண்டிருந்தான்.

* * *

கண்ணன் மட்டும் திரும்பி வந்தான். சுந்தரியை இயற்கைமயத்தில் விட்டு வந்ததைச் சொன்னான். வசந்தன் அப்படியே அலுவலகம் போனதைத் தெரிவித்தான்.

அவன் பேசியபோது அதை லட்சியம் செய்யாமலும் அதே சமயம் அலட்சியம் செய்வதாகத் தோன்றாமலும் மீரா கேட்டாள். இடையிடையே கௌதமிடம் விளையாடிக் கொண்டும் இருந்தாள்.

''மீரா...''—கண்ணன் திடீரென்று குரலைக்குழைத்துக் கூப்பிட்டான்.

மீரா நின்ற இடத்திலிருந்து திரும்பி, ''ம்...'' என்றாள்.

''மீரா, உனக்கு என்மேல கோபம் தீரலை தானே?''

''எல்லார்கிட்டயும் நான் உரிமையோட கோபம் பாராட்டறதில்லை...'' என்றாள் மீரா, சுருக்கென்று.

கண்ணன் நெருப்பெறும்புப்புற்றை மிதித்துவிட்டவன் போல் பின்வாங்கினான்.



''நான் ரூமுக்குப் போறேன்...'' என்று பொதுவாகச் சொல்லி விட்டு நகர்ந்தாள்.

* * *

இரவுச் சாப்பாடு முடிந்த பின், வெகு இயல்பாக வசந்தன் கேட்டான்.

''மீரா, முன்னேல்லாம் நாம மூணு பேரும் உக்காந்து சீட்டாடிட்டு இருப்போமே... ஞாபகம் இருக்கா?''

''அதுக்கென்ன வசந்த்?''

''ரொம்ப நாள் கழிச்சு மூணு பேரும் ஒண்ணு சேர்ந்திருக்கோம்... சீட்டுக் கட்டை எடுத்துட்டு வாயேன்.''

''இல்ல வசந்த். எனக்குத் தலையை வலிக்குது. நீங்க ரெண்டு பேர் மட்டும் ஆடுங்க'' என்று தெளிவாகச் சொல்லி விட்டு, சீட்டுக்கட்டுகளை எடுத்து அவர்களுக்கு நடுவில் போட்டுவிட்டு அவள் நகர்ந்தாள்.

கண்ணன் அவள் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''வசந்த், எனக்கும் டயர்டா இருக்குடா'' என்று கண்ணன் எழுந்தான். ''இன்னிக்குச் சீட்டு வேண்டாம்.''

''அப்ப, குட்நைட்டா.''

''இல்லடா வா, பேசிட்டு இருப்போம். நாம சும்மா அரட்டையடிச்சு எத்தனை வருஷம் ஆச்சு?''

வசந்தனின் கையைக் கோர்த்துக்கொண்டு தன் அவுட் ஹவுஸ் பகுதிக்கு அழைத்துப்போனான் கண்ணன்.

* * *

மீரா பெண்களுக்கான ஆங்கிலப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தாள். அலுவலகத்திலிருந்து சீக்கிரமே திரும்பியிருந்தாள்.

வசந்தன் இன்னும் வந்து சேரவில்லை. கண்ணன் காலையில் சுந்தரியைப் பார்க்கப் போய்விட்டுத் திரும்பி விருந்தான்.

''மீரா...!'' என்ற குரல் கேட்டு, மீரா திரும்பினாள்.

வசந்தனின் அப்பா, சட்டை நீக்கி மார்பை மேல் வேட்டி வைத்து மூடியிருந்தார். நெற்றியில் சந்தனம் ஒளிர்ந்தது.

''நான் பகவதிகோயில் வரைக்கும் போயிட்டு வரேம்மா... இன்னிக்குத் தெப்பம்...' என்றார். ராத்திரிக் குத் தேவையான காயெல்லாம் அரிஞ்சு வெச்சுட்டேன்...'

''சரி, மாமா...''

''கௌதம் எங்கே...! தெப்பம் பார்க்க வரேன்னு சொல்லிட்டிருந்தானே...?''

''கண்ணனோட விளையாடப் போயிருக்கான். நான் கூட்டிட்டு வரேன்...''

மீரா கதவு திறந்து, சந்திரிகாவின் காம்பௌண்டுக்குள் நுழைந்தாள்.

அவளைப் பார்த்ததும் கண்ணன்தான் பரபரத்தானே தவிர, பாட்டரி பொம்மைகளுடன் விளையாடிக் கொண் டிருந்த கௌதம், அவளுடைய முதல் அழைப்புக்கு வர வில்லை.

''கௌதம், இன்னிக்குக் கோயில்ல தெப்பம் ராஜா... தண்ணில வெளக்குல்லாம் மிதக்குமே! பாத்தா, ரொம்ப ஜாலியா இருக்குமே...'' என்றாள் மீரா.

கௌதம் சற்று யோசித்தான்.

''தாத்தாகிட்ட வெயிட் பண்ணச் சொல்லு...'' என்று பரபரத்தான். விமான பொம்மையை எடுத்துப் போய் கண்ணனிடம் கொடுத்தான்.



''அங்கிள், இதைத் தொலைக்காம பத்திரமா வெச் சிருங்க. நான் அப்புறம் வாங்கிக்கறேன்...''

ஓடிவந்து மீராவின் கையைப் பிடித்தான். ''வாம்மா...''

''மீரா...'' —கண்ணன் அழைத்துவிட்டுத் தடுமாறி னான்.

''ம்...''

கண்ணன் எதையோ சொல்ல நினைப்பதும் தத்தளிப் பதுமாக நின்றான். அப்புறம் குரல் வந்தது.

''நேத்து ஏன் நீ சீட்டாட வரமாட்டேன்னுட்டே?''

''எங்க மாமனார் கோயில் போக வெயிட் பண்ணிட் டிருக்காரு. நாம அப்புறம் பேசலாமே...?'' —இயல்பான குரலில் சொல்லிவிட்டு, மீரா விடுவிடுவென்று கௌதமுடன் புறப்பட்டு வந்துவிட்டாள்.

❀ ❀ ❀

கௌதமின் கையைத் தன் கையுடன் கோத்திருந்தார் வசந்தனின் அப்பா. சூரியன் விழுந்து, வானம் சாம்பல் தீற்றலாகத் தெரிந்தது. பகவதி கோயிலின் முகப்பில் இருந்த உயரமான விளக்குக் கம்பத்தில் நூற்றுக்கணக்கான எண்ணெய் விளக்குகள் சுடர் பூத்து நின்றன. செண்டை மேளக்குழுவுக்குச் சற்றுத்தள்ளி முகபடாம் பொருந்திய யானைகள் வரிசையாக நின்றன.

''தாத்தா, தெப்பம் பாக்கப் போலாம்...'' என்று கௌதம் பரபரத்தான்.

ஈரச் சந்தனத்தை அவன் நெற்றியில் கீற்றாகத் தீற்றி, அவனைக் குளக்கரைக்கு அழைத்து வந்தார் அவர்.

சற்றுப் பழமையான, ஆனால் பெரிய குளம். அதன் மையத்துக் கல்மண்டபத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

தெப்பம் தயாராக இருந்தது. அசைந்து அசைந்து நின்றது. இயற்கையின் அத்தனை வண்ணங்களிலும் பூக்கள் தெப்பத்தை அலங்கரித்தன. சட்டை அணியாத ஆண்கள், பகவதியின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு படிகளில் நிறைந்து நின்றார்கள். வெள்ளைப்பட்டுடுத்தி ஈரக் கூந்தலுடன் பெண்களும் ஒருபுறம் படியிறங்கினார்கள்.

அந்த நடமாட்டங்களை மேலிருந்து பார்த்தபோது, தேங்காய்த் துருவலைச் சுமந்து பரபரப்பாக விரையும் எறும்புக் கூட்டத்தைப் பார்ப்பது போலிருந்தது.

செண்டை மேளத்தின் இடைவிடாத கணகணப்பு. யானைப் பிளிறல். காற்றில் பரவியிருந்த கற்பூரமணம்- அகல்விளக்குகளின் அணிவகுப்பு. வாய்த்த இடங்களையெல்லாம் நிரப்பியிருந்த சுற்றுப்புற இருள். தெய்வீகம்.

"தாத்தா, அதான் தெப்பமா...?"

"ஆமா ராஜா..."

"அது தண்ணில நகருமா...?"

"ஆமா... அப்படிக் குளத்தைச் சுத்தி மூணு ரவுண்டு வரும்..."

"இதுக்கும் பேட்டரில்லாம் போட்டிருப்பாங்களா...?"

சிரித்தார். "நீதான் பாக்கப்போறியே... பெரிய கயிறு கட்டி, அப்படியே இழுத்துட்டுப் படிக்கட்டுல நடப்பாங்க. அது அசைஞ்சு அசைஞ்சு நகரும்..."

"தெப்பத்துல நான் ஏறணும்..."

"இங்கேர்ந்து பார்த்தாத்தான் அழகா இருக்கும். கூட்டம் ஜாஸ்தி இருக்கு இல்ல... இப்பப் படில எறங்க முடியாது.."



திடீரென்று அணைவிட்டு சேதுமாதவன் தென்பட்டார். என்னவோ பேச்சுக் கொடுத்தார். அவரிடம் பேசிவிட்டு வசந்தனின் அப்பா திரும்பியபோது, பக்கத்தில் கௌதமைக் காணவில்லை.

"கௌதம்..."

கூப்பிட்டார். பதில் இல்லை. யாரோ அவரை இடித்தார்கள். தகர்த்தினார்கள். ஒரு பக்திக் கூட்டம் தடதடவென்று குறுக்கிட்டது. செண்டை மேளத்தைத் தட்டிக்கொண்டு, தனக்கான வழி பண்ணிக்கொண்டு ஒரு குழு கடந்து போகும்வரை யாரும் நகர முடியவில்லை. அவர் இருப்புக் கொள்ளாமல் தவித்தார்.

"கௌதம், கௌதம்!" என்று குரல் கொடுத்தது எதுவும் மேளச் சத்தத்தைத் தாண்டிக் கேட்கவில்லை. முகங்கள் கூர்மையான அடையாளங்களை இழக்கும் அரை இருட்டில் கௌதம் எங்கிருக்கிறான் என்பதே புலப்படவில்லை.

வசந்தனின் அப்பாவுக்கு நெஞ்சில் திடுக்கென்று தீப்பற்றியது. நரம்புகள் அத்தனையிலும் பரபரப்பு ஏற, கூட்டத்தைக் கிழித்து கௌதமைத் தேடலானார். சேதுமாதவனும் சேர்ந்து கொண்டார்.

கூட்டம் அவர்களைப் பந்தாடியது.

குளத்திலிருந்து சில பரபரப்பான குரல்கள் ஒருசேர ஒலித்ததும் அவர் மனிதர்களை நகர்த்தி எட்டிப் பார்த்தார்.

பார்த்த காட்சி வயிற்றைச் சுருட்டியது.

தெப்பத்தின் விளக்குகளின் வெளிச்சத்தில், ஒரு சிறுவனைத் தண்ணீருக்குள் இருந்து எடுப்பது தெரிந்தது. அவனுடைய டிரைவரைப் பார்த்ததும் தெரிந்தது.

கௌதம்தான்! கௌதமே தான்!

குழந்தையை அப்படியே தலைக்குமேல் தூக்கிக் கீழ்ப் படியில் நின்றவர்கள் யாருடையது எனக் கேட்பது புரிந்தது.

"இங்கே...இங்கே...!" என்று இவர் இரைச்சலாகக் கத்தி, அது பக்கத்து ஆளைத் தொற்றி, அடுத்த ஆளுக்கும் சொல்லப்பட்டு, படிகளில் சேதி இறங்கிப் போனது.

கௌதமைத் தலைக்கு மேலேயே மாற்றி மாற்றி மேலே அனுப்பினார்கள்.

அவரிடம் அவன் வந்து சேர்ந்தபோது, அவரை அறியாமல் நெகிழ்ச்சியில் கண்ணீர் பெருகியது. கௌதமை வாங்கி அணைத்து முத்தமிட்டபோது, அவருடைய கையில் பிசுபிசுப்பான ஈரம் சேர்ந்தது. அவரைச் சுற்றிக் கூட்டம் வட்டமிட்டிருந்தது.

"ரத்தம்..." என்றார் சேதுமாதவன் பதற்றத்துடன் "பாசி வழுக்கியிருக்கும். படியெல்லாம் பாறாங்கல்லு... முனைல குத்திட்டிருப்பான். வாங்க, டாக்டர்கிட்ட போகலாம்..."

"தா...த்...தா...!" என்று மூன்றெழுத்துக்களை முனகி விட்டு, அவர் தோளில் கௌதம் கண்களை மூடிக்கொண்டான். கூட்டம் அவசர அவசரமாக அவர்களுக்கு வழி விட்டது.

ஃ ஃ ஃ

க்ளினிக்கே பரபரப்பாக இயங்கியது.

டாக்டர் வர்கீஸின் நெற்றி கவலையில் சுருங்கியது. "நல்லா ஆழமா வெட்டியிருக்கு..." என்றார். "ஆறு தையல் போட வேண்டியிருந்தது. ஆனா, நெறைய ரத்தம்



வீணாயிருக்கு. உடனடியா ரத்தம் ஏத்தினாதான் நல்லது..."

மீராவும் சந்திரிகாவும் அப்போதுதான் வந்து சேர்ந்திருந்தார்கள்.

மீரா பரபரத்தாள். "எடுத்துக்குங்க டாக்டர்...எவ்வளவு ரத்தம் வேணும்னாலும் என்கிட்டேர்ந்து எடுத்துக்குங்க..."—அழுகைக்குத் தயாராக குரல் விம்மியது

"உங்க ப்ளட் குரூப் என்னம்மா...?"

"பி பாஸிடிவ்..."

"உங்க பையனுக்கு உங்க ரத்தம் பொருந்தாதேம்மா..." என்றார் டாக்டர் கவலையோடு

வசந்தனின் அப்பா பதற்றத்தோடு நின்றிருந்தார். அவருடைய மேல்வேட்டியில் பெரும்பகுதி சிவப்பாக மாறியிருந்தது.

வசந்தன் இன்னும் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பவில்லை. போன் செய்தபோது, அவன் அங்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எங்கே போயிருக்கிறான் என்று தெரியவில்லை. அவருக்கும் வசந்தனுக்கும்கூட 'பி' பாஸிடிவ் வகை ரத்தம்தான். கௌதமுக்குப் பயன்படாது.

"கௌதமுக்கு என்ன குரூப் டாக்டர்..." என்று நடுங்கும் குரலில் கேட்டார்.

"அவனுக்கு 'ஓ' நெகடிவ் குரூப். அபூர்வமான குரூப், பக்கத்துல இருக்கிற ப்ளட் பாங்க்ல கூடக் கேட்டுப் பார்த்தாச்சு. அங்க ஸ்டாக் இல்ல...கொல்லம் வரைக்கும் போனாக் கெடைக்கலாம்..." என்றார் டாக்டர்.

மீராவின் கண்கள் பளீரென்று ஒளிர்ந்தன.

''மாமா, கண்ணோட ரத்தமும் 'ஓ' நெகடிவ் குருப் தான். அவர் வீட்டிலதான் இருப்பாரு...''

டாக்டரைப் பார்த்துத் திரும்பினாள்.

''டாக்டர், பொன்கராலேர்ந்து ரத்தம் கொடுக்க ஒருத்தரை அழைச்சுட்டு வரேன்...''

''போன் பண்ணி அவனை வரச் சொல்லிடலாமா மீரா...''—வசந்தனின் அப்பா பரபரத்தார்.

''வேண்டாம் மாமா...எடம் புரியாம அவர் வேட் பண்ணிட்டா என்ன செய்யறது...? நேர்ல போய்க் கை யோடு அழைச்சுட்டு வந்துடலாம்...''

''போய்க்கோ மோனே...'' என்று மீராவை அணைத்து அனுப்பினாள் சந்திரிகா.

ஃ ஃ ஃ

க்ளினிக்குக்குள் வசந்தன் நுழைந்ததுமே சந்திரிகா ஓடி வந்து அவனை எதிர்கொண்டாள்.

''உங்களுக்கு எப்படி விஷயம் தெரிஞ்சது...?'' என்றார் சேதுமாதவன்.

கண்ணனின் ரத்தத்தை மூன்று வெவ்வேறு இடங்களில் பரிசோதனைக்குக் கொடுக்கச் சொல்லியிருந்தார் டாக்டர் வர்கீஸ். மூன்று ரத்தப் பரிசோதனை ரிப்போர்ட்டுகளையும் சேகரித்துக் கொண்டு டாக்டரைப் பார்க்கத்தான் வசந்தன் வந்திருந்தான். வந்த இடத்தில் சேதுமாதவனும் சந்திரிகா வும் இவர்கள் எப்படி இங்கே...? எந்த விஷயத்தை தெரிஞ் சுதா என்று கேட்கிறார்கள்...? கண்ணனைப் பற்றிய விவரங்களை அவர்களிடம் எப்படிச் சொல்ல முடியும்...?

''என்ன விஷயம்...?'' என்று வசந்தன் குழப்பத்தோடு கேட்டான்.



''கௌதமை இவ்விட சேர்த்திருக்கே...'' என்றாள் சந்திரிகா பதற்றத்துடன்.

# 26

கௌதமைத் தலையில் கட்டுடன் பார்த்தபோது வசந்தனுக்கு அடிவயிற்றைப் பிசைந்தது. அவனுடைய கையை வருடிக் கொடுத்த போது கண்களில் நீர் கசிந்தது.

''ரத்தம் கொடுக்கணும்னு சொல்லிட்டாங்க. இங்க கெடைக்கலை. கண்ணனோடதும் அதே குருப்பாம். அவரைத் தேடிட்டு மீரா ஓடியிருக்கா'' என்று சேது மாதவன் சொன்னதும்தான் வசந்தனுக்குத் திகீர் என்றது. ஐயோ!

கையிலிருக்கும் ரிப்போர்ட்டுகளை இன்னும் டாக்ட ரிடம் காட்டவில்லையே!

ஃ ஃ ஃ

கண்ணன் நடுங்கிச் சிதறிப் போனான். என்னவொரு இக்கட்டு இது?

கண்ணீரும் கலைந்த முகமுமாக எதிரே நிற்கும் மீராவை நிமிர்ந்து பார்க்க அவன் விழிகளுக்குத் துணி வில்லை.

ஜன்னல் கம்பிகளைப் பற்றிக் கொண்ட பின்பும் விரல் கள் நடுங்குவது நிற்கவில்லை.

''இல்ல மீரா'' என்ற போது குரல் தொறுங்கியது.

''கௌதமுக்கு நான் ரத்தம் தர முடியாது.''

மீரா பரபரவென அவனை நெருங்கினாள்.

"கண்ணா, எம்மேல உங்களுக்குக் கோபம் இருக்கலாம். பழசையெல்லாம் மறக்கலையோன்னு வருத்தம் இருக்கலாம். அதையெல்லாம் கௌதம் மேல் காட்டாதீங்க!"

கண்ணன் அசையாது நின்றான்.

மீரா அவன் தோள்களைப் பற்றித் திருப்பினாள்.

"கண்ணா... ப்ளீஸ்... பழி வாங்கறதுக்கு இது நேரம் இல்ல. கௌதம் உங்க குழந்தை. நம்ம குழந்தை..." உணர்ச்சிப் பெருக்கில் அவளுக்கு வார்த்தைகள் குழறின. "ப்ளீஸ்... கௌதமைக் காப்பாத்துங்க.

கண்ணன் தன்னை அவளிடமிருந்து விடுவித்துக் கொண்டு சுவரைப் பார்த்துத் திரும்பினான்.

"வேற எடத்துல அந்த ரத்தம் கெடைக்கறதான்னு பாரு மீரா. நான் தரமுடியாது."

மீரா அவன் காலரைப் பற்றி இழுத்துத் திருப்பினாள். அவன் மார்பில் இரு கைகளாலும் குத்திப் பின்னால் தள்ளினாள்.

கண்ணன் தள்ளப்பட்ட வேகத்தில் போன் மீது புரண்டு விழுந்தான். டெலிபோன் அதன் ஸ்டூலில் இருந்து எகிறியது. ரிஸீவர் அற்றுக் கொண்டு பறந்து சுவர் மீது மோதி இரண்டாகப் பிளந்தது.

மீராவின் கண்களில் தீப்பொறி பறந்தது.

"ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுஷனா? பெத்தபிள்ளை சாகக் கெடக்கறான். இரக்கமில்லாம நடந்துக்கறியே. நீ என்னை ஆசைப்பட்டியோன்னு நெனைச்சு எல்லாத்தையும் உதறிட்டு உன் பின்னால வந்தேனே. நீ ஆசைப் பட்டதெல்லாம் மீராவை இல்ல... அவ உடம்பைன்னு இப்ப இல்ல புரியுது? எங்கம்மா பண்ணின தப்புக்கு



என்னைப் பழிவாங்கினது போறாதுன்னு இப்ப என் பிள்ளையையும் பழிவாங்கறியே. வேண்டாம், நீ ரத்தம் தரவேண்டாம். தரவேண்டாம். தரவேண்டாம். உன்னால முதல்ல அத்தை செத்தாங்க. அடுத்து என் பிள்ளை சாகட்டும். பின்னாலயே நானும் செத்துப் போறேன். நீ சந்தோஷமா இரு."

ஆத்திரத்தில் வெடிக்க ஆரம்பித்த வார்த்தைகள் அழுகையாகக் குமுறிச் சிதறின. கண்ணன் உடல் நடுங்கியது.

மீரா விருட்டென்று திரும்பி வெளியேற ஆரம்பித்த போது, "மீரா, நில்லு" என்றான். "இனிமேலும் உன்கிட்ட சொல்லாம இருக்கறது அயோக்கியத்தனம்" என்றபோது அவன் குரலும் நடுங்கியது.

ஃ ஃ ஃ

"டாக்டர்... என்ன சொல்றீங்க?"

வசந்தனின் விழிகள் தாங்கவொணாத சந்தோஷத்தில், ஆனந்தமான ஈரக்கசிவுடன் விரிந்தன.

"ஒரு எடத்துல டெஸ்ட் பண்ணி தப்பா வந்துடக் கூடாதுன்னுதான் மூணு வெவ்வேறு எடத்துல ரத்தத்தை டெஸ்ட்டுக்குக் கொடுக்கச் சொன்னேன் வசந்தன். மூணு எடத்துலேர்ந்தும் ஒரே ரிசல்ட்தான் வந்திருக்கு கண்ணனோட ரத்தத்துல எச். ஐ.வி கிருமிங்க இல்ல. அவர் பயந்த மாதிரி அவர் எய்ட்ஸ் நோயாளி இல்ல." டாக்டர் வர்கீஸ் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

எதிர்பாராத நேரத்தில் பூமி பொத்துக் கொண்டு நீரூற்று ஒன்று புறப்பட்டு தன்னை நனைத்த மாதிரி இருந்தது வசந்தனுக்கு.

"டாக்டர். கண்ணனைப் பார்க்கத்தான் மீரா போயிருக்கா. அவன் அவகிட்ட என்ன சொல்வதுன்னு புரியாம தவிச்சிட்டிருப்பான்."

"போன் பண்ணுங்க. அவரும் நம்மளைப் போல ஒரு நார்மலான, ஆரோக்கியமான மனுஷன்தான்னு சொல் லுங்க. கௌதமுக்குத் தாராளமா அவர் ரத்தம் கொடுக்க லாம். உடனே புறப்பட்டு வரச்சொல்லுங்க..."

வசந்தன் ரிஸீவரை அள்ளினான். டயல் செய்தான்.

'ரீய்ங்...ரீய்ங்...' என்று எத்தனை முறை டயல் செய்தாலும் ரிஸீவர் வழியே அந்த ஒலிதான் கேட்டது.

ஃ ஃ ஃ

மீரா மரத்துப்போய் நின்றாள்.

புயல் வீசிக் கிழித்த செடி போல கண்ணன் கீழே சரிந்து அமர்ந்திருந்தான். முழங்கால்களில் முகம் புதைத்துக் குலுங்கிக் கொண்டிருந்தான்.

கடந்த காலத்தின் வேதனைகள் அவன் மீது தாண்டவ மாடி ஓய்ந்திருந்தன.

காலடி ஓசை கேட்டது.

காரிலேயே காத்திருந்து பொறுமை இழந்து மீராவைத் தேடி வந்துவிட்ட வசந்தனின் அப்பா.

"மீரா... நேரமாய்ட்டே இருக்கேம்மா..."

உறைந்து போன சோகங்களையெல்லாம் உயிர்ப் பித்துப் பார்த்துவிட்ட களைப்போடு நின்றிருந்த மீரா, சரேலென்று வாழ்க்கையின் நிகழ்களத்துக்கு வந்தாள்.

"போலாம் மாமா. நாம வேற எடத்துலதான் ரத்தம் கெடைக்குமான்னு பார்க்கணும். வாங்க. என் ஆபீஸ்



ஃப்ரெஞ்
சந்தன் கையைத் தட்டிக் கொடுத்தான் கண்ணன்.
என்று

"அதுவும் நல்லதுக்குத்தான் வசந்த். எனக்கு எய்ட்ஸ்
நார் லைன்னு முன்னாலேயே தெரிஞ்சிருந்தா கடைசி வரைக்
மீராவுக்கு உண்மை தெரியாமலே போயிருக்கும்.
தராபாத்ல நான் பண்ண அசிங்கத்தை வேற எந்தச்
ர்ப்பத்திலயும் சொல்ல எனக்குத் தைரியம்
இருக்காது. அவனுக்கு ஏதோ ஒரு விதத்துல தெரிஞ்சது
ஒரு நிம்மதியாகத்தான் இருக்கு வசந்த்."

"இவருமெல் நிழலாடியது.

பரவாயி
ர!

மீராவ
களிலும் இரு் அருகில் கண்ணனைப் பார்த்ததும் அவள்
பதற்றம் வந்தது.

மீரா திமடு
." என்றான் வசந்தன். "கண்ணன் தான்
எல்லாம் ."

விமோசனம் இல்லை.
எண்ணியது. ராமல் ஓடிவந்து கண்ணனுக்கு

"நம்மளைக் காணோம்னு
பாங்க. டாக்டருக்கு போன் பண்ணுன்னு நீங்க சொன்
எப்படி இருக்கு'ன்னாவது கேட்க வே

வசந்தனின் அப்பா கவலையான குரலெங்கள்ல அதுவும்
வாங்கின
என்ன செய்வதென்று புரியாமல் இயலாமை
தவித்து நின்ற மீரா, உடனே வர்கீஸின் க்ளினிக்குக்கு
போன் செய்தாள்.

"மீரா. நீ எங்கே போய்ட்டே?"—வசந்தனின் குரல் பரபரப்பாக ஒலித்தது. "கடவுள் நம்மளைக் கைவிடலை. கௌதமுக்கு ரத்தம் கொடுத்தாச்சு இப்ப ஆபத்தில்ல நீ நேரா க்ளினிக்குக்கு வா."

"டாக்டர். கண்ணனைப் பார்க்கத்தான் ந்தது. போயிருக்கா. அவன் அவகிட்ட என்ன சொல்வுன. புரியாம தவிச்சிட்டிருப்பான்."

'ம்!"

"போன் பண்ணுங்க. அவரும் நம்மளைப் போல நார்மலான, ஆரோக்கியமான மனுஷன்தான்னு (டம் ரரில் ஙுங்க. கௌதமுக்குத் தாரளமா அவர் ரத்தம் கொ ளாம். உடனே புறப்பட்டு வரச்சொல்லுங்க..."

வசந்தன் ரிஸீவரை அள்ளினான். டயல் செய்தா

'ரீய்ங்...ரீய்ங்...' என்று எத்தனை முறை செய்தாலும் ரிஸீவர் வழியே அந்த ஒலிதான் கேட்ட அருகில்

ஃ ஃ ஃ விட்டுக்

ப் பகலின்

மீரா மரத்துப்போய் நின்றாள்.

புயல் வீசிக் கிழித்த செடி போல கண்ணற்றி அழுத்திக் அமர்ந்திருந்தான். முழங்கால்களில் ( குலுங்கிக் கொண்டிருந்தான்.

டர் சொல்லிட்டாரு

கடந்த காலத்தின் வேதனைகளினா. அவகிட்டயும் மாடி ஓய்ந்திருந்தன. ் அவசரப்பட்டிருக்க வேண்

காலடி ஓசை கேட்ட

காரிலேயே காத் ய நிமிர்ந்து பார்த்தான் கண்ணன். தேடி வந்துவிட் த்துல எந்தக் கிருமியும் இல்ல கண்ணா...

"ரி ரிப்போர்ட்டையெல்லாம் சீல் வெச்சுக் கொடுத் ..ங்க, அதனால டாக்டர் தொறந்து பாக்கறவரைக்கும் எனக்குத் தெரியாமப் போச்சு. தெரிஞ்சிருந்தா உடனே உனக்கு போன் பண்ணியிருப்பேன்டா. தெரிஞ்சபோது போன் பண்ணினேன். உன் போன் சதி பண்ணிடுச்சு. நீ மட்டும் போன்ல பேசியிருந்தா மீராகிட்ட எல்லாத்தை யும் சொல்ல வேண்டியிருந்திருக்காது கண்ணா."



வசந்தன் கையைத் தட்டிக் கொடுத்தான் கண்ணன்.

"அதுவும் நல்லதுக்குத்தான் வசந்த். எனக்கு எய்ட்ஸ் இல்லைன்னு முன்னாலேயே தெரிஞ்சிருந்தா கடைசி வரைக் கும் மீராவுக்கு உண்மை தெரியாமலே போயிருக்கும். ஹைதராபாத்ல நான் பண்ண அசிங்கத்தை வேற எந்தச் சந்தர்ப்பத்திலயும் சொல்ல எனக்குத் தைரியம் வந்திருக்காது. அவளுக்கு ஏதோ ஒரு விதத்துல தெரிஞ்சது எனக்கு நிம்மதியாகத்தான் இருக்கு வசந்த்."

கதவருகில் நிழலாடியது.

மீரா!

கௌதம் அருகில் கண்ணனைப் பார்த்ததும் அவள் விழிகளில் ஒரு பதற்றம் வந்தது.

"வா, மீரா..." என்றான் வசந்தன். "கண்ணன் தான் ரத்தம் கொடுத்தான்."

மீரா பதற்றம் மாறாமல் ஓடிவந்து கண்ணனுக்கு எதிரில் நின்றாள்.

"உங்க ரத்தம் தரக்கூடாதுன்னு நீங்க சொன் னீங்களே?"

"கண்ணன் பண்ண முட்டாள்தனங்கள்ல அதுவும் ஒண்ணு" என்றான் வசந்தன். ஹைதராபாத்ல வாங்கின ரிப்போர்ட்டை அவன் சரியாப் பாத்திருந்தான்னா அன்னிக்கே புரிஞ்சிருக்கும். அது யாரோ கண்ணாவுடைய ரத்தத்துக்கான ரிப்போர்ட். கண்ணனோடது இல்ல. தனக்கு வரக்கூடாத நோய் வந்துட்டதா இவனா தெலவச் சிக்கிட்டு இன்னொரு டாக்டர்கிட்ட கூடப் போகாம பைத்தியக்காரத்தனம் பண்ணிட்டான் மீரா. இன்னிக்கு வந்திருக்கிற ரிப்போர்ட்டையெல்லாம் பாரு..."

"ஸாரி. உன்னை ரொம்ப டென்ஷன் பண்ணிட்டேன்" என்றான் கண்ணன்.

மீராவின் கால்கள் தளர்ந்தன.

அப்படியே மண்டியிட்டுத் தரையில் அமர்ந்து கட்டிலில் நெற்றியைப் பதித்துக் கொண்டாள்.

வசந்தனின் அப்பா உள்ளே வந்தார். கௌதமைப் பார்த்தார். கடந்த சில மணி நேரங்களின் பரபரப்பு அவரைச் சக்கையாகப் பிழிந்திருந்தது.

வசந்தன் அவரை அணைப்பாகப் பிடித்துக் கொண்டான்.

"இனிமே பயமில்லப்பா. வாங்கப்பா வெளிய காத்தாட நிக்கலாம்" என்று அழைத்துப் போனான்.

அவர்கள் வெளியேறியதும் மீராவின் உச்சந் தலையை கண்ணன் நடுங்கும் கரங்களால் தொட்டான்.

மீரா தலைநிமிர்ந்தாள். கண்கள் நனைந்திருந்தன.

"என்னை மன்னிப்பியா மீரா?" என்றான் கண்ணன் மெல்லிய குரலில்.

மீராவின் உதடுகள் துடித்தன. கிளினிக்குக்குள் சத்தம் போட்டு அழக்கூடாது என்ற கட்டுப்பாடு அவள் உணர்ச்சிகளை அழுத்திப் பிடித்திருந்தது.

"ஸாரி கண்ணன் கௌதமுக்கு எதுவும் ஆகிடக் கூடாதேங்கற பதைப்புல நான்கூட உங்களை வேண்டாத பேச்செல்லாம் பேசிட்டேன்."

கண்ணனுக்குச் சிலிர்த்தது.

அவனுடைய மீரா அவனை மன்னிக்கத் தயாராகி விட்டாளா?



"நான் அவ்வளவு கத்தினப்புறமும், அதையெல்லாம் மனசுல வெச்சிக்காம கௌதமுக்கு ரத்தம் கொடுத்திருக்கீங்களே... அதுக்கு ரொம்ப தாங்க்ஸ் கண்ணா."

சொட்டேர் என்று சாட்டையால் நிண்டி இழுத்தது போலிருந்தது.

'உன்னுடன் நான்கு வார்த்தை பேசிவிட்டதாலேயே உன் அத்தனை பாவங்களையும் நான் மறந்துவிட்டதாகவோ, மன்னித்துவிட்டதாகவோ நெருங்கிவிடாதே' என்று சம்பிரதயமாக நன்றி சொல்லி அவனை மீரா தள்ளி நிறுத்தி விட்டாற் போலிருந்தது.

கண்ணன் மெள்ள எழுந்தான். தளர்ந்த நடையுடன் அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

ஃ ஃ ஃ

வசந்தன் அந்தத் தென்னந்தோப்பின் வரப்புமேட்டில் மெள்ள நடந்தான். மண்ணின் வாசமும் ஈரப்பதமும் காற்றில் கலந்திருந்தன. காற்று தென்னங்கீற்றுகளை நீவி, உருவி இழுத்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

அலுவலகம் முடிந்த பிறகு நேரடியாக வீட்டுக்குப் போக இப்போது எல்லாம் மனது வருவதில்லை. மீராவையோ, கண்ணனையோ ஏறெடுத்துப் பார்க்க முடியாமல் மறுபடியும் ஒரு தத்தளிப்பு வந்துவிட்டது.

மீராவின் அம்மாவைப் பார்த்ததாகச் சொல்லி கண்ணன் அவளை ஒதுக்கிவைத்தபோது கண்ணன் மீது வசந்தனுக்குக் கோபம் இருந்தது. மீராவைத் தன் வீட்டுக்குள் அழைத்துக் கொண்டபோது அவனுடன் இருந்த நட்பு இறுகிப்போனது. அவனுடைய திருமணம் முடிந்தபோதும் அவளை மனைவியாக ஏற்றுக்கொண்டபோதும் அவளைப் பற்றிய பொறுப்பு கூடிப்போனது. இருந்தாலும்

அவளைக் கண்ணனிடமிருந்து பிரிந்திருக்கும் அவன் மனைவி என்றுதான் பார்க்க முடிந்ததே தவிர, அவளைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியதே இல்லை. ஆனால், அப்போதெல்லாம் அவளைக் கண்ணனிடம் மறுபடி ஒப்படைக்க வேண்டும் என்று தோன்றியதும் இல்லை. அத்தை இறந்து அவன் உண்மைகளை வசந்தனின் மடியில் போட்டு அழுதபோதுகூட. இத்தனை நல்ல மனது இருந்தும் மீராவிடம் இருந்து பிரிந்திருக்க வேண்டியபடி ஒரு முட்டாள்தனத்தைக் கண்ணன் செய்துவிட்டானே என்ற வேதனைதான் இருந்தது.

ஆனால், எப்போது கண்ணன் பயந்ததுபோல அவனுடைய ரத்தத்தில் எய்ட்ஸ் கிருமிகள் இல்லை என்று தெரிந்துவிட்டதோ, வசந்தனுக்கு இப்போது புதுப் பொறுப்பு கூடிவிட்டாற்போல் இருந்தது.

மீரா தனக்குரியவள் இல்லை என்பது மட்டும் இல்லை. அவள் கண்ணனுக்குரியவள். அவனிடம் மீராவை ஒப்படைப்பது தன்னுடைய முக்கிய பொறுப்பு என்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

மனதில் தோன்றுகிற அளவு அவ்வளவு எளிமையான காரியம் இல்லை அது என்றும் புரிந்திருந்தது. மீராவுக்கும் கண்ணனுக்கும் அவன் எவ்வளவோ நெருக்கமாக இருந்தாலும்கூட, இதை நேரடியாக அவர்களிடம் பேசுவதில் ஒரு கீழ்த்தரம் இருப்பதாக அவனுக்குள் ஒரு அச்சம் இருந்தது.

அப்பாவிடம் மட்டும் பொய் முகம் காட்டிக் கொண்டிருந்தது போய் இப்போது அப்பா, மீரா, கண்ணன் என்று எல்லோரிடமும் அவன் வேடம் போட வேண்டி வந்ததை அவனால் தாங்க முடியவில்லை.



வானம் இருண்டு மழை வரும் எச்சரிக்கையாக இரண்டொரு இடிச்சத்தம் கேட்டதும் வசந்தன் வேறு வழியின்றி வண்டி நிறுத்தியிருந்த இடம் நோக்கி நடந்தான்.

ஃ ஃ ஃ

மீரா சமையலறையில் இருந்தாள்.

கண்ணனுக்குப் பிடித்த பாகற்காய் வறுவல் எண்ணெயில் புரண்டு கொண்டிருந்தது. கண்ணனுக்கு மிகப் பிடித்த அவியல் தேங்காய் எண்ணெய் விட்டதும் கமகமத்தது.

கண்ணன் சாப்பிட்டுவிட்டு சுந்தரியைப் பார்க்கப் போவதாக இருந்தான். அதுவரை தன்னுடன் விளையாடிக் கொண்டிருக்கட்டும் என்று கௌதமை வழக்கம் போல அழைத்துப் போயிருந்தான்.

வசந்தனின் அப்பா காருக்குத் தேவையான ஏதோ ஒரு உதிரி பாகத்தை வாங்கி வர புனலூர் வரை போயிருந்தார். இல்லையென்றால் சமையலறையில் அவர் ஆட்சிதான் கையோங்கி இருந்திருக்கும்.

மீரா அடுப்பை அணைத்து வெளியே வந்ததும் ஆச்சரியமானாள்.

ஹாலில் மூன்று இலைகள் போடப்பட்டிருந்தன; வசந்தன் தண்ணீர் எடுத்து வைக்கும்போது "என்ன வசந்த்...மாமா இன்னும் திரும்பலியே?" என்றாள்.

"ஒரு இலை கண்ணனுக்கு. ஒண்ணு வழக்கம் போல எனக்கும் கௌதமுக்கும் சேர்த்து. மூணாவது இலை உனக்கு மீரா. நாம சேந்து உக்காந்து சாப்பிட்டு எத்தனை நாளாச்சு?"

மீரா மறுப்பதற்கு வாயெடுத்தாள். ஆனால், எதுவும் சொல்லவில்லை. வீட்டுக்கு வரும் எத்தனையோ விருந்தாளி

களுடன் அவன் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டதில்லையா என்ன?

ஃ ஃ ஃ

"சுந்தரிக்கு இப்ப எப்படியிருக்கு கண்ணன்?" என்றான் வசந்தன். கண்ணனின் இலையிலிருந்து ஒரு பாகற்காய் வறுவலை எடுத்துக் கொறித்துக் கொண்டே.

"எவ்வளவோ தேவலாம் வசந்த். இயற்கை வைத்தியம் அவளுக்கு ஒத்துப் போவுது. இப்ப வலி இல்லாம அவளால உக்கார முடியுது. காலை மடக்க முடியுது. என்றான் கண்ணன்.

"மீரா...உங்க தாத்தாவுக்குக்கூட இந்த இயற்கை வைத்தியசாலைல நல்ல சிகிச்சை கெடைக்கும்னு தோணுது. பக்கவாதத்தையும் இவங்க ட்ரீட் பண்றாங்க" என்றான் வசந்தன் திடீரென்று.

மீராவின் கண்களில் ஒளி வந்தது.

"நெஜம்மாவா வசந்த்? பாவம் பாட்டி...தனியா அல்லாடிட்டிருக்காங்க..."

"நீ வைத்தியரைப் போய்ப் பாரேன்..."

"எப்ப போலாம் வசந்த்?"

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு மீரா. கண்ணன் எப்படியும் அங்கதான் போறான். அவன் கூடப் போயிடேன்."

"குட் ஐடியா" என்றாள் மீரா. "கண்ணன், நீங்க கிளம்பும் போது மறக்காம கூப்புடுங்க..."

ஃ ஃ ஃ



செம்மண் பாதையில் மோட்டார் சைக்கிள் குதித்து ஒரு மேடேறிய போது மீரா தன்னிச்சையாக கண்ணனின் தோளைப் பற்றினாள். கண்ணனின் கழுத்து நரம்பு ஒன்று சிலிர்த்தது.

பொன்கரா தாண்டியதும் இரு பக்கமும் மரங்கள் அடர்ந்த நிழல் பாதையில் மோட்டார் சைக்கிள் நுழைந்தது. காற்று சிலீரென்று வீசியது. கண்ணன் திடீரென்று மோட்டார் சைக்கிளை நிறுத்தினான். மீரா என்னவென்று புரியாமல் இறங்கினாள்.

"மீரா..." என்றான் கண்ணன் குரல் தடுமாற.

"ம்?" என்றாள் மீரா.

"நான் ஒண்ணு சொன்னா தப்பா நெனைச்சுக்க மாட்டியே?" என்று கேட்டான் கண்ணன், சற்றே கூச்சத்துடன்.

## 27

மீராவின் புருவங்கள் உயர்ந்து, 'என்ன?' என்று வினவின.

வார்த்தைகள் பின்னப் பின்ன, கண்ணன் மெள்ளப் பேசினான்.

"நான் பண்ணின தப்புக்கு எனக்கு நானே தண்டனை கொடுத்துக்கிட்டதா நெனைச்சேன். குற்ற உணர்ச்சி கொறைஞ்சது. ஆனா நிம்மதி கெடைக்கலை. மனசுல பாரமா ஏறி உட்கார்ந்திருக்கிறதை எங்கே இறக்கறதுன்னு புரியாமக் கொஞ்சநாள் அல்லாடினேன். அப்புறம், விடாம டைரி எழுதினேன். வாழ்க்கைல இனிமே எனக்குப் பிடிப்பு

விட்டுப் போகும்போதெல்லாம் அந்த டைரியை எடுத்துப் படிச்சிட்டிருப்பேன் மீரா.."

கண்ணன் மோட்டார் சைக்கிளின் பெட்டியைத் திறந்தான்.

"நானும் இங்க சிகிச்சை எடுத்துக்கறதா இருந்தது மீரா. அப்பப் படிக்கணுன்னு நெனைச்சு, இந்த டைரியை யெல்லாம் கேரளாவுக்கு எடுத்துட்டு வந்தேன். கௌதம் அடிபட்டுக் கெடக்கறப்ப. என்னைப் பத்தி உன்கிட்ட சொல்லிடணுமேங்கற அவசரத்துல படபடன்னு பேசினேன். மனசுல இருக்கறதையெல்லாம் சொல்ல முடியாம அரைகுறையா சொல்லி நிறுத்திட்ட மாதிரி எனக்கு ஒரு குறை. அதனால, அந்த டைரியை எல்லாம் இப்ப உனக்காக எடுத்துட்டு வந்திருக்கேன். படிச்சுப் பாப்பியா மீரா...?"

"இங்கேயா...!" என்றாள் மீரா வியப்புடன்.

"வீட்டுல உன்கூட தனியா பேசறதுக்குச் சரியான சந்தர்ப்பமே கெடைக்க மாட்டேங்குது. இங்கதான் அமைதியா இருக்கு. ப்ளீஸ் எனக்காக..." என்று கண்ணன் டைரிகளை அவளிடம் நீட்டினான்.

மரத்தடியில், ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு பெருங் கல்லைத் தேர்ந்தெடுத்து மீரா உட்கார்ந்தாள். கண்ணன் அவளிடமிருந்து விலகி வந்து, மோட்டார் சைக்கிளில் நின்றான்.

அவ்வப்போது அவன் பார்வை மீராவின் பக்கம் திரும்பியது.

காற்றில் நகரும் மரக்கிளையின் நிழல் அவள் முகத்தில் அசைந்தது. வெளிச்சமும் நிழலுமாக அவள்மீது சித்திரம் வரைந்தாற்போலிருந்தது.

பனிச்சென்று விளங்கும் புருவங்கள், படிக்கும்போது அவற்றுக்கு மத்தியில் மையம் கொள்ளும் பிறைச்சுருக்கம்,



அவ்வப்போது குழிவு காட்டும் கன்னக் கதுப்புகள்... கலைந்து பறந்து நெற்றியிலும் கன்னத்திலும் வருடிச் சுருளும் கூந்தல் பிரிகள்...

யாவற்றையும் கைவிடுக்கு வழியே எப்படி முட்டாள் தனமாக நழுவ விட்டுவிட்டான்...? கை தவறவிட்டு, பள்ளத் தாக்கினுள் பறந்து போய்விட்ட மயிலிறகைப் பார்ப்பது போல்...

இமைகளை இறுக மூடினாள் மீரா. கண்களின் விளிம்பில் நீர்த் துளிகள். அவன் கண்களும் நனைந்தன. 'இப்போதும் உன்னை அழவைத்துவிட்டேனா மீரா...? ஸாரி மீரா..."

படித்து முடித்ததும் மீரா என்ன சொல்லப் போகிறாள்...? அவன் மனதைக் கிழித்துக் காட்டியாயிற்று. அவளைப் பற்றிய அவன் நினைவுகளில் பூத்திருக்கும் கசப்பு சற்றாவது குறைந்திருக்குமா...?

கண்ணன், மீராவைப் பார்ப்பதை விடுத்துப் பார்வையை நகர்த்தினான்.

அடர்ந்த கிளைகளுக்குள் பறவைகள் அசையும் ஒலி கேட்டது. செடிகள் சிலிர்த்தன. வண்ணப்பூக்களை உதிர்த்தன. இனிய நிறங்கள் தரையில் புரண்டன. நறுமணம் காற்றை நிறைத்தது.

"போலாமா...?" என்று மீராவின் குரல் கேட்டது திரும்பினான்.

டைரிகளை அவனிடம் திருப்பிக் கொடுத்தபோது, அவள் விழிகளும் மூக்குநுனியும் சற்றுச் சிவந்திருந்தன.

ஃ ஃ ஃ

மீராவின் தாத்தாவுடைய வயதைக் கேட்டார் வைத்தியர். அந்த வயதுக்கு மேல் அவரை இங்கெல்லாம்

அலைக்கழிக்க வேண்டாம் என்றார். ஒரு தைலம் கொடுத்து அதைப் பயன்படுத்திப் பார்க்கச் சொன்னார்.

சுந்தரியைப் பார்க்கப் போனார்கள். மையத்தில் கொடுக்கப்பட்ட சிருடை அணிந்திருந்தாள் சுந்தரி. அவள் முகத்தில் தெளிவு வந்திருந்தது. வலி குறைந்திருப்பதாகச் சொன்னாள். கௌதமைப் பற்றி ஆர்வத்துடன் விசாரித்தாள். அவனுக்கு அடிபட்டது பற்றி மீரா அவளிடம் சொல்லவில்லை.

''கண்ணனுக்கு எழுந்தவுடனே காபி வேணும் மீரா இல்லேன்னா, தலைவலி வந்துடும்...'' என்று சுந்தரி பொறுப்பாகச் சொன்னாள்.

மீரா புன்னகைத்தாள். கண்ணனுக்கு எந்தப் பதத்தில் காபி கலக்க வேண்டும் என்பதுகூட தனக்குத் தெரியும் என்று அவள் சொல்லிக் கொள்ளவில்லை.

விடைபெற்றார்கள். திரும்பி வரும் போது, வார்த்தை தவறுதலாகக்கூட அந்த டைரிகள் பற்றிப் பேசிக்கொள்ளாமல் கண்ணனும் மீராவும் தவிர்த்தார்கள்.

ஃ ஃ ஃ

கூடத்தில் மாட்டியிருந்த கடிகாரம் 'புர்ர்' என்று ராட்சஸ ஈயின் இறக்கை போல் சத்தம் செய்துவிட்டு 'டங்...டங்' என்று பத்து முறை மணி அடித்தது.

சமையலறைக் கதவைச் சாத்திவிட்டு மீரா வந்த போது, வசந்தனும் கண்ணனும். சீட்டுக்கட்டைக் கலைத்துக் கொண்டிருந்தார்கள்.

''மீரா, உனக்கும் போடட்டுமா..?'' என்று கேட்டான் வசந்தன்.

மீரா கொட்டாவி விட்டாள். ''சும்மா, மூணு ஆட்டம்...'' என்றான் வசந்தன். பிடிவாதக்காரன்.



''போடு...'' என்றாள் மீரா.

கண்ணன் நகர்ந்து அவளுக்கு இடம் கொடுத்தான்.

முதல் ஆட்டத்தில் வசந்தன்தான் நிறையப் பேசினான்.

இரண்டாவது ஆட்டத்தில் கண்ணன் கழித்த சீட்டுகளையெல்லாம் மீரா உடனே உடனே எடுத்துக் கொண்ட போது வசந்தன், ''டேய்...'' என்று போலியாக மிரட்டினான். ''குயின் ஹார்ட் கதை மறுபடியும் நடக்குதா...?'' என்றான்.

கண்ணன் புன்னகைத்தான்.

ஃ ஃ ஃ

கண்ணன்—மீரா கல்யாணம் முடிந்து இருபத்தைந்தாவது நாள். வெள்ளி விழாக் கொண்டாட்டம் என்று வசந்தன் அடம்பிடித்து, மூன்று பேருமாக ஓட்டலில் டின்னர் சாப்பிட்டுவிட்டு, கண்ணன் வீட்டு மொட்டை மாடியில் கூடியிருந்தார்கள். 'சீட்டாடலாம்' என்று மீராதான் ஆரம்பித்தாள்.

வரிசையாக மூன்று ஆட்டங்களில் கண்ணன்தான் ஜெயித்தான்.

''இன்னிக்கு நூறு ஆட்டம் இருந்தாலும் அத்தனையிலும் நான்தான் ஜெயிப்பேன்...'' என்று சிரித்தான்.

''எப்படி... எப்படிச் சொல்றீங்க...?'' என்று துறுதுறுப்பாக மீரா கேட்டாள்.

''நீ சீட்டை எறக்கற லட்சணத்தை வெச்சே அவன் முடிவு பண்ணிட்டான்...'' என்று வசந்தன் புன்னகைத்தான்.

"எவ்வளவு பந்தயம்...? இந்த ஆட்டம் நான் ஜெயிக்க றேன்.." என்றாள் மீரா.

"பந்தயம்லாம் வெச்சு அவமானப்படணுமா மீரா...?" என்று வசந்தன் சீண்டினான்.

"வசந்த், நீ என் பக்கம்... கண்ணனுக்குப் பரிஞ்சுப் பேசாதே..." என்று மீரா செல்லமாக மிரட்ட, கண்ணன் பளிச்சென்று சற்றுதெரியப் புன்னகைத்தான்.

ஆட்டம் மும்முரமானது.

"ஒரே கார்டு... ஜஸ்ட், ஒரே சீட்டுதான் வேணும்..." என்றாள் மீரா.

"குயின் ஹார்ட்தானே வேணும்...?" என்றான் வசந்தன்.

"ஏய்... என் சீட்டையெல்லாம் பாக்கறியா...?"

"நீ கீழேயிருந்து பொறுக்கற சீட்டை வெச்சுப் புரிஞ்சுக்க முடியாதா மீரா...? அந்தச் சீட்டு கண்ணன் கிட்ட இருக்கு. இந்த ஜென்மத்துல எறங்காது..." என்று வசந்தன் சிரித்தபடி சொன்னான்.

"நெஜமாவா...? ம்...?" மீரா கண்களை அகல விரித்து கண்ணனைப் பார்த்துக் கேட்டாள்.

"நீயும் வசந்தனும்தானே ஒரே கட்சி..? அவனைக் கேளு..." என்று கண்ணனும் சிரித்தான். "ராஸ்கல்... நான் ஜெயிக்கக்கூடாதுன்னு எனக்குத் தேவையான சீட்டையெல்லாம் அவன் பிடிச்சு வெச்சிருக்கான்."

"வசந்த், குயின் ஹார்ட் கண்ணன்கிட்டயா இருக்கு?"

வசந்தன் ஆமோதித்துத் தலை அசைத்தான்.

மீரா சட்டென்று அப்படியே வளைந்து கண்ணனின் கன்னத்தில் 'பச்சக்' என்று முத்தமிட்டாள். கண்ணன் சிலிர்த்தான்.



"இந்தக் குயினோட ஹார்ட்டையே உங்ககிட்ட கொடுத்துடலையா கண்ணா...? கேவலம், ஒரு குயின் ஹார்ட் சீட்டை எனக்காக இறக்கக்கூடாதா...?"

கண்ணன் இறக்கத்துடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்து, "எறக்கினா... இன்னொண்ணு தருவியா...?"

"அட்வான்ஸாவே!" மறுபடி மீரா. அவன் கன்னத்தில் உதடுகளைப் பதிக்க... கண்ணன் மறுபேச்சில்லாமல் சீட்டை இறக்கினான்.

வசந்தன் மீராவின் தலையில் செல்லமாகத் தட்டினான்.

"சரியான அழுகுணி ஆட்டக்காரி. கண்ணனை கர்ச்சீப்புலயே முடிஞ்சு வெச்சிருக்கே, ராட்சஸி.."

மீரா வெற்றி மதர்ப்புடன் அன்றைக்குச் சிரித்தாள்.

ஃ ஃ ஃ

இப்போது அந்த நினைவுகள் புரண்டதில் மூன்று பேரின் முகத்திலும் புன்னகை. ஆட்டம் தொடர்ந்தது.

கண்ணன் இந்த ஆட்டத்தில் இயல்பாகவே, 'குயின் ஹார்ட்' சீட்டை இறக்கியதும், அதை மீரா அவசரமாக அள்ளி எடுத்துக் கொண்டபோது அவளையறியாமல் சிரிப்பு வெடித்தது.

வசந்தனும் அந்தச் சிரிப்பில் கலந்துகொண்டான். கண்ணன் மட்டும் சற்று யோசித்துவிட்டுப் புன்னகையைப் பெரிதாக்கினான்.

ஃ ஃ ஃ

"கண்ணா... ஒரு உதவி பண்ணேன். இன்னிக்கு கௌதமுக்குத் தையல் பிரிக்கிற நாள். மீராகூடத்

துணைக்குப் போயிட்டு வந்துடேன். அப்பா விடிகாலை லேயே கிளம்பி திருநெல்வேலிக்குப் போயிருக்காரு. தூரத்து கிலேடிவ் வீட்ல ஒரு டெத். எனக்கு அவசரமா இன்ஸ்பெக் ஷனுக்குப் போயாகணும்.. அஃப்கோர்ஸ். நீ காரை எடுத்துட்டுப் போ. நான் பைக்ல போய்க்கறேன்...'' என்று வசந்தன் சொல்லிவிட்டுப் பைக்கை எடுத்துப் போயிருந்தான்.

கண்ணன் காரைச் செலுத்தினான். பக்கத்தில் மீரா வும் அவள் மடியில் கௌதமும்.

''அங்கிள்...'' —கௌதம் கண்ணனின் கையைத் தொட்டு அழைத்தான்.

''ம்...''

''கார் ஓட்டறதுக்கு எனக்குச் சொல்லித் தர்றீங்களா அங்கிள்? எங்கப்பா ஆபீஸ் போயிட்டா நானே எங்கம்மாவை வெளியே அழைச்சுட்டுப் போவேன்...''

கண்ணன் முறுவலித்தான். ''உனக்குக் கால் எட்டா தேடா ராஜா...''

''அப்ப எங்கம்மாவுக்குச் சொல்லிக் குடுங்க...''

கண்ணனில் புன்னகை சற்றே மாறியது. ''உங்க அம்மா என்கிட்ட கத்துக்க மாட்டேன்னு சொல்லிட் டாங்கடா...'' என்றான் உலர்ந்த குரலில்.

கண்ணனிடம் கார் கற்றுக் கொள்ள ஆரம்பித்த முதல் நாளே, கார் அவளுக்கு அடங்காததால் மீரா பயந்து போனதையும், 'ஒரு அட்டகாசமான டிரைவரைக் கல்யாணமே பண்ணிக்கிட்டப்புறம் நான் எதுக்கு ஓட்டக் கத்துக்கணும்?' என்று அந்தப் பயத்தை மறைத்து மீரா அமர்த்தலாகச் சொன்னதையும் கண்ணன் இன்னும் மறக்க வில்லை!



மீரா ஒரு புன்னகையோடு நிறுத்திக் கொண்டாள்.

கிளினிக்கில் கௌதமின் தையல் பிரிக்கப்பட்டது. காயம் நன்றாக ஆறி வருகிறது என்று டாக்டர் சொன் னார்.

வெளியே வந்ததும், ''உன்னை அப்படியே ஆபீஸ்ல விட்டுடறேன், மீரா...'' என்றான் கண்ணன், ''கௌதமை நான் பாத்துக்கறேன்...''

மீரா இரண்டு மனதுடன் தலையசைத்தாள்.

கண்ணனிடம் கௌதம் இருப்பானா என்று புரிய வில்லை. ஆனால், ஆபீஸுக்கு லீவு போட்டு விட்டு வீட்டில் உட்கார்ந்திருக்கவும் யோசனையாக இருந்தது.

வசந்தன் இல்லாத நேரங்களில், கண்ணனுடன் அவளால் இயல்பாக இருக்க முடியும் என்று தோன்ற வில்லை.

அவன் எழுதியிருந்த டைரிகளைப் படித்ததில் இருந்து அவன் எத்தனை வலியுடன் அவளை நாடகமாடி ஒதுக்கி யிருக்கிறான் என்பது புரிந்தது. அவனுடைய அதைரியமும் அவசரமும் அவனை மட்டுமன்றி, அவளையும் சேர்ந்து மாற்ற இயலாத நிலைக்குக் கொண்டு போய் விட்டதை நினைத்து அவன் உருகுவதையும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவனுடைய இரக்கமற்ற போக்கால் அவன் மீது வளர்ந் திருந்த காழ்ப்பு உணர்ச்சி இப்போது அவளிடத்தில் இல்லை. அதனால்தானா இந்த அல்லாட்டம்?

கண்ணனுடன் அவள் வாழ்க்கை இணைந்திருந்த போது, கண்ணன் இல்லாத நேரங்களில் வசந்தன் வந்தது இல்லையா? அப்போதெல்லாம் வசந்தனை நண்பனாக மட்டுமே பார்க்கும் பக்குவம் அவளுக்கு இயல்பாகவே அமையவில்லையா?

கண்ணனின் மனைவியாக இருந்தபோது, வசந்தனை நண்பனாக ஏற்றுக் கொள்ள முடிந்ததென்றால், இன்று வசந்தனின் மனைவியாக இருக்கும் போது, கண்ணனை ஏன் ஒரு நண்பனாக அவன் பார்க்கக் கூடாது?

இந்த எண்ணம் உதித்த பிறகு அவளுள் ஒரு புதுத் தெளிவும் தைரியமும் சுரப்பது போல் இருந்தது.

"இல்ல கண்ணன்...நான் இன்னிக்கு ஆபிஸுக்குப் போகலை. நான் இல்லேன்னா கௌதமுக்கு அவங்க தாத்தாவோ, வசந்தனோ இருந்தாகணும். வேத்து மனுஷங்ககிட்ட அவனால பொருந்தி இருக்க முடியறதில்ல..."

பாம்பால் கொத்தப்பட்டதுபோல் கண்ணன் சரக் கென்று நிமிர்ந்து பார்த்தான்.

மீராவுக்கு உடனே தன் தவறு புரிந்தது அவள் கண்கள் மன்னிப்புக் கோரின.

"ஸாரி கண்ணா, உங்களை வேத்து மனுஷனா நான் நெனைக்கறதா சொல்லலை. கௌதம் இன்னும் உங்க கிட்ட பழகலையேன்னுதான்..."

கண்ணனின் கண்களில் இழந்த ஒளி மெள்ளத் திரும்பியது.

ஃ ஃ ஃ

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும், "அம்மா ... நான் அங்கிள் வீட்டுல வௌயாடிட்டிருக்கேன்..." என்று கண்ண னோடு கை கோர்த்துக் கொண்டு இறங்கினான் கௌதம்.

"அழைச்சுட்டுப் போகட்டுமா?" என்று அனுமதி கேட்பது போல், கண்ணன் மீராவைப் பார்த்தான்.



தொட்டாலே உதிர்ந்துவிடும் மலரைக் கையில் வைத் திருப்பது போன்றதொரு கவனத்துடன் அவளிடம் அவன் பேசியபோது, மீராவுக்கு அவன் பேரில் இரக்கம் உண்டா யிற்று.

"என்கிட்ட எதுக்கு கண்ணா கேக்கணும்?" என்றாள்.

கௌதமைத் தூக்கித் தன்னுடன் இறுக்கிக் கொண் டான் கண்ணன்.

ஃ ஃ ஃ

சந்திரிகா பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். கண்ணனையும் கௌதமையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

கண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு, மேஜிக் ஸ்லேட்டில் ஏதோ ஒரு படம் வரைவதும் அழிப்பதுமாக கௌதம் ஆழ்ந்திருந்தான்.

கண்ணனைப் பற்றி மீராவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டபோது முதலில் அவன் பேரில் சந்திரிகாவுக்கு ஆத்திரம்தான் வந்தது. ஆனால், கௌதமுக்கு ரத்தம் கொடுக்க அவன் ஓடி வந்ததிலிருந்து, அவளுக்கு அவன் பேரில் ஒரு மதிப்பு உண்டாகியிருந்தது.

வசந்தனுக்கும் அவனுக்கும் இடையில் இருந்த நட்பு அவளுள் பிரமிப்பு ஏற்படுத்தியிருந்தது. கண்ணன் பேரில் மீராவுக்கு இருந்த கோபம் திடீரென்று ஏன் விலகியது என்பது புரிபடாத போதும் மீராவின் மாற்றம் சந்திரிகா விடமும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தது.

இழந்து போன கணங்களையெல்லாம் வாழ முயற்சிப் பது போல் கண்ணன் கௌதமிடம் பொழியும் அன்பும் அவளை இளக்கியிருந்தது.

அவுட்ஹவுஸ் வரை வந்து அவ்வப்போது சுந்தரி பற்றி இரண்டொரு வார்த்தை கேட்டுவிட்டுப் போனதில் கண்ணனோடு பரிச்சயம் அதிகமாகி இருந்தது.

சந்திரிகா எழுந்தாள். அவுட் ஹவுஸ் நடந்தாள்.

ஃ ஃ ஃ

கண்ணனுக்கு கௌதம் பேரில் வலிய இஷ்டம் அல்லோ?''

கண்ணன் நிமிர்ந்தான். புன்னகையுடன் நின்றிருந்த சந்திரிகாவைப் பார்த்தான்.

''மீராவோட வயித்துல இவன் இருந்த போதே இவனைப் பிரிஞ்சுட்ட முட்டாள் நான். இவனோட ஒவ்வொரு நாள் வளர்ச்சியையும் பக்கத்துல இருந்து பார்த்திருக்க வேண்டியவன்...'' —கண்ணனிடம் இருந்து பெருமூச்சு ஒன்று பிரிந்தது.

''மீராவைப் போல ஒரு தேவதையைப் பிரிய நிங்ஙளுக்கு எப்படி ஹிருதயம் சம்மதிச்சு?''

கண்ணன் என்ன சொல்வதென்று புரியாமல் தோள்களைக் குலுக்கினான்.

''தெய்வம் இப்போள் கண்ணன் முன்னே பிரசன்னமாயிட்டால் கண்ணன் எந்து வரம் கேட்கும்?''

பதில் தெரிந்திருந்தே சந்திரிகா கேட்டாள்.

கண்ணன் இமைகளைப் பாதி மூடி, வரம் கேட்கும் அந்த வாய்ப்பைக் கற்பனை செய்து பார்த்தான்.

''நான் மெட்ராஸ்லேருந்து ஹைதராபாத்துக்குக் கிளம்பினேனே—அந்த தினத்துக்கு என்னோட வாழ்க்கையைத் திரும்பக் கொண்டு போய் நிறுத்தச் சொல்லுவேன்



மீராவோட நெழல்லயே விழுந்து கெடப்பேன்...'' என்று சந்திரிகாவிடம் சொன்ன கண்ணனின் குரல் உணர்ச்சி வசப்பட்டுக் கம்மியது.

ஃ ஃ ஃ

கௌதமுக்குச் சாதம் ஊட்டப் பிசைந்து எடுத்து வந்திருந்த மீரா, காலில் குத்திய முள்ளைப் பிடுங்குவதற்காக நின்ற நேரத்தில், கண்ணனுடைய வார்த்தைகள் அவள் காதில் தெளிவாக விழுந்தன!

## 28

கண்ணனுடைய குரலில் தோய்ந்திருந்த ஏக்கம் மீராவை எட்டியது. சில நாட்களே பழகியிருந்த சந்திரிகாவிடம் அவன் அப்படி வெளிப்படையாகப் பேசியதுதான் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மீராவிடம் சொல்ல அவனுக்குத் தைரியம் இருந்திருக்காது. வசந்தனிடம் கூறினால், அவனையும் சேர்த்துக் குழப்பும் என்று நினைத்திருப்பானோ என்னவோ?

பழைய தினத்திலிருந்து வாழ்க்கையைப் புதிதாக வாழ்வதற்கான வரம் மட்டும் கிடைக்குமேயானால், கண்ணன் மட்டுமென்ன...அதைப் பயன்படுத்திக் கொள்ள யார்தான் தயாராகஇருக்க மாட்டார்கள்!

மீரா சற்று நேரம் அங்கேயே நின்று விட்டு, அப்போது தான் வந்து சேர்ந்தவள் போல் அவுட்ஹவுஸுக்குள் நுழைந்தாள்

மீராவைப் பார்த்ததும் சந்திரிகாவின் கண்களில் ஒரு குறும்பு ஒளிர்ந்தது. ''வா, மோளே'' என்றாள். 'கௌதமுக்கு ஊணு ஞான் ஊட்டிக் கொடுக்கட்டா?''

''மாட்டேன்...'' என்று க்ரீச்சிட்டான் கௌதம். ''அம்மாகிட்டதான் சாப்பிடுவேன்.''

சந்திரிகா மீராவையும் கண்ணனையும் மாறி மாறிப் பார்த்தாள். இதழோரம் குறும்பு ஒளிந்திருந்தது.

''எனிக்கும் கிச்சனில் கொஞ்சம் ஜோலி உண்டு'' என்று சொல்லி விட்டுச் சரசரவென அங்கிருந்து விலகிப் போனாள்.

கௌதமுக்காக கண்ணன் ஒரு குட்டி ஆடும் நாற்காலி வாங்கி வந்திருந்தான். அதில் உட்கார்ந்து முன்னும் பின்னுமாக ஆடுவது கௌதமுக்குக் குஷியாக இருந்தது. இப்போது மீரா சாதம் ஊட்ட வந்ததும் அந்த நாற்காலியில் ஏற்றி விடச் சொன்னான்.

கண்ணன் அதில் அவனை உட்கார வைத்ததும் கௌதம் கால்களை நீட்டிக் கொண்டு மெள்ள ஆடலானான்.

மீரா கையில் சாதத்தை எடுத்து, ''இது ஏரோப்ளேன்.. இப்ப ஜம்னு வந்து ஏர்போர்ட்ல எறங்கப் போவுது'' என்று சொல்லி விமானம் போல் காற்றில் கொண்டு வந்தாள். கௌதம் வாய் திறந்தான்.

''மீரா'' கண்ணன் நாற்காலியின் இன்னொரு பக்கம் நெருக்கமாக நின்று கொண்டான்.

''ம்?...''

''மலைக்கோட்டை. தாயுமானவர் சந்நிதில நாம வாழைத்தார் சாத்தறதா வேண்டிக் கிட்டோமே மீரா... அந்த வேண்டுதல் இன்னும் பாக்கி இருக்கு இல்லியா?''

மீரா திமிர்ந்தாள். தவற விட்டதையெல்லாம் மீண்டும் சேகரித்து விட வேண்டும் என்று கண்ணன்



தவிப்பது புரிந்தது. அதனாலேயே அவன் மேல் சற்று இரக்கம் சுரந்தது.

''இல்ல கண்ணா அந்த வேண்டுதலை நிறைவேத்தியாச்சு. வசந்தனோட போய்ட்டு வந்துட்டேன்.''

கண்ணன் முகத்தில் மெல்லிய ஏமாற்றம் வந்தது.

''பரமபதம் ஆடறப்ப தப்பான தாயம் விழுந்தா சர்ருன்னு பாம்புல சறுக்கிட்டு வந்துருவோமே... அந்த மாதிரி நான் சறுக்கிட்டு வந்துட்டேன் இல்லியா? உயிருக்குயிரா இருந்தவங்களையெல்லாம் ஒவ்வொருத்தரா தொலைச்சுட்டேன். போதல்ல அத்தை பேசறதை நிறுத்திட்டாங்க. வசந்தனுக்கும் எனக்கும் இருந்த நெருக்கம் கெட்டுப்போச்சு. எல்லாத்தையும் விட நீயும் கௌதமும் கைக் கெட்டாத தூரத்துக்குப் போய்ட்டீங்க..''

மீரா மௌனமாக இருந்தாள்.

''அத்தை கடைசில ஜன்மத்துக்கும் மறக்க முடியாத தண்டனையைக் கொடுத்துட்டு ஒரேயடியா போய்ட்டாங்க! இனிமே என்ன போராடினாலும் எனக்குக் கெடைக்க மாட்டாங்க. வசந்தன் எப்படியோ திரும்பக் கெடைச்சுட்டான்...'' கண்ணன் நிறுத்தி விட்டு மீராவைப் பார்த்தான்.

சில வாக்கியங்கள் முற்றுப் பெறாமல் இருப்பதே கௌரவம் என்பது போல மீரா எந்தப் பிரதிபலிப்பும் காட்டாமல் நின்றாள்.

கௌதம் நாற்காலியின் இருந்து இறங்க விரும்பினான். மீரா நகர்ந்து கொள்ள, கண்ணன் அவனை இறக்கி விட்டான்.

''கண்ணன். நான் இவனை வீட்டுக்கு அழைச்சுட்டுப் போறேன். பத்து நிமிஷத்துல நீங்க சாப்பிட வரலாம்...''

என்று மீரா ஒற்றைக்கையால் கௌதமை நகர்த்திக் கொண்டு அவுட்ஹவுஸை விட்டு வெளியேறினாள்.

ஃ ஃ ஃ

இரவு.

மீரா படுக்கையில் ஒருக்களித்திருந்தாள். வசந்தன் வழக்கம் போல் கண்ணனுடன் பேசப் போயிருந்தான். இன்று வசந்தன் திரும்பி வரும்வரை விழித்திருப்பது என்ற தீர்மானத்துடன் மீரா காத்திருந்தாள்.

வீட்டுக்குள் வழிதவறி நுழைந்து விட்ட வண்டு ஜன்னலைக் கண்டுபிடிக்கும் வரை இங்கும் அங்கும் 'வீர், வீர்' என்று பறப்பது போல் எண்ணங்கள் நிலையில்லாமல் அல்லாடிக் கொண்டிருந்தன.

''மீரா... இன்னும் தூங்கலையா?'' என்று சற்று ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டே வசந்தன் வந்து சேர்ந்தான்.

மீரா கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள்.

''வசந்த். உன்கிட்டப் பேசணும்னுதான் காத்திட்டிருக்கேன்.''

வசந்தன் கட்டிலில் சப்பணமிட்டு அமர்ந்தான். ''சொல்லு'' என்றான்.

''வசந்த், சுந்தரிக்கு இன்னும் எத்தனை நாள் சிகிச்சை பாக்கி இருக்கு?''

''ஆறு நாளோ... ஏழு நாளோ... ஏன் மீரா?''

''இங்க இருக்கற வரைக்கும் கண்ணனுக்கு நிம்மதியில்ல வசந்த். தனக்கு நோயில்லைன்னு தெரிஞ்சதுலேர்ந்து ரொம்ப அல்லாடிட்டிருக்கார்.''



வசந்தன் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

''இன்னிக்கு சந்திரிகாகிட்ட என்ன சொன்னார் தெரியுமா? கடவுள் வரம் கொடுத்தா தன்னோட வாழ்க்கையை மறுபடியும் ஹைதராபாத்துக்குக் கிளம்புன தினத்துலேர்ந்து வாழறதுக்கு ஆசையா இருக்குன்னு சொன்னார்.'' மீராவின் குரல் நெகிழ்ந்திருந்தது. அவள் சொல்லி முடிக்கட்டும் என்பது போல் வசந்தன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நானும் கண்ணனும் ஒண்ணாயிருந்தோம். அப்புறம் பிரிஞ்சிட்டோம். இப்ப எனக்கு ஒரு வாழ்க்கை அமைஞ்சு போச்சு. ஆனா, கண்ணன் எந்தத் துணையும் இல்லாம தனியா நிக்கற மாதிரி ஆயிடுச்சு. அந்த ஏக்கம்தான் அவரை அப்படிச் சொல்ல வெச்சிருக்கு, வசந்த். கண்ணனை அப்படியே நாம விட்டுரக்கூடாது.''

வசந்தன் மீராவின் பக்கம் நன்றாகத் திரும்பி உட்கார்ந்தான். தலையணையை மடியில் இருத்திக் கொண்டான்.

''என்ன செய்யணுங்கறே மீரா?''

''கண்ணனோட வாழ்க்கை அரைகுறையா நின்னு போயிடக்கூடாது. அதுக்கு என்ன செய்யணுமோ... அதை நாம செய்யணும் வசந்த்.''

வசந்தன் முகத்தில் மெள்ள ஒரு தெளிவு வந்தது.

''செய்வோம், மீரா'' என்றான் மலர்ச்சியோடு.

ஃ ஃ ஃ

நாராயண் இயற்கை வைத்தியசாலை.

கண்ணன் சற்றுத் தள்ளி நின்று வேடிக்கை பார்த்தான்

சுந்தரியிடம் ஒரு பெரிய பந்து கொடுக்கப்பட்டிருந்தது. அதை ஒவ்வொரு காலாலும், உருட்டச் சொன்னார்கள். முன்புறமாக, பின்புறமாக, பக்கவாட்டில்... அப்புறம் அதையே உதைக்கச் சொன்னார்கள்.

சுந்தரியால் எல்லாம் முடிந்தது. முன்பு எப்போதும் தென்படும் வலியின் வேதனை இப்போது அவள் முகத்தில் இல்லை.

''நல்லா குணம் ஆகியிருக்கு'' என்றார் வைத்தியர். ''இன்னும் நாலு நாள்ல அழைச்சிட்டுப் போயிடலாம். இந்தப் பயிற்சியையெல்லாம் வீட்ல செய்திட்டிருந்தாலே போதும்.''

கண்ணன் நன்றியுடன் கைக்கூப்பி விட்டு வெளியே வந்தான். சுந்தரி அவனைத் தொடர்ந்தாள். மாலை நேரத்துச் சூரியவெளிச்சத்தில் அவள் முகத்து வியர்வை மின்னியது.

''கண்ணா, எனக்கு ஒரு பக்கம் சந்தோஷமா இருக்கு... மற்றொரு பக்கம் வருத்தமாயிருக்கு.''

''வருத்தம் எதுக்கு?'' என்றான் கண்ணன்.

''குணமாயிட்டு வருதேனு சந்தோஷம் ஆனா. முழுசா குணமானதும் ஊருக்குத் திரும்பிடுவோம், இப்ப எனக்காகன்னு நீ நேரம் ஒதுக்கிட்டுத் தினம் பார்க்க வர்றியே. இந்தச் சந்தோஷம் போயிடும். ஆபீஸ் வேலைனு செக்கு மாடு மாதிரி சுத்திட்டு வீட்டுக்கு வரும் போது, என்னைச் சரியா நிமிர்ந்து கூடப் பார்க்கறதில்லை நீ..''

அவள் குரலில் இருந்த ஏக்கம் கண்ணனை நிமிர்ந்து பார்க்க வைத்தது.

''அப்படியெல்லாம் இல்லை சுந்தரி. எப்பவும் நான் உன்கிட்ட ஒரே மாதிரிதான் இருக்கேன்'' என்றான்.



பின் சற்றுத் தயங்கி விட்டு, ''நாளைக்கு மட்டும் என்னால உன்னைப் பார்க்க வரமுடியாது சுந்தரி...'' என்றான்.

''வேற ஏதாவது வேலை இருக்கா, கண்ணா...?''

''பக்கத்துல ஆனைத்திட்டுனு ஒரு மலை இருக்காம். அங்க, மேல குகைல அறுநூறு வருஷத்துக்கு முன்னால வரைஞ்ச ஓவியம்லாம் இருக்காம். பார்க்கப் போலாம்னு வசந்தன் சொன்னான். எப்படியும் உன்னால அங்கெல்லாம் ஏறமுடியாது. அதான்...''

போயிட்டு வா கண்ணா... உனக்கும் ஒரு மாறுதல் வேணும்...''

கண்ணன் அவளிடம் விடைபெற்று மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தான்.

ஃ ஃ ஃ

'ஆனைத்திட்டு' என மலையாளத்தில் அறிவித்த சாலையோர வழிகாட்டிப் பலகை பின் வாங்கியது.

சாரலில் நனைந்த காற்று காருக்குள் சில்லென்று புரண்டது.

வசந்தன் காரை ஒரு பெரிய மரத்தடியில் கொண்டு நிறுத்தினான். இறங்கினான்.

கண்ணனின் மடியிலிருந்து கௌதம் துள்ளிக் குதித்து இறங்கினான். பின் கதவு திறந்து மீரா இறங்கினாள்.

வசந்தனின் அப்பா கடைசி நிமிடத்தில் கோயில் பூஜையில் கலந்துகொள்ள வேண்டும் என்று வராமல் இருந்துவிட்டார்.

இன்னொரு மலையாளப் பலகை அம்புக்குறியிட்டு, ஒரு ஏற்றமான பாதையைச் சுட்டிக்காட்டியது.

‘‘இந்த ஒத்தையடிப் பாதையில்தான் போகணும்...’’ என்றான் வசந்தன்.

நான்கடி ஏறியதும் கௌதம் இரண்டு கைகளையும் உயரத் தூக்கி, வசந்தனை முட்டி நின்றான்.

கண்ணன் அவனைத் தூக்கிக்கொள்ள முன்வந்தபோது, ‘‘பரவாயில்லை கண்ணா...’’ என்று வசந்தனே தூக்கிக் கொண்டான்.

பாதை கற்களால் கெட்டிக்கப்பட்டிருந்தது. இருபுறமும் இடுப்புயரச் செடிகள் நெருக்கி நின்றன. அவற்றுக்குப் பின்னால் பாதையற்ற திட்டுகளில் மரங்களும் கொடிகளும் பின்னி அடர்ந்திருந்தன.

தண்ணீர் புரண்டு ஓடும் 'சலசல' பாதை நெடுகத் தொடர்ந்தது. அணில்களோ, கிரிகளோ திடுதிப் என்று குறுக்கிட்டு ஓடின.

கண்ணனும் வசந்தனும் ஏதோ உரையாடிக் கொண்டே முன்னால் நடக்க, சுற்றிச் சூழ்ந்திருந்த இயற்கையை ரசித்தபடி மீரா நிதானமாகத் தொடர்ந்தாள்.

சூரியக் கதிர்களின் மாயாஜாலத்தில் அவளைச் சுற்றி இயற்கை தீட்டிய ஓவியங்கள் உயிர் பெற்றது போலிருந்தன.

மீரா நின்றாள். பஞ்சபூதங்களையும் உள்ளடக்கிய இயற்கையைப் பிரமிப்போடு பார்த்தாள். கண்களில் நீர் கசியப் பார்த்தாள். பரவசத்தில் இதயம் நடனமாடுவதை உணர்ந்தாள். உடலெங்கும் ரத்தம் துள்ளித் துள்ளிப் பாய்ந்ததை அனுபவித்தாள்.

இந்த பச்சைப்புற்களோடு நான் கலந்துவிட முடியாதா...?

பின்னிப் படர்ந்து வண்ணமலர் சுமக்கும் கொடிகளாக மாறிவிட முடியாதா...?



பறவைகளின் கூடுகளை மென்மையாகத் தாலாட்டும் மரக்கிளைகளோடு ஒன்றிவிட இயலாதா...?

நனைந்த காற்றைச் சுவாசித்து, ஆங்காங்கே மூர்ச்சையற்றுக் கிடக்கும் காட்டுப்பூக்களாகப் பிறப்பெடுக்க முடியாதா...?

இவை கண்ணன் என்றோ, வசந்தன் என்றோ பகுத்துப் பார்ப்பதில்லை.

நேற்று என்றோ, இன்று என்றோ நினைத்துப் பார்ப்பதில்லை.

பசியும் தாகமும் பற்றும் வலியும் இல்லாத இந்த வாழ்க்கை அவளுக்குக் கிடைக்காதா...?

மனிதரிடையில் வாழ்ந்து மனதையும் மனதையும் மோதவிட்டு மயங்கிக் கிடக்கத்தான் வேண்டுமா...?

ஃ ஃ ஃ

‘‘மீரா...’’—வசந்தனின் எதிரொலிக் குரல் அவளைக் கலைத்தது.

அவர்கள் வெகுமுன்னே போய், உயரத்திலிருந்து அவளைப் பார்த்து நின்றார்கள்.

‘‘வா...’’ என்றான் வசந்தன் கையசைத்து.

மீராவினுள் திடீரென்று ஒரு உற்சாகம் வெடித்தது.

புடவையைச் சற்று உயர்த்திக் கொண்டு, கன்றுக்குட்டி போல் அந்தப் பாதையில் ஓடி ஏறலானாள். மீரா ஓடிவரும் வேகம் பார்த்து, கௌதம் இரண்டு கைகளையும் கொட்டிச் சிரித்தான்.

வசந்தனையும் கண்ணனையும் அடைந்தபோது, மீராவின் முகத்தில் சந்தோஷம் மலர்ந்திருந்தது. மூச்சிரைப்பில்

ஒரு சிரிப்பு கலந்திருந்தது. அவனுடைய உற்சாகம், சிரிப்பு இரண்டுமே கண்ணனை ஆச்சரியப்பட வைத்தன. வசந்தன் அவனைச் சற்று ஆழமாகப் பார்த்தான்.

சற்றுத் தொலைவில் பச்சைநிறம் மங்கி மறைந்து கறுப்புத்திட்டுகளாக, யானைகள் ஒன்றின்மீது ஒன்று மோதி நிற்பதுபோல் பாறைகள் அடர்ந்திருந்தன. அங்கே தான் ஓவியக் குகைகள் இருப்பதாக வசந்தன் சொன்னான். ''சேர்ந்தே போகலாம்...'' என்றான்.

கௌதமின் கையை வசந்தன், வசந்தனின் கையை மீரா என்று கோத்துக்கொண்டார்கள். கண்ணனின் தயக்கம் பார்த்து மீரா, ''ம்...ம்...'' என்று தன் மற்ற கையை நீட்டினாள்.

கண்ணனின் ரோமக்கால்கள் குத்திட்டன குளிர் காற்றினாலா, மீராவின் அழைப்பினாலா...?

கண்ணன் தன்னை இயல்பாக்கிக் கொண்டு, மெள்ள மீராவின் கையுடன் தன் கையைக் கோத்துக்கொண்டான்.

அவர்கள் ஒரு சங்கிலிக்கோப்பாக நடந்தார்கள்.

ஃ ஃ ஃ

கண்ணனின் ரத்தம் துள்ளிக் கொண்டிருந்தது. மீரா வின் விரல்களுடன் கலந்திருந்த அவனுடைய விரல்கள் வழியே அவளை முற்றிலுமாகத் தனக்குள் இழுத்துக் கொள்ள விழைபவன் போல் அவன் இதயம் வேகம் பிடித்தது.

முதல் குகையின் வாசலில் சற்று ஈரம் சேர்ந்திருந்தது. மீரா அதைத் தாண்டும்போது, அவன் கையை இறுக்கிப் பிடித்தாள். கண்ணன் கண்களை மூடிக்கொண்டதில் பாறையில் இடித்துக்கொண்டான்.



குகைச்சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓவியம், பல நூற்றாண்டுகளின் இரக்கமற்ற அலைக்கழிப்பில் பெரும் பாலான இடங்களில் சிதைந்திருந்தது.

குகைக்குள் வெளிச்சம் குறைவாக இருந்தது.

இரண்டாவது குகை சற்றுச் சரிந்து உள்வாங்கி யிருந்தது. உட்கார்ந்து பாறையைப் பிடித்துக் கொண்டு இறங்க வேண்டியிருந்தது. வசந்தன், மீராவின் கையை விடுவித்தான். கௌதமைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மெள்ள இறங்கினான்.

கண்ணனைத் திரும்பிப் பார்த்தாள் மீரா.

''அடுத்தது நீங்க எறங்கறீங்களா...?''

''ம்...''

''நீங்க எறங்கறீங்களா, நான் எறங்கட்டுமா...?''—மீரா மெல்லிய குரலில் அழுத்தமாகக் கேட்டாள்.

கண்ணன் திகைத்து. ''நீ எறங்கு...'' என்றான்.

''என் கையை நீங்க விட்டாதானே நான் எறங்க முடியும்...?''—மீரா சிரித்தபடி கூறினாள்.

கண்ணன் மெதுவாகத் தன் விரல்களை ஒவ்வொன்றாக மலர்த்தி, அவள் கையை விடுவித்தான்.

மீரா இறங்கினாள்.

வசந்தனும் கௌதமும் அடுத்த பாறைப் பிளவுக்குள் இறங்கி மறைந்திருந்தார்கள்.

கண்ணனுக்காக நின்றாள் மீரா. கண்ணன் இறங்கி னான்.

காலை வைத்த இடம், கசிந்திருந்த பாறையின் ஈர மான பகுதி. அப்படியே வழுக்கி இழுத்தது.

கண்ணன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள மீராவைச் சட்டென்று பற்றியதில் அவள் தடுமாறி, அவன்மீது சாய்ந்தாள். இருவரும் சரிந்துவிடாமல் இருக்க, ஒருவரையொருவர் அணைத்துப் பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது!

# 29

மீராவின் கைகள் கண்ணனைப் பற்றியதும் அவன் மூன் உலகமே ஆடியது. அது பகலா, இரவா என்று மறந்து போனது. கடல் அலைபோல் ஒரு சக்தி அவனைப் பாய்ந்து புரட்டியது. வானம் அவன் ஒருவன்மீது மட்டும் மழை பொழிந்தது போல் ஒரு சிலிர்ப்பு உண்டாயிற்று.

ஒரு நிலைக்கு வந்ததும் மீராதான் சட்டென்று கண்ணனிடமிருந்து விலகினாள்.

கண்ணனின் விரல்களும் உதடுகளும் இன்னமும் நடுங்கிக்கொண்டிருந்தன. பார்வை மீராவைப் பார்க்க இயலாமல் தாழ்ந்தது.

''ரொம்ப ஸாரி மீரா...''—மன்னிப்புக் கோரும் குரல் மெலிந்து வந்தது.

மீரா அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள். ''எதுக்கு ஸாரி...? என்னைத் தொட்டதுக்கா?''

கண்ணனின் மனதைப் பிடித்துவிட்டவள் போல் அவள் அப்படிக் கேட்டதில் அவன் திகைத்துப் பார்த்தான்.

''நாம இப்ப ஒருத்தர் கையை ஒருத்தர் பிடிச்சுக்கிட்டுக் குகைக்குள்ள நுழையலையா என்ன..? அதுக்கெல்லாம் ஸாரியா சொன்னீங்க?''





மீரா, வசந்தன் இறங்கிய இடத்தில் போய் நின்றாள்.

கண்ணன் தன் இடத்திலிருந்து நகராமல் நின்றான்.

''என்னைப் பிடிச்சுக்கத் தைரியமில்லைன்னா, இந்தக் கல்லைக் கவனமா பிடிச்சுட்டு இறங்குங்க.''

மீரா சொல்லிவிட்டு, அந்தச் சரிவில் முதலில் இறங்கினாள்.

கண்ணன் உயிர் பெற்றவன் போல் அவளைப் பின் தொடர்ந்தான்.

''அங்கிள், நாங்க இங்க இருக்கோம்'' என்று கௌதமின் குரல் உற்சாகமாகப் பாறைகளில் எதிரொலித்து அழைத்தது.

ஃ ஃ ஃ

இரவு...

போர்வையைச் சுற்றிக் கொண்டு கண்ணன் அவுட் ஹவுஸ் கட்டிலில் ஒடுங்கி உட்கார்ந்திருந்தான்.

ஆனைத்திட்டு பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியதில் இருந்து அவனுடைய குருத்தெலும்புகள் வரை சூடாகியிருந்தன. கண்களுக்குள் வெப்பம் தகித்தது.

சரிந்துவிட்ட கல்மண்டபத்தின் இடிபாடுகளில் ஏதோ ஒரு மூலையில் பசுமையாக ஒரு செடி பார்வையில் இடறியதும் அதை மீண்டும் மீண்டும் பார்க்க விழைவது போல் அவன் மனம் அன்றைய நிகழ்வுகளையே அசை போட்டுக் கொண்டிருந்தது.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்த வசந்தன், கண்ணனைப் பார்த்ததும் திகைத்தான்.

''என்னடா கண்ணா... குளுருதா?''

கண்ணன் போர்வையை விலக்கினான். "இல்ல... இல்ல... சும்மா தான்."

வசந்தன் அருகில் வந்து கண்ணனின் நெற்றியை, கழுத்தைத் தொட்டுப் பார்த்தான்.

"நார்மலா தான் தெரியுது. அலைச்சல்ல களைப்பா இருக்கா?"

"ம்..." என்றான் கண்ணன், உயிரற்ற புன்னகை காட்டி.

"நேத்துவிட்ட எடத்துலேர்ந்து ஆடலாம்னு செஸ் போர்டை எடுத்துட்டு வந்தேன் கண்ணா."

"வேணாம் வசந்த். இன்னிக்காவது நேரத்தோட போ. மீரா உனக்காகக் காத்திட்டிருக்கப் போறா."

கண்ணன் சொன்ன வாக்கியத்தில் பொதிந்திருந்த பொருள் வசந்தனுக்குத் தெளிவாகப் புரிந்தது. கண்ணனை ஒருமுறை ஆழமாகப் பார்த்துவிட்டு, அவன் அருகில் அமர்ந்தான் வசந்தன்.

"நீ நெனைக்கற மாதிரில்லாம் எதுவும் இல்ல கண்ணா" என்று புன்சிரிப்போடு கூறினான். "நானும் மீராவும் இன்னும் ஃப்ரெண்ட்ஸா மட்டும்தான் பழகிட்டு இருக்கோம்."

"வசந்த்!"— கண்ணனின் குரல் அதிர்ச்சியில் சற்று நடுங்கிது. "என்னடா இது முட்டாள்தனம். மீரா, இப்ப உன்னோட மனைவிடா!"

"உறவுபூர்வமா பார்த்தா மனைவி. ஆனா, உணர்வு பூர்வமா தோழி மட்டும்தான்டா."

வசந்தன், கண்ணனின் கையை அழுத்திக் கொடுத்து விட்டுச் சொன்னான்.



"மீராவை வேறவிதமா பார்க்க எனக்கு மனசு வரல்லடா கண்ணா. அவ உன்கிட்டேர்ந்து பிரிஞ்சிருக்கலாம். ஆனா, மீராவை உன்னைச் சேர்ந்தவளாதான் என்னால நெனைக்க முடியுது, கண்ணா."

"உளறாதே வசந்த்..." — கண்ணனின் குரல் நடுங்கியது.

"சரி, எதுவும் சொல்லலை. களைப்பா இருக்குன்னியே நிம்மதியா தூங்கு. நாளைக்குப் பார்க்கலாம்."

வசந்தன் செஸ்போர்டை எடுத்துக் கொண்டான். "குட்நைட்" என்றான்.

வசந்தன் போனதும் கண்ணன் போர்வையை இழுத்து இன்னும் நன்றாகப் போர்த்திக் கொண்டான். மண்டைக்குள் தகதகவென்று நெருப்புக் குழம்பு கொதித்தது.

ஃ ஃ ஃ

கம்ப்யூட்டர் திரையைப் பார்த்துக்கொண்டே இருந்தால் ஏற்பட்ட சலிப்பிலிருந்து மீள வசந்தன் தலையை உயர்த்தினான். ஆச்சரியப்பட்டான், வங்கியின் கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு அப்பா உள்ளே நுழைந்தார், வழக்கமான உற்சாகம் அவர் முகத்தில் இல்லை. வசந்தன் எழுந்தான்.

"என்னப்பா?" என்றான்.

"நான் உன்கூடத் தனியாப் பேசணும் வசந்தா. வீட்டுல வேண்டாம். சாயந்திரம் என் கூடக் கோயிலுக்கு வரமுடியுமா?"

"வரேம்ப்பா" என்றான் ஒற்றை வார்த்தையாக.

ஃ ஃ ஃ

கோயில் ஓடைக்கரையில் அமைந்திருந்தது. உயரமற்ற சிறுகோபுரத்தில் புறாக்கள் படபடத்தன. மழையை எதிர்பார்த்து அமைக்கப்பட்டது போல் நான்குபுறமும் கூரை சரிந்து இறங்கியது. மிதிவாசலில் முழங்கால் உயரத்துக்கு பலகைத் தடுப்புப் போல் ஓர் அமைப்பு. காட்டு மிருகங்கள் உள்ளே வராமல் தடுக்க, முன்னொரு காலத்தில் அப்படி ஒரு அமைப்பு அவசியமாயிருந்தது என்று வசந்தனின் அப்பா சொன்னார்

சுற்றிலும் எண்ணெய் விளக்குகள் சுடர் விட்டு எரிந்தன.

வசந்தனும் சட்டையின்றி மேல் வேஷ்டி போர்த்தியிருந்தான்.

உள்ளே இருந்த கிருஷ்ணர், வேட்டியும் பூவும் மறைத்தது போக...மிச்ச இடமெல்லாம் சந்தனமாகத்'தகதகத்துக் கொண்டிருந்தார்.

வசந்தனின் அப்பா கைகூப்பிக் கண்மூடி நின்றார். வசந்தனுக்குக் கடவுளிடம் புத்தி செல்லவில்லை. அப்பா என்ன சொல்லப் போகிறார்...?

சந்நிதி சுற்றி வந்தார்கள். பின்னால், பெரிய சந்தனக் கல்லில் அரைத்த சந்தனம் திரட்டுப் பாலைப் போல ஒரு ஓரமாகத் திரண்டு நின்றது.

சந்நிதியின் பின்புறம் இருந்த தோட்டம், இருட்டுக் காற்றில் ரகசியமாகச் சலசலத்தது.

அங்கிருந்த மண்திட்டில் வசந்தனின் அப்பா அமர்ந்தார். தன் அருகே தொட்டுக் காட்டினார். வசந்தன் மேல் வேஷ்டியை இழுத்துக் கொண்டு அமர்ந்தான்.

''வசந்தா...'' அவர் குரல் நிதானமாக இருந்தது. ''நமக்குள்ள ஒளிவு மறைவே இல்லைன்னு நான் பெருமைப் பட்டுட்டிருந்தேன். ஆனா...''



ஆகாயத்தில் மேகங்கள் கனத்துத் தொங்கின. இருட்டில் சில மின்மினிகள் ஒளிர்ந்து பறந்தன.

''ஸாரிப்பா...'' என்றான் வசந்தன், தலைகுனிந்து.

''என்னைச் சுத்தி நடக்கிற நாடகம் எனக்குப் புரியாமல் இல்லை ஆனா, நீ செய்யறது முட்டாள்தனம்னு எனக்குத் தோணுது வசந்தா...''?

வசந்தன் பதில் இன்றி, அவர் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தான்.

''மீராவைக் கல்யாணம் பண்ணிக்க, நீ மனப்பூர்வமா தானே சம்பதிச்சே...? அப்படி நெனச்சுத்தான் கண்ணனோட அத்தையும் நானும் சந்தோஷப்பட்டுக்கிட்டோம். இஷ்டமில்லேன்னா, அன்னிக்கே நீ சொல்லியிருக்கலாமே.''

''அப்படில்லாம் இல்லப்பா... மீராவை மனப்பூர்வமா தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆனா, அவளை என்னால மனைவியா பார்க்க முடியலை...''

''உனக்கும் கண்ணனுக்கும் அப்புறம் என்ன வசந்தா வித்தியாசம்...? அவன் வெளிப்படையா பேசி, மீராவைப் பிரிச்சு வெச்சான். நீ மேலை பூசி மெழுகிப் பேசிப் பிரிச்சு வெச்சிருக்கே...''

வசந்தன் கையூன்றிய இடத்தில் சுரீர் என்று முள் தைத்தது. எடுத்து, நடமாட்டமில்லாத இடத்தில் வீசினான்.

''மீரா, கண்ணனை மொதமொதல்ல ஆசைப்பட்ட தினத்திலேர்ந்து அவ கூடவே இருக்கேன்பா... அவ கண்ணனைச் சேர்ந்தவனு அன்னிக்கு மனசுல விழுந்த விதை, இன்னி வரைக்கும் மாறலைப்பா...''

''அப்ப, நிம்மதியா நீ வேற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிட்டிருக்கலாமே...? உன் வாழ்க்கையும் அரை குறையா நின்னிருக்காது. மீரா வாழ்க்கையிலயும் வேற அர்த்தம் கெடைச்சிருக்கும்...''

"அப்ப, மீரா இருந்த நெலைமையில கௌதமுக்கு ஒரு அப்பா தேவைனு நெனைச்சேனே தவிர, மீராவுக்கு ஒரு கணவன் தேவைனு நெனைச்சு அந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கலை. உடம்புலதான் சந்தோஷம் இருக்குனு நான் நெனைக்கலைப்பா..."

"இதை நீ அழுத்தி, அழுத்தி மீராகிட்ட சொல்லி இருப்பே... இதைத் தாண்டி யோசிச்சா தப்போனு அவளும் உன்கூடச் சேர்ந்து போய் ஆட்டம் ஆடிட்டிருக்கா... உன்னைச் சந்தோஷப்படுத்தறதுக்காகத் தன்னை வருத்திக் கிட்டிருக்கா..."

"இப்ப எல்லாம் ஒரு நல்ல முடிவுக்கு வரப் போவுதுப்பா..." என்றான் வசந்தன் அமைதியாக.

காற்றில் புடைத்துக் கொண்ட மேல் வேஷ்டியை அழுத்திப் பிடித்தபடி அவர் வசந்தனைக் கூர்மையாகப் பார்த்தார். அவர் நெற்றியில் தீற்றிக் கொண்டிருந்த சந்தனக்கீற்றும் சேர்ந்து பார்ப்பதுபோல் தோன்றியது.

"கண்ணன் தனக்கு நோய் இருக்குனு நெனைச்சு மீராவை ஒதுக்கி வெச்சான். ஆனா, அது புரியாம அவன் மேல நான் கோபப்பட்டேன். மீராகிட்டேர்ந்து அவன் ஒதுங்கினதை, ஒதுக்கி வெச்சதா நெனைச்சு ஆவேசப் பட்டேன். அவன் எடுத்து எறிஞ்ச மீராவைப் பத்திரமா பார்த்துக்கறது என் பொறுப்புனு நெனைச்சேன். ஒரு கட்டத்துல, அவ கழுத்துல தாலியும் கட்டினேன். ஆனா, இப்ப கண்ணன் திரும்பி வந்துட்டான். அவன் பயந்தது போல, அவனுக்கு எந்த நோயும் இல்லை. மீரா மேல அவன் இன்னும் உயிரையே வெச்சிருக்கான். அவளை அவன் கிட்ட திருப்பித் தர்றதுதானேப்பா நியாயம்...?"

சொல்லிவிட்டு அப்பாவைப் பார்த்தான் வசந்தன்.

அவர் கண்களில் இருந்த சாந்தம் கரைந்து, அங்கு கனல் தகித்தது.



"உன் மனசுல என்ன நெனைச்சிட்டிருக்கே வசந்தா...? மீரா என்ன கல்லா, மண்ணா...? இந்தா நீ வெச்சுக்கோ, வேணாம் நீயே வெச்சுக்கோ'னு நீங்க ரெண்டு பேரும் மாத்தி மாத்தி விளையாடறதுக்கு அவ என்ன மரப்பாச்சிப் பொம்மையா...?"

வசந்தன் திகைத்துப் போய் அப்பாவைப் பார்த்தான்.

"மீராவுக்கும் உடம்புல ரத்தம் ஓடுது. இதயம்னு ஒண்ணு இருக்கு. அவ கல்யாணத்துக்கும் நான்தான் கார் ஓட்டியிருக்கேன். விவாகரத்து ஆன அன்னிக்கும் நான்தான் கார் ஓட்டியிருக்கேன். அவ பட்ட அத்தனை வேதனையை யும் நானும் கூட இருந்து பார்த்திருக்கேன். என் மருமகளை நீங்க ரெண்டு பேரும் பந்தாடறதை நான் வேடிக்கை பார்த்திட்டிருக்கத் தயாராயில்லை..."

வசந்தனின் அப்பா அவனிடம் இவ்வளவு சீற்றமாகப் பேசியதே இல்லை. பிரபஞ்சமே தன் அசைவைச் சில கணங்கள் நிறுத்தி விட்டாற் போலிருந்தது. அவர் கையை மென்மையாகப் பற்றினான்.

"அப்பா, நீங்க அவசரப்படறீங்கப்பா. 'கண்ணன் தன் தப்பை நெனைச்சு வருந்தப்பட்டுட்டான். அவன் தண்டனை அனுபவிச்சது போதும். அவனுக்குப் பழைய வாழ்க்கை கிடைக்கணும்'னு மீராவே என்கிட்டே சொன்னாப்பா..."

"கண்ணன்கிட்ட என்னைக் கொடுனு அதுக்கு அர்த்தமா...?" அவர் கோபம் இன்னும் தணியவில்லை. "உன் மனசுல இப்படி ஒரு பைத்தியக்காரத்தனமான எண்ணம் இருக்குனு மீராகிட்ட சொல்லிட்டியா...?"

"மீரா மனசுலயும் அந்தச் சலனம் இருக்குப்பா... என்னைக் காயப்படுத்திடக்கூடாதேன்னு அவ பயந்துட்டு இருக்கா. அந்த பயம் தேவையில்லைனு அவகிட்ட நான் எடுத்துச் சொல்லப் போறேன்..."

சந்நிதியில் யாரோ அடித்த மணியின் நாதம் காற்றில் சிங்கரித்தது.

''வாழ்க்கை மியூஸிகல் சேர் விளையாட்டு இல்ல வசந்தா...''

வசந்தன் மௌனமாக இருந்தான்.

''மீரா உனக்கு இல்லைனு ஆயிட்டா, நீ வேற கல்யாணம் பண்ணிப்பியா வசந்தா...?''

''அதை அந்தச் சந்தர்ப்பம் வரும் போது பார்த்துக்கலாம்ப்பா ... கண்ணனா, வசந்தனானு மீரா மொதல்ல முடிவு பண்ணட்டும்...'' என்றான் வசந்தன்.

அவர்கள் எழுந்தார்கள்.

ஃ ஃ ஃ

கதவைச் சாத்தி விட்டு வசந்தன் கட்டிலில் அமர்ந்தான்.

ஹேர் க்ளிப்புகளை நீக்கிக் கொண்டு இருந்த மீரா திரும்பிப் பார்த்தாள்.

''கண்ணன் இன்னிக்குச் சீக்கிரம் தூங்கிட்டாரா ..? அதுக்குள்ள வந்துட்டே...?''

வசந்தன் அதற்குப் பதில் சொல்லாமல், ''நீ சொன்னது கரெக்ட்தான் மீரா. கண்ணன் இப்ப அல்லாடிட்டு இருக்கான்...'' என்றான். ''நம்மளையெல்லாம் பிரிஞ்சு மெட்ராஸ் போகணுமானு தவிச்சிட்டிருக்கான்...''

''ஆமா ... கண்ணனும் சுந்தரியும் புறப்பட்டுப் போயிட்டா, இங்கேயும் வெறிச்சுனுதான் இருக்கும். கௌதமுக்கும் கொஞ்ச நாளைக்கு ஏமாத்தமா இருக்கும்...''

''அவன் டைரியையெல்லாம் படிச்சியா மீரா...?''

மீரா சட்டென்று பார்வையை விலக்கிக் கொண்டாள்.



''பிரியறதும் பிரிஞ்சப்புறம் ஏங்கறதும் சில பேருக்குப் பழக்கமாப் போயிடுச்சு வசந்த்...''

''ஏய்... கண்ணன் என்ன மூணாம் மனுஷனா...? அவன் உனக்காக ஏங்கற மாதிரி, நீ அவனுக்காக ஏங்கினதே இல்லையா...?''

''அதெல்லாம் முடிஞ்சுபோன கதை வசந்த். என்னிக்கு அவர் கட்டின தாலியைக் கோயில் உண்டியல்ல கழட்டிப் போட்டேனோ, அதுக்கப்புறம் கண்ணனை நெனைச்சி நான் ஏக்கப்பட்ட இல்லை...''

''அவனைப் பத்தித் தெரியாம இருந்தப்ப நீ இப்படிச் சொன்னா அர்த்தமிருக்கலாம் மீரா, இப்ப...?''

மீரா கூந்தலைப் பிரித்து உதறி முடித்துக் கொண்டாள்.

''இப்ப என் கழுத்துல வசந்தன் கட்டின தாலி இருக்கு. கண்ணனை ஏற்கெனவே நம்ம குடும்பத்துக்குப் பழக்கமான ஒருத்தரா நெனைச்சுத்தான் பழகறேன் வசந்த்...''

''இல்ல மீரா ...இதை நான் வேறவிதமா பார்க்கறேன். இந்தத் தாலி கட்டறது, அதைக் கழட்டறது எல்லாமே வெறும் அடையாளம்தான். வாழ்க்கைங்கறது அதையெல்லாம் தாண்டி மனசு சம்பந்தப்பட்டது. அந்த மனசுல பழைய நெனைப்பெல்லாம் உயிரோட இருக்கறப்ப, இந்த வெளி அடையாளத்தை மாத்தறதால அதெல்லாம் அழிஞ்சு போயிடறதில்லை...''

''என் வசந்த்...கண்ணன் உன்கிட்ட ஏதாவது சொன்னாரா...?''

''வாயைத் திறந்து எதுவும் சொல்ல வேண்டாம் மீரா.. எனக்கு கண்ணனையும் தெரியும். உன்னையும் தெரியும். சட்டப் புத்தகத்தை வெச்சுக்கிட்டு கோர்ட்ல 'இனிமே நீயும் இவனும் புருஷன், மனைவி இல்லை'னு ஆளைப் பிரிச்சு வைக்க முடியுமே தவிர, சேர்ந்து வாழ்ந்த ரெண்டு

மனசைப் பிரிச்சு வைக்க முடியுமா...? வாழ்ந்த வாழ்க்கையை மறக்கடிக்க முடியுமா...?''

அவனுடைய வார்த்தைகள் மீராவின் மனதில் நூங்கும் தணல் கட்டிகளைப் புரட்டின.

''சந்தோஷத்தை மறக்க முடியாதுன்னா, வலியையும் மறக்க முடியாது வசந்த்...''

மீரா சட்டென்று அவன் மடியில் தலைவைத்து ஒருக்களித்துப் படுத்தாள். கண்ணீர்த்துளியொன்று அவள் இமையோரத்தில் தனி நட்சத்திரம் போல் மின்னியது. அவள் தலையை வசந்தன் பரிவுடன் வருடிக் கொடுத்தான்.

''கண்ணன் உன்னை வெறுத்து ஒதுக்கினதா நீ நெனைச்சதால, அவனைப் பத்தின நெனைப்பு அப்படி இருந்திருக்கும் மீரா... ஆனா, உண்மை என்னன்னு யோசி. கண்ணன் உன்னை வெறுக்கலை. ஆனா, ஒதுக்கினான். எதுக்காக...? உன்மேல அவன் வெச்சிருந்த அளவு கடந்த பிரியத்துனால... உன் மேல அவனுக்கு இருந்த அசைக்க முடியாத காதலால...''

மீரா கண்களை அழுந்த மூடிக் கொண்டாள்.

''பிரிஞ்சு இருந்ததால, அந்தப் பிரியம் நூறு மடங்கு ஜாஸ்திதான் ஆகியிருக்கே தவிர, கொறைஞ்சு போகலை மீரா...''

''ஆனா, முடிஞ்சுபோன நாளையெல்லாம் திரும்பக் கொண்டுவர முடியாது வசந்த்...''

வசந்தன் அவள் முகத்தை இரு கைகளால் புரட்டினான். கண்களுக்குள் பார்த்தான். ''முடியும் மீரா ... நீ சரினு ஒரு வார்த்தை சொல்லு. உன்கிட்டேர்ந்து தட்டிப் பறிச்ச சந்தோஷத்தையெல்லாம் திருப்பித் தர கண்ணன் காத்திட்டிருக்கான்...''

மீரா இமைகள் படபடக்க வசந்தனைப் பார்த்தாள்.



''கண்ணனோட பேசறியா மீரா...?''—வசந்தன் துடிப்புடன் கேட்டான்.

மீரா எழுந்து அமர்ந்தாள். சற்று நேரம் கண்மூடி யோசனை செய்தாள்.

இமைகளைத் திறந்தாள்.

''சரி வசந்த்...'' என்றாள்.

## 30

''நானும் சில விஷயங்களைக் கண்ணன்கிட்ட நேர்ல சொல்ல முடியாம தத்தளிச்சிட்டிருக்கேன் வசந்த். நாம மூணு பேரும் உக்கார்ந்து பேசிடறது நல்லதுதான்.''

வசந்தன் திகைத்தான். மீராவை நிமிர்ந்து பார்த்தான்.

''மூணு பேரா? உனக்கும் கண்ணனுக்கும் நடுவுல நான் எதுக்கு மீரா?''

''நீ நடுவுலயும் நிக்க வேண்டாம்... ஓரமாவும் நிக்க வேண்டாம். என்கூட இரு போதும். நீ இருந்தாத்தான் என்னால தைரியமா சில விஷயங்களைச் சொல்ல முடியும், நீ வரல்லைன்னா நானும் போகலை'' என்றாள் மீரா தீர்மானமாக.

கண்ணனையும் மீராவையும் வாழ்க்கையில் இரண்டாவது முறையாக இணைத்து வைக்கும் பொறுப்பையும் தானே ஏற்க வேண்டும் என மீரா எதிர்பார்க்கிறாள் போலும் என்று வசந்தனுக்குத் தோன்றியது.

''சரி, வரேன்'' என்றான்.

❀ ❀ ❀

கண்ணன் சில கணங்களுக்கு ஒன்றுமே பேசவில்லை. வசந்தன் சொன்னதெல்லாம் நிஜமா அல்லது மாயக் கற்பனையா?

''மீராகிட்ட நீ பேசும்போது நானும்கூட இருக்கணும்னு அவ சொல்றா கண்ணா...''

கண்ணன் வசந்தனைப் பார்த்து 'சரி' என்பதுபோல் தலை அசைத்தபோது அவன் கண்களில் அமைதி வந்திருந்தது.

''வசந்த்... இன்னியோட சுந்தரிக்கு சிகிச்சை முடியுது. நாளைக்கு விடிகாலையிலேயே அழைச்சிட்டு வரணும். அதனால இன்னிக்கு என்னை வரச் சொல்லியிருக்காங்க. நான் அங்கதான் புறப்பட்டுட்டிருக்கேன்.''

''அப்ப நாம சாயந்தரம் பேசுவோம் கண்ணா'' என்றான் வசந்தன், தெளிந்த குரலில்.

ஃ ஃ ஃ

வசந்தனையும் மீராவையும் பார்த்ததும் கண்ணன் மலர்ந்து சிரித்தான். தன் மடியிலிருந்த கௌதமைக் கீழே இறக்கிவிட்டான்.

''கௌதம்... தாத்தா உனக்காகக் காத்திட்டிருக்காரே. யானை மேல சவாரி போகப் போறியா?'' என்றான் வசந்தன் கண்களைச் சிமிட்டி.

கௌதமின் கண்கள் ஆர்வத்தால் பெரிதாயின.

''ஆமாம்ப்பா...'' என்று சொல்லியபடி ஓடி வந்து, வசந்தனுக்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

வசந்தனின் மூச்சு வேகமானது.

'கௌதம், நாளையிலிருந்து எனக்கு இந்த முத்தம் கிடைக்காதாடா? உன் பின்கழுத்து வாசனையும் உன் சிறிய விரல்களின் ஸ்பரிசமும் என்னை விட்டு விலகிப் போகிறதாடா?'



கௌதம், கண்ணனிடம் போய் நின்றான்.

''அங்கிள், குட்பை...'' என்றான். வசந்தனின் அப்பாவை நோக்கி ஓடிப் போனான்.

சப்பணமிட்டு உட்கார்ந்திருந்த கண்ணன், இரு முழங்கால்களையும் உயர்த்தி வைத்துக் கைகளால் கட்டிக்கொண்டான். அவன் அவ்வளவு இயல்பாக, பதற்றமின்றி இருந்தது வசந்தனுக்குச் சற்று ஆச்சரியமாயிருந்தது.

வசந்தன் அமர்ந்ததும், மீரா அவனுக்கு நெருக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

வசந்தனின் இதயம் கனத்திருந்தது. கண்ணனிடம் மீராவை ஒப்படைத்துவிட வேண்டும் என்ற துடிப்புதான் அவனை இவ்வளவு தூரம் செலுத்தியிருந்தது என்றாலும் அந்த உண்மைப் பொழுது நெருக்கத்தில் வந்ததும், அதன் விளைவு அவனை அசைத்துவிட்டது.

மீரா கைக்கெட்டும் தூரத்தில் இருக்க வேண்டும் என்று அவன் எப்போதுமே விழைந்ததில்லை. ஆனால், கண்ணுக்கெட்டும் தூரத்திலேயே அவள் என்றென்றைக்கும் இருப்பதைப் பார்த்துப் பழகிவிட்ட இந்த இதயம், நாளையிலிருந்து அவள் இல்லாத வெறுமையை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறது?

தன் வாழ்க்கையின் வெளிச்சமானதொரு பகுதியை அவனே இருட்டாக்கி விடப்போகிற அதிர்வு அவன் உடலில் ஓடியது.

எவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும், பிரிவு என்பது இதயத்தைப் பிசைந்து வேதனையை வரவழைத்து வேடிக்கை பார்க்கும் ஒன்றல்லவா?

எட்டிப் பார்க்க முனைந்த கண்ணீர், உருகப் பார்த்த இதயம், பிசிறு தட்டப் பார்த்த குரல், தளரப் பார்த்த உடல் என ஒவ்வொன்றையும் சமனப்படுத்தினான்.

மீராவையும், கண்ணனையும் மாறி மாறிப் பார்த்தான். இருவரில் யார் முதலில் பேசுவது என்ற தயக்கம் இருப்பதாகப் பட்டது.

"ரெண்டு பேரும் கம்பராமாயணத்துக்குள்ள போயிட்டுங்களாடா? பேச்சு, மூச்சே காணோம்?" என்று வசந்தன் சற்று அதிரடியாகச் சொன்னதும், மீரா அவன் தலையில் செல்லமாகத் தட்டினாள். ஒரு கையைத் தரையில் ஊன்றி கண்ணனைப் பார்த்து முகத்தைத் திருப்பினான்.

"கண்ணா... நாம மூணு பேரும் ஒண்ணா சேர்ந்து ஜாலியா இருந்த காலம் ஒண்ணு உண்டு. ஆனா, யார் கண்ணு பட்டதோ... அது ஒரு கனவு போல அப்படியே கலைஞ்சு போச்சு..."

கண்ணன் கையைச் சற்று உயர்த்தி, தான் பேச விரும்புவதைத் தெரிவித்தான். மீரா மௌனமானாள்.

"நான் உம்மேல உயிரை வெச்சிருந்தது உண்மைதான் மீரா. கண்ணைத் தொறந்துக்கிட்டே பாழும் கெணத்துல குதிச்சதும் உண்மைதான். உன்னை என்கிட்டேர்ந்து கட்டாயமாப் பிரிச்சப்புறம் உன்னை நெனைச்சு, ஒவ்வொரு நிமிஷமும் ஏங்கினதும் தவிச்சதும்கூடப் பொய்யில்லை..."

எதிர்காலத்தைவிட அவனுடைய கடந்த காலமே அவன் மீது பெரும் சுமையாக அழுந்தியிருந்தாற்போல் அவன் குரல் கனத்து வந்தது.

மீரா கையை நகர்த்திச் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"வார்த்தைகளால் சொல்ல முடியாத எவ்வளவோ உணர்ச்சிகளை உங்க டைரில பார்த்து நானும் கலங்கினேன் கண்ணன். உங்களுக்கு, நீங்களே கொஞ்சம் அளவுக்கு அதிகமாகவே தண்டனை கொடுத்துக்கிட்டீங்களோன்னு கூட வருத்தப்பட்டேன். என் வாழ்க்கைக்கு வசந்தனால ஒரு அர்த்தம் கெடைச்சாச்சு. உங்க வாழ்க்கை மட்டும்



அரைகுறையா ஏன் நிக்கணும்னுதான் வசந்தனைக் கேட்டேன்."

"வசந்தன் உம்மேலயும் உயிரை வெச்சிருக்கான்... எம்மேலயும் உயிரை வெச்சிருக்கான். மத்தவங்களைப் போல நானும் ஆரோக்கியமானவன்தான்னு தெரிஞ்சதும், நீயும் நானும் மறுபடி சேர்ந்துடணும்னு அவன் தவிக்க ஆரம்பிச்சிட்டான்."

"ஆனா, என் மனசுல என்ன இருக்குன்னு சொல்லிடறேன் கண்ணன்" என்று மீரா குறுக்கிட்டதும் கண்ணன் கையை உயர்த்தி அவளை மறுபடி மறித்தான்.

"நான் சொல்லி முடிச்சிடறேன் மீரா. வசந்தனுக்கு ரொம்பப் பெரிய மனசு. நான் உன்னை உதறி எறிஞ்ச போது அடைக்கலம் கொடுத்தான். நீ என் குழந்தைக்கு அம்மாவா இருந்தபோதும் மனப்பூர்வமா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான். இன்னிக்கு என் கிட்ட உன்னைத் திருப்பித் தந்துடணும்னும் துடிக்கிறான்..." கண்ணன் ஒரு கணம் நிதானித்தான். கண்களை ஒருமுறை மூடித் திறந்து தொடர்ந்தான்.

"ஆனாலும், எனக்கு வசந்தனைப் போல அவ்வளவு பெரிய மனசு இல்லை, மீரா. நான்... நான் சாதாரணமானவன். நீ வசந்தனைக் கல்யாணம் பண்ணிக்காம தனியா இருந்திருந்தா யோசனை பண்ணாம மறுபடி ஏத்துக்கிட்டிருப்பேன். என் உடம்புல எந்தக் குறையும் இல்லைன்னு தெரிஞ்சப்புறம் நான் எதுக்கு இன்னொருத்தர் கூட வாழ்ந்தவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கேள்வி வருது..."

பார்த்துக் கொண்டிருக்கும் பச்சை மரம் திடும் என்று இரண்டாகப் பிரிந்து விழுந்ததைப் போல் கண்ணனின் வார்த்தைகள் விழுந்தன.

"கண்ணா..." வசந்தன் முதல்முறையாக குறுக்கிட்டான். "உன்கிட்ட ஏற்கெனவே சொல்லிட்டேன். நானும்

மீராவும் கணவன்—மனைவியா வாழலை. ஃப்ரெண்ட்ஸாகத்தான் வாழ்ந்திட்டிருக்கோம்."

"என்னைச் சமாதானப்படுத்தறதுக்காக நீ அப்படிச் சொல்றே வசந்த்...உன் கூட வாழ்ந்தவன்னு தெரிஞ்சா நான் மீராவை ஏத்துக்காமப் போயிடுவேனோன்னு பயந்து நீ அப்படிச் சொல்லியிருக்கலாம்."

மீராவின் கண்கள் சிவந்தன. உதடு துடித்து மூச்சு ஆவேசப்பட்டது.

"அதென்ன வார்த்தைக்கு வார்த்தை ஏத்துக்கறது, ஏத்துக்கறதுன்னு சொல்லிட்டிருக்கீங்க? நான் என்ன உங்க காலடில வந்து கெடக்கறேனா— ஏத்துக்குங்கன்னு கெஞ்சிக் கிட்டு? நான் உங்களைப் பார்க்க வந்ததே இனிமேலும் சபலம்லாம் வெச்சுக்காதீங்க... நான் வசந்தனை விட்டு வர மாட்டேன்னு சொல்றதுக்காகத்தான்."

"மீரா... அவசரப்படாதே. ப்ளீஸ்..." வசந்தன் இறைஞ்சினான். "கண்ணா, சந்திரிகாகிட்ட நீ என்ன சொன்னே? கடவுள் வரம் கொடுத்தா ஹைதராபாத்துக்கு கௌம்பின தினத்துக்கே போயிடணும்னு சொல்லலையா?"

"சொன்னேன். இப்பவும் இல்லேங்கறியே. நான் ஹைதராபாத்துக்குக் கிளம்பின தினம் மீரா எனக்கு மட்டும் சொந்தமா இருந்தாடா. அன்னிக்கு அவ முழுசா என்னோட மீரா. உன்கூட அவ நட்பா இருந்தது வேற... தாலி கட்டின பொண்டாட்டியா வாழ்ந்தது வேற... இனிமே மீராவை நான் தொடற நேரமெல்லாம் அவ, நீ தொட்டவன்னு எனக்குத் தோணுமே வசந்த்..."

வசந்தன் விருட்டென்று கண்ணன் மீது பாய்ந்து சட்டையைப் பற்றினான்.

"கண்ணா... நீ பேசறது அசிங்கமா இல்லியா?" என்று முகத்துக்கு நேரே உறுமினான் ஆனால், உடனே முகத்து இறுக்கம் தளர்ந்தது. "மீரா உன்கூட இருந்தாத்தான் சந்தோஷமா இருப்பான்னு நெனைச்சு தான்டா இத்தனை



நாளா அவளைப் பார்த்திருக்கேன். பழகியிருக்கேன்" என்று குரல் உடைந்தான்.

கண்ணன் அவனுடைய கையைத் தன் சட்டையிலிருந்து விலக்கினான்.

"இத பாரு வசந்த்...கல்யாணம் ஆயிடுச்சு ... ஒண்ணா ஒரே ரூம்ல இருக்கீங்க...ஆனா, உங்களுக்குள்ள எதுவுமே இல்லைன்னு வாய் வார்த்தையா சொன்னா எப்படிடா? உனக்கும் மீராவுக்கும் நடுவுல உறவே இருந்ததில்லைன்னு கௌதம் தலைமேல அடிச்சு சத்தியம் பண்ண முடியு மாடா?"

வசந்தன் திடுக்கிட்டான்.

சொன்னது கண்ணன் தானா என்ற திகைப்புடன் விழிகளை விரித்து பார்த்தாள்.

மீரா ஆவேசமாகியிருந்தாள். வசந்தன் மீது பாய்ந்து அவன் தோளைப் பற்றித் திருப்பினாள்.

"வசந்த்... இனிமே ஒரு நிமிஷம்கூட நான் இங்க நிக்க மாட்டேன்..." கோபமாகத்தான் பேச ஆரம்பித் தாள். ஆனால், குரல் உடைந்து சிதறி அழுகையாக வெடித்தது.

வசந்தனின் மார்பில் அப்படியே சரிந்து குலுங்கினாள்.

வசந்தன் கண்ணனை அருவருப்புடன் பார்த்தான்.

"கண்ணா... நீயாடா இந்த மாதிரில்லாம் பேசறே?"

வசந்தன், மீரா இருவரையும் கண்ணன் மாறி மாறிப் பார்த்தான்.

"வசந்த்... நாம மூணு பேரும் ஓரளவு பக்குவமாப் பேச முடியும்னு நெனைச்சுதான் நான் மீராவோட பேசற துக்கே சம்மதிச்சேன். அப்புறம் எதுக்குடா இவ்வளவு ரகளை?"

"வசந்த், நீ என்கூட வரப்போறியா... இல்லையா?"

மீரா அவனை இழுத்தாள்.

வசந்தன் கண்ணனை ஒரு முறை தீர்க்கமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு மீராவை அணைத்தபடி அந்த அவுட்-ஹவுஸைவிட்டு வெளியேறினான்.

ஃ ஃ ஃ

"கரையண்டா மோளே..."

சந்திரிகா ஆறுதலுடன் மீராவைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டாள்.

மீராவின் உடல் விசும்பலில் அதிர்ந்தபோதெல்லாம் சந்திரிகாவின் இதயத்தில் வலித்தது.

மீராவை, கண்ணன் முதலில் பேசவிட்டிருந்தால் அவளே வசந்தனைவிட்டு வரத் தயாரில்லை என்று வசந்தனுக்குச் சேர்த்துத் தெளிவாகச் சொல்லியிருப்பாள். கண்ணன் அவள் மீது நெருப்பை வாரி இறைத்திருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது.

ஒருவேளை மீராவும் கண்ணனுடன் சேரப் பிரியப்படுகிறாளோ என்று தானும் சேர்ந்து தப்புக்கணக்குப் போட்டதை எண்ணி எண்ணி சந்திரிகா மறுகினாள்.

"பகடையில் பாஞ்சாலியையே பணயம் வெச்சுத் தோற்ற ராஜாக்கள் வாழ்ந்த பூமியாணு இது. இவ்விடெ வசந்தனெப் போலெ ஒரு பர்த்தாவினு நினக்கு லபிச்சது. நிண்ட பாக்யமாணு..." என்று மீராவிடம் சொன்னபோது அவள் குரலும் தழதழத்துப் போனது.

பின் ஆதரம் பொங்கும் குரலில், "இரு மோளே" என்று சொல்லிவிட்டு மீராவின் பதிலுக்குக் காத்திராமல் வீட்டின் சாமி அறை நோக்கிச் சென்றாள்.

மீரா லேசான தவிப்புடன் நின்றாள். வானில் வெண் மேகங்களைக் கட்டியணைத்தபடி நிலா, உல்லாசமாக உலா நிகழ்த்திக்கொண்டிருந்தது.

"மோளே..."

சந்திரிகா மீராவின் தோளைப் பற்றித் திருப்பினாள்.



கைகளை விரித்துக் காட்டினாள். முழுவதும் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த மனோரஞ்சிதப் பூக்களை மீராவின் தலையில் சூட்டினாள். பின் மீராவின் காதருகில் கிசுகிசுப்பாக, "ஏய்... குட்டி.... போய்க்கோடி..." என்று செல்லமாக அதட்டினாள்.

மீரா கண்ணீருடன் சிரித்தாள்.

ஃ ஃ ஃ

இரவின் ரீங்காரம் அந்த அறையை நிறைத்திருந்தது.

வசந்தன் மீராவின் தலையை, முதுகை மெள்ள வருடிக் கொடுத்தான். அந்தக் கன்றுக்குட்டி வருடலை அனுபவித்தபடி, அவன் மார்பில் முகம் புதைத்திருந்த மீரா, மெள்ள தன் முகத்தைப் புரட்டி வசந்தனை நிமிர்ந்து பார்த்தாள்.

"வசந்த்" —குரல் மெலிந்திருந்தது.

"ம்...?"

"உனக்கு நான் வேண்டாம்னா, நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோ வசந்த். ஆனா, தயவு செஞ்சு இன்னொரு தடவை என்னை யார்கிட்டயாவது தூக்கிக் கொடுத்துரணும்னு நெனைக்காதே..."

கடைசி வார்த்தைகள் அழுகையில் நனைந்து நடுங்கி வெளிவந்தன.

வசந்த் பதறித் துடித்து அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

"இல்லடி செல்லம். இல்லடி தங்கம். நீ வேண்டாம்னு ஒரு நாளும் நான் நெனைக்கலை. நெனைக்கவும் மாட்டேன்."

மீராவின் பதற்றம் மெள்ள மெள்ள அடங்கியது, நடுக்கம் ஓய்ந்தது.

வசந்தனிடம் அவள் இன்னும் அதிகமாக ஒண்டிக் கொண்டாள்.

அவள் சூடியிருந்த மனோரஞ்சிதப் பூவின் வாசம் அந்த அறையை நிறைத்தது.

⁂ ⁂ ⁂

ரயில் புறப்படத் தயாராக பெருமூச்சுகளை இரைத்துக் கொண்டு நின்றது.

கண்ணனும் சுந்தரியும் ஜன்னல் ஓர இருக்கைகளில் எதிர் எதிரே அமர்ந்திருந்தனர்.

சற்றே இறுகிய முகத்துடன் ஜன்னல் கம்பியைப் பற்றியபடி வசந்தன் பிளாட்பாரத்தில் நின்றிருந்தான் மீராவும், கௌதமும், வசந்தனின் அப்பாவும் வீட்டிலேயே வழியனுப்பி விட்டார்கள்.

கண்ணன், வசந்தனின் கையைக் கம்பியோடு சேர்த்து அழுத்திக் கொடுத்தான்.

''வசந்த். நீ சீக்கிரமே மெட்ராஸ் வர வேண்டியிருக்கும்டா. இன்விடேஷன்லாம் அடிச்சு தடபுடலா நடக்கலேன்னாலும் உன்னைப் போல நெருக்கமானவங்களையெல்லாம் கூப்பிடணும்னு சுந்தரி சொல்லியிருக்காடா.''

வசந்தன் சற்றே திகைப்புடன் கண்ணனைப் பார்த்தான்.

''இத்தனை நாளா மனசுல வெச்சிருந்திருக்கா வசந்த். நேத்துத்தான் வாயைத் திறந்து சொன்னா. என் வாழ்க்கை அரைகுறையா நிக்கலை. சுந்தரி மூலமா ஒரு நெறைவு கெடைக்கப் போகுதுன்னு மீராக்கிட்டச் சொல்லு. சந்தோஷப்படுவா.''

ரயில் ஜிவுக் என்று இழுபட்டது. நகர்ந்தது. வசந்தன் கையசைத்து மறைந்தான்.

''வசந்தன் முகத்துல சிரிப்பே இல்ல கண்ணா...'' என்றாள் சுந்தரி.

''எப்படி இருக்கும்!'' கண்ணனின் குரல் வேதனையில் தோய்ந்து வந்தது. ''என்னைப் பத்தின நெனைப்பு வந்தாலே, மீராவுக்கும், வசந்தனுக்கும் சிரிப்பு மறையற மாதிரி நான் பேசிட்டேன் சுந்தரி.''



''உன் உண்மையான மனசைப் புரிஞ்சுக்காம அவங்க ரெண்டு பேரும் உன்னை வெறுக்கப் போறாங்க, கண்ணா.''

''வெறுக்கணும், வெறுத்து ஒதுக்கணும்னு தானே சுந்தரி அப்படில்லாம் பேசினேன். மீரா என்னைச் சேர்ந்தவனு நெனைச்சு, நெனைச்சு வசந்தன் அவ கிட்டேர்ந்து ஒதுங்கியிருக்கான். ஆனா, உண்மைல மீரா அவனைச் சேர்ந்தவதான் சுந்தரி. அவளோட கணவனா நான் நெறைய சந்தோஷத்தை அனுபவிச்சிட்டேன். ஆனா, அவ வயித்துல குழந்தை இருந்தபோது, ஒரு கணவனோட பொறுப்புலேர்ந்து விலகிட்டேன். வசந்தன் தான் அத்தனையும் செஞ்சான். அதையெல்லாம் மறந்துட்டு நான்கூட தடுமாற இருந்தேன் சுந்தரி. கௌதம்தான் என் கண்ணைத் தொறந்தான். 'என்னை இனிமே, நீ அப்பான்னு கூப்பிடணும்னுடா'ன்னு அதன்கிட்ட சொன்னேன். 'ஐயே, நீங்க அங்கிள்தான். வசந்தன்தான் எங்கப்பா'ன்னு தெளிவா சொன்னான். போதையில செஞ்சேனோ, போதையில்லாம செஞ்சேனோ. மீராவுக்கு நான் ஒரு தடவை துரோகம் பண்ணினவன். ஆனா தாலி கட்டினப்புறம்கூட அவளைத் தப்பாப் பார்க்காம கடைசி வரைக்கும் கண்ணியமா இருந்தவன் வசந்தன். மீரா போல ஒரு நல்ல பொண்ணுக்கு யார் சுந்தரி துணையா இருக்கணும்?''

ரயில் சீரான வேகத்தில் தடக் தடக் என்று ஒரே கதியில் விரைந்தது.

''என் மனசுல மீரா இருக்கிறதா நெனைக்கற வரைக்கும் வசந்தனால அவளை நெருங்க முடியாதுன்னு புரிஞ்சது. அந்த எண்ணத்தை அவன் மனசுலேர்ந்து அடியோட ஒழிக்கணும்னுதான் அப்படி நடந்துக்கிட்டேன்''

''அதுக்காக வசந்தன்கூட இருந்த நட்பையே விட்டுக் கொடுத்திட்டியா கண்ணா?''

"நானோ, வசந்தனோ செத்தாக்கூட எங்க நட்பு உடையாது சுந்தரி. ஆனா, இந்த நட்பை நெனைச்சு இனிமே அவன் மீராவிட்டேர்ந்து ஒதுங்க மாட்டான்!"

"வசந்தன் மனசை மாத்தனும்ங்கறதுக்காகத்தான் என்னை கல்யாணம் பண்ணிக்கறதா சொன்னியா கண்ணா?"

சுந்தரியின் குரலில் சற்று வருத்தம் இழையோடியது.

"இல்ல சுந்தரி... எப்ப நான் மீராவை தெருப்புல குதிச்சுட்டு கரையேறி வான்னு சொன்னேனோ, அப்பவே வசந்தன் மனசு மாறியிருக்கும். மேம்போக்கா நான் எந்த முடிவும் எடுக்கலை. உனக்கு... உனக்கு... இதுல இஷ்டம் இல்லையா சுந்தரி?"

"நான் காத்திட்டிருக்கேன் கண்ணா. உன்கூட நான் இருக்கற உரிமையை யாரும் பறிச்சிடக் கூடாதேன்னுதான் பயந்திட்டிருந்தேன். ஆனா என்னால உனக்கு ஒரு கௌதமைத் தர முடியாதேன்னுதான்..." சுந்தரியின் கண்களில் நீர்த் துளிகள்.

"உலகத்துல அப்பா—அம்மா இல்லாம எத்தனையோ கௌதம்கள் இல்லையா சுந்தரி! அதுல ஒரு கௌதம் நமக்குக் கிடைக்க மாட்டானா என்ன?"

கண்ணன் சுந்தரியின் கண்ணீரைச் சுண்டி விட்டான்.

சுந்தரி இத்தனை வருடத்துக் காதலையும் ஏக்கத்தையும் கரைத்து அவன் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

மீராவையும், வசந்தனையும், கௌதமையும், பல நினைவுகளையும் பொன்கராவிலேயே விட்டுவிட்டு, ரயில் ஜிவுஜிவு என்று வேகம் எடுத்திருந்தது!

★ ★ ★